# உயிராய் இருக்க வருவாயா ?

ரமணிசந்திரன்



# உயிராய் இருக்க வருவாயா?

ரமணிசந்திரன்

அருணோதயம்

புதிய எண். 5,
பழைய.எண்.3, கௌடியாமடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : உயிராய் இருக்க வருவாயா? |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| மொழி | : தமிழ் |
| முதற் பதிப்பு | : டிசம்பர், 2000 |
| இரண்டாம் பதிப்பு | : ஆகஸ்ட், 2003 |
| மூன்றாம் பதிப்பு | : டிசம்பர், 2004 |
| நான்காம் பதிப்பு | : மே, 2006 |
| ஐந்தாம் பதிப்பு | : அக்டோபர், 2007 |
| ஆறாம் பதிப்பு | : ஜனவரி, 2009 |
| ஏழாம் பதிப்பு | : ஜூன், 2010 |
| எட்டாம் பதிப்பு | : நவம்பர், 2011 |
| ஒன்பதாம் பதிப்பு | : டிசம்பர், 2013 |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| பக்கங்கள் | : 216 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| அச்சு எழுத்து | : 10 புள்ளி |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.100.00**

| | |
|---|---|
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ், சென்னை-14. |

# உயிராய் இருக்க வருவாயா?

# பதிப்புரை

பல ஆயிரக்கணக்கான வாசகர்களின் இதயம் கவர்ந்த எழுத்தாளர் திருமதி. ரமணிசந்திரன் என்பது நாடறிந்தது.

அன்றாட குடும்ப நடப்புகளை, பிரச்சனை-களை ஏற்றத் தாழ்வுகளை கதைகளின் நிகழ்வுகளிலே சொல்லுவதிலே வல்லவர் எனப் பலராலும் பாராட்டப்படுபவர்.

படிப்பவர்கள் திரும்பத் திரும்பப் படிக்கும் இவரது நாவல்களிலே உள்ள சுவை தொடர்ந்து படிக்கும் வாசகர்களுக்குத்தான் தெரியும்.

இவரது நாவல்களைப் படிப்பதால் அன்றாட வாழ்வில் நிகழும் குடும்பப் பிரச்சனைகளை எளிதாகத் தீர்க்க முடிகிறது என்று வாசகர்கள் எழுதுகிறார்கள்.

இப்படிப்பட்ட சிறந்த நாவல்கள் வரிசை-யிலே இந்த நாவல் குறிப்பிடத்தக்கது. படித்துப் பயன்பெறுங்கள்.

**அருணோதயம் அருணன்**

# உயிராய் இருக்க வருவாயா?

## 1

கடைசி ஃபைலும் பார்த்து முடித்தாகி விட்டது. கூட்டிக் கழித்து கணக்கு நிர்வாகியின் பார்வைக்குத் தேவைப்பட்ட குறிப்புகளைக் கூட எழுதி முடித்தாயிற்று. அவளது பொறுப்பில் உள்ளவை மட்டுமின்றி, அடுத்த மேஜைக்காரி ஷகிலாவின் பாக்கிகளையும் கேட்டு வாங்கி, முடித்து வைத்தாயிற்று.

ஆஃபிஸ் பையன் வேறு இரண்டுதரம் வந்து, எட்டிப் பார்த்துவிட்டுப் போய்விட்டான்.

அலுவலகத்தை மூட வேண்டியது அவன் பொறுப்பாயிற்றே! இன்னும் கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்தால், கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினாலும் தள்ளிவிடுவான்! அதற்கு முன் கிளம்பிவிடுவது மேல்!

குடையையும், கைப்பையையும் எடுத்துக் கொண்டு எழுந்த தாரிணிக்கு, வீட்டுக்குச் செல்ல, மிகவும் போரடித்தது.

வீட்டிற்குப் போய், தனியாக அல்லவா உட்கார்ந்திருக்க வேண்டும்.

அண்ணன், உள்ளூரில் இருந்தாலாவது, 'கண்ணம்மா, செல்லக்குட்டி' என்று ஏதாவது பேசுவான். அவனது வேலையைப் பற்றிய சுவாரசியமான கதைகள் நிறையச் சொல்லுவான்.

அவள் சொல்லுவதையும் கேட்பான். அலுவலகத்தில் ஏதாவது பிரச்சினை என்றால் மட்டும், உடனே 'வேலையை விட்டு விடு, பாப்பா' என்பான். அண்ணன் அவன் இருக்கும்போது அவள் வேலைக்குப் போவது என்றால் அது வெறும் பொழுது போக்குக்காக மட்டும்தானாம். அவளுக்கு வருகிற சம்பளமும், அவளது உல்லாசச் செலவுகளுக்கு மட்டும் என்றுதான் வைத்துக் கொள்ள வேண்டுமாம். அதனால் அவள் சங்கடப்பட்டுக் கொண்டு வேலை பார்க்கத் தேவையில்லையாம். தங்கைக்குச் செய்யவேண்டிய, அத்தனை கடமைகளையும் அவள் அண்ணனே ஒரு குறையும் இல்லாமல் செய்துவிடுவானாம்! அந்த அளவுக்கு, அவன் சம்பாதிக்கத்தான் செய்கிறானாம்!

இப்படியெல்லாம் அண்ணன் படபடப்பான் என்பதால், அலுவலகத்தில் நடக்கும் நல்லதை மட்டுமே தாரிணி, நந்தகுமாரனிடம் சொல்லுவாள். சிரிக்க வைக்கும் கதைகளாகப் பார்த்துத் தேடிப்பிடித்து, அவைகளை மட்டும் சொல்லுவாள்.

மற்றபடி, தங்கைக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் முக்கியமான கடமையான திருமணத்திற்கு, பணம் மிக அதிகமாகத் தேவைப்படும். இன்றைய விலைவாசி இருக்கிற நிலையில், அந்தச் செலவைச் சமாளிக்க, இருவர் வருமானமும் சேர்ந்தால்தான் சரிப்படும். அத்தோடு நந்தனுக்கு திருமணம் என்று ஒன்று ஆகும். அதற்கும் எவ்வளவோ செலவாகும். மனைவியாகி வருகிறவளிடம் சொத்து பத்து என்று பெரிதாகக் காட்ட முடியாவிட்டாலும், பாங்கிலாவது, கணிசமான ஒரு தொகையைக் காட்டாவிட்டால் நன்றாயிராது, என்றெல்லாம் அவனிடம் என்னதான் விளக்கிச் சொன்னாலும், அவன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவே மாட்டான்.

எனவே, அந்தப் பேச்செல்லாம் பேசாமலே, அவனுக்காகவும் சேர்த்து, அவள்தன் கணக்கில் சேமித்துக் கொண்டே வந்தாள்.

அதற்காகக் கஞ்சத்தனமாகச் சேர்த்தாள் என்று சொல்ல முடியாது. செல்லும் வழியில், ஒரு சுரிதார் செட் கண்ணைப் பறித்தால், உடனே வாங்கி விடுவாள். ஒரேயடியாக இல்லையென்றாலும், அலங்காரப் பொருட்களுக்காகவும், தாரிணி, சற்று தாராளமாகவே செலவழிப்பாள்.

தனக்கு மட்டுமின்றி, வீட்டுக்காக அண்ணனுக்காகவும் வாங்குவாள். வீட்டில் மாட்ட ஒரு அலங்காரப் படம், நந்தனுக்கு, 'ஆஃப்டர் ஷேவ் லோஷன்' 'டீ ஷர்ட்' இப்படி ஏதாவது அவள் மூலம் வீட்டுக்கு வந்து கொண்டே இருக்கும்.

ஆனால், இவையெல்லாம், சம்பளத்தில், பாதிக்குமேல் போகாமலும் பார்த்துக் கொள்வாள்.

ஆனால், நந்தகுமாரன், அவ்வளவாக வரவு செலவுக் கணக்குப் பார்க்கிறவன் அல்ல. அதிலும், தங்கை என்று வரும்போது, ஒரு கணக்குமே கிடையாது.

ஒருதரம் ஒரு பட்டுச் சேலை நன்றாயிருப்பதாகச் சொன்னாள் என்று, மறுநாள், பாங்கில் பணம் எடுத்துப் போய், ஒன்பதாயிரம் ரூபாய்க்கு, அதை வாங்கி வந்து விட்டான். அதை, அவள் எங்கே கட்டிக் கொண்டு போவாள்? அந்தச் சேலையால் இப்போது தாரிணிக்கு என்ன பயன்? என்றெல்லாம் அவன் யோசிக்கவே இல்லை. அந்தச் சமயத்தில், அவனது மாத வருமானம், கிட்டத் தட்ட எல்லாமே காலி.!

அவர்களுடைய பெற்றோர் இறந்தபோது, கிடைத்த 'வைப்புநிதி, காப்புநிதி' மற்ற சொத்துக்களை விற்ற பணம்

எல்லாவற்றையும், குடும்பப் பெரியவர்கள் 'டெப்பாசிட்' செய்திருந்த பணத்திலிருந்து, மாதாமாதம் வட்டியாக வந்த தொகை, முன்பு படிப்புக்கும், இப்போது வீட்டுச் செலவுக்கும் சரியாக இருந்ததால், வீட்டுச் செலவு பிரச்சினையாக ஆகவில்லை.

அப்படியும், சோப்பு, எண்ணெய் என்று சிலதை, அண்ணன் அறியாமல், தாரிணி வாங்கிப் போட்டுத்தான் செலவைச் சரிக்கட்ட வேண்டியிருந்தது. வீட்டுச் செலவுக்காகத் தாரிணி ஏதாவது செலவு செய்தால், நந்தகுமாரன் மிகவும் கோபப்படுவான். வருந்தவும் செய்வான். எனவே, ஒளித்து மறைத்துத்தான், அவள் இதைச் செய்ய நேர்ந்தது.

மூன்று ஆண்டுகளுக்கு முந்தைய விஷயம் இது. தாரிணிக்கு வேலை கிடைத்த புதிது.!

எதற்கு வம்பு என்று அன்றிலிருந்து, விலை தெரியாதபடி எதையும் நன்றாகயிருப்பதாக தாரிணி, தன் அண்ணனிடம் சொன்னதே இல்லை எனலாம். விலை தெரிந்திருப்பதோடு, அது குறைந்த விலையுள்ளதாகவும் இருக்க வேண்டும் என்பதில் மட்டும் கவனமாக இருந்தாள்.!

இந்தப் பனிரெண்டு ஆண்டுகளுக்கும் மேலாக, இருவரும்தான் ஒருவருக்கொருவர் என்று இருந்து விட்டதால், அண்ணன் தங்கைக் கிடையே அன்பும், சற்று அதிகமாகவே இருந்தது. அலுவலகத்துக்குச் சென்று வந்தால்கூட, மாலையில் சந்திக்கும்போது, நாட்கணக்கில் பிரிந்திருந்தது போன்ற உணர்வுதான், இருவருக்குமே!

பொதுவாகப் பேச்சு இருவர் பக்கமிருந்தும் எளிதாகப் பொழியும் என்பதால், பொழுதும் இறக்கை கட்டிக் கொண்டு பறந்துவிடும்.

தினசரி, அலுவலகம் சென்று வரும்போதே இப்படி-என்கையில் நந்தன் வெளியூர் செல்லும்போது எப்படியிருக்கும்?

நந்தகுமாரன் வெளியூர் செல்வது தாரிணிக்குக் கொஞ்சமும் பிடிக்ககாது.

படிக்கும் காலம் முழுவதும், ஆளுக்கொரு பள்ளி விடுதியில் கழிந்தது. கோடை விடுமுறையை யாராவது ஒரு மாமா அல்லது சித்தி வீட்டில், இரண்டாம்-தரக்குடிமக்களாகப் பல்லைக் கடித்துக் கொண்டு நெட்டித் தள்ளினார்கள்.

படித்து முடித்து, நந்தனுக்கு வேலை கிடைத்ததுமே, தனி வீடு எடுத்துக் கொண்டு, வசிக்கத் தொடங்கி விட்டார்கள்.

சமையல் செய்யவென்று, தூரத்து உறவில் ஒரு பெண்மணி கிடைத்தாள். பெண்மணி என்றால், அவள் பெண்-மணியேதான். ஆண்டுக்கு ஒரு தரம், இருவார லீவில் சொந்த ஊர் செல்வது தவிர, மற்றபடி மட்டம் போடுவது இல்லை. வேலைக்குச் சோம்புவதும் இல்லை. அனாவசிய-மாகச் செலவு இழுத்து வைப்பதும் கிடையாது. ஊர்ப் பக்கத்து எளிய உணவுதான் செய்யத் தெரியும். ஆனால், விடுதியில் உண்டவர்களுக்கு அது அமிர்தமாகத் தோன்றியது. மகளுடன் இருப்பதற்காக, அந்த அம்மாள் செல்லும் இரு வாரங்களும், அண்ணன் தங்கை இருவருமாக, ஏதாவது சமையல் குறிப்பைப் பார்த்து ஒன்றிரண்டைச் செய்வதும், சுவை பிடிக்காவிட்டால் வெளியே போய் சாப்பிடுவதுமாகக் கழியும்.

அதுபோன்ற தருணங்களில், பெற்றோர் இருந்திருந்தால் தாயார் மகளுக்கு சமையல் கற்றுக் கொடுத்திருப்பாள். அப்பாவழி, அம்மாவழி உறவினர் வந்து போய் இருந்திருப்பார்கள். அவர்கள் மூலமும் ‘சைனீஸ்,

செட்டிநாடு' என்று நிறைய பயின்றிருக்கலாம். அது, இது என்றெல்லாம், தொடர்ச்சியாக, இருவருக்குமே என்னென்னவோ தோன்றுவதுண்டு.

ஆனால், பொன்னுத்தாயி திரும்பிவந்து, சமையல் பொறுப்பை ஏற்றதும், எல்லாம் மறந்துவிடும். எதற்கு வீண் தொல்லை? பெற்றோர் என்றால் தனிதான் என்றாலும் மற்றபடியான உறவினர் எல்லோரும் கூடாது என்று, பேச்சு, நடவடிக்கை எல்லாவற்றுக்குமே, ஏதாவது, சொல்லக்கூடும். அப்புறம் அதற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டிக்கூட வரலாம். இன்றைய சுதந்திரம் பறி போய்விடும், என்று எண்ணத் தொடங்கி விடுவார்கள்.

'எனக்காக உயிரையே கொடுக்க கூடிய அண்ணன் இருக்கிறான், வேறு யார் வேண்டும்' என்று தங்கை நினைத்தாள். என்னுயிர்த் தங்கை தவிர, மற்றவர்கள் எல்லாம் எனக்குத் தேவை இல்லை என்று, அண்ணன் எண்ணினான். உற்றாரும் உறவினரும் விடுமுறை நாட்களில் நடந்து கொண்ட விதம், அடியோடு மறக்கக்கூடியதா, என்ன?

அதனால், அவர்களுக்கு, வேறு யாருமே வேண்டாம் என்று, முடிவு கட்டிக் கொள்வார்கள்.

அதற்காகக் காலம் முழுவதும், இப்படியே இருந்து விடுவது என்று முட்டாள் தனமான எண்ணங்கள் இருவருக்குமே கிடையாது. காலாகாலத்தில், தங்கைக்கு திருமணம் செய்து கண் குளிரக் காண வேண்டும் என்ற ஆசை, நந்தனுக்கு நிறையவே உண்டு. அந்த வகையில், அவன் 'பாசமலர்' சகோதரன்தான். ஆனால், இருபத்தி-யிரண்டு வயது நிரம்பியும், அவனைப் பொறுத்தவரையில், அவன் தங்கை, அறியாச் சிறுமிதான். அவனுடைய பெற்றோர் இறந்தபோது, மலங்கமலங்க விழித்துக் கொண்டு நின்ற பத்து வயதுச் சிறுமிதான்!

அக்கம் பக்கம், அறிந்தவர் தெரிந்தவர் தாரிணியின் திருமணம் பற்றி விசாரிக்கும்போது, நந்தகுமாரனுக்குக் கொஞ்சம் 'திக்'கெனும். ஒன்றுமே தெரியாத சின்னப் பிள்ளை! அடுத்தவர் வீட்டுக்கு அனுப்பி இப்போதே கஷ்டப்படுத்துவதா? என்று கவலைப்படுவான். ஆயினும் திருமணம் என்றால், பணம் என்கிற வரை விஷயம் தெரிந்திருந்ததால், அதை, அதிகம் சம்பாதிப்பதில் முனைந்தான்.

அதன் பயனாக, அவனது வெளியூர்ப் பயணங்கள் அதிகரித்தன.

நந்தகுமாரனின் வேலை, ஒருமாதிரி, தனித் தொழில் போன்றதே. ஆனால், அலுவலகத்துக்கும், ஓரளவு கட்டுப்பட்டது தான்.

பல்வேறு தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி அல்லது வீழ்ச்சி பற்றிய சரியான, முழு அறிக்கையைப் பாரபட்சமின்றித் தயாரித்து அளிப்பதில் அவனது நிறுவனம் மிகவும் பெயர் பெற்றிருந்தது. அதன் ரகசியம் காப்பதிலும் அப்படியே.

எனவே, பல நிறுவனங்கள், அறிக்கை தயாரிக்கும் பொறுப்பை, போட்டி போட்டுக் கொண்டு இவர்களிடம் கொடுத்தார்கள்.

அந்தப் பொறுப்பை, நிறுவனமும், அங்கே பணி புரிந்தவர்களின், தகுதி சீர் தூக்கி ஒப்படைக்கும். வேலையின் தன்மைக்கேற்ப, கிடைக்கும் வருமானத்தில், குறிப்பிட்ட சதவீதம் போக, மீதியை, அந்தந்தப் பணியை ஏற்றுச் செய்தவர்களுக்கே கொடுத்துவிடும்.

அந்த வகையில் நிறையவரும்படி கிடைக்கவே, நந்தன், இதில் முழு மூச்சுடன் ஈடுபட்டான்.

அதன் விளைவாக, அவன், இப்போது அடிக்கடி வெளியூர் செல்ல வேண்டியிருந்தது.

ஒரு வாரம் பத்து நாள் என்று, அவன் அயலூரில் தங்கும் படியாகவும் ஆயிற்று.

திரும்பி வரும்போது, கை நிறைய பணத்தோடும், அவன் சென்ற இடங்களில் கிடைக்கும் அபூர்வப் பொருட்களோடும், அங்கத்திய பழக்க வழக்கங்கள், பேச்சு முறைகள் பற்றிய விவரங்களோடு வந்து, கலகலக்கும் போதும் இடைப்பட்ட பிரிவு, ஓரளவுக்கு மறந்துவிடும்.

வழக்கமாக ஒரு வாரம், பத்து நாட்களில், திரும்பி வருகிறவன், இந்த முறை, கிட்டத்தட்ட ஒரு மாதமாகியும், திரும்பி வருகிற மாதிரியே தெரியவில்லை. வாரம் ஒரு ஃபோன் மட்டும்தான்.

'இது கொஞ்சம் பெரிய வேலை, சற்று சிக்கலானதும் கூட. சரிவரச் செய்து முடித்து விட்டால் நிறையவே பணம் கிடைக்கும். அதனால், முழுமூச்சுடன் வேலை செய்து கொண்டிருக்கிறேன். எச்சரிக்கையோடு இரு' என்று சுருக்கமான பேச்சோடு, வைத்துவிடுவான்.

வீட்டில் தனியாக உட்கார்ந்து சாப்பிடுவது, டீவி பார்ப்பது, எல்லாமே, தாரிணிக்குப் போரடித்தது. சிகரம் வைத்தாற் போல, இன்னொரு பிரச்சினையும் ஏற்பட்டது.

பொன்னுத்தாயிக்கு, ஒரே ஒரு மகள். திருமணம் செய்து கொடுத்திருந்தாள், இரண்டு பிள்ளைகள். இரண்டாவது பையனுக்கு எட்டு வயது முடிந்துவிட்ட பிறகு, இப்போது, அவள் மீண்டும் கருவுற்றிருக்கிறாளாம். ரொம்பவும் சிரமப்படுகிறாளே என்று பார்த்தால், இரட்டையாம். எப்போதுமே, கூடவந்து இருக்கும்படி, மருமகன் கூப்பிடுகிறவன்தான். மகள் வீட்டில் இருப்பதா என்று, பொன்னுத்தாயிதான் மறுத்துக் கொண்டிருந்தவள்.

இப்போது உதவியென்று அழைக்கும்போது அவளால் தட்ட முடியவில்லை.

விவரம் அறிந்த போது, தாரிணியாலும் தட்டிச் சொல்ல முடியவில்லை.

மகளுக்குக் குழந்தைகள் பிறந்து, அவைகளுக்கு ஒருவயதாவது ஆகும் வரை துணையிருக்க வேண்டும் என்பதால், இனி, அவள் வருவது சந்தேகம், வரமாட்டாள் என்று உணர்ந்து, சம்பளத்தோடு, கையில் கொஞ்சம் பணமும் கொடுத்து, தாரிணி அவளை அனுப்பி வைத்தாள்.

இதை, அண்ணனுக்குத் தெரிவிப்பதா, வேண்டாமா, என்று இரண்டு நாட்களாக அவளுக்குக் குழப்பம் தெரிவித்தால், தங்கை தனியாக இருக்கிறாளே, என்று கவலைப்படுவான். சட்டுப் புட்டென்று முடித்துவிட்டு வர முடியாத நிலையில் வேலை இருந்தால், இருதலைக் கொள்ளி எறும்புபோலத் திண்டாடிப் போவான். தங்கைக்கு கவலை அதிகமானால் நந்தகுமாரன், வேலையை விட்டுவிட்டுக் கூடத் திரும்பி வந்துவிடக்கூடும்.

அப்படியாவது அண்ணன் வந்து விடட்டுமே என்று ஒருதரம் எண்ணிவிட்டு அதற்காகத் தன்னையே தாரிணி கடிந்து கொண்டாள்.

இந்த வேலையில், வருமானம் அதிகம் என்பதோடு அந்த வேலை அவனுக்கு பிடித்தமானதும் கூட.

ஒவ்வொரு செங்கல்லாக எடுத்து வைத்து மாளிகை கட்டுவதுபோல, அடிப்படையிலிருந்து ஒரு தொழிலை உருவாக்கி வளர்ப்பதும், அதை நிலை நிறுத்துவதும் ஒவ்வொரு முறையும் அவனுக்குப் பிரமிப்பூட்டுவதுதான். வளரும் தொழில்களை பற்றி வியப்பும் மெச்சுதலுமாக எழுதுகிறான். தொழில் சரிவுகளைப் பற்றிய அறிக்கை-களைத் தயாரிக்கும்போது, மிகவும் வருத்தப்படுவான்.

சரித்திரத்தில், சாம்ராஜ்யங்களின் வளர்ச்சியும் அழிவும் போலத்தான், இந்த தொழில் சாம்ராஜ்யங்களின் வளர்ச்சியும் அழிவும் கூட, என்பான். சரித்திரம் படிப்பது போலவே, இதுவும், அவனுக்குச் சுவாரசியமானது.

அவசரப்பட்டு இதை விட்டுவிட்டால் இதைப்போல மனதிற்குத் திருப்தியளிக்கும் வேலை, இன்னொன்று கிடைக்குமோ, என்னவோ?

இன்னும் நாலு நாளோ? ஐந்து நாளோ? அண்ணன் திரும்பி வந்துவிடப்போகிறான். அதற்குள், அவன் மனதைக் குழப்புவானேன்?

தாரிணி இந்த முடிவு செய்து, இரண்டு நாட்கள் முடிந்து போயின.

பேசாமல், லீவு போட்டுவிட்டு, நந்தன் இருக்குமிடம் சென்றுவிடலாமா என்று யோசனையை அசை போட்டபடி தாரிணி கதவைத் திறந்தபோது, எதிர் ஃப்ளாட் சிறுமி ஓடிவந்து, ஒரு கடிதத்தைக் கொடுத்தாள்.

நன்றியுரைத்தபடியே கடிதத்தைப் பார்த்தால் நந்தனின் கையெழுத்து! கடிதம் சற்று கனமாகவும் இருந்தது.

பொதுவாக, நந்தகுமாரன் அதிகமாகக் கடிதங்கள் எழுதுவதில்லை, எஸ்டி.டி கிடைக்காத போதுதான் இரண்டு வரி கிறுக்கிப் போடுவான். இன்ன தேதியில், இன்ன ரயிலில் வருகிறேன் என்றுமட்டும் எழுதுவான். இன்றைய கடிதத்தின் கனம் தாரிணிக்கு ஆச்சரியமாக இருந்தது.

விஷயம் என்னவாக இருக்கும்?

எப்படியும்; அவசரமாகப் படிக்க வேண்டிய இரண்டுவரிக் கிறுக்கல் அல்ல. நின்று நிதானித்துப் படிக்க வேண்டிய நீளமான கடிதம்!

எனவே, அவசரமாக முகம் கழுவி, உடை மாறி, ஒரு காஃபியை கலந்து எடுத்து கொண்டு, வந்து, அமர்ந்து, கடிதத்தைப் பிரித்தாள்.

"உன்னிடம் நிறையப் பேச ஆசை! ஆனால் இங்கிருந்து நான் பேசும் பேச்சு வேறு எந்தக் காதுகளிலும் விழுந்து ஏதாவது ஆகிவிடக் கூடாது என்பதால், கடிதத்தின்மூலம் உன்னுடன் பேசுகிறேன்" என்று, ஏதோ மர்மக்கதை மன்னன் போல, நந்தன் கடிதத்தைத் தொடங்கி-யிருந்தாலும், அந்தக் கடிதத்தை மூன்று முறைபடித்து முடித்த பிறகும் அதில் எந்த மர்மத்தையும் தாரிணியால் கண்டுபிடிக்கவே முடியவில்லை.!

## 2

வழக்கமாக, வீடு திரும்பி நேரில் பேசும்போது, செய்து முடித்துவிட்டு வந்த வேலை குறித்து நந்தகுமாரன் பொதுப்படையாகப் பேசுவான். தொழில் ரகசியங்கள் பற்றி எதுவும் சொல்லாவிட்டாலும், பொதுவாக அந்தத் தொழில் வளர்ந்த அல்லது சரிந்த விதம் எப்படி என்று தாரிணியிடம், அவன் கூறுவதுண்டு.

அதைப் போலவே, இப்போதும், எப்படி மூன்று நண்பர்கள் ஒன்று சேர்ந்தார்கள். மலைச் சாரலில் நிலம் வாங்கி, காஃபி, பழவகைகள், வாசனைத் திரவியங்கள் என்று, ஆளுக்கொரு வகையைத் தேர்ந்தெடுத்துப் பயிரிட்டு, விற்று லாபம் கண்டார்கள், இதில் ஒருவருக்கொருவர் எப்படித் துணையாக இருந்தார்கள் என்பதை ஒரு கதை மாதிரி எழுதியிருந்தான்.

அப்படி என்றைக்காவது இந்தத் தொழிலை விட நேர்ந்தாலும், அண்ணன் எழுத்துத் தொழிலில் புகுந்து ஒரு

கலக்குக் கலக்கிடலாம் என்று, உள்ளூர எண்ணிக் கொண்டு, தாரிணி, நாலாவது தடவையாகக் கடிதத்தை விடாமல், தொடர்ந்து படித்தாள்.

அண்ணன் எழுதியதைப் படிக்கும் ஆர்வம் ஒருபுறம். கடிதத்தைப் படிக்க, என்னவோ நந்தனிடமே பேசிக் கொண்டிருப்பது போல, ஒரு பிரமை, அதனால் ஒரு மகிழ்ச்சி.! அடுத்து, ஏதோ மர்மம் இருப்பது போல-டெலிஃபோனில் பேசி, யார் காதுக்காவது எட்டிவிடக் கூடாது என்று எழுதியிருந்தானே, அந்த மர்மத்தைக் கண்டுபிடித்துவிடும் ஆர்வம்.!

ஆனால் முன்னது தான் நடந்ததே தவிர, பின்னது பலிக்கவே இல்லை.

சரி, முன்னதே போதும் என்று, தாரிணி, மீண்டும் படிப்பதைத் தொடர்ந்தாள்.

இந்த மூன்று குடும்பங்களுக்கும், அவரவர் பிள்ளைகளும் பிரிந்து போய்விடக் கூடாது என்ற ஆசை.

எனவே, அடுத்த தலைமுறையை, ஒன்றுக்கொன்று முடிச்சுப் போட்டு விட்டார்கள். இதுவே, அதற்கடுத்த தலை முறையிலும் தொடர, இப்போதிருக்கும் நாலாவது தலைமுறையில் வாழும் பன்னிரண்டு குடும்பங்களுமே, ஒன்றுக் கொன்று, உறவுதான்.

திருமணம் என்றால், இந்தக் குடும்பங்களுக்குள் தான்!

ஏதோ, அபூர்வமாக, இரண்டு மூன்று திருமணங்கள் வெளியாருடனும் நடந்திருக்கின்றன தான். ஆனால், அவை அவ்வளவாக வெற்றி பெற்றது போல யாரும் கூறவில்லை. போற்றுதலாகவும் பேசக்காணோம்.

அது குடும்ப விஷயம். தொழிலைப் பொறுத்த வரையில் ஏகப்பட்ட முன்னேற்றம்.

ஒன்றுக்குள் ஒன்றாகத் திருமணம் செய்ததால், உறவு கலந்தது போலவே சொத்தும், கலந்தது. காஃபித் தோட்டத்தில் கொஞ்சம், ஏலக்காயோடு சேர்ந்தது. பழத்தோட்டங்கள், காஃபிக்கு வந்தன. ஏலம் பழத்தோடு சேர்ந்தது.

இப்படிக் கலந்தது, நட்பையும் உறவையும் வலுப்படுத்தியதோடு, தொழிலும் புதுப்புது வகைகளில் விரிவடையலாயிற்று.

காஃபியில் 'இன்ஸ்டன்ட்' காஃபி தயாரித்தார்கள். பழ வகையில் 'ஜாம்' 'ஜூஸ்'கள் தயாரித்தார்கள். கிராம்பு, ஏலக்காயோடு, மற்றதும் சேர்த்து மசாலாத்தூள் தயாரித்து எல்லாவற்றையும், இந்தியா முழுவதிலும் விற்று, லாபம் சம்பாதித்தார்கள். சம்பாதிக்கிறார்கள்.

இந்திய மார்க்கெட்டோடு நில்லாது, வெளிநாட்டுச் சந்தையையும் பிடிக்கும் ஆவல், இவர்களுக்கு இப்போது வந்திருக்கிறது.

அதற்காகத்தான், நந்தனின் இந்த அறிக்கைத் தயாரிப்பு!

இதுவரை, நந்தகுமாரனின் கடிதம், சுவாரசியமான ஒரு கதையாக மட்டுமே இருந்தது. ஆதித்த சோழன் தொடங்கி, ராஜராஜன், ராஜேந்திர சோழன் வரையிலாக சோழப் பேரரசு எப்படி வளர்ந்தது என்று படிப்பது போல, வியப்பும் மெச்சுதலும் கலந்த உணர்வு..!

ஆனால், மற்றவர்கள் அறியக்கூடாத ரகசியம் எதையும், நந்தன் இதுவரை எழுதிவிடவில்லை. பொதுவாக, எல்லோரும் அறிந்ததைத்தான் எழுதியிருந்தான். அவர்களது தயாரிப்பு ரகசியம் பற்றி மூச்சுக் கூட விடவில்லை! அப்படியிருக்க...

இதற்குப் பிறகும் பெரிதாக ஒன்றுமில்லை.!

இந்த முயற்சிகளின் பின்னே, சூத்ரதாரியாக இருந்து நடத்துவது, இன்றைய இளைய தலைமுறை. அந்தத் தலைமுறையினரில் முக்கியமானவன், ஒருவன் தலைவனாக மனுபரதன் வழி நடத்திச் செல்ல, அவன் பின்னே, மற்ற குடும்பத்தினர் நடந்தனர்.

'மனுபரதன்' என்கிற பெயர், தாரிணிக்கு விசித்திரமாகப் பட்டது. மனுதர்மத்தை அப்படியே கடைப்பிடித்து ஒழுகுகிற பரதனா? அப்படி ஒருவன் இந்தக் காலத்தில் அதுவும் இன்றைய நிலையில், இந்நாட்டில் இருக்க முடியுமா?

அல்லது, அப்படி இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டுப் பெயர் வைத்த பெற்றோர், தலையில் அடித்துக் கொள்ளும் விதமாக வாழ்கிறவனா?

அப்படி இராது. இந்த 'மனுபரதன்' தலைவனாக இருந்து, வழி நடத்துவதாக அல்லவா, நந்தன் எழுதியிருக்கிறான்.!

ஆனால் 'தடியெடுத்தவன் தண்டல்காரன்' மாதிரியாகவும் இருக்கலாம்.!

எப்படி என்று அண்ணனிடம் நேரில் பேசும்போது கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணிக் கொண்டு, வாசிப்பதைத் தொடர்ந்தாள், நந்தனுடைய தங்கை.

அப்புறம், அந்தக் குடும்பத்தாரின் முறையைப் பின்பலமாகக் கொண்டு, ஜார்ஜெட்டி ஹேயரால் எழுதப்பட்ட கதைகளைப் படிப்பது போல, இருந்தது தாரிணிக்கு.

இன்னமுமா, அப்படியெல்லாம் நடந்து கொள்கிறார்கள்.

யோசித்தபடியே, மேலே படித்தாள்.

எல்லாக் குடும்பங்களும், ஆலமரங்களாகச் செழித்திருக்க, மூன்றாவது தலைமுறையின் ஒரே ஒரு குடும்பம் மட்டும், தாயும் மகளுமாகச் சுருங்கி விட்டிருந்தது.

அந்தப் பெண் மஞ்சரியைத் தங்கை வந்து பார்க்க வேண்டும் என்று, தான் மிகவும் ஆசைப்படுவதாக எழுதிய, நந்தன், தொடர்ந்து, அந்தப் பெண்ணைப் பற்றிய விவரத்தைத் தெரிவித்தான்.

கன்னிப் பருவத்தில் அடியெடுத்து வைத்த சமயத்தில், தந்தையை இழந்த தளிர்க்கொடி, மஞ்சரி. பார்த்துக் கொண்டிருந்தால் பசிகூட எடுக்காது என்பார்களே, அது போன்ற பேரழகி. ஆணாதிக்கம் தலை விரித்தாடும், அந்த மேல்மட்டக் குடும்பத்தில் பிறந்துவிட்ட பாவம், சொந்த விருப்பு வெறுப்புகளை வெளிகாட்டிக் கொள்ளக்கூட, அவளுக்குப் பயம், போகப் போக, மூச்சுவிடக் கூட அஞ்சி, அதையும் நிறுத்திக் கொண்டு விடக் கூடாதே என்பதுதான், தனது பெரும் கவலை என்று எழுதி, முடித்திருந்தான்: தாரிணியுடைய அண்ணன்.

இதில், பிறர் அறியக் கூடாதது என்று என்ன இருக்கிறது?

யோசனையோடு, கடிதத்தை வெறித்தவளின் பார்வையில் அவள் கடைசியாகப் படித்துக் கொண்டிருந்த வரிகள், கடிதத்தின் இறுதிப் பகுதி பட்டது.

ஸ்விட்ச் போட்ட மாதிரி, சட்டென, எல்லாம் புரியத் தொடங்கி விட்டது.

அடுத்தவர் அறிந்து விடக் கூடாது என்று, அண்ணன் மறைக்க விரும்பிய விஷயம் இதுதான்! அந்தப் பெண் மஞ்சரி! அவளைப் பற்றி வேறு யாரும் அறிந்து விடக் கூடாது என்று நினைக்கிறான்.

ஏன்?

மஞ்சரியின் நிலைமையும், ஓரளவு அவளது குணமும் கூட, எல்லோருக்கும் தெரிந்துதான் இருக்கும்.!

பிறகென்ன என்று யோசித்தபோதுதான். அவளுக்கு எல்லாம் துலாம்பாரம் ஆயிற்று.

அண்ணன் மறைக்க எண்ணியது மஞ்சரி பற்றிய அவனது கவலையை அவளைப் பற்றி!! அவனது ஆர்வத்தை.! அதாவது நந்தகுமாரன், மஞ்சரி மீது கொண்டிருக்கும் காதலை.!

மஞ்சரியைக் காதலிக்கும் நந்தகுமாரன், அதை, உலகத்திடம் இருந்து, மறைத்து வைக்க விரும்புகிறான்.

தாரிணிக்குச் சிரிப்பு வந்தது.

காதலிக்கும் எல்லோருமே, இப்படித்தான் நடந்து கொள்கிறார்கள்.!

படிக்கும்போதாகட்டும், இப்போது பணிபுரியும் இடத்திலாகட்டும், இரு இடங்களிலுமே இந்தக் காதல் நோய் தாக்கியவர்களை, அவள் பார்த்திருக்கிறாள்.

என்னவோ இதுதான் உலகமகா ரகசியம் போல, முதுகில் ஒளித்து ஒளித்து வைப்பார்கள்.!

ஆனால், பூ மலர்ந்து, மணம் பரப்பும்போது அதன் வாசனையை மறைத்து வைக்க முடியுமா?

ஒருதரம் விஷயம் வெளியாகிவிட்டால், அப்புறம் அதைப்பேசி அறுத்துத் தள்ளி விடுவார்கள்.!

'நம்ம அண்ணாத்தை, இப்போது, முதல் பருவத்தில் இருக்கிறாராக்கும்.!' என்று கேலியும், குதூகலமுமாகத் தாரிணி எண்ணமிட்டாள்.

அன்று வரை, பெண்களிடம் சற்றும் ஆர்வமே காட்டாதவன், நந்தகுமாரன். இப்போது இப்படி மயங்கி விட்டிருக்கிறான் என்றால், மஞ்சரியை அப்போதே நேரில் போய் பார்த்துவிட வேண்டும்போலத் தாரிணிக்கு, மிகவும் ஆசையாக இருந்தது.

ஆனால், அண்ணனாகக் கூப்பிட்டுக் காட்டாதபோது இவளாகச் சென்று, மூக்கை நுழைப்பது, அநாகரீகம்.

அத்தோடு ஒரு வேளை நந்தன் மறைக்க எண்ணியது, காதலர் தன்மையினால் அல்லாமல், வேறு ஏதாவது காரணமாக இருந்தால், தாரிணி நேரில் போய், மஞ்சரியைச் சந்திப்பது, ஆபத்தாகவும் ஆகி விடக்கூடும்.!

அப்படிக் கெடுதல் ஏதும் நேர்ந்து விட்டால், அப்புறம், அண்ணனுக்கு ஒரு வேதனை நேரக் காரணமாகி விட்டோமே என்ற வேதனை, அவளுக்கு உயிருள்ளவரை தீராது.

நந்தன் அவளை மன்னித்து, மறந்து விட்டாலும் கூட.

எந்தக் கெடுதலும் நேராது என்ற நம்பிக்கை வெகுவாக இருந்தாலும், நூற்றில் ஒரு சதவீதமாக, தன்னால் அண்ணனின் காதலுக்கு, இடைஞ்சல் ஏதும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதால் தன் ஆவலைச் சிரமத்துடன் அடக்கிப் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்திருந்தாள் அவள்...

அத்தோடு, நந்தனும்தான், மஞ்சரியைத் தங்கை சந்திக்க வேண்டும் என்று ஆசைப்படுதாக எழுதியிருக்கிறானே..!

பார்க்கலாம். அநேகமாக, விரைவில் அவனே, ஏற்பாடு செய்வான், அவளைக் கூப்பிட்டு, வருங்கால மனைவியை அவளுக்குக் காட்டுவான்!

அந்த நாள் விரைவிலேயே வந்துவிடக்கூடும் என்ற எதிர்பார்ப்பில், அலுவலகத்தில் அடுத்து சில நாட்களில்

ஒரு நீண்ட லீவு தேவைப்படும் என்று தெரிவித்து அதற்கான ஏற்பாடுகளையும் செய்துவிட்டுத் தாரிணி பரபரப்புடன் அண்ணனின் அழைப்புக்காகக் காத்திருந்-தாள்.

ஆனால், அந்த அழைப்பு அவளுக்குக் கிடைக்கும்முன், வேலை விஷயமாக அவள் அண்ணனுக்கு, இன்னொரு கடிதம் வந்து சேர்ந்தது.

நந்தகுமாரனின் அடுத்த வேலை வாய்ப்பு.! இடம் அந்தமான்! அங்கே அதிகமாக வளரும் படாக் மரத்தில் சோஃபாவிலிருந்து சின்னக்குருவி வரை, பல்வேறு மரச்சாமான்களைச் செய்து விற்கும் ஒரு நிறுவனத்தின் வளர்ச்சி பற்றிய தொழில் ரீதியான அறிக்கை வேண்டுமாம்: அதுவும் விரைவில்.!

நந்தனுக்கு வரும் கடிதங்களைப் படித்துத் தேவைப்பட்டதை அவனுக்கு அனுப்பி வைப்பது தாரிணியின் பொறுப்புதான்.

உள்ளூர மூண்ட எரிச்சலில், வேலைக்கான அலுவலக உத்திரவுடன், 'வட இந்தியாவில் பிறந்திருந்தால் ராக்கி பண்டிகையோடாவது, அண்ணனைப் பார்க்கும் பாக்கியம் கிடைத்திருக்கும், இப்போது, அதுவும் இல்லை என்று, ஆத்திரத்துடன், அவள் எழுதிய குறிப்பு ஒன்றையும் சேர்த்து அனுப்பி வைத்தாள்.

இதற்குப் பதில் உடனே வந்தது, "வேண்டுமானால் உங்கள் தங்கையை இங்கே வந்து, தங்கச் சொல்லுங்கள், சாப்பாட்டுச் செலவை, நாங்களே தந்து விடுகிறோம்" என்று என்னை அழைக்க வந்த மனுபரதன் சொல்லுகிறான். எனக்கே உன்னிடம் பேசினால் தேவலையோ, என்று இருக்கிறது. ஆனால், எதற்கும் லீவுக்குச் சொல்லி வை,

பார்ப்போம்'' என்று நந்தன் எழுதியிருந்ததைப் பார்த்ததும், தாரிணிக்குச் சிரிப்பு வந்தது.

அவள்தான், அண்ணனின் அழைப்பை எதிர்பார்த்து. ஏற்கனவே, விடுமுறைக்கு ஏற்பாடு செய்துவிட்டாளே! நந்தன் 'வா' என்று அழைக்க வேண்டியதுதான் பாக்கி.!

ஒரு வழியாக, அந்த அழைப்பு, ஒரு தந்தி வடிவத்தில் வந்து சேரவும், விழுந்தடித்துக் கொண்டு கிளம்பி விட்டாள்.

தந்தி வந்தது பின் மாலையில்,

எனவே, அலுவலகத்தில் யாரையும் தொடர்பு கொள்ள முடியாது என்பதால், ஒருகடிதம் மட்டும் ஏற்கனவே கேட்டிருந்த விடுமுறையை, அன்றிலிருந்து எடுத்துக் கொள்வதாக மறுநாள் தேதியிட்டு ஒரு கடிதம் எழுதி, ரயில் நிலையத்துக்குச் செல்லும் வழியில் தபாலில் போட எடுத்து வைத்தாள்.

துணிமணிகள் எல்லாம் முன்னே ஓரளவு எடுத்து வைத்திருந்தாள். அன்றாடத் தேவைக்கான, ஒரு சில பொருட்களைப் பெட்டியுள் திணித்ததும், தாரிணி, தயார்.!

நாளைக்கே போய் நின்றால் அண்ணன் திகைத்துப் போவானோ, என்று தோன்றவும், தாரிணி சற்றே தயங்கினாள்.

உடனே கிளம்பச் சொல்லித்தான் தந்தி வந்திருக்கிறது.

ஆனால், முன் மாலையில் கொடுக்கப்பட்ட தந்தி அவளுக்குக் கிடைத்தது, பின் மாலையில். சாமான் எடுத்து வைத்து, அவளது அலுவலகத்துக்குச் சொல்லி, அவள் கிளம்ப மறுநாள் வரை ஆவது தானே, இயல்பு? அவளை வரவேற்க ரயிலடிக்கு ஆள் வரும் என்று, விரிவான தந்தி அடித்த நந்தன், அது என்றைக்கு என்று விளக்க மறந்துவிட்டானே.!

நந்தகுமாரன் கொடுத்திருந்த நம்பருக்கு டெலிஃபோன் செய்து பார்த்தாள், தாரிணி.

மணியடித்துக் கொண்டே இருந்ததே தவிர, யாரும் எடுத்துப் பேசவில்லை.

இரண்டு காரணங்கள் இருக்கக்கூடும். வேலை நிமித்தமாக வெளியே சென்ற நந்தன் இன்னமும் வீடு வந்து சேராதிருக்கலாம். அல்லது அதிகாலையில் வரும் தங்கையை வரவேற்பதற்காக, அண்ணன், இப்போதே மலையை விட்டு இறங்கியிருக்கலாம்.

இரண்டாவது காரணமாகத்தான் இருக்கும் என்று தாரிணிக்குத் தோன்றியது. அப்படியிருந்தால், அவள் அன்றைய ரயிலில் போக வில்லையானால், நந்தகுமாரன் எப்படி ஏமாந்து போவான், பாவம்.!

வெடவெடக்கும் குளிரில், உடம்பு நடுங்க, நந்தன் ஒவ்வொரு ரயில் பெட்டியிலும் அவசர அவசரமாக அவளைத் தேடுவதாகவும், தேடிக் காணாமல், முகம்வாடி நிற்பதாகவும், ஒரு கற்பனை மனதுள் விரிய, தாரிணி, அந்தக் கணத்தில் முடிவு செய்தாள்.

அன்றைய ரயிலிலேயே கிளம்ப வேண்டியதுதான்.!

அப்படி அண்ணன் வரவில்லை என்றாலும்தான் என்ன? அவளாக, ஒரு டாக்சி பிடித்து நந்தன் இருப்பிடம் சென்றுவிட முடியாதா என்ன?

விடிகாலை நேரத்தில், தனியே அப்படிச் செல்வது வேண்டாமென்றால், விடியும் வரை ரயில் நிலையத்தில் காத்திருந்து விட்டு. அப்புறமாகப் போவது.!

'மதுரைக்கு வழி வாயிலே' என்பார்கள். தேவை, மனம் மட்டும்தான், முயன்றால் முடியாதது என்ன இருக்கிறது?

*நினைத்தபடி கிளம்பிவிட்ட தாரிணிக்கு முன் பதிவு இல்லாத போதும், வார நடுவில் என்பதால் இலகுவாகவே, படுக்கை வசதிகூடக் கிடைத்தது.*

*ஆனால், அதிகாலைக் கும்மிருட்டில், கொடைரோடு ரயில் நிலையத்தில் ரயிலிலிருந்து இறங்கித் தன்னந்தனியே நிற்க நேர்ந்தபோது, அவளுக்கு உள்ளூர குளிரடிக்-கத்தான்செய்தது.*

## 3

*நந்தகுமாரன் ரயில் நிலையத்துக்கு வரவில்லை.*

*தங்கை, மறுநாள்தான் வரமுடியும் என்று கணக்கிட்டிருப்பான்.*

*அன்புத் தங்கையின் மனம், அண்ணனைப் பார்க்கும் ஆவலில் என்னதான் துடித்தபோதும், ஒருவரால் செய்ய இயலுகிற காரியம் என்று, ஒன்று இருக்கிறதல்லவா? கிளம்புமுன், தாரிணி செய்து முடிக்க வேண்டிய வேலைகளையெல்லாம் யோசித்து, அதையெல்லாம் முடித்து, அவளால், அன்றிரவே கிளம்ப முடியாது என்று முடிவு கட்டியிருப்பான்.! அதனால் வரவில்லை.!*

*அவன் கணிக்கத் தவறியது, தங்கையின் அன்பின் தீவிரத்தையும், அத்தோடுகூடிய, அவளது செயல்-திறனையும்! அண்ணன் அண்ணன் என்று ஜபித்தபடி, தாரிணி எத்தனை நாட்களாகத் தயார் நிலையில் துடித்துக் கொண்டிருக்கிறாள் என்று நந்தனுக்குத் தெரியாதே.!*

*பாவம்.! நாளைக்குத்தான் தங்கையைப் பார்க்க முடியும் என்று ஏங்கியபடி தூக்கமின்றித் தவித்துக் கொண்டி-ருப்பான்.!*

*இன்றைக்கே போய், எதிரில் நின்றால், ஆச்சரியமும்,*

மகிழ்ச்சியுமாக குறைந்தது அரையடி உயரத்துக்காவது, துள்ளிக் குதிப்பான்.!

ஆனால், அவன் இருப்பிடத்துக்குப் போவதெப்படி?

மீண்டும் சூழ்நிலை நினைவு வர, சுற்றுமுற்றும் பார்த்தாள்.

விடியக்கங்குல் என்பார்களே, விடிவதற்கு முன்பான கருக்கிட்டு.! ரயில் நிலையத்து வெளிச்சம் தவிர வெளிப்புறம் ஒன்றுமே தெரியவில்லை.!

இந்த இருளில், வெளியே எங்கே போவது?

விடியும்வரை, பேசாமல், ரயில் நிலையத்திலேயே இருந்துவிட வேண்டியதுதான், என்று அவள் முடிவு செய்யும்போதே ஒரு மீசைக்காரன் அவளை அணுகி வந்து, "எங்கேம்மா போகணும்? டாக்சி வேணுமா?" என்று கேட்டான்.

வெளியே காட்டிக் கொள்ளாவிட்டாலும், தாரிணியின் இதயம் தொண்டைக்குள் வந்து துடிக்கலாயிற்று.

"இ... இல்லை. வேண்டாம் கூப்பிட ஆள் வருவார்கள்." என்று சமாளித்தாள். கூடவே, அவளுக்குத் தன்மீதே கோபமும் வந்தது.

படித்தவள், தற்காப்புக் கலையொன்றும் பயின்றவள், எதற்குப் பயப்பட வேண்டும்? யார், அவளை என்ன செய்துவிட முடியும்?

இப்படியெல்லாம் நினைத்துக் கொண்டிருந்தபோதே, "ஆமாம், ராஜு. அவர்கள் என்னோடு வரப் போகிறார்கள்." என்று ஆண்குரல் பின்னின்று ஒலிக்கவும் தாரிணி, திடுக்கிட்டுத் திரும்பினாள்.

அடுத்த டாக்சிக்காரன், கிராக்கி பிடிக்கப் போட்டி

போடுகிறானாக்கும் என்று எண்ணியவாறு திரும்பிய தாரிணி; மேலும் திகைத்தாள்.

இவனைப் பார்த்தால் டாக்சி டிரைவர் போலத் தெரியவில்லையே.! காக்கிச் சட்டையைக் காணோம்.

மெய்யாகவே, அவளை அழைத்துப் போக வந்தவன்தானா? சந்தேகமாகவும் இருந்தது அவளுக்கு.

நந்தகுமாரனைத் தேடி, அங்குமிங்கும் பார்த்தபோது, சிமெண்ட் பெஞ்சில் சாய்ந்தபடி, இவன் பார்த்துக் கொண்டிருந்தானே! அவளை அழைத்துச் செல்ல வந்தவன் என்றால், அப்போதே ஏன் அவளிடம் வந்து கேட்கவில்லை?

இப்போது அவளை அழைத்துச் செல்ல யாரும் வரவில்லை என்று தெரிந்தபின், அணுகுகிறான் என்றால்?..

அவனைக் கூர்ந்து பார்க்க முயற்சித்தாள்.

ரயில் நிலையத்தின் விளக்குகளின் ஒளி அனுமதித்த அளவில் பார்க்கும்போது, ஆள் மோசம் போலத் தெரியவில்லைதான். ஒரு நிமிர்வோடு, நன்றாக இருப்பது போலக்கூடத்தான் தெரிகிறது. ஆனால், எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கும் என்று, எப்படிச் சொல்லுவது? எதற்கும், எச்சரிக்கையோடு, இருந்து கொள்வது தானே, எல்லோருக்குமே நல்லது.

புதியவனின் ஒரு வார்த்தையில் அந்த 'ராஜு' இணக்கமாய் முறுவலித்தபடியே விலகிப் போய்விட அவன், தாரிணியிடம் திரும்பினான்.

"இந்தப் பெட்டியும் கிட்பாகும்தானா? பரவாயில்லை.! கண்டபடி சாமான்களை அள்ளி வருகிற ரகமில்லை நீ என்று தெரிகிறது. நல்லதுதான்.! எனக்கும், அப்படி அதிகச் சாமான் தூக்குகிறவர்களைப் பிடிக்காது.

'அப்பாடி..! உனக்குப் பிடிக்காததைச் செய்யவில்லை-யல்லவா? மிகப் பெரிய கவலை எனக்கு விட்டது.!' என்று ஏளனமாக எண்ணிக் கொண்டாள், 'தாரிணி' பெரிதாக அபிப்ராயம் சொல்ல வந்துவிட்டான்.! இவனுக்கு எது பிடித்தால், அவளுக்கென்ன வந்ததாம்?!'

உள்ளூர எண்ணியது எதையும் வாய்விட்டுச் சொல்லாமல், லேசாகத் தோளை குலுக்கி விட்டு, உன்னிடம் பேச, எனக்கு ஒன்றுமில்லை, என்று சொல்லாமல் சொல்வது போல, வேறுபுறம் திரும்பி நின்றாள், அவள்.

ஆனால், அதிக நேரம் அவளால் அப்படி நிற்க முடியவில்லை.

ஏனெனில், அவளது முகம் திருப்பலைச் சிறிதும் கவனியாது... அல்லது அலட்சியம் செய்து, அவன் கூலியாளைக் கூப்பிட்டான். "சாமானை வண்டியில் ஏற்று சொக்கேசா," என்று, அவன் ஏவ, அந்த சொக்கேசனும்; அவனது ஏவலை நிறைவேற்ற முற்பட்டான்.

இங்கே, எல்லோரும், இவன் ஆட்கள் போல் தெரிகிறதே?

அவரசமாய்ப் பெட்டியை இழுத்து, அருகில் வைத்துக் கொண்டு, "ஏஎய்.. நில்லு. நில்லு யார் சாமானை, யார் சொல்லி, யார் வண்டியில் ஏற்றுவது, இதெல்லாம் என் பொருட்கள். என் அனுமதியின்றி, யாரும் தொடக் கூடாது!" என்று அதட்டினாள் அவள்.

சொக்கேசன், அடுத்த உத்திரவுக்காகப் புதியவனின் முகத்தைப் பார்த்தான்.

"உன்னைக் கூட்டிச் செல்ல வந்திருப்பவன் நான். உன் பொருட்களை என் காரில் ஏற்றாமல் வேறு எதில்

ஏற்றுவதாம்? சொக்கேசன். ம்'' என்று சிறு கையசைவால் மீண்டும் ஏவினான் அவன்.

கூலியாள் முன்னேறவும், "கொஞ்சம் பொறு. கொஞ்சம் பொறு'' என்று, மீண்டும் சொக்கேசனைத் தடுத்து நிறுத்தி விட்டு. தாரிணி நிமிர்ந்து புதியவனை ஏறிட்டாள். "நீங்கள் என்னை அழைத்துச் செல்ல வந்தவர் என்று எனக்கு எப்படித் தெரியும்?'' என்று, சற்று அழுத்தமான குரலில் வினவினாள்.

அவன் கண்கள் லேசாக இடுங்கின.

அதற்கும், "அய்யா, இப்பதானேம்மா சொன்னாங்க.'' என்றான் சொக்கேசன்.

வாயால் ஒன்றும் சொல்லாவிட்டாலும் 'கூலியாளுக்குத் தெரிகிறது. உனக்கு தெரியவில்லையே' என்பது போல, அவனும், உதட்டால் லேசாக முறுவலித்தான்.

பெரிய புன்னகை மன்னன்.! இவர், அரை சென்டி மீட்டர் உதட்டை இழுத்த உடனேயே எல்லோரும், இவன் சொல்படி நடந்து கொண்டு விட வேண்டுமாக்கும்?

பொறுமையை இழுத்துப் பிடித்தவண்ணம், "அவர்தானே, சொன்னார்? முன்பின் தெரியாத யாராவது, ஏதாவது சொன்னால் அப்படியே நம்பிவிட முடியுமா?'' என்றாள் தாரிணி. மீண்டும் புதியவனை நிமிர்ந்து நோக்கி, "என் அண்... என் குடும்பத்தார் யாராவது கடிதம் ஏதும் தந்து அனுப்பினார்களா?'' என்று எடுப்பாகவே கேட்டாள்.

கீழ்க்கண்ணால் நோக்கித் தோளைக் குலுக்கினான் அவன். "பாவம், நந்தனுக்கு இது தோன்ற வில்லையே!'' என்று சட்டைப் பைக்குள் கையை விட்டான். ஒரு 'விசிட்டிங் கார்டை' எடுத்து தாரிணியிடம் கொடுத்தான். "இது போதுமல்லவா?'' என்றான், கேலிபோல.

'மனுபரதன்.!'

'மலைவளம் நிறுவனத்துடைய மானேஜிங் டைரக்டர்.'

இளைய தலைமுறையை வழி நடத்துகிறவன் என்று, அண்ணன் எழுதியிருந்தது நினைவு வர, தாரிணி மலைத்தாள்.

ஒரு பெரிய நிறுவனத்தின் எம்.டி., அவனே, அவளை அழைத்துப் போக நேரில் வந்திருக்கிறானே.!

மலைப்பை மீறிக் கொண்டு, அவனது குரலில் தொனித்த ஏளனம் அவளை உறுத்தியது.

அவளை அழைத்துப் போகத்தான் வந்தான் என்று என்ன நிச்சயம்?

வேறு ஏதாவது வேலையாக வந்தவன் அவளையும் அழைத்துப் போக எண்ணியிருக்கலாம். அவனா, சுமக்கப் போகிறான்? கார்தானே? இன்னொரு செலவு எதற்கு? காரில், கூட வந்து தொலையட்டும் என்றுகூட எண்ணியிருக்கலாம் என்று எண்ணும்போதே அவள் முகம் லேசாகக் கன்றியது.

அதனால்தான் அந்த ஏளனமா?

ஆனால் 'என்னை அழைத்துப் போ' என்று அவள் ஒன்றும் அவனிடம் கெஞ்சவில்லையே.!

அத்தோடு, அண்ணனின் உதவி, அவனுக்குத்தான் தேவை. அவனால் அவர்களுக்கு ஒன்றுமில்லை.!

அவன் கொடுக்கும் பணமும், கம்பெனிக்குத்தான். அங்கிருந்து, நந்தகுமாரனுக்கு வருவது, நந்தனின் சொந்த உழைப்புக்காகவும், திறமைக்காகவும் தான்.! இவன் ஒன்றும், அவர்களுக்குப் பிச்சை போடவில்லை.!

தலை தானாகச் சிலும்ப, "இந்தக் கார்டை, நீங்கள்

திருடிக் கொண்டு வரவில்லை என்று, எப்படி நம்புவது?" என்று எடுப்பாகக் கேட்டாள், தாரிணி.

கூலியாள் அதிர்ந்து நிற்க, "தெரிந்து கொள்வது மிகவும் சுலபம்". என்றான். அந்த மனுபரதன்.

"எப்படி?"

"விசாரிப்பது?"

"யாரிடம்?" என்றவளின் பார்வை, அந்தச் சொக்கேசனையும் தூர விலகி நின்ற ராஜுவையும், ஒருதரம் ஏளனமாகப் பார்த்து மீண்டது.

ஆனால், அவன் தன்னை நிரூபிக்க, ஆள் தேடும் சிரமத்தை அவளுக்கு வையாமல், ஸ்டேஷன் மாஸ்டர் அந்தப் பக்கம் வந்தவர், "என்ன பரதன் சார், உங்கள் ஆள் வந்தார்களா?" என்று அவனிடம் விசாரிக்கவும் தாரிணிக்குச் சொத்தென்று ஆகி விட்டது.

ஒரு ஸ்டேஷன் மாஸ்டர், பொறுப்பான பதவியில் இருப்பவர், அவரையும் நம்பமாட்டேன் என்று பிடிவாதம் பிடிப்பது, மிகவும் சிறு பிள்ளைத்தனமாகத் தோன்றும்; முட்டாள்தனமாகவும் கூடத்தான்.

அந்த மனுபரதன் ஏதாவது மட்டம் தட்டிக் கிண்டலடிக்குமுன் நிலைமையைச் சமாளிக்க எண்ணி "உங்கள் கார் எங்கே நிற்கிறது மிஸ்டர் பரதன்?" என்று கேட்டபடி, குனிந்து, பெட்டியைத் தூக்க முனைந்தாள்.

நல்லவேளையாக, அவனும், வேறெதுவும் சொல்லவில்லை. "பெட்டி இருக்கட்டும் சொக்கேசன் தூக்கி வைப்பான்." என்று உரைத்தவன், ஸ்டேஷன் மாஸ்டரிடம், "வந்தாயிற்று, சார் இதோ" என்று தாரிணியைக் காட்டினான். "மிஸ்டர் நந்தகுமாருடைய தங்கை. பெயர் தாரிணி இங்கே, எல்லோரையும் பார்த்துப் பழகவென்று

வந்திருக்கிறாள். நந்து சார்பாக, அழைத்துப் போக நான் வந்தேன்" என்று விவரமாய் விளக்கினான்.

நந்து.!

இவ்வளவு நெருக்கமாக அண்ணனோடு பழகுகிறவனா?

'அழைத்துப் போக வந்த மனுபரதன்' என்று நந்தன் கூட எழுதியிருந்தானே வேலைசெய்யும் இடத்துக்கெல்லாம் இவனே அழைத்துப் போவான் போல.!

இவனைப்போய்.

அவளுக்கு இன்னும் கொஞ்சம் நிதானம் வேண்டும் என்று நந்தன் சொல்வது சரிதான் போலும்.!

யோசியாமல் படபடத்து விடுகிறாள் என்பது, அண்ணனின் மென்மையான குற்றச்சாட்டு. எல்லோரையும் எளிதாக நம்பிவிடுகிறான், நந்தன் என்பது தங்கையின் குறை.! அவ்வப்போது வீட்டில் இது பற்றி, வாக்கு வாதங்கள் நடக்கும். ஆனாலும் எவ்வளவு நேரம் விவாதம் நடந்தாலும், இருவரில் யார் சத்தமும் உயராது.!

அண்ணனைப் பார்க்கும் ஆவல் மேலோங்க, "போவோமா" என்றாள், தாரிணி.

"உத்திரவு!" என்று முறுவலோடு, அவன் இலகுவாகச் சொன்ன விதத்தில் அவள் சற்றுக் குழம்பி நிற்க, சாமானை எடுத்துச் செல்லுமாறு, கூலியாளுக்குச் சைகை செய்தபடியே, ஸ்டேஷன் மாஸ்டரிடமும் தலையசைத்து விடைபெற்றுக் கொண்ட மனுபரதனும் கிளம்பி விட்டான்.

## 4

என்னவென்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாமல், எதுவோ, தாரிணியின் மனத்தைக் குழப்பியது.

குழப்பம், பக்கத்தில் இருப்பவனால்தான் என்கிற மட்டும் அவளுக்கு நிச்சயம். அழைக்க யாரும் வந்திருக்கிறார்களா,என்று அவளாகத் தேடும்வரை, யாரோ போல உட்கார்ந்திருந்தது, அடுத்து அதிகாரமாய்ப் பேசியது, கிட்டத்தட்ட தகராறு என்கிற அளவுக்குப் போன பிறகு, இப்படி இலகுவாக முறுவலோடு பதிலிறுத்தது எல்லாமே, ஒன்றுடன் ஒன்று ஒட்டாமல் துண்டு துண்டாய்த் தனித்தனியே நின்று மனுபரதன், எப்படிப்பட்டவன் என்று புரிந்து கொள்ள முடியாமல், அவளைத் திகைக்க வைத்தன.

எல்லாமே வேஷமாக இருக்குமோ, என்று தோன்றவும், ஒரு கணம், தாரிணியின் மனம் கலங்கிப் போயிற்று.

ஒரே கணம்தான் அதற்குள் கலக்கம் மறைந்தும் விட்டது.

எப்படியும் இவன் 'மனுபரதன்' என்பது நிச்சயம்; ரயில்வே அதிகாரியின் ஒப்புதல் இருக்கிறது.

அதனால், இவன் பெண்களைக் கடத்தி, வில்லத்தனமாக என்னமாவது செய்கிறவனாக இருக்க வழியில்லை.

எப்படியும் சில மணி நேரத்தில் அண்ணனிடம் கொண்டு விட்டுவிடப் போகிறான்.

அதற்குமேல், இவன் எப்படிப்பட்டவனாக இருந்தால், அவளுக்கென்ன வந்தது?

சின்னதான, ஓர் அலட்சியத் தோள் குலுக்கலுடன், சுற்றுப்புறத்தைப் பார்ப்பதற்காக, இருள் எப்போது விலகும் என்று, தாரிணி காத்திருக்கலானாள்.

ரொம்ப நேரம் காத்திருக்கத் தேவையிராமல் விரைவிலேயே இருள் விலகத் தொடங்கியது. மலை, மலை வளர் மரங்களின் வரி வடிவங்கள், எல்லாம், கண்ணுக்குப் புலனாகத் தொடங்கின.

எப்போதுமே, இந்த இருள் விலகி, ஒளி பரவுவதைப் பார்க்கத் தாரிணிக்கு, மிகவும் பிடிக்கும்.

பரீட்சைக்குப் படிக்கும் நாட்களில், அதிகாலையில் விழித்துப் படிக்கிறவள், ஓர் ஐந்து நிமிஷங்களேனும், படிப்பை நிறுத்திவிட்டு, ஜன்னல் அருகே நின்று, ஒளி பரவுவதைப் பார்த்துக் கொண்டு நிற்பாள்.

என்னவோ, அதில் அவளுக்கு, ஒரு தனி சந்தோஷம் ஏற்படுவதுண்டு. நாள் முழுவதும், அந்த மகிழ்ச்சி அவளுடனேயே இருப்பது போலவும் தோன்றும்.

இப்போதும், அதே குதூகலம் தாரிணியுள், குமிழிட்டுப் பெருகலாயிற்று.

வினாடிக்கு வினாடி, வானின் கருமை குறைந்து, வெண்மை பெருக, பாதையின் இரு மருங்கிலும், அடர்ந்து வளர்ந்திருந்த மரம், செடி, கொடிகளில் பசிய நிறம், பளிச்சென்று கண்ணில் பட்டுக் கருத்தைக் கவர்ந்தது. இடையிடையே வண்ணக் கோலமிட்ட, பல்வேறு நிறப் பூக்கள்வேறு..!

மலையின் அடிவாரத்திலேயே, இப்படி என்றால், உயரப் போகப் போக, எப்படி இருக்கும்?

அண்ணன், இந்த வேலைக்கு, அதிக நாள் எடுத்திருப்பதன் காரணம், இந்த இயற்கை எழிலாகவும் இருக்கலாம்.!

தலையை இங்குமங்கும் திருப்பி, இயற்கையன்னையின் எழில்கோலங்களை ரசித்துக் கொண்டிருந்தவளுக்குத் திடுமென, மனுபரதன் இதை எப்படி ரசிக்கிறான் என்று அறியும் ஆவல் உண்டாயிற்று.

குறைந்தது. அவள் அளவு? அல்லது அதிகமாக?

மிக லேசாகத் திரும்பி, காரை ஓட்டி வந்தவனின்

முகத்தை ஓரக்கண்ணால் நோட்டமிட்டவளுக்கு அங்கே தென்பட்ட பாவம், வியப்பூட்டியது.! சன்னமான முறுவல்.!

நத்தகுமாரன் எழுதியிருந்தது போல, அடிக்கோல் கொண்டு அளவிட்டுப்பழகி வைத்தது போன்று, இரண்டு மில்லிமீட்டர் அளவுக்கே விரிந்திருந்த, மிகவும் சிறிய முறுவல்!

புன்னகையின் அளவைக்கூட விட்டுவிடலாம். வளர்ந்த விதம் நந்தனையும் அவளையும் போல வாய்விட்டுச் சிரித்துப் பழக்கமில்லை. பாவம் என்று பரிதாபப்பட்டு விட்டு விடலாம்.!

ஆனால் அந்தச் சிறு சிரிப்பிலும் தெளிவாய்த் தெரிந்த ஏளனத்தைதான், தாரிணியால் புரிந்து கொள்ள முடியவில்லை!

ஏளனத்தையும், ஒரு நிமிர்வோடு அமர்ந்து காரை ஓட்டிய அவனது கண்களின் கடினத்தையும்.!

ஏன்?

இந்த வழியில் பலமுறை வந்து வந்து பழகிவிட்டதால், ரசனை உணர்வு மரத்து விட்டதா? அல்லது ரசிப்புத் தன்மையே இல்லாத கல் மனமா?

மீண்டும், தன்னை மீறி, அவளது பார்வை, அவன்மீது பாய்ந்தது.

பார்வைக்கு இவ்வளவு கம்பீரமும், கச்சிதமுமாக இருப்பவன் ரசிக்கத் தெரியாத ஜடமாக எப்படி இருப்பான்?

இருக்கமாட்டான் என்றால், இந்த ஏளனத்துக்கும், இறுக்கத்துக்கும் என்ன விளக்கம்?

என்ன யோசித்தும் **விஷயம்** புரிபடாமல்

போராடித்ததோடு, அவனாக, ஏதும் பேச்சுக் கொடுக்கவும், தயாரில்லை என்பது, சற்று எரிச்சலாகவும் இருந்தது.

ஏன் அப்படி என்று ஆராயமுனைந்த மனதை அடக்கி சுற்றுப்புற அழகில் மீண்டும் கவனத்தைச் செலுத்தினாள்.

இந்த மனுபரதனைப் போன்று, இந்த மாதிரி மலைச் சாலைகளில் அடிக்கடி சென்று வரும் வாய்ப்பு, அவளுக்கு. எங்கே, கிடைக்கப் போகிறது? கிடைக்கும்போது அதை முழுமையாக அனுபவிக்காமல், கண்ட உப்புப் பெறாத விஷயங்களில்மனதை வீணாக அலைய விடுவானேன்? அருகிருந்து காரை ஓட்டுகிற இந்த மனிதன், ஒரு ரசிகனாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் அவளுக்கென்ன வந்தது?

ஒன்றுமே கிடையாது என்று நன்றாகவே தெரிந்தபோதும், உள்ளூர ஒரு நெருடலோடுதான், அவளால் மேற்கொண்டு, வெளியே கவனத்தைச் செலுத்த முடிந்தது. அதுவும் பிடிவாதமாகத்தான்.

அப்போதும், அழகழகான பூங்கூட்டங்களைக் காணும்போது, 'இதோ, மத்தியில் அடர்சிவப்பும், ஓரங்களில் ஆரஞ்சுமாக இருக்கிறதே, இது என்ன பூ?' வட்டவட்டமான நீல நிறத்தில், கொத்துக் கொத்தாய்ப் பூத்திருக்கிறதே இதன் பெயர் என்ன? 'செக்க செவேல் என்று தளிர் விட்டு மாபெரும் தீக்கொழுந்து போல நிற்கும் இந்த மரத்தின் பெயர் செம்மரமா?' இப்படி எத்தனையோ கேள்விகள் தாரிணியின் நாவில் துடித்து கொண்டு இருந்தன.

ஆனால் அவற்றையும் பிடிவாதமாக அடக்கிக் கொண்டாள் அவள்.

காரணமின்றியே, அவளை, ஏளனமாக எண்ணுகிறவன் மனுபரதன். அவனிடம் தன் ஆவலையும், உற்சாகத்தையும் காட்டி இன்னமும் மட்டம் தட்ட விடுவது சரியல்ல.

அத்தோடு, பெரிய மகாராஜா மாதிரி, ஒரு வார்த்தை கூடப் பேசாமல், கர்வத்தோடு உட்கார்ந்திருப்பவனிடம், தானாகப் போய்ப் பேசுவது சரியல்ல.

அண்ணன் வீட்டுக்குப் போய்விட்டால் அப்புறம் அவன் யாரோ, அவள் யாரோ?

இவனைப் பற்றி, ஏன் இவ்வளவு யோசிக்க வேண்டும்? தேவையே கிடையாது.

என்னதான் புத்தி கற்பித்துக் கொண்ட போதும். மனுபரதனைப் பற்றிய எண்ணங்களைத் தாரிணியால் தடுத்து நிறுத்த முடியவில்லை. போய்த் தொலைகிறான் என்று வேறு விஷயங்களில் மனதை முழுமையாக ஈடுபடுத்த முடியாமல் போனதுதான் அவளுக்கு எரிச்சலாக இருந்தது.

அவன் எப்படி நடந்து கொண்டாலும் அவள் மனம், அதிலேயே சுற்றிச் சுழன்றாக வேண்டுமா?

இவ்வளவு மாறுபாடுகளை, ஒரே மனிதனிடம் காண்பது, இதுதான் முதல் தடவை என்பதால் மனம் அதிலேயே உழல்கிறது என்று, அதற்கொரு காரணத்தைக் கண்டுபிடித்த பிறகே அவளுக்குக் கொஞ்சம் அமைதி உண்டாயிற்று.

இங்குள்ளவர்கள் எல்லோருமே, இப்படித்தான் இருப்பார்களா, என்று யோசித்தவளுக்கு, அண்ணன் எழுதிய மஞ்சரியின் நினைவு வந்தது.

அவள் பூ மாதிரி மென்மையானவள் போல 'மோப்பக் குழையும் அனிச்ச'மாக அல்லவா தோன்றுகிறது!

மூச்சுவிடக் கூடப் பயப்படுகிறவளாமே! பூங்கொத்துப் போல மென்மையோடு, அழகாகவும் இருப்பாளா? அண்ணனுக்குப் பொருத்தமாக.!?!

அறிந்து கொள்ளும் ஆவல் மேலோங்க, 'மஞ்சரி பார்க்க எப்படியிருப்பாள்?' என்று கேட்பதற்காகச் சட்டென மனுபரதனின் பக்கம் திரும்பி, வாயைத் திறந்தவள், சமயத்தில் அண்ணன் கடிதம் நினைவு வர, உதட்டைக் கடித்துக் கேள்வியை உள்ளேயே அடக்கி, மீண்டும் வெளிப்புறம் திரும்பிக் கொண்டாள்.

ஆனால் அவள் திரும்பியதை உணர்ந்தவனாய். மனுபரதன் பேசினான் "இனி அதிக தூரமில்லை. வீடு விரைவிலேயே வந்து விடும்."

திடுமென அவன் குரலைக் கேட்டதும்,தாரிணி திகைப்புற்றுத் தலைதிருப்பி, அவனைப் பார்த்தாள்.

ஒரு கணம் பாதையிலிருந்து, பார்வையை அகற்றி, அவள் முகத்தை நோக்கி விட்டு, மறுபடியும், செல்லும் வழியில் கவனத்தை வைத்தவன்,லேசாக முறுவலித்தான்.

"என்ன அவ்வளவு ஆச்சரியம்?"

ஒரு வினாடி தயங்கியவள், உடனே நிமிர்ந்து, "நீங்கள் பேசுவீர்கள் என்று, நான் எதிர்பார்க்கவில்லை" என்று அவள் அவ்வளவு நேரம் பேசாமல் வந்ததைக் குத்திக் காட்டினாள்.

குத்திக் காட்டியதற்காக, அவன் கோபப்பட்டால், பட்டுக் கொள்ளட்டும்.! அப்படியென்ன, காரிலிருந்து கழுத்தைப் பிடித்து வெளியேவா, தள்ளிவிட்டு விடுவான்.

அப்படி ஓர் உந்துதல் ஏற்பட்டாலும்கூட, அவளைத் தள்ளிவிட்டு விட்டு அப்புறம், அண்ணனுக்கு என்ன பதில் சொல்லுவான்?

சற்றுநேரம் காரில் நிசப்தம் நிலவியது.

நத்தை, மறுபடியும் கூட்டுக்குள் புகுந்து விட்டதாக்கும்,

என்று ஏளனமாக அவள் எண்ணமிட்டபோது "சாரி" என்றான். அவன் சுருக்கமாக.

மீண்டும் திகைப்புடன், தாரிணி அவனைப் பார்த்தபோது, "இவ்வளவு நேரம் பேசாமலே இருந்தது. உனக்குப் போரடித்திருக்கும். ஆனால், இந்தச் சாலை, ரொம்ப பழகியவர்களைக் கூடச் சில சமயங்களில் ஏமாற்றி விடும். அத்தோடு நீ இயற்கையை ரசிப்பதிலேயே, திருப்தியுற்றிருப்பது போலவும் தோன்றியது. எனவே, அதிலிருந்து உன் கவனத்தை, அனாவசியமாக கலைப்பானேன், என்றும் எண்ணினேன்." என்று அவன் சொன்னதை அவளால் முழுமையாக நம்ப முடியாவிட்டாலும் மனதுக்கு இதமாகத்தான் இருந்தது.

எப்படியோ, செய்தது, தப்பென்று உணர்ந்தாற்போல, அதற்கொரு சமாதானம் சொல்லி விட்டான் அல்லவா?

அதுவே, இந்தக் காலத்தில் பெரிய விஷயம்தானே? இந்தக் காலத்தில் யார் செய்த தப்பை ஒத்துக் கொள்கிறார்கள்? அதுவும் வசதி படைத்தவர்கள்?!

இவன், இந்தப் பெரிய நிறுவனத்தின் எம்டி வேறு!

அவன் இவ்வளவு இறங்கி வரும்போது, தான் சும்மா இருந்தால் நன்றாயிராது என்று உணர்ந்தவளாய், "நீங்கள் சொல்வது சரிதான், இந்த இடம் இந்தச் சாலைப் பகுதி மிகவும் அழகாகவே இருப்பதால், எனக்கும் வேறு உரையாடலுக்கு அவசியம் இருக்கவில்லைதான். ஆனாலும், சில பூக்கள், மரங்களின் பெயர்களை அறிந்து கொள்ள வேண்டும் போல, ஓரிரு சமயங்களில்...ஓரிரு சமயங்களில் மட்டும் தோன்றியது. அப்புறமாய், அண்ணனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று இருந்துவிட்டேன்." என்றாள் அவள்.

இயல்பாக, அதைக் கேட்கும் அளவுக்கு, நீ சரளமாகப் பழகவில்லை என்பதைக் குறிப்பிடாமல் இருக்க அவளுக்கு மனமில்லை. ஆனால், அதைப் பெரிதாக நினைக்கவில்லை என்பதையும், சொல்லாமல் சொன்னாள் அவள்.

மனுபரதனின் ஓரக் கண் பார்வை, மீண்டும் ஒரு தரம், தன்மீது பாய்ந்து மீண்டாற் போலத் தாரிணி உணர்ந்தாள்.

ஏன்? இந்த அளவுக்குக் கூட இவனிடம் யாரும் நிமிர்ந்து நின்று பேசியதில்லையா?

"என்னிடம் கேட்டிருக்கலாமே" என்று, அவன் சர்வ சாதாரணமாகச் சொல்லவும் தாரிணி, ஒரு கணம் திகைத்துத் தடுமாறினாள்.

ஆக, மனுபரதன் தப்பை உணர்ந்து அதற்குச் சமாதானம் சொல்லவில்லை. இது இப்படி என்று, வெறுமனே, ஒரு விளக்கம் கொடுத்திருக்கிறான். அவ்வளவே!

இப்போது விவரம் கேளாதது, அவளது தப்பாகி ... தப்பு என்று இல்லாவிட்டாலும் அவளது அசட்டுத்தனமாகி விட்டது!

அவளுக்குப் போய், ஒருவர் அசட்டுப்பட்டம் கட்டுவதா? அதெப்படி?

நீ பேசினால்தானே, நானும் கேட்க முடியும் என்று கேட்டுச் சண்டையிட முடியாது. ஏனெனில், தான் பேசாமல் இருந்ததன் காரணத்தை, அவன் ஏற்கனவே தந்தாயிற்று.

சோகமாக யோசித்து, அவனது விளக்கத்தையே பயன்படுத்தி, "எப்படிக் கேட்க முடியும்? நீங்கள்தான் சாலையில் கவனமாக இருந்தீர்கள்! காரோட்டுகிறவரின் கவனத்தைக் கலைப்பது, தப்பல்லவா? முதலில், நாம் முழுசாகப் போய்ச் சேருவது முக்கியம் அல்லவா?

பிழைத்துக் கிடந்தால், இந்தப் பூக்களின் பெயர்களை, எப்போது வேண்டுமானாலும் தெரிந்து கொள்ளலாமே!" என்று அவள் சாதுவாகக் கூறவும் மனுபரதன் சட்டென்று சிரித்து விட்டான்.

மனுபரதனின் சிரிப்பே வியப்பளிக்கையில் கூட சேர்ந்து தனது நகையொலியும் கேட்கவும், தாரிணி பெரிதும் திகைத்துப் போனாள்.

அவள் பேச்சு, குத்தல்தான்! அவளை, அவன் அசடாக்கிய ஆத்திரத்தில் விளைந்தது.

அதைத் தப்பாக எடுத்துக் கொள்ளாமல், அவன் சிரித்ததே, அதிசயம்தான்.

அவன்தான், சிரித்தான் என்றால் உடனே கோபம் மாறி, அவளும் நகைத்து விட்டாளே!

மனுபரதனின் சிரிப்பு, தொத்து வியாதியா என்ன?

எப்படியாயினும் வாய்விட்டுச் சிரித்து, ஏதோ கட்டவிழ்ந்தாற் போலத் தோன்றிவிட, அவளால் இறுக்கமின்றி, இலகுவாக இருக்க முடிந்தது.

அவனும், அதே போலவே, உணர்ந்த மாதிரி, "பத்திரமாகக் கொண்டு சேர்ப்பேன் என்று உத்திரவாதம் அளித்தால், விசாரித்து அறியத் தைரியம் இருக்குமா?" என்று கேலிக் குரலில் கேட்டான்.

'விடுவேனா?' என்று வெளியே பார்த்தவள், சட்டெனத் திரும்பி, "உங்களுக்கு கொடைக்கானல் செல்லும் பாதை, தெரியும் தானே? தப்பாக எடுத்துக் கொள்ளாதீர்கள். இது அந்த வழி இல்லை" என்றாள்.

சிரித்த முகம் மாறிவிட, "கொடைக்கானல் ரோடு எது என்று உனக்கு எப்படித் தெரியும்? நீ, அங்கே சென்றதே

கிடையாது என்று, உன் அண்ணன் சொன்னாரே," **என்று** பதில் கேள்வி கேட்டான், மனுபரதன்.

"போனதில்லைதான், ஆனால் எனக்கு யோசிக்கத் தெரியுமே.! இது, கொடைக்கானல் செல்லும் பாதை என்றால், இதற்குள், எத்தனை கார், பஸ், லாரிகளை எதிர்கொள்ள நேர்ந்திருக்கும்? நம்மை முந்திக் கொண்டு கூட ஒன்றுமே செல்லவில்லையே.! இதிலிருந்தே, தெரியவில்லையா, நாம் போவது தப்பு வழி என்று? காரைத் திருப்புங்கள், மிஸ்டர் மனுபரதன்" என்றாள், தாரிணி.

காரை நேராகவே செலுத்தியபடி, "பரவாயில்லை, நான் நினைத்ததை விட நீ புத்திசாலிதான்" என்று ஒரு மாதிரிக் குரலில் சிலாகித்தான், அவன்.

## 5

இது, மெய்யான பாராட்டல்ல, ஏதோ ஒரு வகையில், அவன் அவளை, எள்ளி நகையாடுவது போலவே, தாரிணிக்குத் தோன்றியது. ஆனால் அண்ணனுடைய நண்பன், அவளை இளக்காரம் செய்வானேன்? ஒரு வேளை இது இளக்காரம் அல்லவோ? வெறும் கேலிதானோ? காரைவேறு திருப்பவில்லை.

"அப்படியென்றால்?" குழப்பமும் சந்தேகமுமாக அவனைப் பார்த்தாள், தாரிணி.

தோளைக் குலுக்கி, "இது கொடைக்கானல் வழியல்ல என்று கண்டுபிடித்ததைச் சொன்னேன். ஆனால் நந்தகுமார், தன் வேலையைப் பற்றி உன்னிடம் ஒன்றும் சொல்லவில்லை போலத் தெரிகிறதே" என்றான் பழைய குரலிலேயே.

"ஏன் சொல்லவில்லை?" என்று வரிந்து கட்டிக் கொண்டு தொடங்கினாள், அவள்.

"என்ன சொன்னார்?"

"எல்லாம்தான்.! கொடைக்கானல் மலைகளில் நீங்கள் சேர்ந்து, காஃபி, ஏலம், கிராம்பு, பழங்கள் விளைவிப்பது. அவற்றில் பல்வேறு பொருட்களைத் தயாரித்து இந்தியா முழுவதிலும் விற்பது. எல்லாமே எனக்கு எழுதியிருக்கிறாரே.! நீங்கள் இன்னும் காரைத் திருப்பவில்லையே.!"

அவளது கடைசி வாக்கியத்தைக் காதிலேயே வாங்காமல், "இவ்வளவு எழுதிய மனிதர். இதையெல்லாம், எங்கெங்கே விளைவிக்கிறோம். எங்கெங்கே தயாரிக்கிறோம் என்று எழுதாமல் இருந்து விட்டாரே! நல்லவேளை.! கொடைக்கானல் மலைகளில் என்றாவது மொத்தமாய் எழுதினாரே. இல்லாவிட்டால், நான் கூட்டிப் போகும் இடத்தில் காரைவிட்டு இறங்க மாட்டேன் என்று நீ அடம் பிடித்தாலும், ஆச்சரியப்படுவதற்கில்லை.!

"பாரம்மா, கொடைக்கானல் என்கிற ஊரில் மட்டுமாக, இதையெல்லாம் செய்ய முடியாது. சுற்றி சுற்றி உள்ள மலைகளில், அந்தந்த உயரங்களில், அந்தந்த இடத்து மண்வளம், நீர் வசதிக்கு ஏற்றபடி, உரிய பயிர்களைப் பயிரிட்டு, ஏற்ற இடங்களில் தயாரிப்பு வேலைகளையும் பார்க்கிறோம். எங்கள் அலுவலகங்கள் கூட, அங்கங்கேதான் இருக்கும். அலுவலகங்களுக்கு இலகுவாகச் செல்லும் தூரத்தில்தானே, நந்தனும் இருந்தாக வேண்டும்? சும்மா காரைத் திருப்பு, திருப்பு என்றால் எங்கே திருப்புவது?" என்று மனுபரதன் முடித்த போது, தன்னை ஓர் அசடாக உணர்ந்தாள் தாரிணி.

கடைசியாக அசட்டுப் பட்டம் கட்டியே விட்டானே?

"சாரி!" என்று அவள் முணுமுணுத்ததைக் காதிலேயே வாங்காதவன் போலக் காரை வெகு வேகமாக ஓட்டினான். மனுபரதன்.

என்ன வேகமாக ஓட்டிய போதும், காரை அவன் வெகு திறமையோடு ஓட்டுகிறான் என்பதும் தெள்ளத் தெளிவாகத் தெரிந்ததால் அது பற்றி எதுவும் சொல்லாமல், தாரிணி தன்னை அடக்கிக் கொண்டாள்.

கார் ஓட்டுவதைப் பற்றி, சரியாக எதுவும் தெரியாத அவள், தப்புத் தவறாக ஏதாவது கூறி அதற்காக வேறு முட்டாள்ப் பட்டம் கட்டிக் கொள்ள வேண்டுமா?

மேலும், ஓர் அரைமணி நேரம், கிளைப் பாதை-களிலேயே கார் செல்லவும் உள்ளூரத் தாரிணிக்கு கலக்கமாகத்தான் இருந்தது.

யாரோ, ஓர் அன்னியன்; அவளை அவன் சந்தித்ததே, அன்றுதான். ஆள் நடமாட்டமே இல்லாத இந்தக் காட்டுப் பாதையில், அவனோடு தனியாகச் சென்று கொண்டிருக்கிறாளே! அதுவும் எவ்வளவு தூரம்?!

வயிற்றுக்குள் பிசைந்த போதெல்லாம், ஒரு ரயில்வே அதிகாரி, பொய் புகல வாய்ப்பில்லை. இவனும், ஒளித்து மறைத்து, அவளை அழைத்துச் செல்ல முயற்சிக்கவில்லை என்பதைத் தனக்குத் தானே நினைவுபடுத்திக் கொண்டு தன்னைத்தானே அமைதிப் படுத்திக் கொண்டாள்.

அப்படியும் ஒரு தரம் தன்னை மீறி, ‘இப்படி ஆள் நடமாட்டமே இல்லாத இடத்தில் இருந்து கொண்டு அண்ணன் என்ன வேலை பார்க்கிறாரோ தெரியவில்லையே! என்று முயன்று வரவழைத்த சாதாரணக் குரலில் கேட்டாள்.

“விவரங்களைச் சேகரித்த பின், அமைதியாக இருந்து வேலை செய்யத் தனிமை தேவைப்படாதா?

"ஆனால் உன் அண்ணனின் வேலை பற்றி, அவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்வதுதான் சரியாக இருக்கும்

என்பது என் அபிப்பிராயம்.! உனக்கு அப்படித் தோன்றவில்லைபோல!"

இதற்கு மேல் என்ன பேசுவது? வாயை மூடிக் கொண்டாள் அவள்.

அவன்தான், அவள் வாயைத் திறந்தாலே முட்டாளடிக்கிறானே!..

நீ முட்டாள் என்று நேரடியாகச் சொல்லவில்லை. கடுமையான வார்த்தைகள் எதையும் சொல்லவில்லை.

சொல்லப்போனால், அவன் பேச்சில் குற்றமென்று எதையும் கூறவே முடியாது. ஆனால் அவளால் தொடர்ந்து பேச முடியாமல் மட்டும் செய்து கொண்டேயிருந்தான்.

பெரிய முதலாளி அல்லவா? இந்தக் கூலிக்கு வேலை செய்யும் கும்பலோடு சமமாக இரைந்து உரையாட அவனுக்குப் பிடிக்கவில்லை! அதற்காகவே, அவன் என்ன சொன்னாலும் முட்டாளடித்து, அவளாகவே வாய்மூடும்-படி செய்கிறான்.!

போகட்டும் இவனோடு பேசித்தான் ஆக வேண்டும் என்று, அவளும் ஒன்றும் ஏங்கிக் கொண்டிருக்கவில்லை. பேச வேண்டியதையெல்லாம் சற்று நேரத்தில் சந்திக்கப் போகிற நந்தனிடமே சொல்லிக் கொள்ளலாம்.

இந்த முடிவெடுத்தபின், தாரிணி, எதுவும் பேசவே இல்லை, அவனாகவும் எதையும் சொல்லாததால் காரினுள் முழுமையான மயான அமைதிதான்.!

சற்று நேரத்தில் மிகவும் சலிப்புற்று 'காரைத் திருப்பி, என்னை மீண்டும் ரயில் நிலையத்திலேயே கொண்டு விட்டுவிடு, நான் எப்படியோ என் அண்ணனிடம் போய்ச் சேர்ந்து கொள்ளுகிறேன்.' என்று மனுபரதனிடம் சொல்லிவிட எண்ணி, தாரிணி வாய் திறந்தபோது, கார்

தொண்ணூறு டிகிரி நேர்கோணத்தில் திரும்ப, எதிரே உயரமான சுற்று மதிலுடன் அழகிய பெரிய கேட் ஒன்று தென்பட்டது.

இப்படி ஓர் இடம் இங்கே இருப்பதைக் கொஞ்ச தூரத்தில் இருந்து பார்த்தால் கூடக் கண்டுபிடிக்க முடியாது. அந்த அளவுக்குச் சுற்றிலும் ஓங்கி வளர்ந்திருந்த உயரமான மரங்கள், அந்தக் கட்டிடத்தை மறைத்திருந்தன.

ஊர் உலகத்துக்குத் தெரியாமல் யாரையேனும் மறைத்து வைப்பதானால், இது, அதற்குச் சரியான இடம் என்று தோன்றவும் , தாரிணிக்குச் சிரிப்பு வந்து விட்டது.

கண்ட கண்ட திரைப்படங்களையும் பார்த்தால், இப்படித்தான் நினைக்கத் தோன்றும், அதில்தானே, வில்லன்கள், யாரை வேண்டுமானாலும், இப்படிப் போட்டு அடைத்து வைப்பதாகவெல்லாம் வருகிறது!

இவன் காரை நிறுத்தும்போது, இறங்கி, கேட்டை திறக்க வேண்டுமா என்று, தாரிணி யோசிக்கும்போதே ‘திறந்திடும் சீசேம்’ மாதிரி, கேட் தானாகத் திறந்தது.

பிரமிப்புடன் விழி விரித்தவள் உடனே விவரம்புரிந்து, “ரிமோட் கண்ட்ரோல்” என்று ஆச்சரியப்பட்டாள். “இங்கே அதெல்லாம் வைத்திருக்கிறீர்களா?” என்று வியப்புடன் கேட்டவள், சட்டென நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

இவனிடம் பேசக்கூடாது என்று, எண்ணியது மறந்துவிட்டதே!

கார் தாண்டிச் சென்றதும், கதவுகள் தானாக மூடிக் கொள்ள, “பின்னே, காவலாள் வந்து கதவைத் திறக்கும்வரை, வெளியேயே நின்று கொண்டிருப்பதா?” என்று கேட்டவாறு, காரை வீட்டின் முன் நிறுத்தினான், மனுபரதன்.

ஏன், ஓர் ஐந்து நிமிஷம் காத்துக் கொண்டிருக்கத் துரையால் முடியாதாக்கும், என்று உள்ளூர எண்ணியபடி கார்க்கதவை திறந்து கொண்டு தாரிணி அவசரமாகக் காரிலிருந்து இறங்கினாள்.

வரும் நேரம் கணக்கிட்டு அண்ணன் காத்துக் கொண்டிருப்பான் என்று, சுற்றுமுற்றும் பார்வையால் தேடியவளுக்கு நந்தகுமாரனைக் காணாதது, சற்று ஏமாற்றம்.

வெளிக் கேட்டைப் போலவே, மனுபரதன் நெருங்கவும், வீட்டுக் கதவும் திறந்தது.

இப்போது சரி, அவளும் அண்ணனோடு அந்த வீட்டில் இருக்கும்போது, இவன் இப்படிக் கதவைத் திறக்க முடிவது சரியில்லை. உட்புறம் தாள்ப்பாளிட்டுக் கொள்ள வேண்டும் என்று எண்ணியவள், "குளிக்கிறானோ என்னவோ?" என்றவாறு வீட்டினுள் விரைந்து சென்றாள்.

சுற்று மதில் கேட்டோடு ஒப்பிட்டுப் பார்த்தால் வீடு சிறியது தான்.

இரண்டு பெரிய படுக்கையறைகள். ஒட்டியமைந்திருந்த குளியலறைகள், நடுவில் நீளமான ஹால், சாப்பாட்டு அறையின் அருகிருந்த சமையலறை, ஒரு சாமான் அறை ஒட்டி நீளமாக வேலையாட்கள் தங்குகிற மாதிரி அறை ஒன்று.

பணக்காரத்தனம் எல்லா இடங்களிலும் தெரிந்த-போதும், வீடு அளவில் சிறியதே.!

பின்புறம், உள்ப்பக்கமாய்ப் பூட்டுப் போட்டுப் பூட்டியிருந்தது.

தேடுவதற்கு அதிக இடம் இல்லாமல், சென்ற வேகத்திலேயே திரும்பி வந்தவள், "உள்ளே அண்ணன்

இல்லையே.! வேறெங்கும் சென்றிருப்பாரா? வெளியே 'வாக்கிங்' ஏதும்..." என்றவாறு, மீண்டும் வீட்டுக்கு வெளியே செல்ல முயன்றவள், அவளுக்கு வழிவிட்டு ஒதுங்காமல், மனுபரதன் வாயிலின் நடுவிலேயே நிற்கவும் சற்றுத் திகைத்து நின்று, கேள்வியாய் அவனை நோக்கினாள்.

கண்ணை எட்டாத முறுவலுடன், அவன் சொன்னான் "மிகவும் புத்திசாலியான இந்த அழகான பட்டுப்பூச்சி, கடைசியில் தானாக வலைக்குள் வந்து சிக்கிக் கொண்டது.!" என்றான் கேலிபோல.

ஒன்றல்ல, பல பட்டாம்பூச்சிகள், வயிற்றுக்குள் பறப்பது போல் உணர்ந்தாள் தாரிணி.

கடைசியாக, இவன் ஏமாற்றுக்காரனேதானா?

இளம் பெண்களுக்குச் செய்யப்படுவதாகப் படித்த எத்தனையோ கொடுமைகள் நினைவுக்கு வர, தாரிணி திகைத்து நின்றாள்.

ஆனால், எதிர்பாராத அதிர்ச்சியில் மலைத்துப் போய், அவள் செயலற்று நின்றது சில கணங்களே. அதற்குள்ளாகப் பல ஆண்டுகளாகத் தனியே ஹாஸ்டலில் வளர்ந்து தன்னைத்தானே கவனித்துக் கொண்ட அனுபவம் கை கொடுக்க, அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

இதில் ஏதோ இருக்கிறது. ஸ்டேஷன் மாஸ்டர், அந்தச் சொக்கேசன், ராஜீ எல்லோருமா பொய் சொல்லுவார்கள்? இராது இவன் அந்த 'மனுபரதன்' தான் என்பதில் சந்தேகம் இல்லை.

அப்படி ஒரு நல்ல நிலையில் இருப்பவன் அவளை ஏமாற்றி இங்கே ஏன் கொண்டு வர வேண்டும். நந்தனிடம் தவறான அறிக்கை தயார் பண்ணச் சொல்லி அவன்

மறுத்து அவனை மிரட்டிப் பணிய வைப்பதற்காக இருக்குமோ?

ஆனால் அண்ணனின் கடித விவரப்படி, அதற்கு அவசியமே இல்லையே!

பின்னே?

இருவருக்குமிடையே, வேறு ஏதாவது தகராறு இருக்குமோ?

அதற்கும் வாய்ப்பு இருப்பதாகத் தாரிணிக்குத் தோன்றவில்லை. ஏனெனில் தகராறு நடக்கிற பக்கம் நந்தன், தலை திருப்பிக் கூடப் பார்க்க மாட்டான். அவனே ஒரு தகராறுக்குக் காரணம் ஆவது நடக்க முடியாத விஷயம்.!

பிறகென்ன?

நண்பர்களுக்கிடையே, விளையாட்டுச் சவாலோ, என்பதற்கும் இடமில்லை. வேடிக்கை, விளையாட்டிலும் கூடத் தங்கைக்குச் சிறு உறுத்தல் ஏற்பட, நந்தன் விட மாட்டான்.! எனவே, இது வேடிக்கைச் செயலாக இருக்கவும், வழியில்லை.

. அத்தோடு, அவளையே பார்த்தபடி, சற்றும் இளக்கமற்று, மனுபரதன் நின்ற விதமும், அவளுக்குச் சரியாகப் படவில்லை. ஆனால், அதற்காக அவள் பயந்து நடுநடுங்கிப் போய்விடவில்லை. தான் புத்திசாலி என்பதில் அவளுக்கு நம்பிக்கை உண்டு. புத்தியோடு, பாதுகாப்புக் கலையில் பரிச்சயமும் உள்ள தன்னை, யாரும் எதுவும் செய்துவிட முடியாது என்கிற உறுதியும் இருந்தது.

அத்தோடு இன்னொன்றும் கூட, அவளை அவன் அழைத்து வந்தது பலருக்குத் தெரியும். எனவே அவளுக்குத் தீங்கிழைக்கும் துணிவு, அவனுக்கு, எப்படி இருக்க முடியும்?

அதற்கு வாய்ப்பு இல்லை என்று தோன்றிய போதும், ஆள் நடமாட்டமற்ற, இந்த இடத்தில் இவனோடு அதிக நேரம் தனித்திருப்பது நல்லதல்ல என்று எண்ணியவளாய், அவனை நேராக நோக்கி, "இதோ பாருங்கள், மிஸ்டர் மனுபரதன் நீங்கள் என்ன நினைத்து இப்படிச் செய்தீர்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் என்னை, என் அண்ணனிடம் சீக்கிரமாகக் கூட்டிப் போய் விட்டுவிடுவது நல்லது." என்றாள். சற்று அழுத்தமான குரலில்.

அசையாமல் நின்று, "யாருக்கு நல்லது?" என்று நிதானமாகக் கேட்டான் மனுபரதன்.

வழியை விட்டு விலகேன் என்று மனதிற்குள் கடுத்துக் கொண்ட போதும், "எல்லோருக்குமேதான்" என்று அமைதியாகவே சொன்னாள் தாரிணி.

"இருக்கலாம்" என்றான், அவன் யோசிப்பது போன்ற பாவனையுடன். "ஆனால், அதில் இரண்டு சிக்கல்கள் இருக்கின்றனவே.!"

அசுசியின்றி மீள்வது, சற்றுக் கடினம் போலிருக்கிறதே, என்று எண்ணியவாறு "என்ன சிக்கல்கள்?" என்று கேட்டாள் அவள்.

"முதல் சிக்கல், உன் அண்ணன் இப்போது எங்கே இருக்கிறார் என்பது யாருக்கும் தெரியாது."

"எ... என்னது?"

"ஆமாம். போவது எங்கே என்று அவர் யாரிடமும் சொல்லி விட்டும் செல்லவில்லை. எதையும் எழுதி வைத்துவிட்டும் போகவில்லை. ஆனால் அவரது எல்லாப் பொருட்களையும் எடுத்துச் சென்றிருக்கிறார். அல்லது தப்பான முடிவுக்கு வரவேண்டியிருந்திருக்கும்.!

"என்ன தப்பான முடிவு?" என்று, ஆத்திரத்துடன் கேட்டாள், தாரிணி. நந்தனை பற்றித் தப்பாக என்ன முடிவு

செய்ய முடியும்? திருடிக் கொண்டு, ஓடி விட்டதாகவா பொய் சொல்லக்கூடப் பிடிக்காதவன் அவன்.!

"இங்கே மலைக்கு மலை பள்ளத்தாக்குகள் உண்டு. எந்தப் பள்ளத்தாக்கில் எப்படிக் கிடக்கிறாரோ... என்றுதான்."

உணர்ச்சியற்ற குரலில் அவன் கூறிய வார்த்தைகள் விளைவித்த கற்பனையில் உள்ளம் சில்லிட்டுப் போயிற்று. அவளுக்கு சே.! அப்படியெல்லாம் இராது.!

லேசாக உடல் சிலிர்தவள், "அடுத்த சிக்கல் என்ன?" என்று, உள்ளூரப் படபடப்புடன் வினவினாள். என்று ஒரெட்டு உள்ளே வந்து காலால் கதவைச் சாத்தியபடி அவன் சொன்னான், உன் வாழ்வு என்னோடு என்று முடிவான பிறகுதான் இங்கிருந்து நீ வெளியே போக முடியும். அது, என் மனைவியாக, அல்லது ஆசை-நாயகியாக."

கண்களில் கனல் வீசத் தாரிணி, கையை ஓங்கி வீசினாள்.!

## 6

ஆசை நாயகியாக.!

அவளிடம், அந்த வார்த்தை சொல்ல, அந்த மனுபரதனுக்கு, எவ்வளவு தைரியம் இருக்க வேண்டும்.

தைரியம், திமிர், ஆணவம், அகங்காரம்!

அந்த வார்த்தை, காதில் விழுந்ததுமே, தீப்பிடித்தாற் போன்றதோர் உணர்வில் அனிச்சைச் செயல் போல அந்த வினாடியே, கையை ஓங்கி விட்டாள் அவள்.

அந்த அடி மட்டும், மனுபரதனின் மீது விழுந்திருந்தால், பட்ட இடம் பழுத்துப் போயிருக்கும்.!

ஆனால் அதே அனிச்சைச் செயல் போல், அவனும் விலகி விடவே அடி அவன்மேல் படாமல் வீணாயிற்று.

எப்படியும், அவளிடம் இந்த வார்த்தை கூறிவிட்டு, ஒருவன் வலியின்றி தப்பிப்பதா? உரிய த்ண்டனை கொடுக்காவிட்டால், மீண்டும் மீண்டும் வாலாட்டத் தோன்றாதா? அதற்கு, இடம் கொடுக்கலாமா? கூடவே கூடாது.! இவனைத் தண்டித்தே ஆக வேண்டும்.

இந்த முடிவோடுதான், தாரிணி, தன் கராத்தே வகுப்பில் பயின்ற விதமாகக் கைகளை விறைப்பாக வைத்துக் கொண்டு மனுபரதனை அணுகினாள்.

அவன் முகத்தில் வியப்பு பரவவும், அப்போதே வெற்றி பெற்று விட்ட உணர்வுடன், வேகமாக அவன் மீது பாய்ந்தாள் அவள். இரண்டு வெட்டு, நாலு உதையில் சுருண்டு விழ வைத்துவிட்டால், அப்புறம் சொன்னபடி கேட்பான்.!

தாரிணியின் பாய்ச்சலில் இருந்து மனுபரதன் லாகவமாக விலகிக் கொண்டதைக் கண்டு, மீண்டும் தாக்க எண்ணித் திரும்பிய வரையும்தான், அவள் அறிந்தது.

ஒரு சில நிமிஷங்கள்தான்.

அதன்பின், முதுகுப்புறமாக மடக்கப்பட்ட கைகளுடன், செயலற்ற நிலையில் அவன் பிடியில் அவள் இருந்தாள்.

பின்புறம் நின்ற அவளைப் பற்றியிருந்தவன், "கராத்தேயில், மிஞ்சி மிஞ்சி, 'பிரௌன் பெல்ட்' வாங்கியிருப்பாயா? கறுப்பு பெல்ட்காரனை அடித்து வீழ்த்த அது போதுமா? எதிராளி எப்படிப்பட்டவன் என்று அறியாமல் அதென்ன கை நீட்டல்?" என்று அதட்டிக் கேட்டுக் கொண்டிருந்தான்.

அவனிடம்தோற்றுப் போய், அவனது கைப்பிடியில்,

செயலிழந்து நிற்க நேர்ந்திருந்த அந்த நிலை, மிகுந்த அவமானத்தைத் தர, "என்னை விடுங்கள்" என்றாள் அவள், கம்மிய குரலில்.

எச்சரிக்கையுடனேயே, அவளை விட்டு விலகி நின்று, "இனி அசட்டுத்தனம் பண்ணாமல் பேச வருவாய் என்று நினைக்கிறேன்." என்று ஹாலின் ஒரு புறமாய்க் கிடந்த சோஃபா செட்டைக் காட்டினான் மனுபரதன்.

மறுக்கத் தோன்றவில்லை. அவளுக்கு அதிகநேரம் நிற்க முடியும் போலவும் இல்லை.

சற்று வலுவிழந்தாற் போலிருந்த கால்களைக் கவனத்துடன் எடுத்து வைத்து சோஃபாவை அணுகி, அதில் தளர்வுடன் சரிந்தாள் அவள்.

தாரிணி பெரியமூச்சுக்களை எடுத்து விடுவதைப் பார்த்தவாறு சற்று நேரம் நின்று விட்டு, மனுபரதன் உள்ளே சென்றான்.

தாரிணியின் பார்வை, வாயிற் கதவின் பக்கம் ஒருதரம் பாய்ந்து மீண்டது.

அவன், உள்ளே இருக்கும்போது, பாய்ந்து ஓடி விட்டால், பிடிப்பது அவனுக்குக் கடினம்தான். படிக்கும்போது அனைத்துக் கல்லூரி ஓட்டப்பந்தயத்தில், ஒருதரம் இரண்டாம் பரிசுகூட வாங்கியிருக்கிறாள்.! ஆனால் இப்போது கால்கள் இருக்கும் நிலையில் கதவுவரை நடந்து செல்லக் கூட அவளால் முடியுமோ என்னவோ.

அத்தோடு, மனுபரதன் அனைத்துக் கல்லூரி ஆண்கள் ஓட்டப்பந்தயத்தில், முதல் பரிசே வாங்கியிருந்தால், என்ன செய்வது? அவனிடம் பிடிபட்டு, அதுவேறு இன்னொரு கேவலம் ஆகி விடுமே! அவன் விஷயத்தில் அதுவும் சாத்தியம்தான்.!

சோர்வுடன், அவள் பார்வையைத் திருப்பிக் கொண்டபோது, உட்புறம் செல்லும் கதவருகில் நின்று அவன், சொன்னான். "சந்திரலேகா என்று பழைய படம் ஒன்று டிவியில் பார்த்திருப்பாய். அதில் கதாநாயகியிடம் 'கதவு பூ..ட்டியிருக்கிறது' என்று வில்லன் சொல்வது. அப்போது மிகவும் பிரசித்தி பெற்ற வசனமாம். அதுபோல், நான் உன்னிடம் சொல்லும்படி வைத்துக் கொள்ள மாட்டாய் என்று நம்புகிறேன்." என்று விட்டுச் சென்றான்.

பரவாயில்லை. அந்த மட்டும், முயற்சிக்காமலே விட்டு விட்டோமே என்று, வருத்தப்படத் தேவையில்லை. பூட்டிய கதவைத் திறக்க முடியாமல் முழித்துக் கொண்டு நின்று அவன் வந்து பார்த்து.. அது ஓர் அவமானம் மிச்சம் தானே?

அனாவசியச் செய்கைகள் எதையும் செய்யாமல், சற்றுமுன் நடந்த சண்டையில் இழந்த வலுவை மறுபடியும் ஒருங்கு சேர்த்தபடி, அசையாமல் அமர்ந்திருந்தாள், அவள்.

எதெதற்கு எவ்வளவு சக்தி அவளுக்குத் தேவைப்படுமோ?

இனி என்ன... என்று கலக்கத்துடன் யோசித்துக் கொண்டிருந்தவள் முன் மனுபரதன் ஒரு காஃபி கப்பை வைத்தான். "நம் பண்ணை காஃபி குடிப்பாயில்லையா? பால்தான், பவுடர்பால்."

'இல்லை காஃபி குடிக்க மாட்டேன் என்றால் என்ன செய்யப் போகிறானாம் திரும்பிப் போய், டீ போட்டுக் கொண்டு வருவானா?' என்று முசுட்டுத் தனமாக எண்ணியபடி, கப்பை எடுக்காமலே உட்கார்ந்திருந்தவளுக்குத் தொண்டை காய்ந்திருப்பது போலத் தோன்றியது.

இந்த காஃபியைக் குடிப்பதனாலேயே, அவன் சொல்படி நடந்தாக வேண்டிய கட்டாயமா என்ன?

கப்பை எடுத்து, ஒரு மிடறு காஃபியை அருந்திய பிறகுதான், தன் தொண்டை எவ்வளவு காய்ந்திருந்தது என்பதே தாரிணிக்குப் புரிய வந்தது.

நாசூக்குப் பாராமல் மிச்சத்தையும் குடித்து முடித்து விட்டுக் கப்பை, டீபாயில் வைத்தாள்.

இவனிடம், என்ன பெரிய நாசூக்கு? கடத்திக் கொண்டு வந்திருக்கிறான், கண்டபடி பேசுகிறான்.!

வேண்டும் என்றே, வெளியே பார்த்துக் கொண்டிருந்தவள், மௌனம் நீளவும் பொறுமையிழந்து, அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

மனுபரதனும், அவளைப் பார்த்துக் கொண்டிருக்கவில்லை.

தனக்கெனக் கொணர்ந்திருந்த பழச்சாற்றைப் பாதி அருந்தியிருந்தவன், மீதியிருந்த பானத்தை வெறுமனே வெறித்துக் கொண்டிருந்தான்.

தாரணியிடம் அசைவை உணர்ந்தபோது, பானத்தில் கிடந்த ஐஸ் துண்டுகளை லேசாகச் சுழல விட்டவாறே, மெல்லச் சொன்னான். "இன்னும் மூன்று தினங்களில் எனக்குத் திருமணம் நடப்பதாக நிச்சயிக்கப்பட்டிருக்கிறது" என்றான்.

"வாழ்த்துக்கள்." என்றாள், அவள் சிரத்தையற்ற குரலில்.

அவன் திருமணம் செய்தாலும், செய்யாவிட்டாலும், அவளுக்கென்ன வந்தது? இப்போது, அவள் விஷயம் என்ன? அதைப் பற்றிச் சொன்னான் என்றால் நன்றாயிருக்கும். மூன்று நாட்களில் திருமணம் செய்யப் போகிறவன், அவளிடம் ஏன் அப்படி உளறினான் என்பதையும் விளக்கினால், தேவலை.!

ஆனால் பார்வையை அவளிடம் திருப்பி, "அனாவசிய-மாக வாழ்த்து" என்று கூறியவன். ஒரே மூச்சில் மிச்சத்தைக் குடித்து முடித்துத் தம்ளரை வைத்து விட்டு "ஏனென்றால் மணப்பெண்ணுடன் உன் அண்ணன் ஓடி விட்டான்" என்று முடித்தான்.

பிரமித்துப் போனாள், தாரிணி "எ… என் அண்ணனா?" என்று நம்ப மாட்டதவளாகக் கேட்டாள்.

கீழ்க்கண்ணால் அவளை நோக்கி, "அப்படித்தான் சொன்னதாக ஞாபகம்" என்றான், அவன் ஏளனமாக.

"நம்பவே முடியவில்லையே!" என்று மேலும் திகைத்தாள் அவள்…

"நம்பித்தான் ஆக வேண்டும். ஏனெனில், நந்தகுமார், எந்தவிதத் தகவலும் இல்லாமல் சென்றிருந்தபோதும், மஞ்சரி, அவள்தான் என் வருங்கால மனைவியாக இருந்திருக்க வேண்டியவள், தெளிவாக எழுதி வைத்துவிட்டுத் தான் போயிருக்கிறாள்!" என்றான் அவன் எகத்தாளமாக.

"எ…என் அண்ணனோடு போவதாகவா?"

இன்னமும் நம்ப முடியாமல், விஷயத்தைத் தெளிவுப்படுத்திக் கொள்ள முயன்றாள் தாரிணி.

சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து மடியில் வீசினான் மனுபரதன்.

கண்ணீர் வெள்ளத்தில் மிதந்து வந்திருந்தது கடிதம்.

'இந்தப் பிறவி மட்டுமின்றி. இன்னும் எத்தனைப் பிறவிகள் எடுத்தாலும், நந்துதான் தன் கணவன்' என்று நிச்சயமாய்த் தெரிந்து போய்விட்டதால் அவனோடு கிளம்புவதாக, கண்ணீர் அழித்தது போக மிச்சமிருந்த எழுத்துக்கள் மூலமாகவே தெளிவாகத் தெரிந்தது.

இவ்வளவு காலம் அவன் செய்த உதவிகளுக்கு நன்றியுரைத்து, நன்றி கொன்றமைக்கு மன்னிப்பு வேண்டி, அவள் செய்த பிழைக்காக, அம்மாவைப் பழி வாங்க வேண்டாம் என்று அவன் காலில் விழுந்து மன்றாடி, கெஞ்சிக் கேட்டுக் கொண்டு, கடிதத்தை முடித்திருந்தாள் அவள். அந்த மஞ்சரி.

மஞ்சரி!

மென்மை. அது, இது என்று நந்தகுமாரன் பிதற்றியிருந்த அதே மஞ்சரி!

'அண்ணாத்தை காதல் வசப்பட்டுவிட்டார்' என்று அவள் கேலியாக எண்ணியது நூற்றுக்கு இருநூறு சதவீதமாகச் சரியாகி விட்டதே!

ஆனால் அண்ணனா? நந்தனா, இப்படித் திருமணம் நிச்சயமான பெண்ணை இழுத்... கூட்டிக் கொண்டு சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப் போனான்? அவன் குணத்துக்கும் இதற்கும், கொஞ்சம் கூட ஒத்துப் போகவே இல்லையே! நந்தன் அப்படிப்பட்டவன் அல்லவே! அதுவும் பாதி வேலையில்?!

தம் நம்பாமையை, தாரிணி வாய்விட்டுச் சொன்னாள். "நந்தண்ணனுக்குச் செய்யும் தொழிலே, தெய்வம். எடுத்த வேலையை இடையில் விட்டு விட்டு ஒரு நாளும் போகமாட்டார்" என்றாள் உறுதியோடு.

"வேலையை இடையில் விட்டுப் போவதாக, யார் சொன்னது? நந்தகுமாரின் வேலை முடிந்து, ஒரு வாரம் ஆகிறது. மேலே ஒரு வாரம் தங்கி, இயற்கையழகை ரசித்து விட்டுப் போவதாகச் சொன்னார். அவர் ரசித்தது மஞ்சரியின் அழகை என்று, இப்போதல்லவா, தெரிகிறது! என்றான், அவன் கசந்த குரலில். "என் வீட்டிலேயே தங்கி, என் உபசாரத்திலேயே உண்டு... சே. பச்சைத் துரோகம்!"

பதில் சொல்ல அவளால் முடியவில்லை.

தாரிணி அறிந்த அண்ணன். இப்படிப் பட்டவன் அல்ல, குறுக்கு வழியில் செல்ல அவனுக்குத் தெரியாது. ஏன், அவன் தயாரிக்கும் அறிக்கைகளைச் சற்று மாற்றி அமைத்தால், ஆயிரக்கணக்கில் பணம் லஞ்சமாகத் தருவதாக, எத்தனை பேர் வீடு தேடி வந்து கேட்டிருக்கிறார்கள்? அதையெல்லாம் ஏற்றிருந்தால் நந்தகுமாரன் பெரிய லட்சாதிபதியாகி இருப்பானே.! ஆனால் ஒருமுறையேனும், அவன் அப்படி வாங்கியிருக்கிறானா? இல்லையே. !

எதிலும் நேர்மை வேண்டும் என்கிறவன், அவள் அண்ணன்; அவனால் இப்படிச் செய்ய முடியாது.!

எண்ணியதை வாய்விட்டுச் சொல்ல முயலும்போதே, அவள் மனம் திகைத்தது.

தன் கோட்பாடுகளையெல்லாம் கைவிட்டு விட்டு, அந்த மஞ்சரியை அழைத்துச் சென்றிருக்கிறான் என்றால், அவனது காதல் அவ்வளவு தீவிரமானது என்றுதானே அர்த்தம்?

அவளது முகமாறுதலைக் கவனித்துக் கொண்டிருந்தவன் போல, "என்ன? அண்ணன் தேவன் அல்ல. மனிதன்தான் என்று கொஞ்சம் புரிந்தாற் போலத் தெரிகிறதா.!" என்று ஏளனமாகக் கூறினான், மனுபரதன்.

புரிபட்டது, அது மட்டுமல்ல. திருமணத்துக்குச் சில தினங்களே இருக்கும்போது மணப்பெண் இன்னொருவனோடு சென்றாள் என்றால், அந்த பெண்ணின் மனமும் அவனிடம் முழுமையாகச் சென்று விட்டது என்பது தானே காரணம்?

கடிதத்தைப் படிக்கும்போது புரியாதது, இப்போது விழி

விரித்து, மனுபரதனைப் பார்க்கும்போது தெளிவாகத் தெரிந்தது.

இந்த மனிதன், கச்சிதமும் கம்பீர்மும், ஆள் நன்றாயிருக்கிறான். இங்குள்ள மேல்மட்ட இளைஞர் கூட்டம் இவன் பின்னே செல்கிறது என்றால், தனிப்பட்ட தகுதிகளும் இருக்கத்தான் வேண்டும். இந்தப் பகுதியில் கிட்டத்தட்ட ஒரு மன்னன் மாதிரியானவன், கூடவே வளமும் இருக்கிறது.

இத்தனையும் வேண்டாம் என்று பார்வைக்குச் சுமாரை விட இரண்டு படி மட்டுமே மேலான ஒரு மாதச் சம்பளக்காரன் போதும் என்று சென்றிருக்கிறாளே, அவளது காதலும்தான் எவ்வளவு உறுதியானதாக இருக்க வேண்டும்?

இதையெல்லாம் எடுத்துச் சொன்னால், இவனால், இப்போது புரிந்து கொள்ள முடியுமா?

அவனே, இவ்வளவு அருகில் நடக்க இருந்த திருமணம் நின்று விட்டதை, யார் யாரிடம் எப்படித் தெரிவிப்பது என்று திணறிக் கொண்டிருப்பான், பாவம்தான்.!

ஆனால், ஓர் 'ஐயோ, பாவம்' தவிர இது விஷயத்தில் அவள் என்ன செய்ய முடியும்?

"மூன்றே நாட்களில் திருமணம் இவன் பெண்ணை அழைத்துக் கொண்டு ஓடி விட்டால், மணநாளன்று எல்லோர் முன்னிலையிலும் நான் விரலைச் சப்பிக் கொண்டு 'ஙே' என்று நிற்பேன் என்று எண்ணினானா?"

அவளிடம் சொன்னானோ? அன்றிச் சும்மா, பொருமினானோ?

மனுபரதனின் நிலை பரிதாபத்திற்குரியதே என்றாலும், அவன் சொன்ன காட்சி, தாரிணியின் கற்பனையில்

தானாகத் தோன்றிவிட, அவளுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

ஆனால் இது சிரிப்பதற்கான விஷயமோ, நேரமோ அல்லவே.! அத்தோடு சிரிப்பது மனிதத் தன்மையும் அல்ல, எனவே, உதட்டைக் கடித்து. அந்தச் சிரிப்பை அடக்கி மறைக்க முயன்றாள், அவள்.

ஆனால் அதற்குள் கவனித்து, "என்ன சிரிப்பு" என்று கேட்டான் அவன்.

"ஒன்றுமில்லை"

"ஒன்றுமில்லாமல் சிரிப்பவர்களுக்கு வேறு பெயர் உண்டு. நீ அப்படிப்பட்டவள் அல்ல என்று எனக்குத் தெரியும் என்ன விஷயம் சொல்லு."

அவனுக்காகப் பார்த்தால் அவளையே அதட்டு-கிறானே.! விடாமல் கேட்டாயல்லவா, இந்தா வாங்கிக் கட்டிக் கொள் என்று உள்ளூரக் கறுவியவாறே, சிரிப்பு வந்த விதத்தை அவனிடம் தாரிணி அப்படியே சொல்லி விட்டாள்.

ஆனால் ஆத்திரப்படாமல் அவனும் சட்டெனச் சிரிக்கவும், அவள் அப்படியே திகைத்துப் போனாள். **காரணம்** அவனது சிரிப்பின் கவர்ச்சி.!

இந்தச் சிரிப்பை, வேண்டாம் என்று விட்டு விட்டு மஞ்சரியால், எப்படிப் போக முடிந்தது?

விழி விரித்துப் பார்த்துக் கொண்டிருந்தபோதே, தாரணிக்கு இன்னொன்றும் தோன்றியது. தன் அசட்டுத் தோற்றத்தைக் கற்பனை செய்து சிரித்தாளோ, என்று ஆத்திரப்படாமல், தானும் அதையே நினைத்துப் பார்த்துச் சிரிப்பது என்றால் மனுபரதன் மோசமில்லையோ? அல்லது கை தேர்ந்த நடிகனா?

சிரிப்பினூடே, "ஆனாலும், உனக்குத் தைரியம் அதிகம்தான். இங்கே தனியாக என்னிடம் மாட்டிக் கொண்டிருக்கிறாய் என்ற பயமே இல்லாமல், என்னைப் பார்த்தே நகைக்கிறாய்.!" என்றுரைத்து, மனுபரதன் முறுவலிக்கவும் தாரிணி மீண்டும் நகைத்தாள். மனுபரதன் மோசம்தான்.

## 7

அண்ணனைப் பற்றிய விவரங்களிலும் தொடர்ந்த பேச்சு, சிரிப்பிலுமாகச் சற்று பின்னுக்குத் தள்ளப் பட்டிருந்தவை எல்லாம் தாரிணியின் மனதில் மீண்டும் படமாய் ஓடின.

மெய்யாகவே மனுபரதனிடம் அவள் வகையாக மாட்டிக் கொண்டுதான் இருந்தாள்.

இதிலிருந்து மீள்வது எப்படி?

யோசனையோடு அவனை நோக்கி, "அந்தத் தந்தி அதைக் கொடுத்தது கூட நீங்கள்தான் இல்லையா?" என்று விசாரித்தாள்.

அவன் ஒப்புதலாய்த் தலையாட்டவும், "ஏன்" என்று கேட்டுவிட்டு, அவன் பதில் கூறுமுன், தானே தொடர்ந்து பேசினாள். "திருமணத்துக்கு இன்னும் மூன்று நாட்கள் இருக்கின்றன. தந்தி கொடுக்குமுன் என்றால் குறைந்த பட்சமாக ஐந்து நாட்களுக்கு முன்னரே, உங்களுக்கு விஷயம் தெரிந்திருக்க வேண்டும். நீங்கள் பேசாமல் திருமணம் நிறுத்தப் பட்டுவிட்டது என்று, எல்லோருக்கும் தெரிவித்திருக்கலாமே! இலகுவாக முடிந்திருக்கும். அதை விட்டு, எதற்கு இந்த வேண்டாத வேலை? ஏன் சொல்கிறேன் என்றால், என் வரையில் உங்கள் திட்டங்கள் எல்லாமே,

கேலிக் கூத்துத்தான். எதுவும் நடக்கப் போவதும் இல்லை." என்றாள். தெளிவாக.

கடைசிவரை, குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, "முடித்து விட்டாயா?" என்று கேட்டான் மனுபரதன். "இப்போது நான் சொல்வதைக் கவனி. இங்கேயுள்ள எங்கள் குடும்பங்கள் பற்றி, உனக்கு எழுதியிருப்பதாக, நந்தகுமார் சொல்லியிருக்கிறார். இந்தக் குடும்பங்களின் நடுவே, எங்கள் குடும்பம், எப்போதுமே தலைமை தாங்கி வந்திருக்கிறது. நாங்கள் ஒன்று சொன்னால், யாரும் தட்டிப் பேசமாட்டார்கள். இப்போது மூன்றாவது தலைமுறையாக நான் வந்திருக்கிறேன். என் வருங்கால மனைவி, என்னைவிட இன்னொருவனை உயர்வாகக் கருதி, அவனோடு சென்று விட்டாள் என்று வெளியே தெரிந்தால், அது எனக்கு மிகுந்த அவமானம்.

எனக்கு மட்டுமல்ல, எங்கள் குடும்பத்துக்கே கேவலம். அப்புறம், எங்கள் தலைமைக்கே மதிப்பில்லாமல் போய்விடும்..."

அவன் பேச்சு அர்த்தமற்றதாகத் தோன்றியது, அவளுக்கு. உயர்வோ, தாழ்வோ, தன் துணை நந்தகுமாரன்தான் என்று, மஞ்சரி சென்றாயிற்று. இன்றில்லாவிட்டாலும், இன்னும் மூன்றுநாட்களில் இது எல்லோருக்கும் தெரியத்தான் போகிறது. கடைசி நிமிஷம் வரை அதைத் தள்ளிப் போடுவதால், பாதிப்பு எந்த விதத்தில் குறையக் கூடும்? அத்தோடு, அவளை இங்கே கொணர்ந்து வைத்திருப்பதால், மஞ்சரி செய்தது இல்லை என்று ஆகிவிடுமா? யோசியாமல் பேசினால், என்ன செய்வது?

"அது உங்கள் விஷயம், உங்கள் பிரச்சனை, எனக்கும் அதற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது" என்று கையை

விரித்து, விஷயத்தைக் கை கழுவ முயன்றாள் தாரிணி.

"சம்பந்தம் இருக்கிறது" என்றான் அவன் பிடிவாதமாக. இந்த நிலையை உருவாக்கியவர், உன் அண்ணன். அதனால் இதில் உனக்கும் தொடர்பு இருக்கத்தான் செய்கிறது. இதைச் சீர் செய்யும் பொறுப்பும் உன் அண்ணனைப் போலவே, உனக்கும் உரியதுதான்" என்று உறுதியான குரலில், தொடர்ந்து கூறினான்.

அப்போதுதான், தாரணிக்கு விஷயம் ஒருவாறு புரியத் தொடங்கியது.

என்ன மனிதன், இவன்? இன்னொருவனை விரும்புகிற பெண்ணைப் போய்.. என்று, உள்ளூரக் கனன்றவளாக, "ஓகோ! என்னை, இப்படிச் செய்வேன், அப்படிச் செய்வேன் என்றீர்களே, அந்த மிரட்டலுக்குப் பயந்து, நான், என் அண்ணனிடம் போய் அழுது அவன் விரும்பி அழைத்துச் சென்ற பெண்ணைக் கொணர்ந்து உங்கள் காலடியில் போடச் செய்வேன் என்று எதிர்ப்பார்க்கிறீர்களாக்கும்! சாரி, சார் என் உயிரே போவதானாலும், என்னால் அப்படிச் செய்ய முடியாது!" என்று அழுத்தம் திருத்தமாக கூறி முடித்தாள், அவள்.

ஏளனமாய் முறுவலித்தான், அவன். "உன்னைப் புத்திசாலி என்று எண்ணினேனே!" என்றான் முறுவலுக்கு ஏற்றதான குரலில்.

மீண்டும் தாரிணியின் கண்கள் அகல விரிந்தன. "அ.. அதாவது நீங்கள் சொன்னதெல்லாம், வந்து, முதலில் சொன்னதெல்லாமே, மெய்யே என்கிறீர்களா?"

"இந்தக் கேள்வி பரவாயில்லை!"

"அதாவது திருமணம் அல்லது ... அல்லது ஆசைநாயகி!"

"ஆமாம்."

அசையாமல் இருந்து, மனுபரதன் பதில் சொன்ன விதமும், பதிலின் கருத்தும் விசித்திரமாகத் தோன்ற, "இதில் எதற்குமே நான் சம்மதிக்கப் போவது இல்லையென்பது, ஒருபுறம் இருக்க. மனைவி என்கிற உரிமைக்கு வழியிருக்கும்போது ஆசைநாயகியாக இருக்க எவள் விரும்புவாள்?" என்று கேட்டாள் தாரிணி.

"உரிமை எப்போதுமே தனியாக வராது. அதனோடு சேர்ந்த கடமைகளையும் கடைப்பிடித்தாக வேண்டும்! அத்தோடு, திருமணம் என்பது, நிலையானது. வாழ்நாள் முழுமைக்குமானது. மற்றவிதம் என்றால், எப்போது வேண்டுமானாலும் பிரிந்து கொள்ளலாமே! ஓர் இரண்டு மூன்று ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்தபின் பிரிந்தாலும் இரண்டாவது ரகம் என்றால், பாதிப்பு இராது."

இரண்டு, மூன்று ஆண்டுகள்!

இவன் ஒன்றும் மனநிலை பாதிக்கப்பட்ட பைத்தியம் இல்லையே?

"என்ன அப்படிப் பார்க்கிறாய்?" என்று மனுபரதன், சாதாரணமாகவே கேட்டான்.

"பாதிப்பு யாருக்கு இல்லை என்கிறீர்கள்?" என்று உள்ளூர ஆத்திரத்துடன் அவனது முந்தைய பேச்சைத் தொடர்ந்தாள், தாரிணி. பெண் மனம் என்றால் இவன் என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறான்?

"இருவருக்குமேதான்" என்று, இப்போதும், சர்வ சாதாரணமாகவே தான் பதில் சொன்னான் அவன்.

"திருமணமற்ற உறவு என்றால், அது தற்காலிகமானது, என்பது இருவர் மனதிலும் இருக்கும்தானே? அதனால், பிரிவு, யாருக்கும், அதிக வருத்தம் தர, வழியில்லை தானே?" என்று, கேள்வி வேறு கேட்டான்.

"மண்ணாங்கட்டி!" என்று வெடித்தாள், தாரிணி! முதலில், அந்த மாதிரிப்பட்ட நிலையே, மிகவும் அருவருப்பானது, அல்லவா? எவ்வளவு கீழ்த்தரமானது?

"என்ன கீழ்த்தரம்? கட்டின மனைவி சரியில்லை என்றுதானே, இன்னொருத்தியைத் தேடப் போகிறான். ஒருத்தன்? அப்படிப் பார்த்தால், மனைவியைவிட, இவள் மேல் என்றுதானே பொருளாகிறது?"

"நல்ல கேள்விதான்!" என்றாள் அவள் கொதித்துப் போய். "அப்படியானால் இதையே பால் மாற்றிப் போட்டாலும், இதே பாராட்டு கிடைக்குமா?"

"புரியவில்லையே!"

"கள்ளக் காதலன் வெட்டிக் கொலை!" என்று வழியில் போஸ்டர் பார்த்தேன். 'மானஸ்தன், வெட்டி விட்டான்' என்று, சக பிரயாணிகள் பேசிக் கொண்டார்கள். உங்கள் நியாயப்படி பார்த்தால், கணவன் சரியில்லை என்றுதானே, அந்தப் பெண்மணி இன்னொருத்தனைத் தேடியிருப்பாள்? அப்படி, அவள் பிடித்த இன்னொருத்தனைப் பாராட்டாமல் அவனை வெட்டியவனைப் போய்ப் பாராட்டுகிறார்களே! இது என்ன நியாயம்?

"அப்படி வெட்டியவனிடமும், வெட்டினதைப் பாராட்டியவனிடமும் போய்க் கேட்க வேண்டிய கேள்வி, அது என்னிடமல்ல" என்றான் அவன், கிண்டலாக

"ம்ஹூம் அப்படிச் சொல்லித் தப்பிவிட முடியுமா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அதை, முதலில் சொல்லுங்கள்!" என்று விடாப்பிடியாகக் கேட்டாள் தாரிணி.

"ஆண்களுக்கு, உரிமை உணர்வு அதிகமோ, என்னவோ? அவர்கள் இதை ஏற்பதாகத் தெரியவில்லை. ஆனால்,

உங்கள் பெண்ணினத்தில் இதை ஏற்றுச் சிரித்து, மகிழ்ந்து வாழ்கிறவர்களை நானே நேரிலேயே பார்த்திருக்கிறேன்"

"பொய்! அதெப்படி..." என்று, ஒரு வேகத்துடன் தொடங்கியவள், சட்டெனத் திகைத்து "ஐயோ!" என்றாள். "இந்தக் கண்ணராவிக்குப் போய் இப்படி வக்காலத்து வாங்குகிறீர்களே! மஞ்சரி வேறு. நீங்கள் வேண்டாம் என்று, மஞ்சரி ஓடியதன் காரணம். காரணம், மிஸ்டர் மனுபரதன் உங்களுக்கு ஏற்கனவே, கல்யாணம் ஆகியிருக்க-வில்லையே?" என்று கலக்கத்துடன் விசாரித்தாள்.

"மஞ்சரி விஷயத்திலும், பிறகு உன்னிடமும், நான் முதலில் திருமணம் பற்றித்தானே, சொன்னேன். ஏற்கனவே, மணமாகியிருந்தால் அந்தப் பேச்சை எப்படி எடுப்பேன்? இரண்டாவது திருமணம் சட்டப்படிக்குற்றம் என்பது, எனக்குத் தெரியும். ஒன்று, தெரிந்து கொள். எனக்குக்களி, சும்மாவே பிடிக்காது. அதிலும், ஏழு ஆண்டுகாலம் ஜெயில்களி தின்னும் எண்ணம் எனக்குச் சுத்தமாகக் கிடையாதும்மா!"

'இது விட் என்று சிரிக்க வேண்டுமாக்கும்' என்று மனதுள் கடுத்துக் கொண்டாள், தாரிணி. வெளியே, "அது ஏன் சார், நீங்கள் களி தின்னப் போகிறீர்கள்? சட்டத்தை எமாற்றத்தான் அணுகுண்டு மாதிரி, அருமையான ஆயுதம் ஒன்று, வைத்திருக்கிறீர்களே... அது தான் 'சின்ன வீடு' வைப்பது! ஆனால், இந்தச் சின்ன வீடு வைப்பவர்களைப் பிடித்து உள்ளே போடச் சட்டத்தில், ஒரு வழியும், கிடையாதா? உங்களுக்கு நிச்சயமாகத் தெரியுமா?" என்றாள், குத்தலும் கோபமுமாக.

லேசாகத் தோளைக் குலுக்கி, "நீ, இவ்வளவு ஆத்திரப்படுவது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. சந்தோஷமாகவே, அப்படி வாழத்தான் செய்கிறார்கள்.

அவர்களே, வாழும்போது, உனக்கென்ன வந்தது?" என்றான் அவன்.

"அதெப்படி சந்தோஷமாக இருக்க முடியும்? வாழ வேறு வழியில்லாமல், வருமானம், பாதுகாப்பு இல்லாததால், வேறு கேவலங்களுக்கு, இது மேல் என்று பணிந்திருப்பார்கள். மற்றபடி சிரிப்பு, சந்தோஷம் எல்லாம், வெறும் நடிப்பாகத்தான் இருக்கும்." என்றாள் தாரிணி நிச்சயமான குரலில்.

"அதெல்லாமில்லை. இப்போது வந்திருக்கிறோமே. இது யார் வீடு தெரியுமா? என் தாத்தாவுடைய தாலி கட்டாத மனைவி உன் மொழியில் சொல்வதானால், சின்ன வீட்டினதுதான். அக்கா, அக்கா என்று, என் பாட்டியிடம் எவ்வளவு பிரியமாக இருப்பார்கள் தெரியுமா? பாட்டியும் அப்படித்தான். சின்னத்தா என்று, அவர்களைக் கூப்பிடும்படி, என்னைப் பழக்கியதே, என் பாட்டிதான். என் அப்பா,அத்தைகளை வளர்த்தது கூடப் பாதி, அவர்கள்தான். என் பாட்டி, அடிக்கடி, ஏதாவது நோய் என்று படுத்து விடுவார்கள். சிங்காரி - அவர்கள்தான் என் சின்னத்தா அவர்கள் மட்டும் இல்லையானால் வீடு நாறிப் போய்விடும். என்பார்கள். என் பாட்டி. சின்னாத்தா அதற்கும் மேல்! பாட்டி எதிரில், அவர்கள் உட்காரக் கூட மாட்டார்கள் அது அவ்வளவு மரியாதை! அத்தோடு..."

ஏளனமாகத் தாரிணி உதட்டைப் பிதுக்கவும், சொல்ல வந்ததை நிறுத்தி "என்ன?" என்று மனுபரதன் வினவினான்.

"ரிஸ்யசிருங்கர் கதை தெரியுமா, உங்களுக்கு? பெண் இனமே தெரியாமல் சுத்தப் பிரம்மச்சாரியாகத் தந்தையால் வளர்க்கப்பட்டவர். அவர் தந்தை பெரிய தவ முனிவர். அவரது சாபம் ஆளையே எரிந்து விடும். 'ரிஸ்யசிருங்கர் வந்தால்தான் உன் நாட்டில் மழை பெய்யும்' என்று

ராஜாவிடம் குரு சொல்லி விடுவார். அரசனால் ஏவப்பட்டு உயிருக்குத் துணிந்து சென்று, முனிவர் மகனை மயக்கி, நாட்டுக்கு அழைத்து வருகிறவள், அந்நாட்டுக் காதல் மகளிருள் ஒருத்தி. ஆனால் அவரை மணந்து உரிமையோடு அருகில் அமர்ந்து கொண்டவள். மன்னனுடைய மகள்தான். அவர்கள் இருவருக்கும், வெண்சாமரம் வீசுவதோடு, விறலியின் உரிமை, முடிந்து போய்விடும். உங்கள் பேச்சு, அதைத்தான் நினைவூட்டுகிறது!"

தாரிணியின் நோக்கம் பயனற்றுப் போனாற் போல, மனுபரதனின் முகத்தில் ஒரு மாற்றமும் இல்லை. "பரவாயில்லையே! புராணக் கதைகள் எல்லாம் தெரிந்து வைத்திருக்கிறாயே! எங்கள் சின்னத்தாவுக்கு, அதெல்லாம் ரொம்பப் பிடிக்கும். இப்போது, பாவம் பொழுது போக்கிற்கு ஆள் இல்லாமல் திண்டாடிக் கொண்டு இருக்கிறார்கள். இனி, அந்தப் பிரச்சினை இராது. மற்றபடி, உரிமை என்று பார்த்தால், எங்கள் சின்னாத்தாவுக்கு உள்ள உரிமை வீட்டில் வேறு யாருக்கும் கிடையாது. எங்கள் வீட்டுக்கு வந்து பார்க்கும்போது, உனக்கே புரியும்" என்று அவளையும் மெச்சி, திருப்தியும் காட்டினான் மனுபரதன்.

'ஆமாம், உன் தாத்தாவுடைய ஆசை நாயகிக்குக் கதை சொல்லிப் பொழுது போக்குவதற்காகத்தானே, கடவுள் என்னைப் படைத்தாராம்' என்று ஆத்திரத்துடன் எண்ணினாள் தாரிணி.

என்ன அநியாயம்? இவனைக் குத்தவே முடியவில்லையே என்று தவித்தவளுக்கு ஒன்று தோன்றவும் தலை சரித்து அவனைப் பார்த்தாள். "உங்கள் வீட்டுக்கா? என்னவோ, முதலில், இதுதான் உங்கள் சின்னாத்தாவின் வீடு என்றீர்கள்! ஆனால், வீட்டுச்சாவி, உங்களிடம் இருக்கிறது. அவர்களை, உங்கள் வீட்டுக்கு வந்து பார்க்க

வேண்டும் என்று வேறு கூறுகிறீர்கள்! ஏன், அவர்களிடமிருந்து இந்த வீட்டைப் பிடுங்கி விட்டீர்களா?" என்று கண்களை அகல விரித்துக் கேட்டாள். "பாவம், சின்ன வீடுதானே? உரிமை இருந்திராது!" என்று பரிதாபப்பட்டாள்.

"புத்தி!" என்று, தலையில் அடித்துக் கொண்டான், அவன். "சின்னாத்தாவுக்கு, வயதாகிறது, கிட்டத்தட்ட எழுபத்தைந்து! இங்கே, தன்னந்தனியாக அவர்கள் இருப்பது நல்லதில்லை என்று, வீட்டுக்குக் கூட்டிப் போய்விட்டோம். அது அவர்கள் வீடும்தான் என்பது, எங்கள் கருத்து, இதில், என்ன தாயே, தப்பு?"

"கூட்டிப் போனதில், தப்பு ஒன்றும் இல்லை. இந்த வீட்டை, உங்களது போலப் பயன்படுத்துவதுதான், கொஞ்சம் உதைக்கிறது." என்றாள் அவள் நக்கலாக.

"அதிலும்தான்,என்ன தப்பு? சின்னதாத்தாவுடைய வாரிசு, நான்தானே?"

ஒருகணம் புருவம் சுருக்கி யோசித்து விட்டு, "ஓ! ஏற்கனவே, எழுதி வாங்கி விட்டீர்களாக்கும்!" என்று, ஒரு மாதிரிக் குரலில், தாரிணி கூறினாள்.

மீண்டும் "புத்தி!" என்றான், மனுபரதன். "கொஞ்சம் நல்லதையும் நினைக்கவே தெரியாதா? சின்னாத்தாவுக்கு குழந்தை கிடையாது. என்னிடம் தனிப்பிரியம்... என்ன?" என்று, தாரிணி ஏதோ சொல்லவும் தன் பேச்சை நிறுத்திக் கேட்டான்.

"பெரிய பிரியம்! எல்லாம் நடிப்பாயிருக்கும்!" என்று முணுமுணுத்துக் கொண்டிருந்த தாரிணி, அதை அப்படியே சொல்ல முடியாமல், "ரத்தத் தொடர்பே இல்லாதவரிடம் எப்படிப் பாசம் வரும்?" என்று கேட்டாள்.

"வரும் என்பதற்கு, சின்னாத்தாவே சான்று! பாசம் இருந்ததால்தான், அவர்களுடைய வாரிசாக, என்னை ஏற்று, எனக்கு, இந்த வீட்டையே எழுதி வைத்திருக்கிறார்கள். வீட்டை எழுதிக் கொடுத்துவிட்டதால், இவர்கள் வயிற்றுக்கில்லாமல் வாடுவதாக உடனே கற்பனை செய்துவிட வேண்டாம். அவர்களுக்கு வேண்டிய வருமானத்துக்கு என் தாத்தாவே ஏற்பாடு செய்திருக்கிறார்..."

"பேரன் குணம், முன்பே தெரிந்தவர் போல..." என்று எரிச்சலோடு, தெளிவாகவே முணுமுணுத்தாள், தாரிணி.

அவளைச் சற்று நேரம் பார்த்திருந்துவிட்டு, தோளைக்குலுக்கி, "தூங்குகிறவனைத்தானே எழுப்ப முடியும்? இதையெல்லாம், இப்போது உன்னிடம் சொல்லி, ஒரு பயனும் இல்லை என்று, தெரிகிறது. அதனால், விஷயத்துக்கு வருவோம். சொல்லு. என்னோடு, என்ன மாதிரி இணைய, உனக்கு விருப்பம்?" என்று கேட்டான் மனுபரதன்.

"இரண்டுமே முடியாது, என்றால்?" என்று, தலை நிமிர்த்திக் கேட்டாள், அவள்.

"உன் அண்ணனிடம் உனக்குப் பிரியம் இல்லை என்று அர்த்தம்" என்றான் அவன்.

"எப்படியோ? பெரிய கண்டுபிடிப்பாக இருக்கிறதே! அண்ணனுக்கும், உங்களை மணப்பதற்...ஊகூம், உங்கள் வீட்டில் கட்டுண்டு கிடக்க நான் சம்மதிப்பதற்கும் என்ன சம்பந்தம், இருக்க முடியும்?"

"மணப்பதோ, கட்டுண்டு கிடப்பதோ, எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள். அதற்குச் சம்மதிக்காவிட்டால், அப்புறம், நந்தகுமார், மிகவும்

கஷ்டப்பட நேரும்" என்றான், மனுபரதன்.

"மிரட்டலா?"

"எச்சரிப்பதாகக் கூட வைத்துக் கொள்ளலாம்"

"என்னவென்று?"

"வேலை செய்ய வந்த இடத்தில், வீட்டுப் பெண்ணை இழுத்துக் கொண்டு ஓடி விட்டான் என்று புகார் கொடுத்தால், அத்தோடு, நிறுவனம் அவரைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி விடாதா?"

"மன்னவனும் நீயோ, வளநாடும் நின்னதோ?" என்று, கம்பர், என்றைக்கோ, பாடி வைத்திருக்கிறார்! இந்த வேலை செய்யும் நிறுவனம், உலகத்தில், இது ஒன்றுதான் இருக்கிறது என்று நினைத்தீர்களாக்கும்?" என்று அலட்சியமாகப் பதில் கொடுத்தாள் அவள்.

"நந்தன் எந்த இடத்திற்குப் போனாலும், இந்தக் கதை. அவரோடு, அங்கே போய் நிற்கும்! அத்தோடு, அந்த முட்டாள் மஞ்சரி, நகைகள் அத்தனையையும் எடுத்து சென்றிருக்கிறாள். பாதிக்கு மேல், என் அம்மா செய்து போட்ட நகைகள், திருட்டுக்குற்றம் சாட்ட, இது போதும்.ம்ம்... எனக்குக் களி பிடிக்காதென்று, முன்பே சொல்லிவிட்டேன். இப்போது, உன் அண்ணன் விஷயம் எப்படி? களி, அதாவது ஜெயில் களி தின்னப் பிடிக்குமா? எதற்கும், தின்று பார்த்துவிட்டு வந்து சொல்லட்டுமே, என்று விட்டுவிடலாமா?"

என்ன எகத்தாளம்!

துருப்புச் சீட்டாக, இதை வைத்துக் கொண்டுதான், இவன் துணிந்து இவ்வளவு வேலை செய்தானா?

இந்த மிரட்டலைச் சமாளிப்பது எப்படி?

முடியாதோ, என்கிற பயம் தாரிணியுள் பெரு வேகத்துடன் பரவலாயிற்று!

ஒன்று அண்ணன், அல்லது அவள்! யாராவது ஒருவர் அழிந்துதான் ஆக வேண்டும் போலல்லவா இருக்கிறது?

யார் அழியட்டும் என்று விடுவது?

## 8

தாரிணிக்குப் பயம் பழக்கப்பட்ட உணர்ச்சி அல்ல.

எச்சரிக்கை, கவனம் இருக்கும், மிஞ்சி மிஞ்சி, சற்றுக் குளிரடிக்கிற மாதிரி இருப்பதுண்டு.

அப்போதும், அடுத்து என்ன செய்வது, எப்படிச் செய்வது என்று யோசித்து, அதன்படி நடக்கத் தொடங்கி விடுவாள்.

ஆனால், மனுபரதனின் இந்த மிரட்டலுக்குப் பின், இனி என்ன செய்வது என்பது பற்றி, அவளது மூளை யோசிக்கவே மறுத்தது அப்படி ஒரு திகைப்பு.

அதுவரை, ஒரேயடியாக மறுத்தால், இவனால் என்ன செய்ய முடியும் என்கிற தன்னம்பிக்கை அவளுக்கு இருந்தது நிறையவே.

அப்படி என்ன கையைக் காலைக் கட்டியா, தாலி கட்டிவிடுவான் என்கிற தைரியம்!

அப்படி வலுக்கட்டாயமாக ஒருவன் தாலி கட்டினால் அதற்கு மதிப்புத் தர வேண்டியதில்லை என்கிற திடமும் அவளுக்கு நிறையவே இருந்தது.

அதுபோலவே, உடல் பலத்தால், ஓர் ஆணிடம், பெண் தோற்க நேர்ந்தாலும், அதனால், அவளே கெட்டு-விட்டதாகவோ, அவளது வாழ்க்கையே அழிந்து

விட்டதாகவோ கருதி இடிந்து போகத் தேவையில்லை என்கிற உறுதியும் அவளுக்கு உண்டுதான்.

கல்லூரி நாட்களிலும் சரி, பின்னர் வேலை பார்க்கும்போதும் கூட, அதுபோல யாராவது கூறினால், தாரிணி எதிர்த்துப் பேசுவாள். தானும் ஒத்துத் தவறு செய்யாமல், தன் சக்தியை மீறி, ஒருத்திக்கு அம்மாதிரி இழப்பு நேருமானால், அதை ஒரு விபத்தாக மட்டுமே கருத வேண்டும், என்பாள். சாலையில் செல்லும்போது, ஸ்கூட்டர் மோதி, அடி படுவதில்லையா? அதுபோலத்-தான், இதுவும் என்பதில், அவளுக்கு ஐயமே கிடையாது!

எனவே, அப்படி ஒரு நிலையை எண்ணியும், அவள் ஒரேயடியாகப் பயப்பட்டதில்லை. விபத்து நேராமல், கவனத்துடன் இருந்து, தற்காத்துக் கொள்வதில்லையா? அதுபோல், இந்த விபத்துக்கும் வழியின்றி, எச்சரிக்கை-யோடு இருக்க வேண்டும் என்று, மற்றவர்களுக்குச் சொல்வதோடு, சொல்வதைத் தானும் கடைப்பிடிப்பாள் அவ்வளவே.

ஆனால், கத்தி முனையில் அண்ணனை வைத்து, மனுபரதன் நிபந்தனை இடுகையில், இந்தக் கருத்து-களுக்கெல்லாம், ஒரு பயனும் இல்லாதுபோக, செய்வது சொல்வது ஒன்றும் அறியாமல் தாரிணி திணறினாள்.

எதிரில் அமர்ந்து ஒரு வல்லூறின் கவனத்தோடு அவளையே பார்த்துக் கொண்டிருந்த மனுபரதனாக மனம் இளகினால் தவிர, இதிலிருந்து மீள, எந்த வழியும் இருப்பதாக அவளுக்குத் தோன்றவில்லை!

அப்படி இளகுகிற முகமாகத் தெரியவில்லையே, என்று உள்ளூர நிராசையுற்றபடியேதான் தாரிணி, மனுபரதனிடம் பேசினாள்.

"பாருங்கள், மிஸ்டர் மனுபரதன், இதில் தப்பு என் அண்ணனது மட்டும் என்று சொல்ல முடியாது..." என்று, மெதுவாகத் தொடங்கினாள்.

புருவங்களை உயர்த்தி, "அதாவது, பாதித் தப்பு நந்தனுடையது என்கிறாயா? என்று கிண்டலாகக் கேட்டவன், உடனே தலையசைத்து, "இந்த விளக்கம் அவசியமற்றது, தாரிணி" என்றான், அமர்ந்த குரலில்.

சில வினாடி தயங்கிவிட்டு, "என்ன சொல்கிறேன் என்று, கேட்டுத்தான் பாருங்களேன்? அது கூடவா, கூடாது?" என்று, தாரிணி கேட்கவும், தோளைக் குலுக்கிவிட்டுப் பேசாதிருந்தான், மனுபரதன்.

"நீ, சொல்வதையெல்லாம், சொல்லி முடி...' என்றது பாவனை.

"நந்தண்ணன், மஞ்சரி மேல் ஆசைப்பட்டிருக்கலாம். ஆனால்... யோசித்துப் பாருங்கள், மஞ்சரி அவரை நேசித்திராவிட்டால், அண்ணனோடு சென்றிருப்பாளா? அண்ணன் எண்ணம் புரிந்ததும் விரட்டியடித்திருக்க மாட்டாளா? இரண்டு பேர் மனமொத்த பிறகு, யார் என்ன செய்ய முடியும்?"

அழகாகத் தத்துவம் பேசி, இந்த விஷயத்தில் யாரும் எதுவும் செய்வதற்கில்லை என்று விளக்கி விட்டு, மனுபரதன் முகத்தைப் பார்த்தால், அவன் கல்லுப் பிள்ளையார் மாதிரி, அவள் முகத்தையே நோக்கியபடி, பேசாமலே, சும்மா உட்கார்ந்திருந்தான். அவள், தன் பேச்சைக் கேட்கச் சொன்னதற்குப் பழி வாங்குகிறானாம்!

பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு, 'நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்' என்று கேட்டாள் அவள்.

"இதில், நான் நினைப்பதற்கு, என்ன இருக்கிறது?"

"உங்களுக்கு மிகவும் வருத்தமாகத்தான் இருக்கும்...! கோபப்பட்டாலும், குறை கூறமுடியாதுதான். ஆனாலும், அதற்குப் பழி வாங்க என்று... பழி வாங்கும் உணர்வு ஏற்படுவது கூட இயற்கை தான். ஆனால், அதற்காக, என்னை, இப்படி.. இது நியாயம் இல்லை! நியாயம் என்று, உங்களுக்கே தோன்றுகிறதா, சொல்லுங்கள்?"

"இல்லை" என்றான் மனுபரதன்.

தன் காதுகளையே நம்பமாட்டாதவளாகத் தாரிணி ஆச்சரியமும், நம்பிக்கையுமாக நோக்க, அவன் மீண்டும் தலையசைத்தான். "உன் மூலம் நந்தகுமாரைப் பழி வாங்க எண்ணினால், அது, உனக்கு நியாயம் இல்லைதான். ஆனால், இதுவெறும், பழி வாங்கும் படலம் அல்ல. எனக்கு, மஞ்சரியிடமும், உன் அண்ணனிடமும் கோபம்தான். ஆனால், முன்பின் யோசியாமல், பிரச்சனை ஏற்படுத்தி விட்டார்களே என்கிற ஆத்திரம்தான், மிக அதிகம். அந்தப் பிரச்சனையின் தீர்வாகத்தான் உன்னை இங்கே கூட்டி வந்திருக்கிறேன்."

ஊசி குத்திய பலூனாக, நம்பிக்கை அடியோடு மறைந்து, சொத்தென்றாயிற்று தாரிணிக்கு, என்ன பெரிய பிரச்சனை? என்ன பெரிய தீர்வு, என்று, எரிச்சலோடு நினைத்தாள். எல்லாவற்றையும் விட முக்கியமாக, அவளது நிலைமை என்னாவது?

மனுபரதனுடையது, எப்படிப்பட்ட பிரச்சினை என்றாலும், தாரிணி, தன் வாழ்வை அவனோடு இணைத்துக் கொள்வதன் மூலம், அந்தச் சிக்கல், எப்படித் தீர முடியும்?

எப்படி என்று, அவன் சொன்னான்.

"இப்போது நான் சொல்லுவதைச் சற்றுக் கவனத்துடன்

கேட்டுக் கொள், தாரிணி. ஏனென்றால், முதலில், இந்தப் பிரச்சினை குறித்து, நான் கூறியதை, நீ கவனித்ததாகவே தெரியவில்லை. இங்கே, இந்த 'மலைவளம்' நிறுவனம், மிக முக்கியமான கட்டத்தில் நிற்கிறது. இதை, வழி நடத்திச் செல்ல, ஒரு தலைவன் தேவை. இன்று வரை, இளையவர்களின் இந்த முயற்சியின் தலைமைப் பொறுப்பு என்னிடம்தான் இருந்து வந்திருக்கிறது. நான் ஒன்று சொன்னால், மற்றவர்களும், மறு பேச்சின்றி அதைச் செய்வது பழக்கம்! இப்போது மஞ்சரி விவகாரம் வெளியானால் இது மாறிவிடும். நிச்சயித்த மனைவியைக் கோட்டை விட்டவன், சொந்த வாழ்வில் தோற்றவன், இவனால், தொழிலை எப்படி நன்றாக நடத்த முடியும், என்ற அவநம்பிக்கை ஏற்பட்டுவிடும். பிறகு, நாலுக்கு இரண்டு பேராவது, என்ன ஏது என்று, கேள்வி கேட்பார்கள், எதிர்ப்பார்கள், விமரிசனங்கள் நடக்கும். ஆனால், உருப்படியாக வேலை நடக்காது."

"அதெப்படி? அது, சொந்த விஷயம், இது தொழில்! இது எப்படி அடுத்ததை பாதிக்கும்?"

"பாதிக்கும்! ஏனெனில், 'மலைவளத்'தின் நிர்வாக அங்கத்தினர், அத்தனை பேரும், ஒருவருக்கொருவர் உறவினர்தான். எல்லோரும் இவ்வளவு காலம் ஒரே குரலாய்ப் பேசியது, இனி மாறிவிடும். என்ன செய்தேனும், இதைத் தடுத்து நிறுத்தியே ஆக வேண்டும்."

"திருமண மண்டபத்தில், மஞ்சரிக்குப் பதிலாக, என்னைக் கொண்டு போய் நிறுத்தினால், ஆகா, என்ன வீரம்! ஒருத்தியைக் கோட்டை விட்டாலும், இன்னொ-ருத்தியைத் தலைமுடியைப் பிடித்து, இழுத்து வந்து விட்டானே! என்று, பாராட்டுவார்கள் போல! அதிலும், ஆசை நாயகியாக அறிமுகப்படுத்தினால், உங்கள் வீர தீரப்

பராக்கிரமம் பற்றி புகழ், வானளாவ உயர்ந்து விடும். அப்புறம், உங்களை எதிர்த்துப் பேச, யாருக்குமே, தைரியம் இராது! அடடா! என்ன அருமையான திட்டம்?" என்றாள் தாரிணி ஏளனமாக. "கொக்கு தலையில் வெண்ணையை வைத்துப் பிடிக்க, உங்களை விட்டால் உலகத்தில், வேறு ஆளே கிடையாதாமே! கேள்விப்பட்டது, உண்மைதான் என்று இப்போதல்லவா புரிகிறது?"

முறுவலித்துவிட்டு. "புரிபட்டது, அது மட்டுமா?" என்று பதிலுக்குக் கேட்டான், மனுபரதன். "உலகத்திலேயே வெகு வேகமாக, கம்ப்யூட்டரை விடவும் விரைவாக முடிவெடுப்பவள், தன் தங்கை என்று, நந்தகுமார் சொன்னதும், சரியே, என்பதும் இப்போதுதானே தெரிய வருகிறது! என்ன, ஒரு வித்தியாசம், கம்ப்யூட்டர் சரியாகக் கணிக்கும். தங்கை நேர்மாறு என்பார். அ..து..வும் சரியாகத்தான் இருக்கிறது."

அவனது பாவனையில், அந்த நிலையிலும் தன்னை மீறி வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, "அண்ணன் ஒன்றும் அப்படிச் சொல்லியிருக்க மாட்டார்!" என்று ரோஷத்துடன் கூறினாள் அவள்.

லேசாகச் சிரித்து, "சொல்லவில்லை" என்று, அவனும் ஒத்துக் கொண்டான். அத்தோடு, "நான் என்ன சொல்கிறேன் என்பதையும், நீயும் முழுவதாகக் கேட்டுவிட்டே அபிப்பிராயம் தெரிவிக்கலாமில்லையா?" என்றும் இடித்துரைத்தான்.

"ஈடி மாதிரி, கொஞ்சம்கூட ஒத்துக் கொள்ள முடியாததையெல்லாம் சொல்லிவிட்டு, ஊர்க்கதை அளந்து கொண்டிருந்தால், வேறு என்ன நினைப்பது?" என்று, இயன்றவரை சின்னதாக ஓர் அம்பை எய்துவிட்டு அவனது பேச்சைக் கவனிக்கத் தயார் என்று சொல்லாமல்

சொல்லுவதைப் போலக் கைகளைக் கட்டிக் கொண்டு, அவன் முகத்தை, நேராகப் பார்த்தாள், தாரிணி. "ம்".

மனுபரதனின் முகத்தில் தோன்றிய முறுவல், உடனே மறைந்தது. ஒரு தீவிர பாவனையுடன், "ஊர்க்கதை அளக்கவில்லை, தாரிணி. உன் அண்ணனும் மஞ்சரியும் ஏற்படுத்தி வைத்திருக்கும் சிக்கலை, இயன்ற மட்டும் நல்லவிதமாகத் தீர்க்க, வழி வகுக்கிறேன். சற்றுப் பொறுமையோடு, இடையே குறுக்கிடாமல் கேட்டால், உனக்கும் புரியும்" என்று, கறார்க் குரலில் தொடங்கினான்.

'யாருக்கு நல்லவிதமாக?', என்று, மனதுள் எண்ணிய போதும், எண்ணியதை அந்த நேரத்தில் மறுபடியும் குறுக்கிடுவது சரியல்ல என்று தோன்றிவிட, வாயை இறுக மூடிக் கொண்டு, உட்கார்ந்திருந்தாள் அவள்.

மனுபரதன், அவனது திட்டத்தை விவரித்தான்.

"இப்போதைக்கு, மஞ்சரியை நந்தகுமாரன், அழைத்துச் சென்றது, அப்படியே இருக்கட்டும். ஆனால், அது ஒளிவு மறைவாக அழைத்துச் சென்றதாக இல்லாமல், மனுபரதனோடு சேர்ந்து திட்டமிட்டு, அவனது ஒப்புதலுடன் இருவரும் சென்றதாக, மற்றவர்களிடம் சொல்லலாம்."

"யார் நம்புவார்கள்?" என்றாள், தாரிணி. "அதுவும், திருமணத்தை, இவ்வளவு அருகில் வைத்துக் கொண்டு, சொன்னால், இதை யாருமே நம்ப மாட்டார்கள்!"

"சும்மா சொன்னால், அப்படித்தான்! குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்கிற மாடலில் பேசுவதாகத்தான் கூறுவார்கள். ஆனால், வலுவான காரணத்தோடு சொல்லும்போது, நிச்சயமாக நம்புவார்கள். அந்த வலுவான காரணம்தான், நீ!" என்றான் மனுபரதன்.

"நான்ா? அதாவது, அவர்களை விட்டுவிடுங்கள். அண்ணிக்குப் பதிலாக என்னை, உங்கள் ஆசை நாயகியாக வேனும் வைத்துக் கொண்டு, அண்ணனை, விரும்பிய பெண்ணோடு வாழ விடுங்கள், என்று, உங்கள் காலில் விழுந்து கெஞ்சியதாகவும், அய்யோ பாவம் என்று, அதை நீங்கள் ஒத்துக் கொண்டதாகவும், சொல்லப் போகிறீர்களாக்கும்!" என்றாள் அவள், எகத்தாளமாக. "என் உயிரே போனாலும், இந்தக் கேவலத்துக்கு, நான் சம்மதிக்க மாட்டேன்!" என்று, அறிவித்தாள்.

முகம் இறுக, "உயிர் போன பிறகு, யாராலும், எதற்கும் சம்மதிக்கவோ, மறுக்கவோ முடியாது! இப்போது, நீ உயிரோடிருந்து, செய்ய வேண்டியதைப் பற்றி யோசிக்கலாம்" என்றான் அவன், அவளை விடவும் எகத்தாளமான குரலில்.

தாரிணி ஆத்திரமாக முறைக்கவும், அலட்சியமாகத் தலையசைத்து , "கெஞ்சுவது பற்றி, என்னவோ சொன்னாயில்லையா? மெய்யாகவே, நீ கெஞ்ச வேண்டிய நிலைமைதான்! நந்தகுமாரின் வாழ்வு அழிந்து போகாமல் காப்பது உனக்கு முக்கியம் என்றால், நீ அதையும் செய்ய வேண்டியவள்தான். பழி வாங்குவது மட்டுமே என் முக்கிய நோக்கமாக இருந்திருந்தால், அப்படி உன்னைக் கெஞ்ச வைத்தும் இருப்பேன்! உன் கெஞ்சலை மதியாமல், உன்னை அடியோடு, நாசமாக்கியுமிருப்பேன்!" என்றான், மனுபரதன் கடுமையான குரலில்.

அவ்வளவு நேரம் இருந்த சிறு இலகுத் தன்மை முழுக்கவே மாறி, மனுபரதன் மிகக் கடுமையாகப் பேசவும், தாரிணிக்கு மீண்டும் அச்சம் மேலோங்கியது. இவனுக்கு எரிச்சல் மூட்டுவது அவளுக்கு நல்லதில்லை. அவனை இளக வைப்பது, ஒரேயடியாக முடியாமல் போய்விடலாம்!

உதடுகளை அழுந்த மூடியபடி, தாரிணி பேசாமல் பார்த்துக் கொண்டிருக்க மனுபரதன் மேலே பேசினான். "ஆனால், என் குறிக்கோள் வேறு. பல ஆண்டுகளாக நான் கண்டு வந்த கனவுகள் நிறைவேறும் நேரத்தில், அதைச் சிதற விடாமல் காப்பது இப்போது, எனக்கு மிகவும் முக்கியம். அத்தோடு, என் குடும்ப கௌரவம், என் கௌரவம் இவை இரண்டையும் கூட நான் காத்தாக வேண்டும்! எக்காரணம் கொண்டும் அவற்றை நான் விட்டுக் கொடுக்க முடியாது! இவை அனைத்தையும் சாதிப்பதற்கு என் திட்டத்தை விட்டால், வேறு வழியே கிடையாது. அதற்கு நீயும் ஒத்துழைத்தே ஆக வேண்டும்!" என்றான் அதிகாரமாக.

"இல்லாவிட்டால், அண்ணன் எதிர்காலத்தைச் சீர் குலைத்து விடுவீர்கள் அப்படித்தானே?" என்று வெறுப்புடன் கேட்டாள் அவள்.

"அது மட்டுமல்ல, உனக்கும் இங்கிருந்து விடுதலையே இராது. இருபத்து நாலு மணி நேரமுமா காவலிருப்பேன் என்று எண்ண வேண்டாம். அதற்கு அவசியம் கிடையாது. இங்கிருந்து வெளியே சென்றால்..."

'இந்தக் கொடைக்கானல் மலையில் சிங்கமும் புலியும் வந்து அடித்துக் கொன்றுவிடுமாக்கும்! என்ன கதையடா, என்று அவள் எண்ணமிடும் போதே, "இங்கே சிங்கம் புலி கிடையாது. ஆனால், அவ்வப்போது சிறுத்தை நடமாட்டம் உண்டு. அபூர்வமாகத்தான். ஆயினும், இருக்கிறது. அடுத்து, செந்நாய்கள், கூட்டமாக வந்து தாக்கும்போது, யானையைக் கூடக் கொன்றுவிடும் என்கிறார்கள். நரிகளும் உண்டு. முள்ளம்பன்றி, முள் எறிந்து தாக்கினால் தேள் கொட்டுவது போல, இருக்கும். எனவே தனியே வெளியே செல்ல வேண்டாம். இதையெல்லாம் ஏன் சொல்லுகிறேன் என்றால் எனக்கு என்னதான் உன்

அண்ணனிடம் கோபம் என்றாலும், அவன் தங்கையை சாகடிக்கிற அளவுக்கு அது தீவிரமானதல்ல. அத்தோடு நீ உயிருடன் இருந்தால்தான் என் திட்டங்களும் நிறைவேறும்'' என்றான் மனுபரதன்.

ஆமாம், உயிருடன் இருந்தால்தானே, ஒருவரைக் கேவலப்படுத்திச் சித்திரவதை செய்ய முடியும்?

உள்ளூரக் குமுறியபடி, "உங்கள் திட்டத்தை, இன்னும் சொல்லி முடிக்கவில்லை'' என்றாள் அவள் வறண்ட குரலில்.

"சொல்கிறேன். தயவு பண்ணி, இப்போதாவது, குறுக்கிடாமல் கேள். மஞ்சரியும் நந்தனும் என்னை ஏமாற்றி விட்டுப் போனார்கள் என்பது, என்னைத் தாழ்த்திக் காட்டும். எனவே, அவர்கள் என் அனுமதியோடு சென்றதாக - நானே அவர்களை அனுப்பி வைத்ததாகக் காட்டப் போகிறேன். அப்படி அனுப்பி வைக்கக் காரணம். நம் இருவருக்குமிடையே ஏற்பட்ட காதல்!''

"என்னது?! காதலா?!''

"ஆமாம். காதலே தான். இந்த அறிக்கை விஷயமாக நந்தகுமாரைப் பார்க்க வந்தபோதே, நாம் இருவரும் நேசிக்கத் தொடங்கி விட்டதாகவும், திருமணம் நிச்சயிக்கப்பட்ட நிலையில் செய்வதறியாது திகைத்துக் கொண்டிருந்ததாகவும், நல்ல வேலையாக நந்தனும் மஞ்சரியும் கண்டதும் காதல் கொண்டுவிட்டது. வசதியாகிப் போயிற்று என்றும், இதைச் சொன்னால், பெரியவர்கள், முக்கியமாக மஞ்சரியுடைய தாயார் மறுக்கக்கூடும் என்பதால், ரகசியத் திருமணம் செய்து, அவர்களை அனுப்பிவிட்டு, என்னவளாக்கிக் கொள்வதற்காக, உன்னை வரவழைத்ததாகவும் கூறப்போகிறேன். அதாவது, செய்தி பரப்பப் போகிறேன். என் செய்தியை

உண்மையாக்குவதற்காக, நீ என்னை காதலிக்க வேண்டும்'' என்று கூறி முடித்தான், மனுபரதன்.

இவன் தன் கௌரவம் காப்பதற்காக, என்னவெல்லாம் செய்கிறான்?!

காதலிக்க வேண்டுமாமே! அப்படிக் கட்டாயத்தில் வருவதா, காதல்?

'என்னவளாக்கி' என்று, அவன் சொன்னது உறுத்த, "திருமணத்தில் முடிப்பதுதானே, உங்கள் மதிப்பை கௌரவத்தை, அதிகம் உயர்த்தும்?' அல்லது 'ஆசைநாயகி'யாக என்று, ஏன் சொன்னீர்கள்?" என்று வினவினாள் தாரிணி.

"அது உனக்கு, நான் வைத்த சோதனை!'' என்று சொல்லி, மீண்டும் அவளைத் திகைக்க வைத்தான், அவன்!

## 9

சோதனையா? என்ன சோதனை?

அவன் விளக்கினான். "பார் தாரிணி, நந்தகுமார் சொன்னது தவிர, உன்னைப் பற்றி எனக்கு என்ன தெரியும்? என் மனைவியாகிறவளுக்குச் சில பல தகுதிகள் வேண்டும். அவை, உன்னிடம் இருக்கின்றனவா என்று, தெரிய வேண்டாமா? இன்னின்ன விஷயங்களை எப்படி எதிர்கொள்கிறாய் என்று தெரிந்தால், பல விஷயங்களில், உன் குணமே அத்துபடியாகிவிடும். அதுதான், சோதித்துப் பார்த்தேன்.''

சோதித்தானாமா?

என்னவோ, என்னை ஏற்றுக்கொள், ஏற்றுக் கொள் என்று, அவளாக வந்து நின்ற மாதிரியும், இவன் சோதித்துத் தேர்வு செய்வது போலும் அல்லவா பேசுகிறான்.

சோதனையின் முடிவு என்ன ஆயிற்று என்று அறிய விரும்பிய மனதுக்கு, ஒரு குட்டுக் கொடுத்து விட்டு, "அதே போல, எனக்குக் கணவராக வருகிறவர் எப்படியெப்படி இருக்க வேண்டும் என்று, நானும்தான் நினைத்து வைத்திருந்தேன்!" உரக்க ஒரு பெருமூச்சுவிட்டாள், தாரிணி.

"என்னைவிட உயர்வாக எதிர்பார்த்திருக்க மாட்டாய்! என்றாலும், சில வித்தியாசமான ஆசைகள் உனக்கு, இருந்திருக்குமானால், உனக்கு என் ஆழ்ந்த அனுதாபங்கள்!" என்றான், மனுபரதன். "ஏனெனில், இனி அவை நிறைவேற வாய்ப்பில்லை. பாவம்!" என்று பரிதாபப்பட்டான்.

'கர்வத்தைப் பார்! இவனை விட உயர்வாக எதிர்பார்த்திருக்க மாட்டேனாமே!' என்று உள்ளே புகைந்த போதும், "உங்கள் அனுதாபத்துக்கு என் நன்றி", என்றாள் அவள் மிகவும் பதவிசாக.

வாய்விட்டுச் சிரித்து விட்டு, "என் மதிப்பீடு என்னவென்று கேட்கவில்லையே? நந்தகுமார், தங்கையைப் பற்றி அதிகப்படுத்திப் பேசவில்லை! எனக்குத் திருப்திதான். நூற்றுக்கு அறுபது இருக்கும் என்று எண்ணினேன். ஆனால் பரவாயில்லை,குறைந்த பட்சமாய்த் தங்கை விஷயத்தில் நந்தகுமார் பொய் புகலவில்லை" என்று திருப்திப்பட்டுக் கொண்டான், மனுபரதன்.

தன் குணம் கூடவா, இவனுக்குச் சாதகமானதாக இருக்க வேண்டும்?

மனுபரதனை அதிரடிக்கும் ஆவலில், "இதுதான் என் உண்மை இயல்பு என்று, உங்களுக்கு, எப்படித் தெரியும்? என்னை நல்லவளாகக் காட்டுவதற்காக, நான் நடிக்கவல்லவோ, செய்தேன்?" என்று அறிவித்தாள் தாரிணி.

ஆனால், "நடிப்பு தலை நீட்ட முயற்சிப்பது, இப்போதுதான். கன்னி முயற்சி என்றால், ஓரளவு வெற்றி என்றே சொல்லலாம். இன்னும் கொஞ்சம் பட்டை தீட்டிக் கொண்டால், நம் நாடகத்துக்கு, வசதியாக இருக்கும்." என்று, அதிலும் ஆதாயம் கண்டான் அவன்.

மறுக்கும் நிலையில் இல்லைதான். என்றாலும், இவனைக் கொஞ்சமாவது திணறடிக்க வேண்டாமா, என்ற வேகத்தில், "நம் நாடகம்? உங்கள் நாடகத்தில் பங்கேற்பதாக, நான் எப்போது ஒத்துக் கொண்டேன்?" என்று மிடுக்காகக் கேட்டாள் தாரிணி.

கண் சிமிட்டும் நேரத்தில் சமாளித்துக் கொண்டான் அவன். "சிறை பற்றி குறிப்பிடும்போது, ஒன்றைச் சொல்லாமல் விட்டுவிட்டேன். நான் ஆண்மகன், நீயோ என் ஆதிக்கத்தில் இருக்கும் ஓர் அழகான பெண். எந்த நேரத்தில், எனக்கு எப்படியெப்படி நடந்து கொள்ளத் தோன்றுமோ? ஒரு வேளை... 'ஒரு கற்பழிப்பை தவிர்க்க முடியாவிட்டால், அதை ரசிக்கத் தொடங்கி விடு' என்பதாக ஆங்கிலத்தில் ஒன்று படித்தேன். அது போன்ற எண்ணம்தான் உனக்குமா?"

"ஓங்கி அறையத் துடித்த கைகளைப் பெரு முயற்சி செய்து அடக்கினாள், தாரிணி. அந்த மாதிரித் தாக்குதலில், அவனை வெற்றி பெற முடியாது என்பதுதான் ஏற்கனவே நிரூபிக்கப் பட்டதாயிற்றே! அத்தோடு, இப்போது, அவன் சொன்ன மாதிரியும்தான் அவன் நடந்து கொள்ளமாட்டான் என்று, என்ன நிச்சயம்?"

அதனால், உலகம் அழிந்துவிடாதுதான் என்றாலும், இவனை மீற முடியாத இந்த நிலையில், அது ஓர் அசிங்கம் நேர விடுவானேன்?

கைகளை இறுக மூடிக் கொண்டு அமர்ந்திருந்தவளை ஓரக்கண்ணால் பார்த்து, "இது தான் சரி, இதே கட்டுப்பாடு இனி எப்போதும் இருக்குமாறு கவனித்துக் கொள் என்று மெச்சுவது போலக் கூறிவிட்டு, "இன்றைய நிலைமையில், எதையும் தேர்ந்தெடுக்கும் உரிமை, உனக்கு இல்லை, தாரிணி. காலம் பொன்னானது, அதனால் இந்த அசட்டுத்தனமான பேச்சுகளில் அதை வீணாக்காமல், அடுத்து நடக்க வேண்டியதைப் பற்றிப் பேசலாம். முதலில், உனக்கு ஜரிகைச் சேலைகள் சிலது வாங்கி வைத்திருக்கிறேன். ஆனால், பொருத்தமாக, ஜாக்கெட் தைக்க வேண்டும்! இரண்டு நாட்களுக்குள், அவை தயாராகி, வந்து சேர வேண்டும்" என்று, திட்டமிட தொடங்கினான் மனுபரதன். "அளவு கொடுக்க நீயும், என்னோடு வந்தால் நல்லது வருகிறாயா? உனக்குப் பிடித்ததாக, வேறு ஏதேனும் பார்த்து வாங்கவும் வசதியாக இருக்கும். ஆனால், மதுரைக் கடை வீதிகளில், அசட்டுத்தனம் ஏதும் செய்ய மாட்டாய் என்று நம்புகிறேன். அப்படிச் செய்தால், உன் அண்ணனுக்குத்தான் ஆபத்து என்பது உனக்கு, ஒருபோதும், வினாடிகூட மறக்காதில்லையா?" என்றான், எச்சரிப்பது போல.

திருமணம் பற்றிய கனவுகள், தாரிணிக்கும் வந்ததுண்டு, சேலை, நகை, என்று கற்பனை செய்வாள். அவளுடைய தாயாரின் கல்யாணச் சேலை, ஒரு மாதிரி இளஞ்சிவப்பில், ஜரிகைச் கொடிகளும், பூக்களுமாக, அழகாக இருக்கும், இந்த சிவப்பு, இன்னும் ஆழ்ந்ததாக இருந்திருந்தால், இன்னமும் பளிச்சென்று இருக்கும் என்று எண்ணுவாள். தன் திருமணத்துக்கு, அப்படி வாங்கச் சொல்ல வேண்டும், என்று மனதுள் நினைத்தும் வைத்திருந்தாள்.

ஆனால் அது, எல்லோரும் மனம் ஒத்து, மகிழ்ச்சியோடு

நடக்கும் என்று அவள் கற்பனை செய்து வைத்திருந்த திருமணத்துக்கு.

பாசப்பரிவுடன் அண்ணன் அருகிருக்க பிரியமுள்ள மாப்பிள்ளை வீட்டாரோடு கலந்து பேசி, கலகலப்பும் குதூகலமுமாக நடக்கும் என்று, அவள் எண்ணியிருந்த அந்தத் திருமணத்துக்கு!

இப்படி, ஓர் அன்னியனின் மிரட்டலுக்குப் பணிந்து, அவனோடு, அவளுக்கு நடக்க இருக்கும் கட்டாயக் கல்யாணத்துக்கு, அல்ல!

அத்தோடு, அவன்தான் ஏற்கனவே, வாங்கி வைத்திருக்கிறானாமே!

"நான் வரவில்லை. இங்கேயே இருக்கிறேன்" என்றாள், அவள் அசிரத்தையாக.

"நீயும் வந்தால், உனக்குப் பிடித்ததாகவும் பார்த்து வாங்கலாம் என்றேனே!"

வெட்டுவது போலப் பார்த்து, "எனக்குப் பிடித்ததாகத்தான் எல்லாம் நடக்கிறதா? இதுவும் பிடிக்காததாக இருப்பதில் தப்பு ஒன்றும் இல்லை" என்றாள், தாரிணி.

"இதுவுமா?...சரி, போகட்டும்,ஆனால், நாம் காதலித்து மணப்பதாகக் காட்ட வேண்டியிருக்கிறது. இது போன்ற சின்ன விஷயங்கள் எல்லாம், சேர்ந்து திட்டமிட்டது போலத் தோன்ற வேண்டும். அதற்காகவாவது, வா. மதுரையில், பழக்கப்பட்ட சிலரைச் சந்திக்கும்படி கூட நேரலாம். நான் தனியே சென்று, இதையெல்லாம் செய்வதைவிட அவர்கள் நம்மைச் சேர்ந்து பார்க்க நேர்வது, ஓர் முன்னறிவிப்பாகவும், அமையக் கூடும். அது நமக்கு வசதி!"

எதிலும் தனக்கு சாதகமாக எதையாவது ஏற்படுத்திக் கொள்வான் போலும்!

இல்லாவிட்டால், இவ்வளவு அருகில் திருமணத்தை வைத்துக் கொண்டு மணப்பெண்ணைக் காணவில்லை எனும்போது, இன்னொருவனாக இருந்தால், திகைத்துப் போய், மூலையில் சுருண்டிருப்பான். பெண்ணை அடித்துக் கொண்டு போனவனின் தங்கையையே பிடித்துவந்து மணப்பெண்ணாய் நிறுத்துவானா, என்ன?

இப்போது, இவனுக்கு, மனைவிக்கு மனைவி, திருமணத்துக்குத் திருமணம்! எதுவும், இல்லாமல் போகவில்லை. மற்றவர் முன் அவனது கவுரவத்துக்கும் எந்தக் குறைவுமில்லை!

சொல்லப் போனால், அவனது மதிப்பு அதிகமாகத்தான் ஆகும். அவன் விரும்பிய பெண்ணையே மணமுடித்து, நினைத்ததைச் சாதித்து விட்டான் என்று. அப்படித்தானே கதை பரப்பப் போகிறான்!

எல்லாவற்றுக்கும் மேலாக, பழிக்குப் பழி வாங்கும் திருப்தி வேறு!

இப்படித் தனக்கு வேண்டியதை நடத்திக் கொள்கிறபோது, அடுத்தவர் மனம் என்ன பாடுபடும் என்று, மனுபரதன் எண்ணிப் பார்ப்பதே, இல்லை போலும்!

போலும், என்ன? நிச்சயமாக, நினைத்துப் பார்ப்பதே இல்லை என்றுதான், அவள், அனுபவத்திலேயே அறிந்து விட்டாளே!

"கிளம்புகிறாயா?"

"வருவதுதான் வசதி என்று, நானும் சொன்னேனே!" என்றவன், அவள் முறைத்துப் பார்க்கவும், "இந்த மாதிரிப்

பார்வைகளை, விட்டுவிடக் கற்றுக் கொள்ள வேண்டும். தாரிணி. என்பேச்சுக்குப் பணிந்து போகவும் பயின்று கொள்ள வேண்டும். அதுவும், சிரித்த முகமாக!'' என்றான், சற்று அழுத்தமான குரலில்.

கோபமா? நன்றாகப் படட்டும் என்று எண்ணமிட்டபடி, "மற்றவர்களுக்காகத்தானே, இந்த நாடகமெல்லாம்? பார்வையாளர் இல்லாதபோது, எதற்காக நடிப்பு'' என்று, விறைப்பாகவே கேட்டாள் தாரிணி.

"பயிற்சி தாரிணி, பயிற்சி'' என்று பதில் கொடுத்தான், மனுபரதன். "அறையில் ஆடித்தான், அம்பலத்தில் ஆட வேண்டும் என்பார்கள். தனிமையில் ஒத்திகை பார்த்துக் கொண்டால், பிறர் முன்னிலையில் நடிப்பது, இலகுவாக இருக்கும் அல்லவா?''

தாரிணி என்ன பதில் சொல்வாள்?

பயம், கவலை எதையும் காட்டி, மனுபரதனை வென்றவனாக உணர வைத்துவிடக் கூடாது. என்று தாரிணி, எவ்வளவோ முயன்றாள் தான். ஆனால், எதற்கும், ஓர் எல்லை இருக்கிறதல்லவா?

கடைசியாக மூச்சு முட்டிப் போய், "நானும் மனிதப் பிறவிதானே? இதையெல்லாம் ஜீரணித்துக் கொள்ள, எனக்குக் கொஞ்சம் அவகாசம் தேவைப்படும் என்று கூடத் தோன்றவில்லையா?'' என்று கேட்டுவிட்டு, இரு கைகளாலும் தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டாள்.

சற்று நேரம், அங்கே நிசப்தம் நிலவியது.

கண்களை இறுக மூடிக் கொண்டு, பெரிய பெரிய மூச்சுகளை எடுத்து, தாரிணி தன்னைச் சமாளிக்க முயற்சிப்பதைப் பார்த்தபடி, மனுபரதன் சில நிமிஷங்கள் பேசாமலே நின்றான்.

கைக் கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்துவிட்டு, மீண்டும் உள்ளே சென்றான்.

அவன் திரும்பி வர, மேலும் சில நிமிஷநேரம் ஆகியிருந்தது.

மீண்டும் வெளியே சென்று, அவளது பெட்டி, பையை எடுத்து வந்து, வைத்தான்.

பிறகு, இறுகிய முகத்துடன், அசையாமல் அமர்ந்திருந்தவளின் எதிரே இருந்த சோஃபாவில் உட்கார்ந்து, அவள் முகத்தைப் பார்த்தான்.

ஓரளவு சுதாரித்து விட்டாள் என்பதை ஊகித்து, லேசாகத் தொண்டையை கனைத்துக் கொண்டான்.

இமை மட்டும் உயர்த்தி, தாரிணி அவனைப் பார்க்கவும், "அவகாசம் கேட்டாய் தாரிணி. பத்து நிமிஷங்கள் கடந்து விட்டன. இதற்கு மேல் அதைத் தர, எனக்கு முடியாது. நமக்கு மீந்திருப்பது, இரண்டே நாட்கள், அதற்குள் நிறையச் செய்தாக வேண்டும். யார் யாரிடம், எப்படியெப்படிப் பேசுவது, என்ன சொல்லுவது, இன்னும் என்னென்னவோ, திட்டமிட வேண்டும். உனக்குத் தேவைப்படும் துணிமணிகள் வாங்க வேண்டும். அதெல்லாம் ஒரு 'ஜீபூம்பா'வில் நடந்து விடுமா, சொல்லு? நேரம் இப்போது, நமக்கு, அடைய முடியாத ஆடம்பரம், தாரிணி. அதனால், நீ சற்று விரைவாகத்தான் கிளம்பியாக வேண்டும். முதலில், ரயிலில் வந்த களைப்பு நீங்க, ஒரு பத்து நிமிஷம், நன்றாக நீரில் அமிழ்ந்து, கிடந்து குளித்து விட்டு வா. பின்புறம் குளியலறையில், 'பாத்டப்'பில் வெந்நீர் பிடித்து வைத்திருக்கிறேன். வெந்நீரிலிருந்து, வெளியே வர மனம் வராதுதான். ஆனால், நமக்கு, அதிக அவகாசம் இல்லை என்பதோடு, வெந்நீரும் குளிர்ந்து விடும். மாற்று உடை எடுத்துக் கொண்டு, குளிக்க போகிறாயா?

குளிப்பதற்கும் பத்தே நிமிஷங்கள் தான் என்ன?" என்றான். அவன்.

தணிவான குரலில், கேள்வியாக முடித்தபோதும், அவன் இட்டது, உத்திரவுதான் பணிந்தாக வேண்டியது!

பதில் பேசாமல் எழுந்து நடந்தவள், நின்று, திரும்பிப் பார்த்தாள்.

"என்ன?"

"இனி, அண்ணனுக்குத் துன்பம் ஏதும் இராதல்லவா?" என்று, சோர்வுடன் கேட்டாள்.

"நிச்சயமாய்!" என்று, அவன் வாக்குக் கொடுத்த பின்னரே, பெட்டியைத் திறந்தாள், அவள்.

மனுபரதன் சொன்னது போலக் குளித்து விட்டு வந்தபோது, மெய்யாகவே தாரிணிக்குக் கொஞ்சம் நன்றாகத்தான் இருந்தது.

ஆனால், கொஞ்சம்தான்!

ஏனெனில், அண்ணனை அழித்து விடுவேன் என்று மிரட்டி அவளை மணக்கும் இவன் இன்னும் என்னென்ன கொடுமைகளுக்கு அவளை ஆளாக்கப் போகிறானோ, என்ற கவலை, அவளைப் புழுவாக அரித்துக் கொண்டே இருந்தது. ஏனெனில், அவளை மணக்கப் பல்வேறு காரணங்களை மனுபரதன் சொன்னாலும், அவற்றுள் ஒன்று, மிகவும் முக்கியமானது அவளுடைய அண்ணனைப் பழி வாங்குவது!

பிறகு, அவள் கலங்குவதற்குக் கேட்பானேன்?

வந்த வழியே கார் திரும்பிச் சென்ற மாதிரித்தான், தாரிணிக்குத் தோன்றியது.

ஆனால், வழியைக் கவனித்து வைத்துக் கொள்ளும்,

ஆர்வம் தோன்றவில்லை. தப்பிச் செல்ல வழி தேடும் போதுதானே, அதையெல்லாம் பார்த்து வைக்க வேண்டும்? தப்பிச் செல்வது பற்றி நினைத்துப் பார்க்கக் கூடத் தைரியம் இல்லாத போது, அதெல்லாம் எதற்கு?

பாதிக்கப்படப்போவது, அவள் மட்டும்தான் என்றால், உயிருக்குத் துணிந்து கூடத் தப்பி ஓட முயற்சி செய்து பார்க்கலாம். ஆனால், துருப்புச் சீட்டு, அவன் கையிலல்லவா இருக்கிறது? அண்ணன் வாழ்வை அழியவிட, அவளால் எப்படி முடியும்?

வழி நெடுக, அவளது நடிப்பின் அவசியம் பற்றி, மனுபரதன் சொல்லிக் கொண்டே வந்ததன் பயனாக, 'இம்' எனுமுன் அவள், உதட்டைக் காதுவரை இழுத்து வைத்து கொள்ளவே, அவனால் குறை கூற முடியாது போயிற்று.

எதையும் பாராத கண்களால் பார்த்து, சுவையறியாமல் உண்டு, அளவு கொடுத்து விட்டுத் திரும்பிய போது, தாரிணி மிகவும் களைத்துப் போயிருந்தாள்.

ஆனால். மனுபரதனுக்குக் களைப்பென்பதே கிடையாது போலும்! அவன் குரல் கேட்டுக் கொண்டே இருந்தது. "அவகாசம் இராது என்பதால், திருமணசேலை, வரவேற்புக்கு அணிய வேண்டியது எல்லாம் நானே வாங்கி விட்டேன். சேலைக்கு ஃபால்ஸ் தைக்கக் கொடுத்திருக்கிறேன். வடக்கத்தி நண்பர் ஒருவருடைய மனைவியின் ஆலோசனை! ஆயிரக்கணக்கில் பணத்தைப் போட்டுச் சேலை வாங்கிவிட்டு, ஃபால்ஸ் தைக்காமல், காலிலும் கொலுசிலுமாக, ஜரிகை வீணாகும்படிச் செய்கிறோமாம். வாழும் காலம் முழுவதற்கும் நிலைத்திருக்க வேண்டிய சேலையாயிற்றே, என்று ஃபால்ஸ் தைக்கச் சொன்னேன்..."

வாழும் காலம் முழுவதற்கும்! திருமணம் வாழும் நாள் முழுமைக்கும் நிலையானது என்றானில்லையா?

வாழ்க்கை முழுவதும் அவளைச் சிறைப்படுத்தி விட வேண்டும் என்பது முதலிலிருந்தே, அவனது திட்டமாக இருந்திருக்கிறது!

இன்னும் அவள் எத்தனை ஆண்டுகள் உயிர் வாழக் கூடும்?

நாற்பது.. ஐம்பது ஆண்டுகள்?

மனுபரதன் சொன்ன மற்ற காரணங்களுக்கு, இத்தனை ஆண்டுகள், தாரிணி இங்கே கட்டுண்டு கிடக்கத் தேவையில்லை. ஆனால், பழி வெறி உயிர் உள்ளவரை நிலைத்திருக்கக் கூடியது!

அதாவது, அவள் இருக்குமட்டும், நந்தனின் செயலுக்காக, விலை கொடுத்தாக வேண்டும் என்கிறான்!

கணவன் கொடுமை செய்ய முடிவு செய்தால், எந்த அளவுக்குப் போக முடியும்?!

எத்தனை கதைகளில், எத்தனை படங்களில் என்னவெல்லாம், வந்திருக்கிறது?!

மீட்சியே இல்லாத இருண்ட பாலைவனமாகத்தான். இனி அவளது வாழ்வு இருக்கப் போகிறதா?

இராது என்று, அவளது சோர்ந்து ஓய்ந்த மனதைப் பிடிவாதமாகத் தூக்கி நிறுத்தியது அவளது அறிவு.

வாழ்நாள் முழுமைக்கும், அவளைக் கட்டுப்படுத்தி வைக்க, மனுபரதனால் முடியாது.

மிஞ்சி, மிஞ்சி, சில மாதங்கள்தான்!

மஞ்சரியை முறைப்படி மணந்து, அவளோடு கௌரவமாகக் குடும்பம் நடத்தி அவளது நகைகளையும், நந்தன் திருப்பிக் கொடுத்து விட்டால், அதன் பின்

மனுபரதனின் துருப்புச் சீட்டு, வெறும் ஜோக்கர் ஆகி விடும்.

தாரிணியை, அவன் எந்த வகையிலும் கட்டுப்படுத்த முடியாது.

அந்த நல்லநாள் வரும் வரையில், நடப்பது எதுவானாலும், அது யாருக்கோ என்று அதைப் பல்லைக் கடித்துப் பொறுத்துப் போக வேண்டியதுதான்!

## 10

ஒருநாள் விடிவு உண்டு. அண்ணன் வந்து மீட்பான் என்ற உறுதி தோன்றிய பிறகு, தாரிணியின், சோர்வு மாறிவிட்டது. முழுவதும் மறையவில்லைதான்.

எப்படியும், மனுபரதனை மணந்துதான் ஆக வேண்டும். கொஞ்ச காலம் அவன் சொன்னபடி ஆடித்தான் ஆக வேண்டும், என்ற நிலை மாறாமல், அப்படியேதானே இருந்தது?

அத்தோடு, மீட்சியின் போது, வாழ்வு முழுவதற்கும் நிலையானது என்று எண்ணியிருந்த திருமண உறவுமல்லவா, அறுபட்டாக வேண்டும்?

ஆனால், திருமண ரத்துகளும், மறுமணங்களும் பெருகிவிட்ட இந்தக் காலத்தில் அதைப் பெரிதாக நினைக்க கூடாது என்று, தனக்குத்தானே, பலமுறை சொல்லிக் கொண்டு, தாரிணி அமைதி அடைய முயன்றாள்.

அத்தோடு, இது, இருமனம் ஒத்த 'காதல் மணம் அல்லவே! வெறும் கட்டாயக் கல்யாணம்தானே!'

அடுத்து, மனுபரதன் அவளை அழைத்துச் சென்றது, அவன் வீட்டுக்கே.

திருமணம் வரையிலான இரண்டு நாட்களும், அவள் தங்க வேறு எந்த இடமும் சரியில்லை என்பது, அவன் கருத்து.

மதுரை அறிமுகமானவர்கள் அதிகம் உள்ள இடம் என்றால், அவன் தாரிணியை முதலில் அழைத்துச் சென்ற, அவனுடைய சின்னாத்தாவின் வீடு, ரொம்பவும் தனித்ததாய் இருந்தது. இரண்டு இடங்களிலுமே, அவளைத் தனியே தங்கச் செய்வதும் முடியாது. அதற்காக, அவன் அவளோடு கூட இருப்பதும், தவறாகத் தோன்றும்.

மேலும், அவன் வீட்டுக்கே, அவளை அழைத்துச் சென்று விட்டால், வரப்போகும் மணப்பெண் மாற்றத்துக்கு, வீட்டாரைத் தயார் செய்வது போலவும் ஆகும் அல்லவா?

மனுபரதனின் வீடும் கொடைக்கானலுக்குச் செல்லும் வழியில், இன்னொரு மலைப்பகுதியில்தான் இருந்தது. ஏற்ற இறக்கமான பாதையும், பசிய இயற்கை அழகும் கூட, அவளது மனதை அமைதிப்படுத்துவதில், உதவ முயன்றன.

கடப்பாரையை விழுங்கி விட்டுச் சுக்குக் கஷாயம் சாப்பிடுகிற மாதிரிதான் என்றாலும், தாரிணியின் எண்ணப் போக்கும் சேர்ந்து கொள்ளவே, அவளால் அமைதியாகக் காட்டிக் கொள்ள முடிந்தது.

தன்போக்கில், அண்ணன் வரக் கூடிய நாளை, அவள் மனதுள் கணக்கிட்டுக் கொண்டிருந்தபோது, சற்றே வேகத்தைக் குறைத்து, "அடுத்த வளைவில், எங்க...நம் வீட்டுக்குச் செல்லும் பாதை தொடங்குகிறது. வீட்டில் யாரையும், இப்போது நீ எதிர்கொள்ளத் தேவையிராது. அப்பா திரும்பி வர, ஐந்து மணியாகும். அம்மா ஓய்வெடுத்துக் கொண்டிருப்பார்கள். எங்காவது, வெளியே போயிருந்தால் தவிர, மதியத் தூக்கத்தின் பின், காஃபி

சிற்றுண்டி முடிந்துதான் அம்மா, அறையைவிட்டு வெளியே வருவார்கள். சமூக உணர்வு ரொம்பவும் உடையவர்கள். நம் நாடு இருக்கும் நிலையில், வீட்டுக்கு, ஒரு வாரிசு போதும் என்று எனக்குப் பிறகு, பிள்ளை பெறுவதையே நிறுத்தி விட்டார்கள், என்றால் பாரேன்!" என்று, தன் வீட்டவரைப் பற்றிய விவரம் சொல்லிக் கொண்டிருந்தவன், தாரிணியின் பார்வையை உணர்ந்து, அவளைத் திரும்பிப் பார்த்தான்.

"என்ன?"

"அவ்வளவு சமூக உணர்வு உள்ளவர்கள், இந்தத் திருமணத்தை எப்படி ஏற்றுக் கொள்ளுவார்கள்?" என்று புருவம் உயர்த்திக் கேட்டாள் அவள்.

அவளது உட்குறிப்பைக் கண்டு கொள்ளாதவன் போன்று, "அவ்வளவு சமூக உணர்வு உள்ளவர்கள் என்பதால், இதை, அப்படியே ஒத்துக் கொள்ளுவார்கள் என்கிற தைரியம்தான் எனக்கு. அந்தஸ்து வேறுபாடு மனதில் இருக்குமோ என்னவோ, வாய் திறந்து அது பற்றிப் பேசமாட்டார்கள். அதே போலக் காதல் திருமணம் என்பது, அம்மாவைப் பொறுத்தவரையில், மறு வார்த்தை சொல்லாமல், ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியது. எனவே, அம்மா வகையில், இதற்கு எதிர்ப்போ, உன்னிடம் வெறுப்போ, இராது..." என்றவனின் பேச்சில் இடையிட்டு. "நான் அதைச் சொல்லவில்லை இப்படி மிரட்டி..." என்று தொடங்கியவளை, அவனும் முடிக்கவிடவில்லை.

"நான், அவர்களிடம் சொல்ல இருப்பதைச் சொன்-னேன். நீயும், இனி அதை மட்டும் நினைத்தால் போதும்" என்றான் சற்று அதிகாரமான குரலில்.

'நினைப்பதைக்கூட நீ என்ன கட்டுப்படுத்துவது?' என்று, மனதுக்குள் புகைந்த போதும், அதை அப்படியே

சொல்லாமல், "மனதைக் கட்டுப்படுத்துவது, பெரிய பெரிய ஞானிகளுக்கே இயலாது என்பார்கள்" என்று மட்டும் கூறினாள் தாரிணி.

"அப்படியானால், அதை வெளியே காட்டிக் கொள்ளாமலேனும் இரு" என்றான் அவன், சுள்ளென்று. சிறு அமைதியின் பின், "நாடகம் என்று நடிக்கத் தொடங்கிய பிறகு அந்தப் பாத்திரமாக மாறி விடுவதுதான், எல்லோருக்கும் நல்லது தாரிணி" என்று, அந்த 'எல்லோருக்கும்'மில் ஓர் அழுத்தம் கொடுத்துச் சொன்னான் மனுபரதன். "சொல்வது புரிகிறதல்லவா?

உதட்டைக் கடித்துக் கொண்டு, தாரிணி பேசா-திருக்கவும், பழைய பேச்சைத் தொடர்ந்தான்.

"பொதுவாக, அம்மாவின் கவனம் எல்லாம், அவர்கள் முன்னின்று நடத்தும் பல்வேறு தரும காரியங்களில்தான், இருக்கும். மதிய ஓய்வு தவிர, அவர்களது நேரமும் அதில்தான் அதிகம் செலவழியும். மிச்சமுள்ள நேரம், அவர்களின் 'ஹாபி'க்கும் போய்விடும். 'ஒரு கற்றாழையாகப் பிறந்திருந்தால், உன் அம்மா என்னை நன்றாகக் கவனித்திருப்பாள்' என்று வெகு அபூர்வமாக ஜோக்கடிக்கும்போது அப்பா சொல்வதுண்டு."

"கற்றாழையா?" என்றாள் அவள் புரியாமல்.

"ஆமாம். அம்மாவின் 'ஹாபி' கற்றாழை வளர்ப்பு. சுமார் நூறு வகை வைத்திருப்பார்கள். பானை சைசிலிருந்து, கோலிக்காய் அளவு வரை, விதம் விதமான வடிவங்களில் சேகரித்து, வளர்த்து வைத்திருக்கிறார்கள். பார்த்தால், ஆச்சரியப்பட்டுப் போவாய்" என்றான் அவன். சாதாரணமான குரலில்.

தர்ம சிந்தனைக்கும் கற்றாழைக்கும் என்னவோ ஒத்துப் போகாத மாதிரி தாரிணிக்குத் தோன்றியது.

முன்னதற்கு, இளம் தளிராய், பூவிதழாய்க் குழையும் மனம் வேண்டும். முள் நிரம்பிய கற்றாழை வளர்ப்பு, எப்படிப் பொருந்தும்?

இரண்டையுமே, மன ஈடுபாட்டோடு செய்யாமல், வெறும் பகட்டுக்காகவும், பிறரின் பாராட்டுக்காகவும்தான் செய்கிறார்களோ, என்னவோ! இவன் குரலும் என்னவோ மாதிரி இருந்ததே!

"அம்மா, அப்படியென்றால், அப்பாவுடைய இரண்டாம் மனைவி, உன் பாஷைப்படி சின்னவீடு, அவரது அலுவலகம்தான். இது குளிர்ப்பிரதேசம். அதனால் அலுவலகம் முடிந்து, மாலை ஐந்து மணிக்கு, அப்பா வீடு திரும்பி விடுவார். அப்புறம் கிளப், டின்னர் என்று வெளியே போவார். அப்புறம் திரும்பி வருவது எட்டு மணியிலிருந்து எப்போது வேண்டுமானாலும் இருக்கும். அவருக்காக யாரும் காத்திருப்பது, அவருக்குப் பிடிக்காது. அதனால், யாரும் காத்திருப்பது இல்லை."

இதற்குள், மனுபரதனின் பேச்சும் குரலும், தாரிணியின் கவனத்தை, ஓரளவு ஈர்க்கத் தொடங்கியிருந்தன.

எப்படியும் கொஞ்ச காலம், அண்ணன் வந்து மீட்கும் வரையிலேனும், அவள் தினம் தினம் பார்த்துப் பழகியாக வேண்டிய மனிதர்களைப் பற்றி அறிந்து கொள்வது அவளுக்கு நல்லது தானே?

ஆனால், அவனைப் பற்றிக் கேட்க மனமின்றி, "உங்கள் சின்னாத்தா? அவர்களும் அங்கே, உங்கள் வீட்டில்தானே இருப்பதாகச் சொன்னீர்கள்?" என்று விசாரித்தாள்.

"ஆமாம். ஆனால், அவர்கள் இருப்பது, 'அவுட்ஹவு'சில். அவர்கள் விருப்பம்போல இருந்து கொள்ளட்டும் என்று, அப்பா, சின்னாத்தாவுக்காகத் தனியாகக் கட்டிக் கொடுத்திருக்கிறார். ராமாயணம் படிப்பதும், மந்திரம்

ஜபிப்பதும், மூப்பின் தூக்கமுமாக அவர்களது பொழுது கழிந்து விடும். வீட்டில், எதிலும் அவர்கள் தலையிடுவதில்லை" என்று முடித்துவிட்டு, மனுபரதன், தன்னைப் பற்றிச் சொன்னான்.

"அப்புறம் நான். நானும், கிட்டதட்ட அப்பா மாதிரித்தான். ஆனால், எங்கள் செட்டில் கல்யாணம் ஆனபசங்கள், நேரத்துக்கு வீடு திரும்ப வேண்டும் என்பதற்காக சற்று சீக்கிரம், முடித்து விடுவோம். வேலை ஏதும் கையோடு கொண்டு வராவிட்டால் டீவி பார்ப்பது, பாட்டுக் கேட்பது, ஏதாவது படிப்பது என்று, என் நேரம் போகும்..." என்று விட்டு, ஓரக்கண்ணால் அருகில் யோசனையோடு அமர்ந்திருந்தவளைப் பார்த்தான்.

ஆனால், அவனது சீண்டல் பார்வையைத் தாரிணி கவனிக்கவில்லை. இவன் பேச்சில் கவனம் பதித்திருந்தவளுக்கு, அவன் பேச்சில் ஏதோ குறையிருப்பது போல இருக்க வேண்டிய ஒன்று இல்லாத மாதிரித் தோன்றியது.

அண்ணனும் தங்கையுமாக, முந்தி வந்தவர், அடுத்தவர் வருகைக்காக 'காஃபி மேக்க'ரில் காஃபி போட்டு வைத்துக் கொண்டு காத்திருப்பதும், இருவருமாகச் சளசளவென்று பேசுவதும், அவளுக்கு நினைவு வந்தது.

"வீட்டில், நீங்கள் எல்லோரும் சேர்ந்து எப்போது பேசுவீர்கள்?" என்று கேட்டாள்.

"அவசியம் இருந்தால், முன் கூட்டியே சொல்லி வைத்து, குறிப்பிட்ட நேரத்தில், சேர்ந்து அமர்ந்து பிரச்சனை பற்றிப் பேசுவோம்" என்றான் மனுபரதன்.

"பிரச்சனை இருந்தால்தான், குடும்பத்தினர் சேர்ந்திருந்து பேசுவீர்களா? அப்படியானால், பிரச்சினையே இல்லாவிட்டால், முகமே மறந்து விடாதா?" என்றாள், அவள் அப்பாவித் தோற்றத்துடன்.

குத்தல் புரிந்து, "சேர்ந்திருந்து பேசாததினாலேயே முகம் மறந்து விடுகிற அளவுக்கு, எங்கள் அன்பு, பலவீனமானது அல்ல... ஆகா! இப்போதுதான் விஷயமே புரிகிறது! தினமும் அண்ணனும் தங்கையும், மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருந்தது, முகம் மறந்துவிடாமல் அடையாளம் கண்டு கொள்ளத்தானா? நந்தன் இது பற்றிச் சொல்லும்போது, ஏன், ஏன் என்று யோசிப்பேன்...! ஆக, இது தானா காரணம்?" என்று, எதையோ பெரிதாகக் கண்டு பிடித்து விட்ட மகிழ்ச்சியைக் காட்டிச் சொன்னான், மனுபரதன்.

அவன் சொன்ன தினுசில், சிரிப்பு ஒரு பக்கம் வந்தாலும், தாரிணிக்குக் கோபமும் வந்தது, அவளையும் அவள் அண்ணனையும் பற்றி, இவன் என்ன சொல்வது? "நாங்கள் ஒன்றும்..." என்றும் தொடங்கியவள். அதற்கு மேல், சிரிப்பை அடக்குவதற்காக, வாயை இறுக மூடிக் கொண்டாள்.

அவன் பேச்சுக்கு, அவள் சிரிப்பதாவது?

அதுவும் நடிக்க வேண்டிய அவசியம் கூட இல்லாத தனிமையில்!

அவள், பாதியில் பேச்சை நிறுத்தியதன் காரணத்தைத் தவறாக ஊகித்து, "பார், தாரிணி, தேவைக்கு மேல், உன்னைக் கஷ்டப்படுத்த வேண்டாம் என்பதுதான், என் எண்ணம். நீயும், நிலைமையை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். இந்த மாதிரி மட்டம் தட்டுகிற பேச்செல்லாம், இனி வேண்டாம் என்ன?" என்றுரைத்து விட்டு, பேசிக் கொண்டிருந்த விஷயத்துக்கு, மறுபடியும் வந்தான்.

"நம் திருமணத்தைப் பொறுத்த வரையில், என் பெற்றோர் அதற்குப் பெரிதாக எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதில்லை. என் சொந்த விஷயம் இது என்று, மதிப்புக்

கொடுத்து, ஒதுங்கிக் கொள்வார்கள். எனவே, வேண்டாத மருமகளாக இருக்க நேருமோ என்று, நீ கலங்கத் தேவையில்லை."

மருமகள்! கடவுளே, இவன் எங்கே போய்விட்டான்! தாரிணியின் நெஞ்சைக் கலக்குவதற்குத்தான். இந்தத் திருமணமே போதுமே! அதற்கு மேல் மாமியார், மாமனாரைப் பற்றியெல்லாம், அவள் எங்கே எண்ணிப் பார்த்தாள்?

அப்போதுதான் எச்சரித்திருந்தான் என்பதால், மனதில் நினைத்தது எதையும் அவள் வாய்விட்டுச் சொல்லவில்லை.

ஆனால், உள்ளூரப் பெரும் ஐயம் ஒன்று, உருப்பெற்றது.

மனுபரதனுடைய பெற்றோர், மகனின் சொந்த விஷயங்களில், தலையிடுகிறவர்கள் அல்ல. அப்படி-யென்றால், மஞ்சரி யாருடைய தேர்வு? இவன் இவ்வளவு அதிகமாக ஆத்திரப்படுவதற்குக் காரணம், மஞ்சரி மேல் இவனுக்கு இருந்த.. இன்னமும் இருக்கும் காதல்தானா?

இதற்குரிய விடையை அறிய, தாரிணிக்கு ஏனோ பிடிக்கவில்லை!

எனவே, அதிலிருந்து மனதை அகற்றி, "திடீரென்று என்னை வீட்டுக்குக் கூட்டிப் போகிறீர்களே, அங்கே எல்லோருக்கும் அதிர்ச்சியாய் இராதா?" என்று விசாரித்தாள்.

"ஒரு மிக முக்கியமான நபரை அழைத்து வருவதாகத் தகவல் கொடுத்திருக்கிறேன். வருவது ஒரு பெண் என்பதையும் சொல்லியிருக்கிறேன். இரவு டின்னரின் போது. மற்ற விவரங்களைத் தெரிவிக்கலாம் என்று இருக்கிறேன். இரவு ஏழு மணிக்கு உன்னை அழைத்துப் போக வருவேன். அதுவரை, ஓய்வெடுப்பதோ,

அழகுப்படுத்திக் கொள்வதோ, உன் விருப்பம் போலச் செய்..." என்றபடி, கார் ஹாரனை அழுத்தினான், மனுபரதன்.

ஒன்று தோன்ற, "அழகு படுத்திக் கொள்ள வேண்டுமா?" என்று கேட்டாள் தாரிணி.

"நீ நல்ல அழகி என்று, நான் சொல்ல வேண்டும் என்று, எதிர் பார்க்கிறாயா? என்று, அவன் திருப்பிக் கேட்கவும், அவளுக்கு ஒரு மாதிரியாகிப் போயிற்று.

மஞ்சரி நல்ல அழகி என்று, நந்தன் எழுதியிருந்தான். எனவே, இவன் தன்னைப் பற்றி என்ன நினைக்கிறான் என்று அறிந்து கொள்ள, அவளுக்குக் கொஞ்சம் இருக்கத்தான் செய்தது. ஆனால், மனுபரதன் இப்படிக் கேட்பான் என்று, அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. கேட்டபிறகு, அதை ஒத்துக் கொள்ளுவதும்தான், எப்படி? என்னமோ, அவனது பாராட்டுக்காக, அவள் ஏங்குவது போல, ஆகாதா?

எனவே, "அப்படி ஒன்றும் இல்லை. காதல் திருமணம் என்று சொல்லப் போகிறீர்களே, அந்தக் காதலுக்குப் பெண்ணின் அழகும் ஒரு காரணம் என்கிற அளவுக்கு, அழகு படுத்திக் கொள்ள வேண்டுமா, என்பதுதான் என் கேள்வியின் அர்த்தம்" என்று, தன் அடுத்த காரணத்தை மட்டுமாக விளக்கினாள்.

காரை நிறுத்தி, அவளைத் திரும்பிப் பார்த்தான், மனுபரதன். "சாரி" என்றான் தணிந்த குரலில். "நீ, நல்ல அழகியே என்பதை, உன் கண்ணாடியே, உனக்குச் சொல்லியிருக்கும். அதனால், தனிப்பட நீ, அழகு படுத்திக் கொள்ளத் தேவையில்லை. அப்புறம், இன்னுமொன்று, காதலுக்குப் பேரழகு தேவையும் இல்லை!" என்றுரைத்து-விட்டுக் காரை மீண்டும் எடுத்தான் அவன்.

குறைவான வேகத்துடன் அவன் மெதுவாக வரும்போதே, கறுப்பு பெயிண்ட் அடித்த பெரிய இரும்புக் கதவுகள், ஓசையற்று, வழுக்கிக் கொண்டு திறந்தன.

ஆட்கள் திறப்பது தெரியவும், "இங்கே ரிமோட், கிடையாதா? ஏன் ?" என்று தாரிணி வினவினாள்.

கதவைத் திறந்தவர்களைப் பார்த்து முறுவலித்துவிட்டு, மனுபரதன், தாரிணிக்குப் பதில் சொன்னான். "இது, எப்போதும் ஆள் இருக்குமிடம். வீட்டினர், விருந்தினர் என்று ஒவ்வொருவராக வரும் போதும், போகும் போதும், கதவைத் திறந்து மூட வேண்டும். அத்தோடு இவர்கள், இங்குள்ள மற்ற வேலைகளையும் செய்வார்கள். மலைக்குடிலில் - மலைக்குடில் என்பதுதான் அந்த வீட்டின் பெயர். அங்கே, நான் செல்லும்போது மட்டும் தானே வேலை? சில சமயங்களில், வாரக் கணக்கில்கூட, அங்கே போகமலே, இருந்திருக்கிறேன். எப்போதாவது ஓரிரு நாட்கள் செல்லும் எனக்காக, அந்தத் தனியிடத்தில், ஒருவரை உட்கார்த்தி வைப்பது பாவம் இல்லையா? தனியாக உட்கார்ந்திருப்பதில் போரடித்துப் பைத்தியம் கூடப் பிடித்து விடக்கூடும். வாகனப் போக்குவரத்துத் தூசி ஒன்றும் இராது என்பதால், வாரம் ஒரு முறை, ஓர் ஆள் சென்று சுத்தம் செய்து வந்தால், போதுமானது என்று, அப்படியே, செய்ய வைத்திருக்கிறேன்" என்று முடித்தான்.

தன்னிடம் பணிபுரிகிறவர் நலம் பற்றி, இவ்வளவு நினைக்கிறானா?

தாரிணிக்கு, ஆச்சரியமாகத்தான் இருந்தது. ஒரு வேளை இது இவனுடைய தகப்பனாரின் ஏற்பாடோ? ஆனால், 'வைத்திருக்கிறேன்' என்றானே!...

யோசித்துப் பார்க்கையில், நந்தன் கூட, மனுபரதனை எந்த இடத்திலும், எதிலும் குறைகூறி எழுதவில்லை

என்பது, அவளுக்கு நினைவு வந்தது. பெருமளவு, நல்லவிதமாக எண்ணும் படியாகத்தான் எழுதியிருந்தான்.

அப்படியானால், நல்லவன்தானா? மஞ்சரி மீது கொண்டுள்ள அன்புதான், இவனைப் பழி வாங்கும் வெறியனாக்கி விட்டதா?

இதைப் பற்றி மேலே எண்ணமிடப் பிடிக்காமல், "அப்..." என்று, தொடங்கியவள், மனுபரதனின் எச்சரிக்கைப் பார்வையில், சட்டென வாயை மூடிக் கொண்டாள்.

அதற்குள், இரண்டு வேலையாட்கள், வந்து. இருபுறக் கதவுகளையும் திறந்து விட்டு, கதவைப் பிடித்த வண்ணம் மரியாதையாக ஒதுங்கி நிற்க, இவர்கள் இருவரும், காரைவிட்டு இறங்கினர்.

மனுபரதன் பக்கம் கதவைத் திறந்தவன், டிரைவர் சீட்டில் அமர, அடுத்தவன், இந்தப் பக்கக் கதவைச் சாத்தி விட்டு, "ஐயா, சாமானுங்க..." என்று, இழுத்தான்.

"டிக்கியில் இருக்கிறது, எல்லாம் எடுத்து, மாடியில், பிங்க் ரூமில் வை." என்று, உத்திரவிட்டு, கூட வருமாறு, தாரிணியிடம் சைகை செய்து விட்டு, மனுபரதன் நடக்கத் தொடங்க, அவளும் கூடச் சென்றாள்.

என்னமோ, எல்லாம் திரைப்படங்களில் வருகிற ராஜ தோரணையாகத் தோன்றவே, வியப்புடன், வேடிக்கை-யாகவும் இருந்தது, அவளுக்கு.

எல்லோருக்கும், வெளிர் பச்சையில், சீருடை வேறு!

பணியாட்கள் எல்லோருமே, முழுக் கவனத்துடன் வேலை செய்வதைப் பார்க்கும்போது, அதன் பின்னணியில் இருக்கும் பயிற்சியும், பயமும் புரிந்தது. சற்று முன் நினைத்த 'பணியாளரிடம் பரிவு'டன் ஒத்துப் போகாமல், வேறுபட்டும் நின்றது.

இவர்களில், எந்த மனுபரதன் உண்மையானவன்?

தாரிணியின் பொருட்கள் எல்லாம், அறைக்கு வந்து சேர்ந்து, மரியாதையுடன் கதவைச் சாத்திக் கொண்டு வேலையாட்கள் சென்ற பிறகு, மனுபரதன், அவளிடம் திரும்பினான்.

"பணியாட்களிடம் சற்று எச்சரிக்கையோடு இருக்க வேண்டும், தாரிணி. அவர்கள் முன்னிலையில், சட்டென்று நம் விஷயம் பேசிவிடக் கூடாது. வம்பு பேசுகிற ஆசை, எல்லோரையும் போல, அவர்களுக்கும் இருக்கும். பிரச்சினை என்னவென்றால், நம் வீட்டில் வேலை செய்கிறவளுடைய அக்கா இன்னோர் இடத்தில் பணிபுரிவாள். அவள் பிள்ளை, அடுத்த வீட்டில்... இப்படி, ஒன்றும் இல்லாதது கூட, கண் காதுகளோடு, ஊர் முழுக்கப் பரவி விடும். இதனால், சற்று எச்சரிக்கையோடு இரு. இப்போது சொல், காரிலிருந்து இறங்கும்போது, என்னிடம் என்ன கேட்க நினைத்தாய்?" என்று கேட்டான்.

அறிந்தே ஆக வேண்டிய விஷயம்போல, இப்போது தாரிணிக்குத் தோன்றவில்லைதான். ஆனால், என்னவோ, எங்கேயோ, உயரத்தில் இருந்து கொண்டு, கீழே பார்த்துப் பேசுகிற மாதிரிக் காட்டிக் கொள்கிறானே, என்ற எரிச்சலில், "அங்கே மலைக்குடிலில் தனியாக இருப்பது பற்றிச் சொன்னீர்களே, உங்கள் சின்னத்தா, அங்கே எப்படி இருந்தார்கள் என்று யோசித்தேன்" என்றாள், அவள்.

தலை சரித்து அவளை நோக்கி, "அது சரி! என்றான் அவன். வேலைக்கு பாதுகாப்புக்கு என்ற, ஐந்தாறு வேலையாட்கள் புடை சூழ வசிப்பது, தனியாக இருப்பது, ஆகுமா? சின்னத்தா, அந்த வீட்டில், ராணியாகத்தான் வாழ்ந்தார்களே தவிர, அடிமையாக அல்ல. ஒரு துரும்பை எடுத்துப் போடும் அவசியம் அவர்களுக்கு அன்றைக்கும்

நேர்ந்தது இல்லை... இன்றைக்கும் இல்லை. வேண்டுமானால், உன் கண்களால், நீயே பார்த்துத் தெரிந்து கொள்" என்று, அவள் கரத்தைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய், ஜன்னலருகில் நிறுத்தி, "பார், இந்த ஜன்னல் வழியாக நன்றாகத் தெரியும். அந்த 'அவுட்ஹவு'சைப் பார்த்தால், ஏதோ, கடனே என்று கட்டிக் கொடுத்த மாதிரியா, தெரிகிறது?" என்று கேட்டான்.

வெளியே தெரிந்த அழகிய சிறு வீடு, தாரிணியின் கருத்தில் படவில்லை அதை விட, அவனது கைப்பிடி - ஓர் ஆணின் தொடுகை, அவளுக்குப் பழக்கமற்றது என்பதால், அவளை உறுத்தியது.

சட்டென அவனை, அவள் உதற முயன்றபோது, ஒரு கணம் தளர்ந்த அவனது பிடி உடனேயே, முன்னிலும் அதிகமாய் இறுகியது.

திகைப்பும் கேள்வியுமாய் அவனை ஏறிட்டவள், அவனது கல் முகத்திலும் கடினப் பார்வையிலுமாகச் செயலற்று நின்றாள்.

"பயிற்சி, மிக அதிகமாகவே தேவைப்படும் போலத் தெரிகிறதே!" என்றான் அவன் ஒரு மாதிரிக் குரலில்!

## 11

இரவு உணவின்போது தாரிணி சந்தித்தது, மனுபரதனுடைய பெற்றோரை மட்டுமே.

ஒரு புதிய பெண்ணுடன் மகன் வருவதைக் கண்டபோது, அவர்கள் பெரிதாக எந்தவித உணர்ச்சியையும் காட்டினார்கள் இல்லை.

வேண்டியது, வேண்டாதது கேட்டு, தட்டுகளில் பரிமாறிவிட்டு, வேலையாட்கள் அறையை விட்டு

வெளியேறும் வரை, யாரும் எதுவும் பேசவும் இல்லை. அதிகப்படி ஆர்வம், அவளிடம் யாரும் காட்டவும் இல்லை.

நந்தகுமாரன் எழுதியிருந்தது போன்ற, அரைமில்லி-மீட்டர் புன்னகை மட்டுமே.

"இவள் பெயர் தாரிணி" என்று மனுபரதன் அறிமுகப்படுத்திய போதும் "ஹல்லோ, தாரிணி, நல்வரவு!" என்று, முறைப்படி வரவேற்றார்களே தவிர 'என்ன, ஏது? யாரிவள்?' என்று, பரபரத்துப் போய்விடவில்லை.

ஆனால், மனுபரதன், தன் கதையைச் சொன்னதும், முதல் தடவையாக இருவரும் சற்றுத் திகைப்புடன், ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

பிறகு, "காதல் என்கிறாய். தீவிரமானது என்று தெரிகிறது. சரி, முடிவெடுத்து அதற்குமேல், இவ்வளவு ஏற்பாடும் செய்து விட்டீர்கள் என்றால், அதற்கு மேல் இதில் நாங்கள் மறுத்துச் சொல்ல ஒன்றும் இல்லை. வெல். பரத், தாரிணி, உங்களுக்கு எங்கள் வாழ்த்துக்கள்" என்றார், மனுபரதனுடைய தந்தை, மகேந்திரன்.

"ஆமாம். வாழ்த்துக்கள், தாரிணி, வீட்டிற்குள் மட்டுமல்லாமல், குடும்பத்திற்குள்ளும், உனக்கு எங்கள் நல்வரவு!" என்று, மனுபரதனுடைய தாயாரும் வாழ்த்தவும், தாரிணிக்கு என்ன சொல்வதென்றே, புரியவில்லை.

வரும் வழியில், அவன் என்னதான் சொல்லியிருந்தா போதும், இவர்களது எதிர்ப்பைத் தாரிணி, சற்று அதிகமாகவே எதிர்ப்பார்த்திருந்தாள். ஓரளவு, நம்பி-யிருந்தாள் என்று கூடச் சொல்லலாம். அவர்கள் ஒரேயடியாக மறுத்தால். இந்த மிரட்டல் திருமணம் நின்றுவிடக் கூடுமல்லவா?

ஆனால், மகனது கணிப்பே சரியாகி, அவர்கள்

இருவரும் வாழ்த்தவேறு செய்யவும், அவளுக்குச் சொத்தென்றாகி விட்டது. வாழ்த்துக்குப் பதில் சொல்லவேண்டுமே என்று கூட, அவளுக்குத் தோன்றவில்லை!

ஆனால், அவள் அருகில் இருந்தவன், அவள் கையைப் பற்றி, லேசாக அழுத்தி, "வாழ்த்துக்கு மிக்க நன்றி, அப்பா, நன்றி அம்மா" என்று, இருவருக்கும் தனித்தனியே நன்றி தெரிவித்ததோடு "நீங்கள் இருவருமே புரிந்து கொள்வீர்கள், இதில், எங்களுக்கு ஆதரவாக இருப்பீர்கள் என்று, நம்பித்தான் இவ்வளவு ஏற்பாடும் செய்தேன்" என்றுரைத்து, பெற்றோருக்கு உச்சி குளிர வைத்துவிட்டு அவளிடம் திரும்பி, "என்னம்மா, வரும்போதுகூட, நான் உன்னிடம் சொல்லவில்லை?" என்று, மீண்டும், அவள் கையை அழுத்தினான்.

அந்த அழுத்தத்தின் அர்த்தமான கட்டளை உணர்ந்தவளாய், "ஆமாம், ஆமாம்" என்று விட்டுத் தன் பங்குக்குத் தாரிணியும் நன்றியுரைத்தாள்.

அண்ணன் எழுதியிருந்தது போல, இந்தக் குடும்பங்கள் எல்லாமே, விசித்திரமானவைதான் போலும்!

ஒரே மகன், திருமணத்துக்கு இவ்வளவு அருகாமையில், பெண்ணை மாற்றுகிறான்! ஒரு வார்த்தை மறுத்துப் பேசாமல் வாழ்த்த வேறு செய்கிறார்களே!

மேல் நாட்டுப் பாணி என்று, அண்ணன் எழுதியது ரொம்பவும் சரிதான்!

தாரிணி யோசிக்கையிலேயே, ரஞ்சித்தின் குரல் கேட்டது. "ஏன் பரத், மஞ்சரி, தாரிணியுடைய அண்ணன் திருமணத்தையும், உங்களதோடு சேர்த்தே நடத்தி-யிருக்கலாமே. மஞ்சரி திருமணம் பற்றி, அப்பா வாக்குக்

கொடுத்திருப்பது, உனக்குத் தெரியும்தானே?" என்றாள், தாயார் சற்றுக்குறை கூறும் குரலில்.

சேர்த்தாவது? நடத்துவதாவது? அவர்கள் இருவரும் எங்கிருக்கிறார்கள் என்பதே, மனுபரதனுக்குத் தெரியாதே! சொல்லப் போனால், அதனால் வந்த வினைதானே, இந்தத் திருமணமே!

இந்தக் கேள்வியை, அவன் எப்படிச் சமாளிக்கப் போகிறான்?

வேடிக்கை பார்த்தாள், தாரிணி.

"அது, எனக்கும் தெரியும் அம்மா. ஆனால், அத்தை? குடம் குடமாகக் கண்ணீர் பெருக்கி, அதில் மஞ்சரி மூழ்கித் தவிக்கும் படிச் செய்து விடுவார்களே! அவர்களை மீறி, மஞ்சரியால் ஓர் எட்டு எடுத்து வைக்க முடியுமா? யாரால்தான் முடியும்? விஷம் தூக்கு என்று, நாலுபேர் வாழ்வைப் பாழாக்கி விடுவார்களே!" என்று மகன் கோர்வையாக இயம்ப, தந்தையும், ஒத்துக் கொண்டு, தலையாட்டினார்.

"பரத் சொல்வது சரிதானே, ரஞ்சி டார்லிங்? பிள்ளைகள் ஆசைப்பட்ட பிறகு, நாம் ஒன்றும் செய்ய முடியாது என்று எவ்வளவு எடுத்துச் சொன்னாலும், பிரேமி ஒத்துக் கொள்ளவே மாட்டாள் தானே?"

"அதில் அவளைத் தப்பு சொல்ல முடியாதுதானே? இங்கே பெண்ணைக் கொடுத்தால், காலம் முழுவதும் நிம்மதியாக இருக்கலாமே என்று, அவள் நினைப்பது, சரிதானே? புகுந்த வீட்டார் கொடுமை என்பது, அடியோடு இராதே! பெற்ற மகள் போலக் கருதி, இப்போதே, இவ்வளவு நகை செய்திருக்கிறோமே! வேறு யார் அப்படிச் செய்வார்களாம்?" என்று, தாயார், தங்கள் உதார குணத்தை நினைத்துப் பெருமைப் பட்டாள்.

தாரிணிக்கு மனம் கூசிப் போயிற்று.

இந்த வீட்டினர் பரிசாகக் கொடுத்த நகைகளையா, அண்ணனும் அண்ணியும் எடுத்துச் சென்றார்கள்? பெண்ணுக்குப் பெண்ணும் போய், வீட்டு மருமகளுக்காகக் கொடுத்த நகைகளும் பறிபோவது என்றால்? மனுபரதன் ஆத்திரப்பட்டதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

தாரிணியின் முக வாட்டத்தை, ஒரு கணம் யோசனையாகப் பார்த்துவிட்டு, "மஞ்சரியுடைய தந்தை, அப்பாவுடைய நெருங்கி நண்பர், உறவும்தான். சிறு வயதிலேயே, நோய் வாய்ப்பட்டு இறந்து போனார். இறக்கும்போது, மகளின் நல்வாழ்வை, அப்பா, அம்மாவிடம் ஒப்படைத்துவிட்டுப் போனார். மருமகளாக்கி அந்தப் பொறுப்பை, நல்லபடியாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பது, மஞ்சரியுடைய அம்மாவின் ஆசை. என் பெற்றோரும், அவளை, இந்த வீட்டுப் பெண்ணாகவே எண்ணி, நகை, நல்ல துணிமணி எல்லாம், வாங்கிக் கொடுப்பார்கள். அதைத்தான், சொன்னார்கள்" என்று, விளக்கினான்.

விசித்திரமாய் நோக்கி, "என்னம்மா, பரத், அவளுக்கு ஒன்றுமே தெரியாதமாதிரி விளக்குகிறாயே! அவளுடைய அண்ணன் மனைவி ஆகப் போகிறவளைப் பற்றி, அவளுக்குத் தெரியாதா என்ன?" என்று, கேட்டாள் ரஞ்சிதம்.

"போங்கள், அம்மா!" என்று, சலுகையாய் சலித்தான், பிள்ளை. "நாங்கள் இருவரும் பார்த்துப் பேசக் கிடைத்ததே, மொத்தத்தில், நாலுதடவை! அதில் அதிக பட்சநேரம் கிடைத்ததே, இன்று மட்டும்தான். இதில், நாங்கள், எங்களைப் பற்றிப் பேசுவோமா? என்னதான் அண்ணன் என்றாலும், அவரும், அவருடைய மனைவியும் எங்களுக்கு

இரண்டாம் பட்சம்தானே?! அதனால், இதெல்லாம் பற்றி, என் மகாராணிக்கு, ஒன்றுமே தெரியாதும்மா, இன்னும் கொஞ்சநாள் ஆன பிறகு மற்றவர்களைப் பற்றியும் பேசுவோமோ,என்னவோ?"

பரவாயில்லை, ஒவ்வொரு கிளைமாக்சையும் நல்லபடியாகவே சமாளிக்கிறான்.! ஆனால், உள்ளூர மனுபரதனுக்கு எப்படி வியர்த்து ஊற்றும் என்பதை எண்ணுகையில், தாரிணிக்குச் சிரிப்பு வந்தது. அடக்கிக் கொண்டு வேடிக்கை பார்த்தாள்.

ஆனால் அடக்கிய சிரிப்பை, அவளது கண்களின் பளபளப்பில் ஊகித்து, "என்ன டார்லிங், நீ என்ன சொல்கிறாய்?" என்று கேட்டு, அவளைத் திணற வைத்தான் அவன்.

என்னவென்று, சொல்வது? அவன் பேச்சு அத்தனையும் அளப்பு. பொய், சொல்லிப் பழக்கம் இல்லாத அவள், இதில் என்ன விதத்தில் பங்கேற்க முடியும்?

திணறலைக் காட்டக் கூட முடியாமல் தவித்தபடி, மனுபரதனைப் பார்த்தவள், சற்றுத் திகைத்துப் போனாள்.

அவன் கண்களும் பளபளத்துக் கொண்டுதான் இருந்தன. ஆனால் அதில் குரூரம் இருக்கவில்லை. விளையாட்டுத்தனமான, போட்டிப் பளபளப்பு.! 'என்னைப் பார்த்தா சிரிக்கிறாய்? இரு இரு, உன்னை மாட்டி வைக்கிறேன் பார், என்கிற பளிச்சிடல்.!

அதுதான் மாட்டியே வைத்துவிட்டானே.!

அது வரை, அவர்கள் இருவருக்கும் இடையே நடந்துள்ள பேச்சுகளின் அடிப்படையே, தாரிணியுடைய அண்ணன்தான். இதில் அவனைப் பற்றிப் பேசவில்லை

என்று, மனுபரதன் சொன்னதை ஒட்டி எப்படி, என்ன சொல்லுவது?

இந்த அழகில், 'டார்லிங்' என்ற கொஞ்சல் வேறு!

ஆனால், அந்த இக்கட்டிலிருந்து, அவளைக் காப்பாற்றியதும், அந்த 'டார்லிங்' என்கிற வார்த்தைதான்.!

ஏற்கனவே, மகேந்திரன் மனைவியை, 'டார்லிங்' என்று அழைத்திருந்தார். எப்போதும், அப்படி அழைப்பவரும் கூட, இப்போது மகன் அதே வார்த்தையைப் பயன்படுத்தவும்,சற்று திகைத்தாற்போல அவனைப் பார்த்தார்.

கேள்வி, தாரிணிக்கு என்பதால் அவள் பதில் கூற, முறைப்படி இடம் கொடுத்து, வாளாதிருந்தார். ஆனால், தாரிணி யோசிக்கவும், அவர்தான் பேச்சைத் தொடங்கினார். "பரத், இந்த வீட்டில், நான் என் மனைவியை, டார்லிங் என்கிறேன். நீயும், அதையே சொல்லாதே, இன்றைய நாகரீகத்துக்கு, ஏற்றபடி தாரிணிக்கு, வேறு ஏதாவது, செல்லப் பெயர் சூட்டிக் கொள்வதுதான், நன்றாக இருக்கும்" என்றார்.

புன்னகையை மறைக்க, உணவுத் தட்டில் கவனம் போலக் குனிந்து கொண்டாள் தாரிணி. சிரிக்கிறாள் என்று இன்னும் எதிலாவது மாட்டி வைத்துவிடக்கூடாதே.!

இலகு மனப்பான்மையோடு குனிந்தவளுக்கு, உடனே மனம் வாடிவிட்டது.

இதுவே, இயல்பான திருமணம் என்றால், பதிலுக்குப் பதில் என்று வேடிக்கையும் விளையாட்டுமாக, எவ்வளவு பேசியிருக்கலாம்? அதில் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருக்கலாம்? வாழ்வில் ஒரு முறை மட்டுமே ஏற்படக்கூடிய ஆனந்தம்.! அவளது பிறப்புரிமை.! ஆனால், மகிழும்

எண்ணமே, இப்பொழுது ஏற்படவில்லையே.! எல்லா-வற்றையும், எப்படி சமாளிப்பது என்று 'சமாளிப்பி'-லேயேதான் கவனம் வைக்கும்படி இருக்கிறது? அவள் செய்யாத ஒரு தவறுக்காக, அவளுக்கு உரிய சந்தோஷத்தை, நாசம் செய்துவிட்டானே.!

எதையும் வெளிக்காட்டி அண்ணன் வாழ்வை நாசமாக்க மனுபரதனுக்கு ஒரு வாய்ப்பைக் கொடுத்துவிடக் கூடாது என்ற பிடிவாதத்துடன், குனிந்த தலை நிமிராமல் தட்டில் இருந்ததை, அது என்னவென்று கூடப் பாராமல், எடுத்துக் கொறித்தாள், அவள்.

"இன்றைய நாகரீகப்படியா. அப்பா? தாங்கமாட்டீர்கள்" என்றான் மகன். ஒன்று, உயிரின் உயிரே, கண்ணின் கண்ணே என்று, சுத்தத் தமிழில் சொல்லிக் கொல்லுகிறார்கள். அல்லது பிசாசு, ராட்சசி என்கிறார்கள். இந்த அழகான முகத்தைப் பார்த்து. அப்படியெல்லாம் சொல்ல, எனக்கு, மனம் வரமாட்டேன் என்கிறதே.!" என்று, வருடுகிற பாவனையில் தாரிணியின் கன்னத்தை லேசாக நிமிண்டினான்.

திகைத்து நிமிர்ந்தவளை, அவன் நேராக நோக்கவும், தாரிணிக்குப் புரிந்து போயிற்று.

அவளை, எச்சரிக்கிறானாம்.! என்ன தைரியம் இருந்தால், அவளை, அவ்வளவு சாதாரணமாக அப்படித் தொடுவான்?

கணநேரக் கொதிப்பில், என்ன வேண்டுமானாலும் பண்ணிக் கொள் என்று எழுந்து போய்விடலாமா என்று கூடத் தாரிணிக்குத் தோன்றிவிட்டது. பெருமுயற்சி செய்து, தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு புன்னகை காட்டினாள், அவள்.

நல்லவேளையாக, அவள் ஏதாவது பேச வேண்டிய அவசியம் இல்லாமல், "ஐயா! அந்த மாதிரியெல்லாம்

தாரிணியைக் கூப்பிட்டு, எங்களைக் கேவலப்படுத்தி விடாதே, பரத்" என்று, ரஞ்சிதம் மகனிடம் கேட்டுக் கொண்டாள்.

ஆனால் ஒரு நாளில்லாவிட்டால் ஒருநாள், நிச்சயமாக அப்படித்தான் நடக்கப் போகிறது. அவளது கட்டுப்பாடு, தகர்ந்துவிடப் போகிறது என்பது மட்டும் அவளுக்குத் தெளிவாகவே தெரிந்து போயிற்று.

ஆயினும், அந்த நாள், அவ்வளவு சீக்கிரமாக வரும் என்பதைத்தான், அவளும் கூட எதிர்பார்க்கவில்லை.!

திருமணத்துக்கு, முந்தைய மற்ற இரு நாட்களிலும், பெரிதாக ஒன்றும் நடக்கவில்லை.

வருங்கால மாமனார், மாமியாரை, அவ்வளவாகத் தாரிணி பார்க்கவே இல்லை.

பார்க்கும் சமயங்களில், அந்தந்த வேளைக்கு ஏற்றபடி, 'குட்மார்னிங், குட்ஈவினிங்' எல்லாம் ஒழுங்காகச் சொன்னார்கள். மருமகளாகப் போகிறவள் என்பதாலோ, என்னவோ, நந்தன் எழுதியதுபோல அல்லாமல், மில்லி மீட்டர் கணக்குப் பாராதபடி முறுவலும் கொஞ்சம் முழுசாகவே இருந்தது.!

முதல் நாள் காலையில், யாரோ அழுகுரலில் பேசுவது போல, ஒருதரம் கேட்டது.

தாரிணியின் அறைக் கதவைத் தட்டி, "மஞ்சரியுடைய அம்மா, நான் சொல்லும் வரை, அறையை விட்டு வெளியே வரவேண்டாம்" என்று விட்டுப் போனான், மனுபரதன்.

சற்றுப் பொறுத்து, மனுபரதனின் கைத்தாங்கலில், மிக ஒல்லியான ஒரு பெண்மணி, கண்ணைத் துடைத்தபடியே, வெளியே வருவதைப் பக்கவாட்டு ஜன்னல் வழியே,தாரிணி கண்டாள்.

ஒல்லி என்றால், வயிற்றுக்கில்லாத மெலிவல்ல, உணவைக் கட்டுப்படுத்தி உடல் பயிற்சி செய்து, கஷ்டப்பட்டு, அடைந்த மெல்லிய மேனி, அதை அதிகப்படுத்திக் காட்டும் ஆடை, அணிகள்.! பாவம், ஒடிந்து விடுவாளோ, என்று பரிதாபப்பட வைக்கும் நடை.!

மனுபரதனும், அவளை ஏந்தலாய்த்தான் நடத்திக் கூட்டி வந்து கொண்டிருந்தான்.

"மஞ்சரி பிறக்கு முன்பே, நீங்கள் என் அத்தையல்லவா? அதை, என்றைக்காவது நான் மறப்பேனா அத்தை? மாமாவிடம், அப்பா வாக்கு வேறு கொடுத்திருக்கிறார். அதன் பிறகு, நீங்கள் இப்படியெல்லாம் சொல்வது அப்பாவை, அவமானப்படுத்துவது போல இருக்கிற-தில்லையா? அனாவசியமாகக் கவலைப்படாதீர்கள். உங்கள் நல்வாழ்வுக்கு, நான் பொறுப்பு. என்னை நம்பி, இப்போது கிளம்புங்கள்" என்று அவளைக் காரில் ஏற வைக்க முயன்றான், மனுபரதன்.

கார்ப் பக்கம் காலை எடுத்து வைத்த அந்தப் பிரேமி அம்மாள், விலுக்கென்று மீண்டும், மனுபரதன் புறமாய்த் திரும்பி விட்டாள். "நம்பாமலா, பெண்ணைத் தருவதற்கு ஒப்புக் கொண்டேன்? ஏமாற்றி விட்டீர்களே.! எல்லாருமாகச் சேர்ந்து, என்னை ஏமாற்றி விட்டீர்களே.! அவளை, ஒரு கூலிக்காரனோடு அனுப்பிவிட்டு, நீ அந்தக் கூலிக்காரன் தங்கையையே மணக்கிறாயாமே.! அவள் எப்படி உன்னை" என்று புலம்பியவளை மனுபரதன் இடைமறித்தான்.

"போதும், அத்தை.!" என்றான், சற்று அதட்டலாக. "நான் மணக்க இருக்கும் பெண்ணைப் பற்றி, நீங்கள் கேவலமாகப் பேசுவது சரியில்லை, அத்தோடு, வீட்டுக்கு வெளியே நாலு வேலையாட்கள் பார்க்கக்கூடிய இடத்தில்

நின்று கொண்டு, இப்படியெல்லாம் பேசி, உங்களை நீங்களே தாழ்த்திக் கொள்ளாதீர்கள். இப்போது முதலில், வீட்டுக்குக் கிளம்பிப் போங்கள். மற்றதெல்லாம், பிறகு பேசலாம். உங்கள் நிம்மதிக்கு, ஒன்று சொல்லுகிறேன். ஒருபோதும், உங்கள் நிலை தாழும்படி அப்பாவோ, நானோ விட்டுவிட மாட்டோம். நான் சொல்வதில், நம்பிக்கை இருந்தால், இப்போது, நிம்மதியாகக் கிளம்புங்கள். அல்லது, இங்கேயே தனியாக நின்று, புலம்புங்கள்" என்று, அவன் சற்றுக் கடினமான குரலில் கூறவும், பிரேமாதேவி, பெட்டிப் பாம்பாய் அடங்கிப் போனாள்.

தனியாக நின்று புலம்ப, அவள் என்ன பைத்தியமா? மற்றும், மனுபரதனும், அவனுடைய குடும்பமும் கேளாத அவளது புலம்பலால், அவளுக்கு என்ன பிரயோசனம்?

கைகுட்டையால் கண்ணைத் துடைக்கும் பாவனையில், அவன் அறியாதவாறு, மனுபரதனின் முகத்தை, அவள் அளவிடுவதை தாரிணியால் பார்க்க முடிந்தது.

மனுபரதனின் முகம் இளக்கமற்று இருந்ததும் தெரிந்தது.

அவனுக்கு எரிச்சல் மூட்டி விடக் கூடாது என்று, எண்ணியவள் போன்று, "சரி, கண்ணா, நான், இருக்கும் நிலையில், இதெல்லாம், ஒன்றுமே எண்ணிப் பார்க்கத் தோன்றவில்லை! தப்புத்தான். மன்னித்துவிடு. மற்றவர்கள் - வேலைக்காரப் பசங்கள் பார்ப்பார்களே என்றுதான், தயங்குகிறேன். இல்லாவிட்டால், என் தப்புக்கு உன் காலில்விழுந்து மன்னிப்புக் கேட்பேன்..." என்று, வேறு மாதிரித் தொடங்கியவளின் பேச்சில் இடையிட்டு, மனுபரதன் தடுத்தான்.

"இருக்கட்டும் அத்தை, இந்தப் பேச்சும் எல்லோர் காதிலும் விழத்தான் செய்யும். உங்களுக்கு இப்போது

முக்கியத் தேவை, தனிமை. தனியாக இருந்து மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு, அப்புறமாக வாருங்கள்" என்று முடித்து, கார்க்கதவை நன்கு திறந்து விட்டான்.

அவன் செய்கையால் இட்ட கட்டளையை மீற முடியாமல் 'உம்'மென்ற முகத்துடன் பிரேமாதேவி காரில் ஏறி உட்கார, காரை ஓட்டுமாறு, காரோட்டிக்குச் சைகை செய்து விட்டுத் திரும்பிப் பாராமல் உள்ளே சென்றான் மனுபரதன்.

இப்படி ஒரு மாமியாரிடம் இருந்து தப்புவித்ததற்காக, நந்தனுக்கு நன்றி தெரிவிக்க வேண்டியவன், "நேர்மாறாகப் பழி வாங்குவதில் முனைந்திருக்கிறானே, என்ன அநியாயம் என்றிருந்தது, தாரிணிக்கு.

அத்தோடு, இவனைப் போல, பிரேமாதேவியை, ஓர் அளவில் அடக்கி வைக்க அண்ணனால் முடியுமா என்ற கவலையும், அவளுக்கு உண்டாயிற்று.

தைத்து முடிக்கப்பட்ட துணிகள், திருமணத்துக்கு முன் தினம், வந்து சேர்ந்தன.

"அளவு சரியாக இருக்கிறதா என்று பார்த்துவிடு" என்று மனுபரதன் அவைகளைத் தாரிணியிடம் கொண்டு வந்து கொடுத்தான்.

அழகான 'டிஷ்யூ' சட்டைகள், வெறும் பார்வைக்கே, விலை மதிப்பு தெரிந்தது. ஆனால், பொன் கூண்டும் கூடச் சிறைதானே?

கையை மட்டும் நுழைத்துப் பார்த்துவிட்டு, "சரியாக இருக்கிறது" என்றாள். அவள் அசுவாரசியமாக.

"அப்படியே, இந்தச் சேலைகளையும் ஒரு தரம் பார்த்துவிடு" என்று, இரண்டு சேலைப் பெட்டிகளை அவள் அருகே வைத்தான், மனுபரதன்.

அவள் 'உச்சுக் கொட்டி விட்டு, அசையாமல் அமர்ந்திருக்கவும், ஏன், பெட்டியைத் திறந்து பார்ப்பதில் அப்படி என்ன பெரிய கஷ்டம்?" என்று கேட்டான்.

"கஷ்டம் என்ன? எதற்குப் பார்ப்பது என்பதுதான்."

"பிடித்திருக்கிறதா, என்று பார்ப்பது."

"அதுதான், எதற்கு, என்று நினைத்தேன். கயிற்றில் கட்டிய குரங்கு குரங்காட்டியின் கையில் இருக்கும் கம்புக்குப் பணிந்து ஆடுகிற மாதிரி, என் நிலைமை. இது ஜரிகைச் சேலையோ, கோணிச்சாக்கோ, நீங்கள் தருவது எதுவானாலும் அதைத்தானே, நான் கட்டிக் கொண்டாக வேண்டும்? அடிப்படையே பிடிக்காத போது இதைப்போய் எதற்காகப் பார்ப்பது என்று நினைத்தேன்." என்றாள், அவள் குத்தலாக

முகம் லேசாகக் கன்ற, "மெய்யாகவே அதுதான் காரணம் என்றால், நிலைமையை நன்கு அறிந்து வைத்திருக்கிறாய் என்று, எனக்கு மகிழ்ச்சிதான்" என்றுவிட்டுத் திரும்பிச் சென்றான் மனுபரதன்.

போகட்டும், செய்வதோ, கட்டாயக் கல்யாணம்; இதில், இவன் காசை வீசி இரண்டு சேலைகளை வாங்கி வந்துவிட்டான் என்று, வாலை ஆட்டிக் கொண்டு காலடியில் விழுந்து விடுவாள் என்று எண்ணினான் போல, அதற்கு அவன் வேறு ஆளைப் பார்த்திருக்க வேண்டும்.

அவன் சென்ற பிறகு, வெகுநேரம் கழித்தும், சேலைப் பெட்டிகள் அப்படியே கிடந்தன.

திரும்பியபோதெல்லாம், கண்ணில் பட்டு உறுத்தியது தாங்காமலும், அப்படி என்ன பெரிதாக வாங்கிப் பீற்றிக் கொள்ள வந்திருப்பான் என்ற குறுகுறுப்பு மேலோங்க

பெட்டிகளைத் திறந்து பார்த்தவள், அப்படியே திகைத்து நின்றாள்.

## 12

அவள் பார்த்தவற்றுள், முதல் சேலை, தாரிணியை அவ்வளவாகப் பாதிக்கவில்லை. அதுவும் அழகாய்த்தான் இருந்தது. இளம் பச்சை வண்ணம் லேசாக தெரிந்த 'டிஷ்யூ' உடலமைப்பு, அதிலேயே, ஜரிகைக் கட்டங்களும், கட்டங்களுக்கு ஒன்று விட்டு ஒன்றாக அன்னங்கள், பார்டருக்கு மேல், பெரிய அன்னங்கள் என்று சேலை வெகு அழகாகவே இருந்தது. பாய்ப் பின்னலில் அகன்ற பார்டர் வேறு.

வரவேற்பின் போது, கட்டிக் கொள்ள வேண்டியது என்பது இலகுவாக ஊகிக்க முடிந்தது.

ஆனால், அவளைப் பாதித்து, அடுத்த பெட்டியிலிருந்த திருமணச் சேலையே

அடர் சிவப்பில் உடல் முழுவதும் நெருக்கமான ஜரிகைக் கொடிகளுடன் கூடிய கொடிப்பட்டு கொடிகளில் இலைகள், மலர்களுடன், கொத்துக் கொத்தாக திராட்சைக் கனிகளும், நயம்பட நெய்யப்பட்டிருந்தன.

வெகு அழகான விலை உயர்ந்த சேலை.!

ஆனால், தாரிணியைப் பாதித்து, நெஞ்சு நெகிழ வைத்ததின் காரணம் சேலையின் அழகோ, விலையோ அல்ல அது, அவளது கற்பனைச் சேலை.!

அவள் அம்மாவின் சேலையை விட, இதில் ஜரிகை அதிகம் இருந்தது. ஆனால், அதுவும்கூட, அவள் ஆசைப்பட்டதுதான்.

அம்மாவின் சேலையில் உள்ள ஒரே ஒரு குறை, அதில் ஜரிகை சற்றுக் குறைவாக இருப்பதுதான். நமக்கு வாங்கும்போது, முடிந்தால், அதை நிவர்த்தி செய்ய வேண்டும் என்றுகூடத் தாரிணி, அவ்வப்போது, எண்ணியதுண்டு.

இப்போது, அவளது கற்பனைச் சேலையை,அவளாகக் கண்ணெதிரில் காணவும் தன்னையறியாமல் அவளது கண்கள் கலங்கி விட்டன.

பாவம்.! இதைக் காட்ட விரும்பித்தான், மனுபரதன், சேலையைப் பார், பார் என்றிருக்கிறான்.

அவளுக்காகப் பார்த்து வாங்கி.. என்று எண்ணமிடும் போதே, அவள் மனம் மீண்டும் கலைந்து போயிற்று.

இது, அவளுக்காக வாங்கியதுதானா, அல்லது, மஞ்சரிக்காக வாங்கி, எதுவும் வேண்டாம் என்று அவள் சென்றுவிட்டதால், தாரிணிக்குத் தரப்படுகிறதா?

ஒருத்தி, பிடிக்காமல் கழித்தது எனும்போது, சேலையைப் பார்க்கவே தாரிணிக்கு எப்படியோ இருந்தது.

சேலையின் அழகே மங்கிவிட்டாற் போலத் தோன்றியது.

அவகாசம் இல்லை என்று, தானே சேலை வாங்கியதாக, மனுபரதன் ஏதோ சொன்னது நினைவு வரவும் அவள் மனம் கொஞ்சம் சமாதானமுற்றது.

ஆனால், அவன் என்ன பொய்யே சொல்லாத அரிச்சந்திரனா இல்லையே! அவளையே, ஏமாற்றித் தானே, இங்கே கொணர்ந்தான் என்று மீண்டும் மனம் உளம்பினாள்.

சேலை விஷயம் பொய்யோ, மெய்யோ? பழி வாங்க

நடக்கும், அடிப்படையே தப்பான திருமணம் இது என்பது அப்பட்டமான உண்மைதானே. அண்ணன் வரும் வரை, சகித்துப் போக வேண்டிய சூழ்நிலை!

அதற்குமேல், நெகிழவோ, மகிழவோ, இதில் என்ன இருக்கிறது.

இந்த மாதிரி, ஒரு மரக்கட்டை மனநிலையில்தான், தாரிணி, திருமணத்தன்று, அந்தச் சேலையைக் கட்டும்போதும் இருந்தாள். அதுவே நல்லதாகி, நில் என்றால் நின்று உட்கார் என்றால் உட்கார்ந்து, சாவி கொடுத்த பொம்மை போல அவள் இயங்க, அது வசதியாகவும் இருந்தது.

திருமணத்தின்போது, தாரணிக்கு அவள் அஞ்சிய அளவுக்கு ஒன்றும் பெரிதாகத் தோன்றவில்லை. இது, அது என்று சடங்குகள் நடந்து கொண்டே இருந்தன. சடங்குகள் முடிவடைந்ததும் கெட்ட நேரம் வருமுன் வீட்டுக்குப் போய் சேர்ந்து விட வேண்டும் என்று வீட்டுக்கும் அழைத்து வந்து விடவே, 'அப்பாடி' என்று அவளுக்கு அளிக்கப்பட்டிருந்த அறைக்குள், நகை, பட்டைக் களைந்துவிட்டு, நத்தையாய்ச் சுருண்டு கொள்ள முடிந்தது.

ஆனால், மாலை வரவேற்பின்போது, அது முடியாமல் போயிற்று.

காலைத் திருமணத்தின்போது, அவ்வளவாகக் கூட்டம் இல்லை. அது ஏதோ, குடும்பத்துக்குள் நடக்கிற விசேஷம் போல குறிப்பிட்டாற்போல, நெருங்கிய உறவினர் மட்டுமே வந்திருந்தனர்.

ஆனால், மாலை வரவேற்பின் போது கூட்டம் நெருக்கியடித்து விட்டது.

உறவினரோடு, நண்பர்கள், வாடிக்கையாளர்கள் என்று!

வரவர, ஒவ்வொருவராக அறிமுகப்படுத்தவும் தாரிணிக்குத் தலை சுற்றத் தொடங்கி விட்டது.

அண்ணன் வந்து விடுவிக்கும் வரைதான் என்றாலும், அதுவரை தொல்லையின்றி வாழ வேண்டுமே என்று, தாரிணி முடிந்த மட்டும், எல்லோர் பெயரையும் மனனம் செய்ய முயன்றாள்.

மாதர் மன்றத்தில், பொருளாளர் என்று, ரஞ்சிதம் ஒரு பெண்மணியை அறிமுகப்படுத்திவிட்டு, அவளை உணவருந்த அழைத்துச் சென்றாள்.

பொருளாளரின் பெயரை, தாரிணி வாய்க்குள் நெட்டுருப் போடுவதைப் பார்த்த மனுபரதனுக்குச் சிரிப்பு வந்தது.

மனைவியின் காதருகே குனிந்து, "விட்டுவிடு, தாரிணி" என்று, அவன் கூறவும் திகைத்துப் போய், "என. என்னது?" என்று கேட்டாள். அவள்.

"மனனம் செய்வதை விட்டுவிடு என்றேன். இவர்களில் பலரை, நீ வெகு அபூர்வமாகத்தான், சந்திக்க வேண்டியிருக்கும். அத்தோடு, இன்று ஒரே நாளில் இத்தனை பேரை நினைவு வைக்க முயன்றால், அப்புறம், ஒருவர் பெயர் கூட ஞாபகம் இராது. என்னையே மறந்தாலும் மறந்து போவாய்...!" என்று முறுவல் செய்தான்.

கூடச் சேர்ந்து முறுவலித்துவிட்ட, அதற்காகத்தன் மீதே கோபம் கொண்டாள் தாரிணி. இவன் பெரிய மகாராஜா, அவன் சிரித்துவிட்டான் என்று அவளும் அகமகிழ்ந்து, இளித்துவிட வேண்டுமா?

அடுத்து ஒருவரை, மனுபரதன் அறிமுகப்படுத்தும் வரை காத்திருந்து விட்டு "இப்போது, நீங்கள் ஒருவரை அறிமுகம் செய்தீர்களே, இவரை ஞாபகம் வைத்துக் கொள்ள

வேண்டுமா? வேண்டாமா?" என்று சாதுவாய் வினவினாள்.

"கஷ்டப்பட்டு நினைவு வைத்துக் கொள்ள வேண்டியது இல்லை" என்றான் அவன், சிறு யோசனையுடன்.

"பின்னே, மெனக் கெட்டு, அறிமுகப்படுத்துவானேன்?" என்று, புருவம் உயர்த்திக் கேட்டாள் அவள்.

மீண்டும் முறுவலித்து, "அறிமுகப்படுத்தாவிட்டால், அவர் மனம் வாடுமே! இவர்களுக்கு, நான் முக்கியம் அல்ல போலிருக்கிறதே, என்று எண்ணி வருத்தப்பட மாட்டாரா?" என்று, அவன் பதில் கேள்வி கேட்கவும் வாயை மூடிக் கொண்டிருந்திருக்கலாமே, என்றிருந்தது, தாரிணிக்கு.

அவனது கேலிப் பார்வையைத் தவிர்ப்பதற்காகச் சுற்றிலும் கவனத்தைச் செலுத்த முயன்ற தாரிணிக்கு, அதுவும் வேதனையாகவே முடிந்தது.

சுற்றிச் சுற்றி எத்தனை மனிதர்கள்!

ஆணும் பெண்ணுமாய், அத்தனை பேரிலும், அவளுடையவர்கள் என்று யாருமே இல்லை.

ஒருவேளை, தனியாக,அவன் கீழ் வந்து மாட்டிக் கொண்டிருப்பதைத் தாரிணி நன்றாக உணரவேண்டும் என்பதற்காகத்தான் இந்த வரவேற்பையே, மனுபரதன் ஏற்பாடு செய்திருப்பானோ?

சேச்சே! நொந்த மனம் என்னவெல்லாம் நினைக்கிறது. மஞ்சரியை மணந்திருந்தாலும் இந்த வரவேற்பு நடந்துதான் இருக்கும் என்றும் உடனே நினைத்தாள்.

இது, இவர்கள் பெருமை காட்டும் இடம். 'எனக்கு எவ்வளவு பலம், சொந்தம் பந்தம் இருக்கிறது பார்த்தாயா என்று, மற்றவர்களுக்கு அறிவிக்கும் வாய்ப்பு! விடுவார்களா, என்று வெறுப்புடன் எண்ணினாள்.

பார்ப்பது, நினைப்பது எல்லாமே, தாரிணியை மேலும் சோர்வடையவே செய்தது.

நுனி நாக்கால், ஆங்கிலம் பேசியபடி வளைய வந்த மாமியார், "காதல்! இரண்டு பேரும் காதலிக்கிறோம் என்று வந்து நின்றார்கள். வயது வந்த பிள்ளைகள், பண்ணிக் கொள்ளுங்கள் என்று விட்டோம்" என்று, ஒரு வைர ஒட்டியாணத்திடம் சொல்லிக் கொண்டிருந்தாள். "அந்தஸ்து, ஜாதி என்று, ஒரு மனப்பட்டவர்களைப் பிரிப்பது அநாகரீகம் என்பது, எங்கள் கருத்து."

ஒரு மனப்பட்டவர்களாம், இங்கே ஒரே ஒரு மனதின் பழி வெறிதான் இந்தத் திருமணம் என்று யாரிடம் போய் முட்டிக் கொள்வது?

"காதல் பறவைகள்!" என்றார், மாமனார். "இரண்டு நாள் முன்புதான் எங்களுக்கே தெரியும்! அப்படிக் கமுக்கமாய், இரண்டு பேரும் திட்டம் போட்டிருக்கிறார்கள்! முதலில் எனக்குக் கொஞ்சம் யோசனைதான். ஆனால் மனசு ஒட்டிவிட்ட பிறகு, தலையிடக் கூடாது என்று, விட்டுவிட்டோம்" என்று மாமனார், யாரிடமோ அளந்து கொண்டிருந்தார்.

விளக்கங்கள் எல்லாத் தரப்பினருக்குமே தேவைப்-பட்டது பெருமையோடு கொடுத்தார்கள்.

கேட்டுக் கொண்டவர்கள், வியப்போ, உற்சாகமோ, குறுகுறுப்போ, அவரவர் இயல்புக்குத்தக்க உணர்ச்சியைக் காட்டி, வாழ்த்திவிட்டுப் போனார்கள். மேடையை விட்டு இறங்கியதுமே, அவர்கள் பேச்சு மேடையில் நின்றவர்களுக்குக் கேட்காது என்ற எண்ணத்தில், அவரவர் விருப்பப்படி வம்பளந்தார்கள்.

விருந்தினர் வரவர, வரவேற்று உட்கார வைப்பதும்,

உண்ண அனுப்புவதும், விளக்கம் சொல்வதுமாக இருந்த மற்றவர்கள் காதில், இந்த வம்புப் பேச்சு விழுந்திராதோ, என்னவோ, வெறும் வணக்கம் தெரிவிப்பது தவிர, வேறு வேலையற்று நின்ற தாரிணிக்குப் பெரும்பான்மைப் பேச்சு, தெளிவாகவே கேட்டது.

அது மட்டும் அல்ல. புதியவளாக வந்து நிற்கும் தன்னைப் பற்றி, இந்த மேல்தட்டு மனிதர்கள் என்ன கூறுகிறார்களோ, என்ற தவிப்பும், அதை அறிந்து கொள்ளும் ஆவலுமாக, அவளது செவிப் புலனும், சற்று அதிகப்படிக் கூர்மையுடன் இயங்கியிருக்கலாம்.

அவளது காதில் விழுந்த அளவில் பல மூத்த தலைமுறையினர், பிரேமாதேவியின் இழப்பில், மகிழ்ச்சியே அடைந்தார்கள். 'இந்தப் பிரதேசத்துக்கே, அவள் சொல்தான், இனி வேதம் என்று பீற்றினாளே, என்ன செய்யப் போகிறாளாம்?' என்று சிரித்தார்கள்.

ஏற்கனவே, பிரேமாதேவியைப் பார்த்திருந்ததால், தாரிணிக்கு, அவளிடம் பரிதாபம் உண்டாகவில்லை.

ஆனால், இந்தத் திருமணம், நந்தனின் திட்டமாக இருக்கும் என்று ஒருவர் கூறவும், அவள் திகைத்துப் போனாள். மஞ்சரி பாவம் அப்பாவிப் பெண்ணாம். அவளை நந்தகுமார் கணக்குப் பண்ண, மனுபரதனைத் தாரிணி வலைபோட்டுப் பிடித்து விட்டாளாம்! அண்ணன் தங்கை, இருவரும் சேர்ந்து திட்டமிட்டு, அவரவர் எதிர்காலத்தை, உறுதி செய்து கொண்டார்களாம்.

திட்டம் அண்ணன் தங்கை இரண்டு பேரும் போட்டதாமா?

என்ன அநியாயம்?! இருக்கும், இருக்கும் என்று பலர் ஒத்து ஊதுவதும் கேட்டது.

கொதிப்பை அடக்குவது, தாரிணிக்குப் பெரும்பாடாகிப் போயிற்று.

இந்த அழகில், "முகத்தைச் சிரித்தாற்போல வைத்துக் கொள்" என்று,அவள் காதருகே லேசாகக் குனிந்து, முணுமுணுத்தான், மனுபரதன். "பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்கள்?"

என்ன நினைத்தால் எனக்கென்ன என்று கத்த வேண்டும் போல, ஒரு வேகம் தோன்றவும், இதற்கு மேல் இங்கே நிற்பது ஆபத்து என்று எண்ணித் தாரிணி திரும்பி நடந்து விட்டாள்.

ஆனால், சொல்வதறியாமல் மனுபரதன் திண்டாடட்டும் என்று தைரியமாக விட்டுவிடவும், அவளால் முடியவில்லை. அண்ணனைக் காப்பாற்றுவதற்காக, இவ்வளவு தூரம் சகித்துவிட்டு, இப்போது, விடுவதா? அது, முக்கால் கிணறு தாண்டியவனின் முயற்சி போல ஆகி விடாதா?

எனவே, அருகில் நின்ற மாமியாரிடம், "இந்த வீடியோ 'லைட்'டினால், லேசான தலைவலி, முகம் கழுவி விட்டு வருகிறேன்" என்று கூறி குளியல் அறைப்பக்கம் திரும்பி நடந்தாள்.

"கொஞ்சம் பொறு" என்று, கூடவே நடந்தபடி, "முகத்தைக் கழுவாதே, மேக்கப் கலைந்து விடும், மல்லிகை சென்ட் கலந்த யூகலிப்டஸ் ஆயில் தருகிறேன். வலிக்கும் இடத்தில் லேசாக ஒற்றிக் கொள். வலி குறைந்து விடும்" என்று, கைப்பையிலிருந்து ஒரு சிறுபாட்டிலை எடுத்துக் கொடுத்து அனுப்பி வைத்தாள், மாமியார்.

அந்த அம்மாள் கரிசனமாய்ச் செய்ததுதான். ஆனால், ஏதோ ஒரு வகையில் தாரிணியின் மனம் உடைய, அது காரணம் ஆயிற்று.

*அவளது வலியைப் பற்றி ஒன்றுமில்லை. ஆனால், மேக்கப் கலையாதிருப்பது தான் முக்கியம்!*

*மகனுக்கும், அதே கருத்துதான். அவளது மனவலியைப் பற்றி, அவனுக்கு அக்கறை கொஞ்சம் கூட இல்லை. ஆனால், அடுத்தவர் முன் அவனது கௌரவம் குறைந்துவிடக் கூடாது! அதுதான், அவனுக்கு மகா முக்கியம்!*

*அவளுடைய அண்ணன் மட்டும் இங்கிருந்தால், தலைவலி என்றதற்கே, எப்படித் துடித்துப் போயிருப்பான்? முன்னால் ஈ யென்று இளித்து விட்டுப் பின்னால் சென்று என்னென்ன பேசுகிறது, இவர்கள் கூட்டம்? இந்தக் கூட்டத்தைப் போலத்தானே இந்தக்குடும்பமும் இருக்கும்? இவர்களிடம் - முக்கியமாக, மனுபரதனிடம் அவள் என்ன பாடு படப்போகிறாளோ?!*

*யாருக்கும் சந்தேகமே ஏற்படாத வகையில், அவளுக்கும் அவனுக்கும் திருமணத்தையே நடத்தி முடித்து விட்டானே! இன்னும் என்னதான் செய்ய மாட்டான்?*

*அவளை இப்படித் தவிக்க விட்டுவிட்டு. நந்தன் எங்கே போனான்? அவனைக் கண்ணால் பார்த்தாலே, எவ்வளவோ தைரியமாக இருக்குமே!*

*அவசரமாகக் குளியலறைக் கதவைச் சாத்திக் கொண்டு, 'அண்ணா, அண்ணா என்று, விக்கி விசும்பி அழுது தீர்த்தாள். இப்படியே நின்று, அழுது கொண்டு இருக்க முடியாது, திரும்பிச் சென்று மனுபரதனோடு நின்றாக வேண்டும் என்பது ஒருவாறு மனதில் உறைக்க,அதன் பிறகுதான், மேக்கப் பற்றி மாமியார் சொன்னது தாரிணிக்கு நினைவு வந்தது.*

*மேக்கப் நிச்சயம் நன்றாகக் கலைந்து போயிருக்கும்,*

முகம் புதைத்து அழுத, பாத் டவலில் படிந்திருந்த கண்மை, உதட்டுச்சாயக் கறைகளே அதைத் தெளிவாக எடுத்துச் சொல்லின.

இந்த முகத்தோடு, அங்கே எப்படித் திரும்பிப் போவது?

செய்வதறியாமல், தாரிணி ஒரு கணம் மிரண்டு போனாள்!

கதவை, மென்மையாகத் தட்டும் ஓசை வேறு கேட்கவும், அப்படியே நடுங்கி விட்டாள் எனலாம்.

மாமியாரோ, கணவனோ!

யூகலிப்டஸ் ஆயில் கண்ணில் பட்டுவிட்டதாகச் சொல்லி, சமாளிக்க வேண்டியதுதான் என்று முடிவு செய்து கொண்டு, குளியலறைக் கதவைத் திறந்தால், அங்கே, சற்றும் அறிமுகமற்ற ஒரு பெண் நின்றாள்.

தாரிணியைப் பார்த்து முறுவலித்து, “எனக்கு, மூன்று மாதங்களுக்குப் பிறகுதான் தொடங்கியது. உங்களுக்கு இன்றே தொடக்கவிழா போலத் தெரிகிறதே!” என்றாள் இரக்கம் கலந்த கேலிக் குரலில்.

தாரிணி புரியாமல் விழித்தாள்!

தொடக்க விழா பற்றிப் பேசியவளும் இளவயதுப் பெண்தான். சற்று அதிகப்படி அலங்காரம் என்றாலும், பார்ப்பதற்கு, நன்றாகத்தான் இருந்தாள். அவளது கண்களில் குடியிருந்த சலிப்பு மட்டும் இல்லையென்றால், அவளை, அழகியென்றே சொல்லலாம்.

தாரிணி, மலைத்து நோக்கவும், “இந்தக் குடும்பங்களுக்குள் அல்லாமல், வெளியிலிருந்து வந்து, திருமணத்தின் மூலம் இணைந்த இன்னொருத்தி நான். எனக்குத் திருமணமாகி, ஆறு மாதங்கள் ஆகின்றன. இந்த

நரகத்திலிருந்து, எப்போது வெளியேறுவோம் என்று, நான் நினைக்கத் தொடங்கி, நாலு மாதங்களும், அதற்காகப் போராடத் தொடங்கி மூன்று மாதங்களும் ஆகின்றன. என் பெயர், சுமனா. ஆனால், இப்போதைக்கு, என் கதை இவ்வளவு போதும். முதலில் உங்கள் முகத்தைச் சீர் செய்வோம். நானே செய்து விடட்டுமா? இந்த மாதிரி, அழுது கலைந்த ஒப்பனையை, வெகு விரைவாகச் சீர்ப்படுத்துவதில் நான், மிகவும் திறமைசாலி, ஏனெனில், 'சித்திரமும் கைப்பழக்கம்' அல்லவா? என்று சிரித்தாள் அவள்.

## 13

சுமனாவின் பேச்சு, தாரிணிக்கு அவளை அறிந்து கொள்ளும் ஆர்வத்தை ஏற்படுத்திய போதும், அவளது அவசரத் தேவை, அலங்காரம்!

எனவே, ஒரு முறுவலோடு, "உங்கள் பேச்சு உண்மை என்றால், உங்கள் உதவியைச் சீக்கிரம் தொடங்குங்கள்" என்று கேட்டுக் கொண்டாள். "ஏனென்றால், எந்த வினாடியும் அவர்கள் என்னைத் தேடி வரலாம்"

மறுபேச்சின்றி, தன் கைப்பையில் இருந்த அலங்காரச் சாதனங்களைக் கடை பரப்பிய சுமனா, வேகமாக வேலையில் இறங்கினாள்.

சொன்னது போலவே, அவள் வேலையை முடிக்க இரண்டு நிமிஷங்கள் கூட ஆக வில்லை. அவ்வளவு விரைவான வேலை!

"கண்ணின் சிவப்பை ஒன்றும் செய்ய முடியாது. அவகாசம் இருந்தால்... ஊகூம். அதுதான் இப்போது இல்லையே! வீடியோ லைட் என்று நீங்கள் முன்பு விட்ட

சரடையே, தொடர்ந்து பிடியுங்கள், தலைவலி விடவே இல்லை என்று சாதித்து விடுங்கள். இப்போது, கிளம்பலாமா?" என்று, தன் பொருட்களை மீண்டும் மூட்டை கட்டினாள்.

வரவேற்பு ஹாலை நெருங்குகையில், தாரிணியின் கால்கள் சற்றே தயங்கவும், "பயப்படாதீர்கள், தாரிணி, இத்தனை பேர் நடுவில், உங்களை யாரும் கடித்துக் குதறிவிட முடியாது. கூட்டம் என்பதே பாதுக்காப்புதான். அப்புறம் ஆண்களின் அராஜகத்துக்காகத்தானே, தனிமை என்று, இருப்பதே!" என்று சுமனா பெருமூச்செறிந்தாள்.

உடனேயே அவள் தலையை உலுக்கிக் கொள்வதைக் கவனித்துவிட்டு, பேச்சை மாற்றும் நிமித்தமாக, "என் பெயர் உங்களுக்குத் தெரியுமா?" என்று, தாரிணி விசாரித்தாள்.

"ம்ம்ம். நிச்சயமாக! இன்றைக்கு, இந்த மலைவளம் பகுதியில், மிகவும் பிரசித்தம் உங்கள் பெயர் தான்! என் பெயரும் உங்களுக்குச் சொல்லப்பட்டதுதான். ஆனால் இன்று அறிமுகப்படுத்தப்பட்ட பல நூறு பெயர்களில், என்னது நினைவிருப்பது, அசாத்தியம்தான்" என்று சுமனா கூறவும், தாரிணிக்கு ஒரு மாதிரியிருந்தது.

"மறந்ததற்கு, சாரி சுமனா, மன்னித்து விடுங்கள்" என்றாள் மெல்லிய குரலில்.

"மன்னிப்பதற்கு, ஒரே ஒரு நிபந்தனை. இந்த 'ங்க'ளை, இனி விட்டுவிட வேண்டும். 'வா போ' என்று சொல்ல வேண்டும். ஏனென்றால், நான் இனிமேல், உன்னிடம் அப்படி ஒருமையில்தான் பேசிப்பழகப் போகிறேன். ஆகா! பரதன் பிரதர் உன்னைத் தேடத் தொடங்கிவிட்டார் போலத் தெரிகிறதே. பார்வையில் கடுப்பைப் பார். நான் சொன்னது நினைவிருக்கட்டும். தாரிணி, இங்கே, உன்னை

யாரும் கடித்துத் தின்றுவிட முடியாது..." என்று அவள் முடிக்கையில், இருவரும் மணமக்களுக்குரிய மேடையை, நெருங்கியிருந்தனர்.

தாரிணியுடன் கூடவே மேடையில் ஏறி, "என்ன பரதன் பிரதர், அதற்குள், தாரிணியைத் தனியே தவிக்க விட்டுவிட்டீர்களே! புதுப்பெண்டாட்டித் தலைவலி, என்றால், ஊரில் உள்ள டாக்டர்களையெல்லாம், கூப்பிட்டுக் காட்டி, மருந்து வாங்கிக் கொடுத்துப் படுக்க வைத்து, வெண்சாமரம் வீசித் தூங்க வைக்க வேண்டாமா? அதை விட்டுத் தனியே, முகம் கழுவி விட்டு வரச் சொல்லி விட்டீர்களே!" என்று வேடிக்கையாக, அவன் கையில் தட்டிவிட்டு, மேடையிலிருந்து மறுபுறமாக இறங்கிச் சென்றாள்.

"இந்தச் சனியனை எங்கிருந்து பிடித்தாய்?" என்று, மனுபரதன் எரிச்சல் உள்ளடக்கிய குரலில் கேட்டான்.

ஆச்சரியத்துடன், அவனைப் பார்த்தாள் அவள். பார்க்கும்போதே, சுமனா சொன்னது நினைவு வரவும், "சனியனா? அந்த பெயரில் யாரையும் எனக்குத் தெரியாதே!" என்று, அப்பாவியாய் விழி விரித்துச் சொன்னாள்.

தன்னை மீறி முறுவலித்துவிட்டு, "சுமனாவைத்தான் சொன்னேன்..." என்றவன் சுற்றிலும் பார்த்துவிட்டு, "விருந்தினர் வருவது, கிட்டத்தட்ட நின்று விட்டது. அதனால், சற்றுநேரம் உட்காரலாம்" என்று அவளை உட்காரச் சொல்லித் தானும் அமர்ந்தான்.

மீண்டும் ஒருதரம், அவன் சுற்றுமுற்றும் பார்த்ததுமே, இவன் சுமனாவைப் பற்றிப் பேசப் போகிறான், அதுவும் நல்லவிதமாக அல்ல என்பது, தாரிணிக்குப் புரிந்து போயிற்று.

எனவே, "இந்த சுமனாவின் தோழமை, உனக்கு நல்லதில்லை, தாரிணி. அதனால் அவளோடான பழக்கத்தை, மேலே தொடர வேண்டாம்" என்று மனுபரதன் சற்று அழுத்தமான குரலில் கூறியது, அவளுக்கு ஆச்சரியமாக இருக்கவில்லை.

ஆனால், அவள் என்னவோ, மனிதர்களை அறியத் தெரியாத முட்டாள் என்பது போலப் பாவித்து, அவன் உத்திரவிட்டது, ஆத்திரமுட்ட, "ஏன்?" என்று கேட்டாள்.

"அதுதான் சென்னேனே, அவளோடு பழகுவது நல்லதில்லை என்று...!"

"அதுதான் ஏன் என்று கேட்டேன்" என்றாள் அவள் ஒரு சவால் பார்வையுடன்.

"முகத்தில் எதையும் காட்டாதே!" என்றான் அவன் அடிக்குரலில். 'யாராவது எங்கிருந்தாவது. நம்மைக் கவனித்துக் கொண்டிருக்கக்கூடும். அவர்களுடைய வம்பு வாய்க்கு அவல் போட வேண்டாம். என்று நினைக்கிறேன்" என்று மீண்டும் ஒருதரம் அவளை அசடாக உணரவைத்துவிட்டு, "சுமனா, சுரேந்திரன் திருமணத்துக்கு நானும் உதவியிருக்கிறேன். ஆனால், அது எவ்வளவு பெரிய தப்பு என்று, வெகு சீக்கிரமே, அவள் நிரூபித்து விட்டாள்! பாவம்! சுரேன் வாழ்க்கையை நரகமாக்கிக் கொண்டிருக்கிறாள். அவளால், நம் வாழ்வும் பாதிக்கப்பட்டுவிடக் கூடாதே, என்று தான் சொல்லுகிறேன், அவளோடு பழக வேண்டாம்!" என்று முடித்தான்.

என்னவோ, புதிதாக நரகம் ஆகப் போவது போலப் பேசுகிறானே!

சுருசுருவென்று ஏறிய கோபத்தை, முகத்தில் காட்டாமல் மறைக்க முயன்றபடி, அதாவது, இப்போது உதடுகளைக்

காதுவரை இழுத்து வைத்துக் கொண்டு, கேட்டாள் அவள்.

பிறர் கண்ணுக்கு முகத்தை நல்லபடியாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றானில்லையா? சிரித்த முகமாய்ப் பேசுகிறாளாம்!

புன்னகை செய்தான், மனுபரதன். பிறகு, "நரகத்தைச் சொர்க்கமாக்கும் முயற்சியில், தடை ஏற்பட்டு-விடக்கூடாது என்பதுதான் என் நோக்கம்" என்றான், அமர்ந்த குரலில்.

"நரகமாக்கியவர்களே, இதைச் சொல்ல, அதைக் கேட்டுக் கொண்டிருப்பதுதான் சோகம்!" என்றாள் அவள் பதிலுக்கு.

"பாதிப்பு தொடங்கிவிட்டது என்று தோன்றுகிறது. ஆனால், எல்லாவற்றுக்கும் அடிப்படை, உன் அண்ணன் என்பதை மறந்து விட வேண்டாம்." என்றவன் "சில கடைசிப் பறவைகள் வருகின்றன பார்" என்று, தான் எழுந்து அவளும் எழுவதற்காகக் கையை நீட்டினான்.

அவன் கையைப் பிடித்துக் கொண்டு எழுந்திருக்கத் தாரிணிக்கு விருப்பம் இல்லைதான். ஆனால், நீட்டிய கையை ஒதுக்கிவிட்டுத் தானாக எழுவது, தப்பாகத் தோன்றும் என்பதால், அவன் கையில், தன் கையை வைத்தாள், அவள்.

எல்லாரையும் போல, அப்போது வந்தவர்களும், அவர்களைப் பொருத்தமான ஜோடி என்று, புகழ்ந்து விட்டுப் போனார்கள்.

இது ஒரு ஐஸ்! ஒருவர் பாக்கியில்லாமல் சொல்லியாயிற்று, இப்படிச் சொன்னால், உச்சி குளிரும் என்று நினைத்தார்கள் போல!

அல்லது, மெய்யாகவே இருவருக்கும் தோற்றப் பொருத்தம் இருக்கிறது தானோ?

ஓரக்கண்ணால் அருகில் நின்றவனைப் பார்த்த தாரிணி, சற்றுத் திகைத்தாள்!

இவ்வளவு கம்பீரமா? இவனுக்குப் பொருத்தம் என்றால், அது பெருமைப்பட வேண்டிய விஷயம் தான்!

'கூட்டம் பாதுகாப்பு' என்று, சுமனா சொன்னதின் பொருளைத் தாரிணி விரைவிலேயே உணர்ந்தாள்.

திருமண இரவின் தனிமையில், கதவைத் தாளிட்டு விட்டு, அவளை நோக்கி வந்தவனை வெறித்துப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தவளுக்கு, "ஆண்களின் அராஜகத்துக்குத் தனிமை' என்று, சுமனா தொடர்ந்து கூறியதும், அநியாயமாய் நினைவு வந்தது.

கட்டாயத் திருமணம் செய்த இவனைக் கணவனாக, அவளால் எப்படி ஏற்க முடியும்?

முகமெல்லாம் கண்ணாக, வட்டமாய் விரிந்த விழிகளால் வெறித்தவளின் எதிரே வந்து சற்று நேரம் அவளையே பார்த்துக் கொண்டு நின்றான், மனுபரதன்.

பிறகு, "இன்றைய நிகழ்ச்சிகளால், பெரிதும், அலுத்துக் களைத்துப் போயிருப்பாய், களைப்பு தீரச் சரியான மருந்து, நல்ல தூக்கம்தான். போய்ப்படுத்து, நிம்மதியாகத் தூங்கு" என்று கையை நீட்டி, அவள் கன்னத்தைத் தட்டிவிட்டு. அந்த அறையின் பக்கவாட்டிலிருந்த இன்னோர் அறைக்குள் சென்று, கதவைச் சாத்திக் கொண்டான்.

# 14

மறுநாள் காலையில் எழுந்து, குளித்து விட்டு, என்ன செய்வது என்று, புரியாமல் தாரிணி, அந்த அறையிலேயே உட்கார்ந்திருந்தாள்.

சற்று நேரத்தில், மனுபரதனும், அங்கே வந்து சேர்ந்தான்.

அவனது 'குட்மார்னிங்' கிற்கு, அவளும் பதில் வணக்கம் சொல்ல, அதன் பின் அங்கே அமைதி நிலவியது.

அவளது தூக்கம் பற்றி, அவன் கேட்க, அதற்கும் உரிய பதில் வந்தது.

அடுத்த மௌனத்தின் பின், "சின்னாத்தா சொன்னது, சரிதான்..." என்றான் மனுபரதன்.

இந்த நேரத்துக்குப் பொருத்தமாக, அந்தச் சின்னாத்தா, என்ன சொல்லியிருக்க முடியும் என்று யோசித்த தாரிணி, கேள்வியாய், அவனை நோக்கினாள்.

"சின்னாத்தா என்ன சொன்னார்கள் என்று, வாயைத் திறந்து கூடக் கேட்கலாம்" என்று கிண்டலாகக் கூறி விட்டு, "நாலைந்து நாட்களுக்குத் தேவையான துணிமணிகள் எல்லாம் எடுத்து வைத்துக் கொள்" என்பதோடு, நிறுத்திக் கொண்டான்.

"அவர்கள் என்ன சொன்னார்கள்?" என்று, வேறு வழியின்றிக் கேட்டாள் தாரிணி.

"எவர்கள்?"

"உங்கள் சின்னாத்தா." என்றாள் அவள் எரிச்சலை அடக்கிக் கொண்டு.

"எனக்கு மட்டும் அல்ல. என் மனைவியான உனக்கும், இனி, அவர்கள் சின்னாத்தாதான். நினைவிருக்கட்டும்" என்று எச்சரித்தான், அவன்.

"இன்னும் உங்... வந்து.. சின்னாத்தா என்ன சொன்னார்கள் என்று சொல்லவில்லையே!"

"இது பரவாயில்லை" என்றான். அவன் சற்றே, ஏளனம் கலந்த குரலில்.

ஏன் இந்த ஏளனம் என்று அவள் யோசிக்கும்போதே, "இங்கேயே இருந்தால், ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளவே முடியாது. அதனால், உன்னை எங்காவது கூட்டிப் போக வேண்டும் என்றார்கள். அது சரிதானே? இங்கே, வேளைக்கு உணவு சொன்னால் வந்து விடும். ஆண் வேலையைப் பார்க்கப் போவான். பெண்... அவள் விருப்பம் போலப் பொழுதைப் போக்குவாள். டின்னர், க்ளப், என்று ஒருவர் முகம் அடுத்தவர் பாராமலே, பாதி இரவு வரை நேரம் போய் விடும். அப்புறம், படுக்கை, தூக்கம், இது என்ன வாழ்க்கை? அதனால், இந்த வலையில் மாட்டிக் கொள்ளாமல், முதலிலேயே உன்னைத் தனியாக எங்காவது கூட்டிப் போகச் சொன்னார்கள்." என்றான் அவன்.

தேனிலவு! எழுபதுக்கும் மேல் வயது என்றானே! இந்த முதிய பிராயத்தில், வாயை மூடிக் கொண்டு சும்மா இருக்கக்கூடாதா? சின்னஞ்சிறுசு மாதிரித் தேனிலவு ஐடியா கொடுக்க வேண்டுமா? அண்ணன் வரும் வரை, நேற்றுப் போலவே கழிந்து விட்டால், எவ்வளவோ நிம்மதியாக இருக்குமே!

எதுவும் சொல்லப் பிடிக்காமல், தாரிணி சும்மா நின்ற போது, அவனே தொடர்ந்து பேசினான். "தேனிலவு! ஆனால், வித்தியாசமான தேனிலவு" என்றான்.

என்ன வித்தியாசம் என்று கேட்கக் கூடப் பிடிக்க-வில்லை, அவளுக்கு!

பெரிதாக என்ன இருந்துவிடப் போகிறது? இவன்

வட்டத்தில் எல்லோரும் ஐரோப்பா சென்றால், இவன் அந்தமானுக்கு அழைத்துச் செல்லக் கூடும் அவ்வளவு-தானே?

தேனிலவு பற்றிக் காலை உணவின்போது தன் பெற்றோரிடம் மனுபரதன் சொன்னான்.

“தேனிலவா?! நல்ல ஐடியா! கட்டாயம் போய் வாருங்கள்” என்றார்கள் இருவருமே.

வெளிநாடாகத்தான் இருக்கும் என்று எண்ணி, “பாஸ்போர்ட், விசா எல்லாம் தயார் பண்ணிவிட்டாயா?” என்று விசாரித்தார் மகேந்திரன்.

“நிச்சயமாகப் பண்ணியிருப்பான்” என்றாள் தாயார்.

அதற்கு மேல், பெற்றவர்கள் இருவருமே, மகனின் தேனிலவில் ஆர்வம் காட்டவில்லை!

ஒருவேளை, அப்படி ஆர்வம் காட்டுவது, நாகரீகம் இல்லையோ என்ற சந்தேகம்கூட, தாரிணிக்கு உண்டாயிற்று, மற்றபடி, எங்கே போகிறாய் என்று கூடவா விசாரிக்க மாட்டார்கள்.

“அதெல்லாம் தேவையில்லை, அப்பா. இங்கே, பக்கத்தில்தான் போக இருக்கிறோம்” என்று முடித்து விட்டான் மனுபரதன்.

நல்லவேளையாக, இவர்கள் அதி நாகரீகவாதிகள்! தானாகச் சொல்லாததைத் தூண்டித் துருவமாட்டார்கள்! என்ன ஏது என்று, தொண தொணப்பவர்களாக இருந்து, அவளிடம் ஏதாவது கேட்டு வைத்தால், தாரிணி, திணறித் திண்டாடிப் போயிருப்பாள்!

காலை உணவுக்குப் பிறகு மனுபரதன், அவளைத் தன் சின்னப் பாட்டியிடம் அழைத்துச் சென்றான்.

தாரிணிக்கு அந்த முதிய பெண்மணியைப் போய்ப் பார்க்க, அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

என்ன இருந்தாலும், தாலி கட்டாமலே ஒருவருடன் இணைந்து வாழ்ந்தவள்தானே!

சட்டென, அவளுக்கு ஒன்று உறுத்தியது. சின்னாத்தா, தாலி கட்டாமலே, மனுபரதனுடைய தாத்தாவுடன் சேர்ந்து வாழ்ந்திருக்கிறாள். ஆனால், பேரன் கையால் தாலியை வாங்கிவிட்ட பிறகும், அந்தப் பேரனோடு தாரிணி, வாழ்வில் இணையவில்லை!

ஆனால், இந்த அம்மாள், அந்த வாழ்வை விரும்பி ஏற்றுக் கொண்டவள்; தாரிணி அப்படியில்லையே! நாலு நாட்களுக்கு முன்பாக, மனுபரதனை அவள் பார்த்தது கூடக் கிடையாது. அத்தோடு, கட்டாயக் கல்யாணம் செய்த ஒருவனோடு, கூடி வாழ்வது எப்படி?

தாரிணி தன்னை நியாயப்படுத்திக் கொண்டாள்.

இவர்கள் இருவரும் சின்னாத்தா வசித்த தோட்ட வீட்டுக்குச் சென்றபோது மகேந்திரன் அங்கிருந்து வெளியே வந்து கொண்டிருந்தார்.

மகனைப் பார்த்ததும், "சின்னாத்தாவிடம் சொல்லிக் கொள்ள வந்தாயா? அலுப்புப்படுத்தாமல், முடிந்த வரையில் சீக்கிரம் திரும்பிவிடு. நான் பேசும்போதே, பாவம் பாதியில் தூங்கி விட்டார்கள்! அத்தோடு வேலையும் நிறைய இருக்கிறது. எப்போது கிளம்புகிறாய்?" என்று விசாரித்தார்.

"இன்றைக்கே" என்றான் மனுபரதன். "வேண்டிய-தெல்லாம் எடுத்து வைத்ததும், கிளம்பி விடுவோம். அலுவலகத்தில், ஐந்து நாள் ஜி.எம்.மைப் பார்த்துக் கொள்ளச் சொல்லியிருக்கிறேன். தேவைப்பட்டால்

செல்லில் என்னோடு பேசிக் கொள்வார். அதனால் நீங்கள் அதிகப்படியாக எதையும் செய்ய வேண்டாம்."

"சரி சரி," என்று விட்டுப் பெற்றவர் சென்றுவிட, மனைவியை அழைத்துக் கொண்டு, மனுபரதன் உள்ளே சென்றான்.

அம்மா, அப்பா என்று கிடையாது, ஆயினும் அண்ணனும் தங்கையுமே எவ்வளவு கலகலப்பாகப் பேசிக் கொள்வார்கள்! பெற்றோர் இருக்கும்போது, அவர்களும்கூட அப்படித்தான். கேலியும் கிண்டலுமாக, ஒரே சிரிப்பாக இருக்கும் என்பான், நந்தன். இங்கானால், எல்லோரும் இருந்தும் கூட, வார்த்தைகளை, எண்ணியல்லவா பேசுகிறார்கள்! சகிக்கவில்லை என்று இளப்பமாக எண்ணினாள், தாரிணி.

உள்ளே, திவானில், கண்மூடிச் சாய்ந்திருந்தாள், சின்னாத்தா.

உதட்டில் கைவைத்து எச்சரித்துவிட்டு, அவளுக்கு அடுத்த சோபாவைக் காட்டியபடி, ஒன்றில், ஓசையின்றி அமர்ந்தான் மனுபரதன்.

அவனைப் போலவே சத்தமின்றி உட்கார்ந்து சுற்றுமுற்றும் பார்த்தாள் தாரணி.

கணப்பு, கார்ப்பெட், குஷன்... காசால், வாங்கக் கூடிய, சுகம் எல்லாம் இருந்தது.

பணம் இருந்தால், ஒண்ட வந்தவர்களுக்குக் கூட எல்லா சுகங்களும் கிடைக்கும் போலும்!

அல்லது, இந்த சுகங்களுக்காகவே, ஒண்ட வருவார்களோ?

வற்றிச் சுருங்கிய சருமமும், தும்பையென வெளுத்த கேசமும், மெலிந்த மேனியுமாக, ஓய்ந்து கிடக்கும், இதே

பெண், ஒரு காலத்தில், இந்தப் பகுதிக்கே, ராஜா மாதிரி இருந்த ஒருவரைத் தன் பிடியில் வைத்திருந்தாள், என்றால் தாரிணிக்கு நம்பக்கூட முடியவில்லை!

அதைவிட ஆச்சரியம், மனைவியுடைய மகனும், பேரனும் ஒண்ட வந்தவளுக்கு மரியாதை தருவது!

ஒருவேளை, அவளுக்கு, மனுபரதனுடைய தாத்தா ரொம்பவும் நிறையச் சொத்தை எழுதி வைத்துவிட்டாரோ? இருக்கும், இருக்கும், ஆதாயமில்லாமலா, இவர்களெல்லாம், ஆற்றோடு போவார்கள்?

தாரிணி தன் போக்கில், இந்த வீட்டாரைப் பற்றிக் கொஞ்சம் மட்டமாகவே எண்ணமிட்டுக் கொண்டு இருக்கும்போதே சின்னாத்தா சிங்காரி அம்மாள் கண்விழித்தாள்.

கண் எதிரே வீற்றிருந்த மனுபரதனைப் பார்த்ததும், அவள் முகம் மலர்ந்தது.

உண்மையான மகிழ்ச்சி!

சிறு குழந்தையாக இருந்தால் 'என் கண்ணே' என்று, வாரியெடுத்து அணைத்துக் கொள்ளும் பாசக்கனிவு! இது, தாரிணிக்குப் பொய்யாகத் தோன்றவில்லை. அதுவும், தூங்கி எழுகையில், கண் விழிக்கும்போதே எப்படி, இப்படி நடிக்க முடியும்?

நடிப்பாயிருக்கும் என்று அன்று கூறியதுபோல, இப்போது,அவளால் நினைக்க முடியவில்லை.

முன் தினம் திருமணக் கோலத்துடன் வணங்க வந்தபோது கூட, முதியவளின் கண்ணீரைத் தாரிணி உண்மையென்று எண்ணவில்லைதான். இந்த வயதிலும் என்ன நடிப்பு, என்றுதான் எண்ணினாள். ஆனால், இப்போது, அந்த எண்ணம் தப்பாகத் தோன்றியது.

ஒருவேளை தனக்குப் பிள்ளை இல்லை என்றாகி, மனுபரதனையும் குழந்தையிலிருந்து பார்த்து வந்ததால், மெய்யான பாசம் கூட, ஏற்பட்டிருக்கக் கூடும்.

"ஏதாவது சாப்பிடுகிறீர்களா?" என்று கேட்டுவிட்டு அருகில் இருந்த மணியை அடித்தாள் முதியவள்.

"எனக்கு ஒன்றும் வேண்டாம்" என்றாள் தாரிணி.

"வயிறு 'டொம்' மென்றிருக்கிறதா? பரவாயில்லை. கொஞ்சம் பழச்சாறு குடிப்பதில், ஒன்றும் ஆகி விடாது. தேன், இஞ்சி, உப்பெல்லாம் கலந்து, ஒரு எலுமிச்சைச்சாறு தருவீர்களே, சின்னாத்தா, அதைக் கொண்டு வரச்சொல்லுங்கள், இவளுக்கும் நல்லது" என்று அவளுக்கும் சேர்த்துச் சொன்னான் மனுபரதன்.

மணியொலி கேட்டு வந்து நின்ற பெண்ணிடம் "தம்பி சொன்னதைக் கேட்டாயில்லையா? எடுத்து வா" என்று ஏவி விட்டு, மீண்டும் இவர்களிடம் திரும்பினாள்.

"வயிற்றுக்கு நல்லது, அம்மா. ஆனால், சுவை பிடிக்காவிட்டால், வைத்துவிடு" என்று தாரிணிக்கு இதமாகக் கூறிவிட்டு, "எப்போது கிளம்புகிறீர்கள்?" என்று பேரனிடம் விசாரித்தாள்.

"கிளம்ப வேண்டியதுதான், இதோ, என் வீட்டரசி அவள் சாமான்களை எடுத்து வைத்துத் தயாரானதும், காரில் ஏறிவிட வேண்டியதுதான்." என்று இலகுவாக பதிலுரைத்துப் புன்னகைத்தான் அவன்.

பழச்சாறு வந்தது.

இந்த வீட்டில், எதை உட்கொள்ளவும், தாரிணிக்கு, அவ்வளவாக விருப்பமில்லைதான். ஆனால், அவள் மனதை அறிந்தவன் போன்று, அழகிய வேலைப்-

பாடமைந்த அந்தத் தம்ளர்களில் ஒன்றை மனுபரதன், தானே எடுத்து அவள் கைகளில் கொடுத்தான்.

அவனது செய்கை சொன்ன சேதி அவளுக்குப் புரிந்துவிட, உள்ளூர மனம் குமுறிய போதும், அதை வெளிக்காட்டாமல், பழச்சாற்றை வாங்கி கொஞ்சம் பருகினாள்.

நன்றாகத்தான் இருந்தது, அதை மறுக்க முடியவில்லை. ஆனால், ஒரேயடியாக அவனுக்குப் பணியவும் பிடிக்காமல், "இதற்கு மேல், வயிற்றில் இடமில்லை, சாரி" என்று டம்ளரைக் கீழே வைத்துவிட்டாள்.

அவளுக்கும் சேர்த்துச் சப்புக் கொட்டிக் குடித்தான். அவன் கடைசிச் சொட்டு வரை குடித்து, முடித்து விட்டுத்தான் குவளையை வைத்தான்.

"பெண்டாட்டி பக்கத்தில் இருப்பதாலோ, என்னவோ, இன்று, பயங்கர ருசி சின்னாத்தா!" என்று வேறு சொன்னான்.

ஏதோ யோசனையாக அமர்ந்திருந்த சின்னாத்தா சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை.

அவளது சிந்தனைக்கு மதிப்புக் கொடுப்பது போல, மனுபரதனும், அவள் முகத்தைப் பார்த்தபடி அமைதியாக உட்கார்ந்திருந்தான்.

சற்றுப் பொறுத்து, பேரனை நிமிர்ந்து பார்த்தாள் பெரியவள், சற்றுக் கவலை ததும்பிய பார்வை!

மென்மையாக முறுவலித்தபடி, அவள் கையைப் பற்றித் தட்டிக் கொடுத்தான் பேரன் "என் மேல் நம்பிக்கை இல்லையா, சின்னாத்தா?" என்று, இதமாகக் கேட்டான்.

"இருக்கிறது தங்கம். ஆனால், உங்கள் கோபங்களும்

கர்வமும் கூட, உலகப் புகழ் பெற்றதாயிற்றே! அதுதான் கவலை!" என்றாள் அந்த அம்மாள்!

திகைப்புடன் நிமிர்ந்து பார்த்தாள், தாரிணி.

இந்தக் கிழவிக்கு ஏதேனும் தெரியுமா? அல்லது எல்லாமே தெரியுமா?

ஆனால், பெற்றவர்களிடம் கூடச் சொல்லாததை, இவளிடம் எப்படிச் சொல்லுவான்?

ஒருவேளை, சும்மாவே மனுபரதன் கோபக்காரனோ?

கர்வம் இருக்கிறது என்பது, அவளும் புரிந்து கொண்டிருப்பதுதான். அவன் கௌரவம், கௌரவம் என்பதற்கெல்லாம் பின்னே இருப்பது, இந்தக் கர்வம்தான்.

தான் என்கிற கர்வம்! 'என்னைப் போய் ஒருவன் ஏமாற்றுவதா? என் மதிப்பு என்ன ஆகும்'

இதுதானே, அவர்களது திருமணத்திற்கே காரணம்!

பரவாயில்லை! பாட்டியம்மாள் சரியாகவே கணித்து வைத்திருக்கிறாள்!

ஆனால், இது வெறும் கணிப்புதானா? பேரன் புலம்பினானா?

பேரனின் புலம்பல் தாங்காமல், இந்த சின்னவீட்டுக்-காரிதான் இந்தத் திருமண ஐடியாவே கொடுத்-திருப்பாளோ என்று கூடத் தாரிணிக்குத் தோன்றியது.

அப்படி ஏதாவது நடந்திருந்தால், என்ன நேர்ந்தாலும் வரட்டும் என்று இவர் கபத்தை நெரித்தே கொன்று விட வேண்டியதுதான்!

ஆத்திரத்தில் நினைத்தபோதும், அந்தக் கற்பனையில், தாரிணிக்கே சிரிப்பு வந்தது. அவளாவது, வயதான ஒரு பாட்டியம்மாவின் கழுத்தைப் பிடித்து நெறிப்பதாவது?

அதே அளவு அபத்தம்தான், இந்தம்மாவின் ஆலோசனைப்படி, மனுபரதன் தாரிணியை மணந்தான் என்பதும், ஓர் அபத்தத்தை அடிப்படையாகக் கொண்டு என்னவெல்லாம் எண்ணி விட்டாள்!

இந்த நாலு நாட்களும் அவளை, ரொம்பவேதான் பாதித்து விட்டிருக்கின்றன!

பையன் திமிர் பிடித்தவனாயிற்றே என்ற கவலையில், இந்தப் பாட்டி ஏதோ சொல்லுவதற்கெல்லாம், ஆயிரம் அர்த்தங்கள் கற்பித்துக் கொண்டு, கண்டபடி யோசிக்கத் தொடங்கி விட்டாளே!

சொல்லப் போனால், மனுபரதனைப் பெற்றவர்கள் போல இல்லாமல், அவன் குணத்தைப் பற்றி இந்த அம்மாள் கவலையேனும் படுகிறாளே!

அந்த அளவில் சந்தோஷப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான்.

இருவரும், சின்னாத்தாவிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினார்கள்.

தேனிலவுக்கென்று, மனுபரதன், அவளை அழைத்துச் சென்ற இடத்தைப் பார்த்ததும், தாரிணி, கொஞ்சம் அதிர்ந்து போனாள்.

அது, அவன் அவளை முதலில் கூட்டிப் போன, அதே மலைக்குடில்தான்.

அங்கே செல்லும் பாதையில் கார் போகத் தொடங்கியதுமே, அவளுக்கு ஒரு மாதிரியாகி விட்டது.

சென்றமுறை, அவளை அவன் அங்கே அழைத்து சென்றது, திருமணத்துக்கு அவளது சம்மதத்தைப் பெறுவதற்காக! சம்மதம் என்ன? திருமணம் பற்றிய

அவனது முடிவுக்கு, அவளைப் பணிய வைப்பதற்காகவே! அந்தத் திருமணம் முடிந்துவிட்ட பிறகு, இப்போது ஏன்?

ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்காக என்பது, அவன் ஏற்கனவே சொன்ன காரணம்.

ஆனால், இந்த இடம் எதற்காக?

அந்தக் காரணத்தை அவன் அன்றிரவு தெளிவுப்படுத்தினான்.

## 15

மதிய உணவை முடித்துக் கொண்டுதான் இருவரும் காரில் கிளம்பியதே.

முன்னைப் போல அல்லாமல், இந்த முறை, அங்கங்கே அழகாய்த் தோன்றிய இடங்களில் காரை நிறுத்தி, பூக்கள், மரம் செடி கொடிகளின் பெயர்களை எல்லாம் மனுபரதன் சொல்லிக் கொண்டே போனான்.

வயிற்றுக்குள் பிசைவது போன்ற உணர்ச்சி மட்டும் அவ்வப்போது தோன்றாமல் இருந்திருக்குமானால், எண்ணி, எண்ணி, மகிழத்தக்க பயணமாக இருந்திருக்கும்!

ஆனால், என்ன முயன்றும், அவளால் அந்த உணர்ச்சியை விலக்க முடியவில்லை! ஒரு வழியாக மலைக் குடிலைச் சென்றடைந்தபோது, அவளுக்குக் கொஞ்சம் நிம்மதிதான்! குறைந்தபட்சமாக, இனிச் சீக்கிரம் விவரம் தெரிந்து விடும்!

ஆனால் காரிலிருந்த பொருட்களை எடுத்து வந்து அடுக்கினான். எடுப்பதிலும், அடுக்குவதிலும் தாரிணியும் உதவ வேண்டியிருந்தது.

அதன் மூலம், இரவு உணவு தயார் நிலையில் இருப்பதும்,

மேலும் சில நாட்களுக்கு, இலகுச் சமையல் செய்வதற்கான பொருட்களும் உடன் வந்திருப்பதையும் தாரிணி அறிய நேர்ந்தது.

அப்படியானால், அவன் சொன்ன ஐந்து நாட்களும் இங்கேதான் வாசம்!

வெகு அழகான இடம்தான். ஆனால்...

அங்கே, டீவி, வீடியோ, ம்யூசிக் சிஸ்டம் எல்லாமே இருந்தன. மாடியில், ஓர் அலுவல் அறை கூட இருந்தது.

ஒவ்வொன்றாகக் காட்டிக் கொண்டே வந்தவன் சொன்னான். "முன்னெல்லாம், நிம்மதியாக வேலை செய்ய வேண்டுமானால், எல்லா ஃபைல்களையும் எடுத்துக் கொண்டு, இங்கே வந்து விடுவேன். வேலையில் ஈடுபடுமுன், படிக்கிற காலத்தில் கூட அப்படித்தான். அந்த அறையே, எனக்காகக் கட்டியதுதான். தாத்தா எனக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பார். கூடவே, தொழிலையும் கற்றுக் கொடுத்தார். இன்றைக்கு, என் பொறுப்பை நன்றாக நடத்துவதாக எல்லோரும் சொல்கிறார்கள் என்றால், அதற்கு அடிப்படை, தாத்தா போட்டதுதான்" என்றான்.

தாரிணியின் மனம் வேறு திசையில் சென்றது. இவர்கள், இங்கே சந்தோஷமாகக் குடும்பம் நடத்தும்போது இவனுடைய உண்மையான பாட்டி தனிமையில் தவித்துக் கொண்டிருப்பார்களே! அங்கே மகன், மருமகள் இருந்தார்கள்தான். ஆனால், இருவரும் எவ்வளவு கலகலப்பாகப் பழகுகிறவர்கள் என்று, தாரிணிதான் நாலுநாட்கள் பார்த்து விட்டாளே.

மனுபரதன், சும்மாசும்மா, சின்னாத்தா புகழ் பாடியது, எரிச்சலூட்டிய போதும் அவனது சிறு வயதிலேயே இறந்து போனதை அறிந்தபோது, கொஞ்சம் ஆறுதலாக இருந்தது.

கணவனின் துரோகத்தை எண்ணி, அந்த அம்மாள் புழுங்கிக் கொண்டே இருக்க வேண்டியது இல்லை-யல்லவா?

மனுபரதன் இலகுவாகப் பேசினான். தாரிணியையும் பேச வைத்தான். படிப்பு, வேலை, அவை தொடர்பான சம்பவங்கள் என்று மெல்ல மெல்லப் பேச்சு இயல்பாக வரத் தொடங்கியது. அந்தச் சமயங்களில் நிகழ்ந்த சில வேடிக்கையான நிகழ்ச்சிகளை இருவரும் பரிமாறிக் கொள்ள, அங்கே, சிரிப்புச் சத்தம் கூடக் கேட்கலாயிற்று.

பேச்சினூடே, பாட்டுக் கேட்டார்கள், சாப்பிட்டார்கள்.

இரவு உணவு முடிந்ததும், இருவருமாகச் சாப்பிட்ட பாத்திரம் பண்டங்களை ஒதுக்கி வைத்தார்கள்.

மீண்டும் டீவி முன் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்த போது, பேச்சு வாக்கிலேயே அவன் சொன்னான். "இன்றிலிருந்து, நம் திருமண வாழ்வைத் தொடங்கலாம் என்று இருக்கிறேன், தாரிணி" என்று திடுதிப்பென்று, மனுபரதன் போட்டு உடைத்த விதத்தில், தாரிணி திகைத்துத் தடுமாறிப் போனாள், எனலாம்.

மனுபரதனின் அறிவிப்பு, அவள் ஒரேயடியாய் எதிர்பாராதது என்று, சொல்ல முடியாது. தேனிலவு என்றபோதே, அவளுக்கு வயிற்றில் புளியைக் கரைத்ததுதான். ஆனால் வித்தியாசமான தேனிலவு, ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ள என்றெல்லாம் கூறியதோடு, இங்கு வந்து இவ்வளவு நேரமும் நண்பர்கள் போலப் பேசிய விதமுமாக அவளை, அமைதிப்-படுத்தியிருந்தன.

இருமனங்களும் ஒன்றுபடட்டும் என்று எண்ணு-கிறான்போல, என்று அவனைப் பற்றி, நல்லவிதமான

கருத்துக்கூட, அவளுக்குத் தோன்றத் தொடங்கியிருந்தது. அப்படி ஒன்று பட்டால், நன்றாயிருக்கும் என்றுகூட, ஒருதரம் நினைத்தாள்.

ஆனால், அவ்வளவு நேரம் சாதாரணமாக இருந்துவிட்டு, திடுதிப்பென்று அவன் இப்படிக் கூறவும், எல்லாம் கலைந்து போயிற்று, மனுபரதன், பழைய பொல்லாதவன் ஆகிப் போனான்.

அவளை, அவன் ஆள் நடமாட்டம் இல்லாத இந்த இடத்துக்குக் கூட்டி வந்த காரணமும், அவளுக்கு, அப்போது புரிந்து போனது.

அவள் மறுத்து, ஏதாவது வாக்குவாதம் செய்தால்? அங்கிருந்தால், அந்தப் பேச்சு, யார் காதிலாவது விழுந்து விடக் கூடும் அல்லவா? ஒரு பெண், அதுவும் காதல் மனைவி அவனை மறுப்பது, அவனது கௌரவத்துக்கு எப்பேர்ப்பட்ட இழுக்கு!

இவ்வளவு தூரம் கணக்கிட்டு, அவளை இங்கே கூட்டி வந்தவன், அவள் என்ன சொல்லிக் கேட்கப் போகிறான்?

அவள் பேச்சின்றி நிற்கவும், "இது, நீயே தேர்ந்தெடுத்த வாழ்வுதான், தாரிணி" என்று நினைவூட்டினான், மனுபரதன்.

இந்த நினைவூட்டல், இன்னும் குரூரமாகத் தோன்றியது, அவளுக்கு.

சுடும் வாணலிக்கும் அடுப்பு நெருப்புக்கும் இடையே, தேர்ந்தெடுக்க வாய்ப்பு பிரமாதமாகத்தான் கொடுத்தான்!

ஆத்திரத்துடன், அவள் அதைக் குறிப்பிட்டபோது, அவனுக்கும் கோபம் வந்து, "இதை நீ, அன்றே சொல்லியிருக்கலாமே!" என்றான், குத்தலாக.

எப்படிச் சொல்வது? அவள் அண்ணன் கழுத்தில் அல்லவா கத்தி வைத்திருந்தான்?

இதைச் சொன்னால், அப்படிக் கத்தியை வைக்கவிட்டுவிட்டு, உன் அண்ணன் என்ன, பூப்பறித்துக் கொண்டிருந்தானா என்று கேட்கப் போகிறான்!

எனவே, அதை விட்டு, “சொல்லியிருந்தால், என்ன செய்திருப்பீர்கள்?” என்று வேறு கேட்டாள் அவள்.

அவளை ஒரு விதமாக நோக்கி, “நீதான் சொல்லவில்லையே! பிறகு, அதைப்பற்றி என்ன கேள்வி?” என்றான் அவன்.

ஆமாம், இன்றுகேட்டு என்ன பயன்? அன்றே, பிடிவாதமாக மறுத்திருக்க வேண்டும்! அண்ணனுக்கு வாழ்க்கை நாசமாகிவிடும் என்றதும், கலங்கிக் குழம்பிப் போனாளே! பைத்தியக்காரத்தனம்!

நந்தனும் மூளை உள்ள மனிதன்தானே? இன்னது செய்தால் இன்னது நேரக்கூடும் என்று சிந்தியாமலா மஞ்சரியை அழைத்துச் சென்றிருப்பான்? அதை யோசியாமல்... இப்போதேனும் யோசிக்கலாமில்லை?

வேகமாக யோசித்து, “நாம் இருவரும் கிட்டத்தட்ட அன்னியர்கள், கொஞ்சம் பழகிய பிறகு...” என்று தொடங்கினாள்.

அவனது இமைகள் லேசாக இடுங்கின, உதடுகளில், ஓர் ஏளன முறுவலுடன் “அதற்குள், அண்ணன் காப்பாற்ற வந்து விடுவானாக்கும்! இந்தக் கதை நடப்பதற்கில்லை, தாரிணி. என்னைப் பொறுத்தவரை, திருமணம் என்பது, வாழ்க்கை முழுமைக்குமானது, அதை நீயோ, உன் அண்ணனோ, இடையில் முறிக்க நான் வாய்ப்புத் தர மாட்டேன்” என்றான் மனுபரதன் தெளிவாக.

அவன் குரலில், முதல்நாள் கேட்ட, பழைய இளக்கமற்ற தன்மை, மீண்டும் ஒலிக்கவும், தாரிணி திகைத்தாள். திகைப்பினூடேயும், அப்படியானால், தொடர்வதும் முறிப்பதும், அவன் உரிமை மட்டும்தான் என்கிறானா, என்ற கேள்வியும், அவள் மனதில் தோன்றியது.

அவன் மேலும் தொடர்ந்தான். "நான், என் உரிமைகளை விட்டுக் கொடுப்பது இல்லை, தாரிணி. நேற்றே என் உரிமை தொடங்கி விட்டது. களைத்திருக்கிறாயே என்று, ஒரு நாள் அவகாசம் கொடுத்தேன்..."

"அவகாசமா?" பெரிய தர்மதாதா மாதிரி, அவன் பேசிய விதம் ஆத்திரமூட்ட... "அது மட்டும்தான் காரணம். என்கிறீர்களா?" என்று, திரும்பினாள், அவ்ள்.

மீண்டும் ஒரு பார்வையின் பின்னே, "இல்லை" என்று ஒத்துக் கொண்டான் அவன். "உன் வாக்கு வாதங்கள், மற்றவர் காதில் விழுவதும், எனக்கு விருப்பம் இல்லைதான்."

"அப்படியென்றால், மறுப்பு இயற்கை என்று உணர்ந்து, வாதங்களை எதிர்பார்த்தும் இருக்கிறீர்கள்!" என்று அவனைக் குற்றவாளியாக்க முயன்றாள் அவள்.

"அப்படி இல்லை. நம்முடைய ஓர் ஒப்பந்தம், ஒப்பந்தத்தில், கொடுப்பது பெறுவது என்று, இரண்டுமே, இரு தரப்பாருக்கும் உண்டு. பெற்றுக் கொள்ளத் துடிப்பவர் பலர், கொடுப்பது என்று வரும்போது, ரொம்பவும், பின்னடிப்பார்கள். தொழிலில் வெற்றி பெற வேண்டு-மானால், மறுதரப்பு பின்னடிக்காமல் கவனிக்க வேண்டும். இதுவரை, நான் தொழிலில் வெற்றிதான் பெற்றிருக்கிறேன். வாழ்க்கை ஒப்பந்தத்திலும், நீ பின்வாங்கி விடக் கூடாதல்லவா?"

"நான் ஒன்றும்..." என்று, ஆத்திரத்துடன் தொடங்கியவளுக்கு மேலே பேச முடியவில்லை.

அவள் பின்வாங்க முயன்றது, உண்மைதானே?

அதற்குமேல், அவளால், அவனிடம் மறுக்க முடியவில்லை!

மனுபரதன் உறங்கிய பிறகும், அவளால் தூங்க முடியவில்லை!

மனம் ஒருமித்த காதல், அது, இதென்று, நிறையக் கற்பனை செய்து விட்டு, இப்படி நடந்தது, அவளுக்கு மிகவும் அருவருப்பாக இருந்தது.

என்னதான் தாலியென்று கட்டிய போதும், அந்தத் தாலிக்கு உரிய மரியாதையை, இருவருமே கொடுக்க வில்லையே! அவன் கட்டியது, கௌரவம் காக்க! அவள், அண்ணனைக் காக்க! அப்புறம், அது என்ன திருமணம்? அதன் தொடர்பாக, இது என்ன உறவு?

உடம்பைக் கொடுத்து, குடும்பத்துக்குச் சோறு போடுவார்களாமே!

இப்போது, தாரிணி, செய்திருப்பதற்கு, வேறு என்ன பெயர்?

அங்கே, குடும்பம், இங்கே, அண்ணன் குடும்பம் அவ்வளவுதான், வேறுபாடு!

அவளுக்கு, ரொம்பவும் அவமானமாக இருந்தது, வேறொன்று!

தொடுபவன் கணவன் என்பதாலோ, என்னவோ, முதலில் கூசிச் சிலிர்த்துக் கொண்டிருந்தவளுக்குக் கடைசியாக, அவன் தொடுகையை வெறுக்க முடியவில்லை.

மனுபரதனே சொன்னானே, ஒரு கற்பழிப்பைத் தடுக்க

முடியாவிட்டால், அதை ரசிக்கத் தொடங்கி விடு என்றானே! அதுபோல, ரசிக்கத் தொடங்கி விட்டோமோ என்று, ரொம்பவுமே மனம் குன்றிப் போனாள்.

இன்னமும் உடலில் இருந்த சிலிர்ப்பும், கதகதப்பும் வேறு, அவள் மனதை, மேலும் உறுத்தி, அவமானமாய் உணர வைத்தன.

இந்த உணர்ச்சியை எப்படியாவது நீக்கி விட்டால், கொஞ்சமேனும் மனம் நன்றாகிவிடாதா?

இப்படி எண்ணித்தான், தாரிணி, குளிக்கச் சென்றது!

ஆனால், அவள் கணக்கில் எடுக்க மறந்தது, அந்த மலைப் பிரதேசத்தின் குளிர்ச்சியை.

சென்னையில் காலநிலைக்குப் பழகியிருந்தவள், 'சில்'லென்ற குளிர்நீர், உடம்பு, மனம் இரண்டுக்கும் புத்துணர்ச்சி ஊட்டக் கூடும் என்று எண்ணி, குளிர்நீர்க் குழாயைத் திறந்துவிட்டாள்.

'ஷவரின்' நீர்த்திவலைகள் அத்தனைக் கூர் ஊசிகளாக, உடலில் ஊடுருவிப் பாயவும், தன்னை மீறி 'ஐயோ'வென்று கத்தி விட்டாள்.

உடனே புத்தி வந்து அவசர அவசரமாக வென்னீர்க் குழாயையும் சேர்த்துத் திறந்து விட்டாள்.

ஆனால் எவ்வளவு சூடாக வென்னீரைக் கலந்தபோதும், எலும்புக்குள்ளே வரை ஊடுருவி விட்ட குளிர் உடலை நடுக்கி எடுப்பதை, அவளால் நிறுத்த முடியவில்லை.

குளிப்பை நிறுத்தி, டவலைச் சுற்றிக் கொண்ட போதும், ஒரு பயனும் இல்லை!

சற்று நேரம் சமாளித்துப் பார்த்தவள், கைகால்களெல்லாம் இஷ்டம் போல வெட்டிக் கொண்டு

போகவும், பயந்து போனாள். பெருமுயற்சி செய்து, கதவு வரை வந்து, திறந்தவள், அதற்கு மேல், ஒன்றும் முடியாமல் மனுபரதனைக் கூவி அழைத்தபடி கீழே விழுந்து விட்டாள்.

நல்ல வேளையாக, தூக்கத்திலும், அவள் குரல், அவனை எட்டி, உடனே வந்து விட்டான்.

நடுக்கிக் கொண்டு கிடந்தவளைப் பார்த்ததும், "இந்த நேரத்தில்..." என்று தொடங்கியவன், அத்தோடு பேச்சை நிறுத்திக் குனிந்து அவளைத் தூக்கிச் சென்றான்.

ஒண்டிச் சுருண்டவளை, இறுக அணைத்துச் செல்லும்போதே, அலமாரியைத் திறந்து, சில டர்க்கி டவல்களையும் எடுத்துக் கொண்டான்.

ஹாலின் பெரிய மின் கணப்பை முழு அளவில் ஓட விட்டுவிட்டு, கணப்பின் எதிரே, மெத்தென்ற தரைக் கம்பளத்தின் மீது, அவளை இருத்தினான். அவள் சுற்றிக் கொண்டிருந்த, பாதி ஈரமாகி விட்டிருந்த ஈரத்துணியை அகற்றித் தூர வீசினான். அவளது பலவீனமாக மறுப்பை, அவன் லட்சியமே பண்ணவில்லை.

ஒரு டவலால் அவளது கூந்தலையும், மற்றதால் அவளையும் சுற்றி விட்டு அவளது கைகால்களைப் பரபரவென்று, சூடுவரத் தேய்த்தான்.

சோர்ந்து சரிந்தவளின் அருகமர்ந்து, அவளைத்தன் மீது சாய்த்துக் கொண்டு கூந்தலைச் சுற்றியிருந்த டவலை அவிழ்த்து வேகமாகத் துவட்டி, முடிந்த அளவு ஈரம் நீக்கினான்.

அவளது நடுக்கம், இன்னமும் இருக்கவும், அவளை இறுக அணைத்து, "இந்த நேரத்தில், தலையில் நீர் ஊற்றுவார்களா? குளிக்க வேண்டும் என்று, சொல்லியிருப்பார்கள்தான். ஆனால், இந்த அர்த்த

ராத்திரியிலா, அதுவும் இந்த மாதிரிக் குளிர் பிரதேசத்திலா, என்று யோசிக்க வேண்டாமா?" என்று வருத்தத்துடன் கடிந்தான்.

கரிசனக் கண்டனம்!

அவ்வளவு நேரம், அவன் அவளுக்குச் செய்த அத்தனை செயல்களிலுமே வேகம் இருந்தபோதும், முரட்டுத்தனம் இருக்கவில்லை. மாறாக, ஒரு மென்மைதான். இவள் கஷ்டப்படுகிறாளே, கஷ்டத்தை விரைவாக நீக்க வேண்டுமே என்கிற வேகம்தான் தெரிந்தது.

அவள் குளித்ததன் காரணம், தாரிணிக்கு நினைவு வந்தது. ஆனால், அந்த மாதிரி இருக்கக்கூடும் என்கிற எண்ணமே இல்லாமல், அவன் பேசியது வேறு, அவளைக் கழிவிரக்கம் கொள்ளச் செய்தது.

அவளைப் போல, அவன் திருமணத்தை வெறுமனே, ஒரு கட்டாயத்துக்காகச் செய்ததாக எண்ணிக் கொண்டிருக்கவில்லை போலும்! உண்மையான திருமணமாகவே எண்ணி,.. வாழ்க்கை முழுமைக்குமானது என்றானே.

உடலில்கதகதப்பு ஏற ஏற, மனதிலும் ஏதேதோ எண்ணங்கள் தோன்றலாயின.

என்னவோ, உரிய இடம் வந்து சேர்ந்தது போலப் பாதுகாப்பாகத் தோன்றியது

அவனோடு, வாகாக ஒண்டிக் கொண்டாள், அவள்.

சற்றுப் பொறுத்து, தாரிணியின் நடுக்கம் அடியோடு நின்று விட்டதை உணர்ந்து "சூடாகப் பால் குடித்தால், உனக்கு நன்றாக இருக்கும், தூக்கமும் வரும்." என்றுரைத்தபடி, மனுபரதன் எழ முயன்றான்.

அவள் இன்னமும் அழுத்தமாக அவனோடு ஒண்டிக் கொள்ளவும், ஆச்சரியத்தோடு, "தாரிணி?" என்று கேட்டான்.

கணப்பினாலோ, என்னவோ, சூடான அவளது கன்னங்கள், அவனது தோள் வளைவில் புதைந்தன.

அவள் முகத்தை மெல்ல நிமிர்த்தி உற்றுப் பார்த்தவன். "தரு!" என்றழைத்து ஆவலாகக் குனிந்தான்.

## 16

நள்ளிரவுக் குளியலின் பயனாக, மறுநாள், தாரிணிக்கு, லேசாக உடல் சுட்டது.

கவலையுள்ளவனாய், சாமான்களை மூட்டை கட்டத் தொடங்கினான், மனுபரதன். "முதலில், நம் டாக்டரிடம் உன்னைக் காட்டி, காய்ச்சலுக்கு மருந்து கேட்க வேண்டும், வா!" என்று அவசரப்படுத்தினான்.

கொஞ்சமும் விருப்பமற்று, இங்கே வந்தவள்தான். ஆனால், கிளம்புவதற்கு அடியோடு மறுத்தாள்.

கணவனின் கரிசனம் உள்ளத்தைக் குளிர வைக்க, "லேசான காய்ச்சல்தானே? இதற்கெல்லாம் மருத்துவர் எதற்கு? என்னிடமே , 'பாராசெட்டமோல்' மாத்திரைகள் இருக்கின்றன. ஒன்று போட்டால், எல்லாம் சரியாகி விடும்." என்றாள், தாரிணி.

"நீ எப்போது, மருத்துவம் படித்தாய்?" என்று அதட்டிக் கேட்டான், அவன். "டாக்டரிடம் காட்டி, முறையான வைத்தியம் செய்யலாம் என்று பார்த்தால்... டாக்டரிடம், அப்படி என்ன பயம் உனக்கு?" என்று, விரட்டினான்.

ஓரக்கண்ணால் நோக்கி, "டாக்டர் பயத்தால்தான் என்று, என்ன கணக்கு? இங்கிருந்து போவது பிடிக்காமல்...

இங்கேயே இருக்க வேண்டும் என்கிற ஆசையினாலும், இருக்கலாம் அல்லவா?" என்றவளின் கன்னங்கள் ரோஜா நிறம் கொண்டது, ஜுரவேகத்தினால் அல்ல.

ஆனால், அவன்தான் மிரண்டு போனான்.

பயந்த முகத்துடன், அவளது கன்னங்களை, நெற்றியைப் பரபரப்புடன் தொட்டுப் பார்த்தான்.

கேள்வியாய் நோக்கியவளிடம், "ஜுரம் அதிகமாகி, ஜன்னி கின்னி கண்டு, அதனால் பேத்துகிறாயோ, என்று பயந்தே... போனேன்!" என்று, கண்களை உருட்டியவன், சட்டென முகம் மாறி, மென்னகை புரிந்தவாறே, அவள் முகத்தை ஏந்தி, நெற்றியில் முத்தமிட்டான்.

மலைக்குடிலிலேயே தங்குவதற்கு ஒத்துக் கொண்ட போதும், மனுபரதன். அவளை எந்த வேலையும் செய்ய அனுமதிக்கவில்லை. காய்ச்சல், சில மணிநேரத்திலேயே அடியோடு குணமாகிவிட்ட போதும், மறுநாள் வரை, அவனேதான், அவ்வளவு வேலைகளையும் செய்தான்.

நல்லவேளையாக அவன் கொணர்ந்திருந்தது, பெரும்பாலும், சூடு பண்ணிச் சாப்பிட வேண்டிய வகை' உணவுதான் என்பதால், அது இலகுவாகவும் இருந்தது.

"உன் சமையல் திறமை பற்றித் தெரிந்... உனக்குத் தெரிந்தது என்ன, சொல்லு?, அதனால், எதற்கும் இருக்கட்டும் என்று, முன் ஜாக்கிரதையாக, இது போலவே, நிறைய வாங்கி விட்டேன்" என்று விளக்கம் சொன்னான் அவன்.

அவன் சொல்லத் தொடங்கியது என்ன என்பதைத் தாரிணியால், இலகுவாகவே ஊகிக்க முடிந்தது.

அண்ணன் சொல்லி, அவளது சமையல் திறமை பற்றி மனுபரதனுக்கு ஏற்கனவே தெரியும்! ஆனால், அண்ணனை

நினைவூட்டி, இப்போது இருக்கும் இனிய மனநிலையைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம் என்று, மனுபரதன் மாற்றிச் சொன்னான்!

அந்த அளவுக்கு, அவளது மனம் பற்றி யோசிக்கிறானே என்று, தாரிணிக்கு ஆறுதலாகத்தான் இருந்தது. ஆனால் கூடவே, இதையெல்லாம் சொல்லும் அளவுக்கு நெருங்கிப் பழகிவிட்டு, அண்ணன் ஏன் இப்படிச் செய்தான் என்ற வருத்தமும் அவளுக்கு உண்டாயிற்று.

ஆனால், அவள் அதையே நினைத்துக் கொண்டிருக்க வாய்ப்பில்லாமல், மனுபரதன் வேறு ஏதோ கூறவும், அவளது கவனம் நந்தனை மறந்து, கணவன் பேச்சில் லயித்தது.

அது கடினமாகவும் இல்லை!

மலைக்குடிலில் அவர்கள் தங்கியிருந்த, மற்ற நாலு நாட்களும் வெகு வேகமாகப் பறந்து மறைந்தன.

வினாடி நேரத்தைக் கூட வீணாக்க விரும்பாதவன் போன்று, அவன் நடந்து கொண்டவிதம், அவளையும் அதே போன்று நடந்து கொள்ள வைத்தது.

காதல் செய்த நேரம் போக, மீதி நேரமெல்லாம், பேசினார்கள். கேலியும் சிரிப்புமாக,

சஞ்சலம் தரக்கூடிய விஷயங்களை, இருவருமே கவனத்துடன் தவிர்த்தார்கள்.

எனவே, அந்த நாலு நாட்களும் சொர்க்கத்தில் இருப்பது போல உணர்ந்தார்கள்.

காலை வேளைகளில், மனுபரதன், அவளை வெளியே ‘வாக்கிங்’ கூட்டிப் போவான்.

சுற்று முற்றும் பார்த்தபடியே இவள் நடப்பதைக்

கவனித்துவிட்டு, "என்ன பார்க்கிறாய்?" என்று கேட்டான், மனுபரதன்.

சட்டென்று, எதையோ சொல்ல வாயெடுத்தவள், சற்று நிதானித்து, "அதில்லை... இந்தச் சிறுத்தை, செந்நாய்க் கூட்டம், முள்ளம் பன்றி, இதுகளையெல்லாம், உயர்திரு மனுபரதனும்,அவருடைய மனைவியும் செல்லும் பக்கம் போகக்கூடாது என்று கடவுள் உத்திரவு போட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அதற்கு, எல்லாரும் கீழ்ப்படிகிறார்களா என்று, பார்க்கிறேன்!" என்று சாதுவாய்ச் சொன்னாள்.

சிரித்துவிட்டு, அவன் சொன்னான். "என்னை மாதிரி, சாதாரணமான மனிதர்களுக்காகவெல்லாம், கடவுள், அந்த மாதிரிக் கட்டளையிடுவார் என்று எனக்குத் தோன்றவில்லை. அதனால், பாதுக்காப்புக்காக, எப்போதும் போல, இதைக் கொண்டு வந்திருக்கிறேன்" என்றுரைத்து, கம்பளிச் சட்டைக்குள்ளிருந்து, ஒரு துப்பாக்கியை எடுத்துக் காட்டினான்.

தாரிணியின் விழிகள் விரிந்தன. அன்று, அவன் சொன்னது மெய்தான், சும்மா, மிரட்டுவதற்காகச் சொல்லவில்லை!

அகன்ற விழிகள் மேலும் விரிய, "எப்போதும் என்கிறீர்களே, பயமாக இராதா?" என்று வினவினாள்.

"பயந்து கொண்டு சும்மாவே இருந்துவிட்டால், எப்படி? இந்தச் சுத்தமான காற்று, அழகான இயற்கைக் காட்சி, இதையெல்லாம் அனுபவிக்காமல், முடங்கிக் கிடப்பதா? ஆபத்து வரக்கூடும் என்றால், அதைத் தவிர்க்கத் தற்காப்பு நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டால் தீர்ந்தது!" என்று துப்பாக்கியை அசைத்துக் காட்டிவிட்டு மீண்டும் உள்ளே சொருகிக் கொண்டான்.

என்னவோ, அவனைப் பற்றி, இன்னமும் அறிந்து கொண்டாற்போலத் தாரிணிக்குத் தோன்றியது.

'வாயில் விரலை வைத்துக் கொண்டு, 'ஞே' என்று நிற்பேனா?' என்றானே! அப்படி நிற்காமல், அவன் விரைந்து செயல்பட்ட விதமும் புரிந்தது!

ஆனால், இவனோடு ஒரு மாதம் நன்றாகப் பழகிய, கிட்டத்தட்ட நண்பன் என்கிற அளவுக்குப் பழகி-விட்டிருந்த நந்தகுமாரனுக்கு, இது ஏன் எப்படித் தெரியாமல் போயிற்று?

தெரிந்திருந்தால்... என்று யோசித்தபோது பரவாயில்லை, தெரியாமல் போனதினால் ஒன்றும் பாதகம் இல்லை என்றும் தோன்றியது.

நந்தன் ஆசைப்பட்ட மனைவி அவனுக்கு அவளுக்கும் வாழ்வு நல்லபடியாக அமையும் போலத்தானே-தோன்றுகிறது?

இரண்டு நாட்களில் எதையும் நிச்சயமாகச் சொல்ல முடியாதுதான். என்றாலும்...

எதையாவது நினைத்து மனதைக் குழப்பிக் கொள்ளக் கூடாது என்று, எண்ணியவளாய், அப்போதைய உரையாடலில் மனதைச் செலுத்தி, "நீங்கள், வழியில் ஏதாவது மிருகங்களை எதிர்கொள்ள நேர்ந்திருக்கிறதா?" என்று விசாரித்தாள்.

"ம்ம்! பத்துப்புலி, நாலு சிறுத்தை, ஓநாய்க்கூட்டம் எல்லாவற்றையும், வீரதீரனாய் நின்று, எப்படி விரட்டினேன் என்றெல்லாம் கதை சொல்லிப் புதுப் பெண்டாட்டியிடம் பெருமையடிக்க ஆசைதான். ஆனால் அதற்கான வாய்ப்புக்களைத் தர வேண்டும் என்று இந்த மட மிருகங்களுக்குத் தெரிந்தால்தானே? சுத்த ஐந்தறிவுப்

பிராணிகள்!" என்று, அவைகளைத் திட்டினான், அவன்.

சிரித்துவிட்டு, "ஒரே ஒரு சின்ன எலி கூடவா, உங்கள் முன் வரவில்லை?" என்று கேட்டாள், அவள்.

"எலி, எப்போதுமே பதுங்குகிற பிராணி. மற்றதும், உணவுக்காகத் தவிர, மற்றபடி ஒதுங்குகிறவைதான். ஒரே தரம், பக்கவாட்டுப் புதர் ஒன்றில், சலசலப்புக் கேட்டது, முள்ளம் பன்றி, அல்லது நரியாக இருக்கக்கூடும். புதரை ஒட்டித் தரையில் சுட்டதும், அந்தப் பக்கமாகவே, ஓடிப் போய்விட்டது" என்று முறுவலித்தான் அவன்.

"ஹைய்யோ!" என்று அதிசயித்தாள், அவள்! "அர்ஜுன் அவார்டு தரத்தக்க, எவ்வளவு பெரிய தீரச் செயலைத் துணிந்து செய்திருக்கிறீர்கள்! இதைப் போய், ஒன்றுமில்லாத மாதிரி, இவ்வளவு அடக்கமாகவா கூறுவது? அச்சோ!" என்று, அவள் வியந்து முடிக்கையில் இருவருக்குமே அடக்க முடியாத சிரிப்பு வந்து விட்டது.

ஆள் நடமாட்டமில்லாத அந்த மலைப் பகுதியில், அவர்கள் இருவரின் சிரிப்பொலியும், எதிரொலி கிளப்ப, அதை ரசித்தவாறே நடந்தபோது, புதர் ஒன்றில் அரவம் கேட்டு, இருவருமே அசையாமல் நின்று விட்டனர்.

மனுபரதன் துப்பாக்கியைத் தயார் நிலையில் வைத்துக் கொண்டு, தாரிணியை மறைத்தாற் போல, ஓர் எட்டு முன்னே வந்து நின்று கவனிக்கையில், புதரிலிருந்து இரண்டு முள்ளம்பன்றிகள் வெளியே வந்து நின்று அவர்களை நோக்கின.

"என்ன செய்ய வேண்டும்?" என்று, காதோரம் கிசுகிசுத்தவளிடம், "அவை முள் எறியும் தூரத்தில் நாம் இல்லை, பக்கத்தில் வந்தால் பார்த்துக் கொள்ளலாம்" என்றான் மனுபரதன்.

சற்று நேரம் அவர்களையே வெறித்துப் பார்த்த முள்ளம் பன்றிகளுக்கு, இவர்கள் அபாயமற்றவர்களாகத் தோன்றிவிட்டதோ, என்னவோ, இரண்டும் மறுபடியும் புதருக்கள் ஓடி மறைந்து விட்டன.

"ஆஹா! இது அல்லவோ, வீரம்! ஒரு பார்வையாலேயே, இரண்டு மகாப் பெரிய யானையளவான முள்ளம் பன்றிகளை விரட்டி விட்டீர்களே!" என்று தாரிணி மீண்டும் அதிசயித்தாள்.

சிரித்தபடியே அவள் கையைப் பற்றி, ஒரு புறமாய் இழுத்து, "அதிருக்கட்டும் இப்போது, நாம் அந்தப் பக்கம் போக வேண்டாம். சற்றுப் பாதை விலகி, அந்தப் புதருக்குக் கொஞ்சம் தூரமாகவே, போய்விடலாம்" என்று நடத்திச் சென்றான்.

பன்றிகள் இருந்த புதரைத் தாண்டிச் சற்றுத் தொலைவு சென்றபின் "பரவாயில்லை! ஆபத்து இருக்கக்கூடிய இடத்திலிருந்து, அரைக் கிலோமீட்டர் தூரத்துக்குள்தான் இருக்கும். அந்தப் பன்றிகளுக்கு, இவ்வளவு அருகில் நடந்து வந்த துணிச்சலுக்காக, உங்களுக்குப் பரிசு கொடுக்கா-விட்டால், வீரப் பரிசு கொடுக்கும் விஷயத்தில், இந்த அரசாங்கத்தில் ஊழல் நடப்பதாகத்தான், நான் சொல்வேன்" என்று நகைத்தாள், தாரிணி.

"ஆஹா! நீ எவ்வளவு சூரப்புலி, அதைச் சொல்லு! முள்ளம் பன்றிகளைத் தாண்டி இவ்வளவு தூரம் வந்த பிறகுதானே, வாயில் வார்த்தை வருகிறது?" என்றான் அவன் பதிலுக்கு. "அதற்கு முன், ஒரே கிசுகிசு! தொண்டையிலிருந்து, சத்தமே வரவில்லையே!" என்று, அவனும் கேலி பேசி நகைத்தான்.

ஏன் மெதுவாகப் பேசினாள் என்று, விளக்கலாம் தான்.

ஆனால், பேச்சை முந்திக் கொண்டு, அவளுக்கும் சிரிப்புதான் வந்தது.

இருவர் நகையொலியும் இணைந்து காதில் விழுந்தபோது, கேட்க மிக இனிமையாக இருந்தது.

ஆச்சரியமாகவும் இருந்தது!

இந்த வில்லனுடனா, அவள் சேர்ந்து சிரிக்கிறாள்?!

இரண்டு நாட்கள் முன்பு வரை, அவனை எவ்வளவு வெறுத்தாள்? இப்போது விருப்புக்கும் வெறுப்புக்கும் இடையே இருப்பது, ஒரு மெல்லிய கோடுதான் என்று, எதிலோ படித்த ஞாபகம் வந்தது. அது மெய்தானோ?

அத்தோடு, முன்தினம், அவன் அவளுக்குச் செய்த பணிவிடைகளை எண்ணிப் பார்க்கையில் இவனை வில்லனென்று, யாரால் சொல்ல முடியும்?

ஆனால், வேண்டாம் கண்டதையும் இப்போது நினைக்க வேண்டாம்!

"என்ன, சத்தத்தையே காணோம்? மெய்யாகவே, பயந்துதான் அப்படி ரகசியம் பேசினாயா?" என்று கேட்டான் மனுபரதன்.

"பின்னே? உங்களுக்குப் பொருத்தமாக இருக்க வேண்டாமா?" என்று அவள் கேட்கவும், அவர்களிடையே மீண்டும் ஒரு சிரிப்பலை பரவியது.

இன்னொரு நாள் பேசிக் கொண்டிருந்தபோது, "உங்கள் பெயர் மனுபரதன். நெருங்கியவர்கள் 'மனு' என்று அழைப்பதுதானே, இயற்கை? எல்லோரும், 'பரதன்' என்கிறார்களே?" என்று, தாரிணி வினவினாள்.

"ஒருவேளை, பெண்டாட்டி வந்து, அப்படிச் செல்லமாய் அழைக்கட்டும் என்று எல்லோரும்

மரியாதையாக ஒதுங்கிக் கொண்டார்களோ, என்னமோ?" என்று கேலி பேசிவிட்டு, மனுபரதன் விவரம் சொன்னான். "என் தாத்தா பெயர் மனகாவலம் பெருமான். தாத்தா பெயர் அப்படியிருக்க, என்னை 'மனு' என்று, கூப்பிடக் குடும்பத்தில் எல்லோருக்கும் தயக்கம், பாட்டியே தயங்கும்போது, அம்மா, அப்பா அப்படி அழைத்தால், நன்றாயிருக்குமா? தாத்தா, எப்போதும் தலைமை இடத்திலேயே இருந்து விட்டதால், மரியாதை கருதி, மற்றவர்களும் என்னைப் 'பரதன்' என்றே குறிப்பிடத் தொடங்கி விட்டார்கள்" என்று, விளக்கத்தை முடித்தான்.

விளையாட்டு பாவனையில் உரைத்த போதும், அதைத் தொடர்ந்து தன்னை 'மனு' என்றே அழைக்கும்படி, மனைவியிடம், வற்புறுத்தினான்.

மனைவி அழைக்கும் பெயர்,அவனுக்குத் தனியானதாக இருக்க வேண்டும்.

"நான் உன்னைத் 'தரு' என்பது போல, உனக்கு நான் மனு'" என்றான்.

அதுவும், தாரிணிக்கு நன்றாகத்தான் இருந்தது!

மலைக்குடிலில் இருக்கும் வரை, கணவன் அவள் பக்கத்திலேயே இருக்கும்வரை அவளுக்கு எல்லாமே நன்றாகவேதான் இருந்தது.

அங்கிருந்து கிளம்பி வந்து, மனுபரதன் அலுவலகம் செல்லத் தொடங்கிய பிறகு, தனித்திருக்க நேரம் நிறையக் கிடைக்கவும், அவள் மனம் சிந்திக்கத் தொடங்கியது, அந்தச் சிந்தனை, அவளது மகிழ்ச்சியைப் பெரிதும் குறைத்தது.

# 17

தாரிணியின் புகுந்த வீட்டு வாழ்க்கை, அவளுக்குச் சற்று போரடித்தது எனலாம். செய்வதற்கு, ஒன்றுமில்லாத போரடிப்பு.

காலையில் எழுந்து, பொன்னுத்தாயிக்குக் கொஞ்சம் உதவி செய்து, அவசரமாகக் குளித்துக் கிளம்பி, அலுவலகத்துக்கு ஓடி, அங்கும் சுறுசுறுப்பாக வேலை செய்து, திரும்பி வந்து, அண்ணனோடு அரட்டையடித்து, மறுநாளைக்கு வேண்டிய துணிமணி எடுத்து பெட்டி போட்டு உடுப்பதற்குத் தயார் நிலையில்வைத்துவிட்டுப் படுத்து உறங்கி... என்று, நாளின் ஒவ்வொரு வினாடியும், ஏதாவது செய்து கொண்டே இருந்த பழக்கம் அவளுக்கு,

இங்கே, அப்படி என்ன செய்வது என்றே அவளுக்குப் புரியவில்லை.

மாடியில், மனுபரதனும் தாரிணியும் பயன்படுத்திய பகுதி, மூன்று அறைகளைக் கொண்டது.

குட்டி போட்ட பூனை மாதிரி, எவ்வளவு நேரம் அங்கேயே உட்கார்ந்திருக்க முடியும்?

கீழேயும், தோட்டத்திலும் கூடச் சுற்றலாம் தான். ஆனால், செல்லுமிடங்களில் இருக்கும் பணியாட்கள் மரியாதையுடன் எழுந்து நிற்பது. அவளுக்கு ஒரு மாதிரி இருந்தது.

ஆனால், இந்த மரியாதையை, மனுபரதன் லேசாகத் தலையசைத்தும், அவன் பெற்றோர், கண்டு கொள்ளாமலும் செல்வதும் அங்கே இயல்பாக இருந்தது.

அவர்களுக்கு, அது பழக்கமாக இருக்கலாம். ஆனால், அவளுக்கு அப்படி இல்லையே!

பத்திரிகையா? அன்றன்றையப் பத்திரிகைகள், அறை வாயிலில் உள்ள மோடாவில் சீராக வைக்கப்பட்டிருக்கும்.

"மற்றவர்கள் படிக்க வேண்டாமா?" என்று அவள் கேட்டதற்கு, "அம்மா, அப்பா அறைக்கு, வேறு ஒரு செட் பிரதிகள் போகும்" என்றான், மனுபரதன்.

யோசித்துக் கணக்குப் போட்டு. பத்திரிகைகள் வாங்குவதும், பத்திரிகை வந்ததும் படிப்பதற்கு நந்தனுடன் போட்டி போடுவதும், நினைவு வந்து, விசித்திரமாய் சஞ்சலத்தை உண்டு பண்ணியது.

உணவு விஷயமும் அப்படித்தான்.

எந்த வேளையில் சாப்பிட வேண்டும் என்று தோன்றினாலும், பட்டனை அழுத்திச் சொன்னால் போதும். அந்த வேலைக்குரிய உணவு வகைகள் அடுக்கி 'ட்ரே'யைத் தூக்கிக் கொண்டு வேலைக்காரப் பெண் வந்து விடுவாள். கை கழுவ வென்னீர், துடைக்க டவல் சகிதம், அவள் சாப்பிடும் வரை, அங்கேயே நின்று சுத்தம் செய்துவிட்டு, மீதியுடன் போவாள்.

எழுந்து சென்று சாப்பிடுகிற சிரமம் கூட, இரவில் எல்லோரும் சேர்ந்து உணவருந்தும் போது மட்டும் தான்!

"இப்படியே போனால், குண்டு பீப்பாய், ஆகி விடுவேன்" என்று, அவள் மிரட்டவும், "அய்யய்யோ!" என்று, பயந்த மாதிரிப் பாவனை செய்தான், மனுபரதன்.

"ஆமாம், அப்புறம்பார்க்கச் சகிக்காது!" என்றாள் அவள்.

"அதை விடக் கஷ்டம், கட்டிப் பிடிக்க முடியாதே!" என்றான் அவன் சோகமாக

"அதுவா இப்போது முக்கியம்?"

"திருமணமாகிவிட்டால், அதுதாம்மா, எப்போதும் முக்கியம்!" என்று, அவன் கூறியவிதத்தில், அவளுக்கு நாணச் சிவப்புடன், சிரிப்பும் வந்தது.

அவளைச் சிரிக்க வைத்து விட்டு, "வாக்கிங் போ, ஜிம்முக்குப்போ" என்று பொழுது போக வழி முறையும் சொன்னான். "இந்த பகுதியில் அங்கங்கே வீடுகள் இருப்பதால், ஏதாவது மிருகங்கள் வரக்கூடுமோ என்கிற பயம் கிடையாது. டீவி பார், தூங்கு, வீணை, பாட்டு, நடனம் ஏதும் கற்றுக் கொள்ள ஆசை என்றால், சொல்லு அதற்கு ஏற்பாடு செய்கிறேன். செய்வதற்கு, எத்தனை இருக்கிறது பார்! இத்தனையிலும் உன் பொழுது போக மாட்டேன் என்று, நின்று அடம் பிடித்தால், அம்மா மாதிரிப் பேசாமல் மகளிர் மன்றத்தில் சேர்ந்துவிடு. அப்புறம், அரட்டை அடிக்க, இன்னும் இரண்டு மணி நேரம் வேண்டும் என்பாய்!" என்றான் கேலியாக.

ஆண்களுக்கே உரிய மனோபாவம்! பெண் என்றால் அரட்டை அடிப்பாள் என்கிற எண்ணம்! ஆண்கள் பேசுகிற வம்பு, பெண்கள் பேசுவதில்லை என்று தெரியாது போலும்!

"மகளிர் மன்றத்தின் மூலம், அத்தை நிறைய தரும காரியங்கள் செய்வதாகச் சொன்னார்களே!" என்று, கணவனை நேராகப் பார்த்துக் கேட்டாள்.

"ஓ! கோபமா? நான், சும்மா கேலிக்குச் சொன்னேன்டா" என்று சமாதானம் சொல்லிவிட்டு, "அல்லது அம்மா மாதிரி, 'ஹாபி' ஏதாவது ஏற்படுத்திக் கொள். செலவைப் பற்றிக் கவலைப்படாதே" என்றான், மனுபரதன்.

பிறகு, அவளது கையைத் தன் கையில் எடுத்து வருடியபடி, "உன்னால் முடிந்தால், சற்றுநேரம் சின்னாத்தாவிடம் போய் உட்கார்ந்திருந்து விட்டு வாயேன்.

உனக்கும் பொழுது போகும், அவர்களும் சந்தோஷப்படுவார்கள்'' என்று இன்னொரு யோசனையும் சொன்னான்.

அவன் கூறியதைக் கவனியாதவள் போன்று, ''பொழுது போக வேண்டும், பயனுள்ளதாகவும் இருக்க வேண்டும். அப்படி என்ன 'ஹாபி' இருக்கிறது?'' என்ற அவனது முந்தையப் பேச்சையே தொடர்ந்தாள் தாரிணி.

சின்னாத்தா பற்றி யோசனை சொன்னானே தவிர, அவனும் அதைப் பெரிதாக வற்புறுத்தவில்லை.

இவனது வற்புறுத்தலுக்காகப் போய், அது இருவருக்குமே துன்பமாகிவிடக் கூடாது என்று எண்ணினான் போலும்.

மனுபரதன் என்னதான், சின்னாத்தாவைப் பற்றி உயர்வாகச் சொன்னாலும், ஒரு சின்ன வீட்டுக்காரியிடம் சென்று, வழியத் தாரிணிக்கு விருப்பமில்லை.

அதை வாய்விட்டுச் சொன்னால், சின்னாத்தாவின் அருமை பெருமைகளைப் பற்றிக் கணவனிடம் ஒரு சொற்பொழிவு கேட்க வேண்டியிருக்கும். எனவே, அவன் பேச்சைக் கவனியாதது போல, ஒதுங்கிக் கொள்வது மேல் என்று, தாரிணி நினைத்தாள்.

மனுபரதனின் ஆலோசனையை ஏற்று, தாரிணி காலையும், மாலையும், நிறைய நடந்தாள்.

இதமான, மிதக் குளிரில், சுற்றிலும் உள்ள இயற்கைக் காட்சிகளைப் பார்த்தபடி நடப்பது, தாரிணிக்கு மிகவும் பிடித்திருந்தது.

அதை விடப் பிடித்தம், சில காலை வேளைகளில், மனுபரதனும், அவளோடு கூட நடந்தது.

பொதுவாக, அவன் அதிகாலையில் எழுந்து, 'ஜிம்'முக்குப் போய்விடுவான்.

திரும்பி வந்ததும், வியர்வை அடங்கும் வரை, பத்திரிகை படித்து, முடிப்பான்.

அதன்பின், குளியல், கிளம்பல் என்று, அலுவலுக்குச் செல்ல அவனுக்கு நேரம் சரியாக இருக்கும்.

அலுவலகத்துக்குக் கிளம்பிவிட்டான் என்றால், அப்புறம் மாலையில்தான், அவன் தரிசனம் மறுபடி கிடைக்கும். ஏதாவது தொழில் முறை டின்னர் இருந்தால், இரவுதான் வருவான்.

அதுபோன்று சும்மா உட்கார்ந்து காத்திருக்கும் சமயங்களில்தான், தாரிணி மிகவும் திண்டாடிப் போவாள். கண்டகண்ட எண்ணங்கள் எல்லாம் தோன்றி, அவளை வதைக்கும்.

சும்மா இருக்கும் மனம், சைத்தானின் உலைக்களம் அல்லவா?

அந்த உலைக்களத்துக்கு துருத்தி ஊதியது, சுமனாவின் பேச்சு.

தாரிணியின் காலை, மாலை நடைகளின் போது, அவள் அடிக்கடி சந்தித்தது, சுமனாவைத்தான். அவளும் பொதுவாக அந்த நேரங்களில்தான் 'வாக்கிங்' வருவாள்.

முதலில் தற்செயலாகச் சந்தித்தார்கள். பிறகு, ஃபோன் செய்து குறித்த நேரத்தில் எங்காவது சந்திக்கும்படி ஏற்பாடு செய்து கொண்டு கிளம்பினார்கள்.

சுமனாவின் தோழமை வேண்டாம் என்று கணவன் சொன்னதைத் தாரிணி மறந்து விடவில்லை.

ஆனால், தான் யார்யாரிடம் பேசலாம், யார்யாரிடம்

பேசக்கூடாது என்பதில் தலையிடும் உரிமை கணவனுக்குக் கூடக் கிடையாது என்பது, தாரிணியின் கருத்து.

எனவே, அவள் சுமனாவோடு, தாராளமாகப் பேசிப் பழகினாள்.

பம்பாயில் பிறந்து வளர்ந்தவள், சுமனா. டிராமா, கச்சேரிகள், ஷாப்பிங்! எத்தனை சபாக்கள்! தினமும் வெளியே போகலாமே.

நேர் எதிரிடையாக, இங்கே, அறைக்குள்ளேயே சிறையிருப்பது போல, அவள், உணர்ந்தாள், வீட்டுச்சிறை!

பெற்றோரை எதிர்த்துக் காதல் திருமணம் செய்தவள், எனவே, இடையிடையே அங்கே சென்று தங்கிவிட்டு வரவும், அவளுக்குக் கதி யில்லை!

எனவே, ஏதாவது நகரத்தில், வேறு தொழில் ஏதாவது தொடங்கும்படி அவளுடைய கணவன் சுரேந்திரனை வற்புறுத்திக் கொண்டிருந்தாள், சுமனா. ஆனால், அவன் அசைந்து கொடுத்தால்தானே?

தூரத்தில் நெளிந்த மலை முகட்டையும், அதன் மேல் மேகங்கள் தங்கிப் போகும் அழகையும் ரசித்த தாரிணி, அதைச்சுமனாவிடம் சுட்டிக் காட்டிய போது, அவள் அதைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

"இதெல்லாம் வந்த புதிதில் பிரமாத அழகாகத்தான் தோன்றும், தாரிணி அப்புறம் வெறுத்துவிடும். அந்த மலை முகட்டிலிருந்து குதித்துச் செத்துவிட மாட்டோமா என்றிருக்கும்" என்று, அவள் கூறியதைத் தாரிணியால், ஒப்ப முடியவில்லை.

இந்த அழகுகளைப் பார்க்கையில், மனதில் உள்ள எத்தனையோ, சஞ்சலங்கள் மறந்தே போகிற போது, பிடிக்காமல் எப்படிப் போகும்.

சுமனா, தன் கதையில் எதையும், தாரிணியிடம் மறைக்கவில்லை.

அவள் வெளிப்படையாகப் பேசியது, தன்னிடம் மட்டும்தானா, அல்லது எல்லோரிடமுமே அவள் அப்படித்தான் மனதைக் கொட்டுவாளா என்று தாரிணிக்கு தெரியாதுதான். ஆனால், அவளைப் போலவே, அந்தக் குடும்பங்களுக்கு வெளியில் இருந்து வந்தவள் என்பதால், கூடப் பிறந்தவள் மாதிரி ஒரு நட்புணர்வு தோன்றுவதாகச் சுமனா கூறியபோது, தாரிணிக்கும் அவளிடம் அந்த நெருக்கம் தோன்றத்தான் செய்தது.

பம்பாயிலிருந்து, கல்லூரி விடுமுறையில், கொடைக்கானலுக்குச் சுற்றுலா வந்தது, அப்போது சுரேந்திரனைச் சந்தித்தது, இருவருமே கடிதங்களில் உறவைத் தொடர்ந்தது, அவன் பம்பாய்க்குச் சென்று அவளைப் பார்த்தது, தாய்மொழி ஒன்றானாலும், இனம்வேறு என்று, அவளுடைய பெற்றோர் மறுத்தது, அவளது நடமாட்டத்தைக் கூடக் கட்டுப்படுத்தி, அவர்கள் இனத்தான் ஒருவனுக்கு மணமுடிக்க முயன்றது, அவள் தப்பியோடி வந்து சுரேனை மணந்தது... எல்லாமே, சுப முடிவுடன் கூடிய, ஓர் அருமையான காதல் கதையாகத்தான் இருந்தது.

ஆனால், திருமணத்துக்குப் பிறகுதான், எல்லாம் தலைகீழாகிவிட்டது.

சுரேந்திரனைப் பொறுத்த வரையில், திருமணமாகி விட்டது. இனி, அவன் தாயார், தங்கையைப் போல, மனைவியும் வீட்டோடு இருந்து கொள்ள வேண்டியது, அவ்வளவே, பொழுது போக்கிற்கு இருக்கவே இருக்கிறது, கேபிள் டீவி. அதற்கு மேல் என்ன வேண்டும்.

கிட்டத்தட்டத் தாரிணியின் நிலைமைதான். அவளுக்கும். கொஞ்சநாளில் அதே தவிப்பு ஏற்பட்டு விடுமா? இத்தனைக்கும், சுமனா விரும்பி மணந்தவள்! தாரிணி விஷயத்தில் அடிப்படையே வெறுப்பாயிற்றே!

ஆனால், சுமனா விஷயத்தில், இன்னொரு வேறுபாடும் இருந்தது.

மகனின் முடிவு பிடித்ததோ, இல்லையோ, மனுபரதனுடைய பெற்றோர், அதை மறுக்காமல் ஏற்றுக் கொண்டனர். மருமகள் என்று, அவர்களே அறிமுகப்படுத்தியதால், மற்றவர்களும் தாரிணியிடம் முகம் திருப்பியதில்லை!

ஆனால், சுமனா விஷயம் அப்படியிருக்க வில்லை. உடுத்திய துணியோடு வந்த சுமனாவை, சுரேந்திரன் வீட்டார் யாருக்கும் பிடிக்கவே இல்லை. சுரேந்திரன் முன்னிலையில், தவிர, அவர்கள் யாரும் அவளிடம் பேசுவதே இல்லை. அவர்களைப் பின்பற்றி, அந்தச் சமூகமும் அவளை வெளியாளாகவே நடத்தியது.

'நீ போய்ப் பேசுவதற்கென்ன?' என்பது, சுரேந்திரனின் வாதம். என்ன முயன்றாலும், அதைத் தட்டிக் கவிழ்ப்பதற்கென்று, அங்கேயே பிறந்து வளர்ந்தவர்கள் வேலை செய்யும்போது, என்ன முயன்று, என்ன பயன்?

கூடவே, இந்தக் குறுகல் மனக் கும்பலோடு பழகுவதில், அவளுக்கும், ஆர்வம் இருக்கவில்லை.

திரைப்படம், நாடகம், சபா என்று, முன்பு அனுபவித்த கேளிக்கைகளை, அவள் மனம் நாடியது. நகர்புறச் சந்தடிக்காக, ஏங்கித் தவித்தாள்.

தன் ஏக்கத்தை, அலுப்பு சலிப்புகளை, அவள் கணவனிடம் காட்ட, தன் வருத்தத்தை அவன் இவளிடம்

காட்ட, வீடு மட்டுமின்றி, உலகமே இருவருக்கும் நரகமாகிக் கொண்டு இருந்தது.

"நான் செய்த பெரிய தப்பு, 'உனக்காக உயிரை விடவும் தயார்' என்று வெளிப்படையாகச் சுரேனிடம் சொன்னது! பெண்ணின் அன்பை, அவளது பலவீனமாக எடுத்துக் கொள்கிறார்கள், இந்த ஆண்கள். என்ன புலம்பினாலும், கடைசியாக நம் காலடிதானே இவளுக்கு, என்ற திமிர்! ஊக்கத்தில் வைத்திருக்கும் வரைதான், உள்ளே பயமும் இருக்கும். அதனால், நான் செய்த தப்பை, நீ ஒரு நாளும் செய்யாதே" என்றாள் சுமனா.

ஏற்கனவே தாரிணிக்கு உள்ளூரக் குழப்பம்தான்.

சரியாகப் பார்த்தால், மனுபரதன், அவளை மணந்து கொண்ட முறைக்காகவே, தாரிணி அவனை வெறுக்க வேண்டும், ஆனால், முடியவில்லை!

பகலில், தனித்திருக்கும் போது, கணவன் இப்படிச் செய்தான், அப்படி மிரட்டினான் என்று, ஆத்திரம் வரத்தான் செய்யும். சுமனாவின் பேச்சு, அதற்கு எண்ணை ஊற்றும்.

ஆனால், மனுபரதனைக் கண்டுவிட்டால், எல்லாம் மறந்துபோகும். அவனது பேச்சும் சிரிப்பும், அணுகலும் அவளைச் சொர்க்கத்திற்கு அழைத்துப் போய்விடும்.

தன் இதழ்களாலும், உடலாலும், மனுபரதன் தன்னை ஒரு 'செக்ஸ்' அடிமையாக்கி விட்டானோ என்று கூட எண்ணி, அவ்வப்போது, தாரிணி மனம் குன்றுவதுண்டு.

ஆனால், அவன் அருகில் இருக்கையில், இப்படி-யெல்லாம் நினைத்தது கூட அவளுக்கு நினைவிராது.

ஆயினும், உள்ளத்தை அப்படியே அவனிடம் கொடுப்பதிலும் சிறுதடை இருக்கத்தான் செய்தது.

அவனும், அப்படி இருப்பதாகத்தான் அவளுக்குத் தோன்றியது.

கேலியும் சிரிப்புமாகப் பேசிய போதும், ஆரத்தழுவி அணைத்தபோதும், 'காதலிக்கிறேன்' என்ற மந்திர வார்த்தையை அவன் சொன்னதே கிடையாது!

எப்படிச் சொல்லுவான்? அவன் அவளை மணந்ததே, நந்தனைப் பழி வாங்குவதற்காகத் தானே? அந்தப் பழி வாங்கலையே, அவனுக்குச் சுகம் தரும் விதமாக மாற்றிக் கொண்டிருக்கிறான். இருவருக்கும் என்று வேண்டு-மானாலும் சொல்லிக் கொள்ளலாம். அவ்வளவு-தானே, என்று ஏக்கத்துடன் எண்ணினாள் தாரிணி.

அந்த எண்ணத்தை உறுதிப்படுத்தும் விதமாக, ஒன்று நடந்தது.

## 18

அன்று மாலை, அலுவலிலிருந்து திரும்பி வந்தவன், வழக்கமான கேலி சேட்டைகள் எதிலும் ஈடுபடாமல், தாரிணியை ஒருமாதிரிப் பார்த்தான்.

அவள் புரியாமல் நோக்கவும், பான்ட் பாக்கெட்டிலிருந்து, ஒரு தபால் உறையை எடுத்து, அவள் புறம் வைத்தான்.

உறை கிழிக்கப்பட்டிருந்தது.

"மற்றவர் கடிதத்தை, அது மனைவிக்கே வந்தது என்றாலும், அதைப் பிரித்துப் படிப்பது நாகரீகம் இல்லை என்பது எனக்கும் தெரியும்தான். ஆனால், இங்கே நிலவரமே வேறு உன் அண்ணன் விவரம் எனக்கும் தெரிந்தாக வேண்டும் என்பதால் பிரித்துப் படிக்கும் படியாயிற்று."

வெறும் விளக்கம் மட்டுமே, வருத்தம் தெரிவிப்பதுகூட, இவனுக்கு அவசியமாகப் படவில்லையே என்று உள்ளூரக் குமுறும் போதே, அண்ணனுக்கு, அவள் இங்கிருப்பது எப்படித் தெரியும் என்று, தாரிணியின் மனம் குழம்பியது.

அவசரமாகக் கவரை எடுத்துப் பார்த்தாள்.

கடிதம் சென்னையிலிருந்து இந்த முகவரிக்குத் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது, அதுவும், அலுவலக முகவரிக்கு!

எப்படி?

உள்ளிருந்த கடிதத்தை எடாமல், தாரிணி உறையைப் பார்த்ததுமே, மனுபரதன் சொன்னான். "உன் இருப்பிடம் இது என்கையில், கடிதங்களும் இங்கேதானே வர வேண்டும்? அதனால், சென்னை அஞ்சல் அலுவலகத்தில், இந்த முகவரி கொடுத்திருந்தேன்."

"இதில் இருப்பது, உங்கள் அலுவலக முகவரி!" என்றாள் அவள் ஏளனக் குரலில்.

லேசாக முகம் கன்ற, "நந்தகுமார் உனக்கு எழுதுவார் என்று எதிர்பார்த்தேன். அவர் விஷயம் எனக்குத் தெரிய வேண்டும். அதற்காகத்தான்" என்றான், அவன். "மற்றபடி உன்னை உளவு பார்ப்பதற்காக அல்ல" என்று சேர்த்துச் சொன்னான்.

இந்தக் கடைச் செருகல், தாரிணியை மட்டம் தட்டுவதற்காகவே சொன்னது.

சுமனாவோடு அவள் நடப்பது குறித்து, அவன் சற்று வெறுப்பாகப் பேசி, அவளைத் தடுக்க முயன்றான்.

நேரடியாக அவனிடம் மறுக்க முடியாமல், அவன் தன்னை உளவு பார்ப்பதாகச் சொல்லி, வேறு விதமாகத் தாக்கினாள், தாரிணி.

பார்த்தவர்கள் தெரிவித்தார்களே தவிர,அவனாக, அவளது நடமாட்டத்தைக் கண்காணிக்கவில்லை, என்று, மனுபரதன் விளக்கியதோடு, அப்போதையப் பேச்சு முடிந்தது.

அன்று, அவள் அநியாயமாகக் குற்றம் சாட்டியதை, இப்போது, அவள் வாயை மூடுவதற்கு, அவன் பயன்படுத்திக் கொண்டான்.

உள்ளூரப் பொறுமினாலும் ஒன்றும் சொல்லத் தோன்றாமல், அண்ணனின் கடிதத்தை எடுத்துப் பிரித்தாள், தாரிணி.

நந்தகுமாரன், முக்கியமாக எதையும் எழுதவில்லை. மஞ்சரியைப் பற்றி, அவன் ஒரு வார்த்தை கூட எழுதாதது, தாரிணிக்கு ஏமாற்றம்தான். ஆயினும், இப்படி அடுத்தவர் கடிதத்தைப் படிக்கிறவர் இருக்கிறபோது, அண்ணன் எழுதாததும் நல்லதுதானே?

அந்தமான் வேலையை ஏற்று, அங்கே சென்று விட்டதாகவும், திரும்பிவர, ஒருமாதம் ஆகும் என்றும், பொன்னுத்தாயியின் உதவியோடு, ஜாக்கிரதையாக இருந்து கொள்ளுமாறும், சுருக்கமாக எழுதியிருந்தான்.

சட்டென மனதில் பரவிய ஓர் ஏமாற்றம், அவளது இதயத்தைப் பளுவாக உணர வைத்தது.

அண்ணனைப் பார்க்க, அவள் எப்படித் துடித்தாள்!

அவனுக்கு, அந்த ஆவலே இல்லை போலத் தெரிகிறதே! சும்மா, ஒரு சொல்லுக்காகக் கூட, 'உன்னை எப்போது பார்ப்போம் என்று இருக்கிறது' என்று எழுதவில்லையே!

அவனது முந்தைய கடிதத்துடன் ஒப்பிட்டால்... மனைவியின் இடம், மிக முக்கியமானதுதான். ஆனால், அதற்காகத் தங்கை தூரே போய்விடுவாளா?

எண்ணும்போதே, மனம் சுட்டது.

இங்கே வந்து. இவ்வளவு நாட்களில், நந்தனை அவள் நினைத்தது, எத்தனை தடவை?

சொல்லப் போனால், அவளை விட நந்தகுமாருக்குப் பாசம் அதிகம்தான். நினைவு வைத்துக் கடிதம் எழுதியிருக்கிறான். எச்சரிக்கையோடு இருக்கச் சொல்லியிருக்கிறான்! இதற்குமேல், வெளியூரில் இருக்கும் ஓர் அண்ணன் செய்ய என்ன இருக்கிறது.

நந்தன் திரும்பி வந்து, நடந்ததை எல்லாம் அறியும்போது, எவ்வளவு வேதனைப்படுவான், பாவம்!

அத்தனை வேதனைக்கும் காரணம் இவன்தானே என்ற ஆத்திரத்தில், ஜன்னல் அருகே வெளியே நோக்கியபடி நின்ற மனுபரதனைப் பார்க்கக் கூடப் பிடிக்காமல், தாரிணி பட்டெனத் திரும்பி, அறையை விட்டு வெளியே சென்று விட்டாள்.

இந்தக் கோபம், அவளுக்கு, இரண்டு மூன்று நாட்கள் வரை நீடித்தது.

கணவனை நிமிர்ந்து பாராமல், 'உண்டு இல்லை'க்கு மேல் வேறு பதில் சொல்லாமல், சுற்றிக் கொண்டிருந்தாள். அவனும், அவளைச் சமாதானப்படுத்த அதிகம் முயலவில்லை.

அந்த அளவு தான் முக்கியம் இல்லையோ, அல்லது மஞ்சரி நினைவோ என்று தாரிணி அதற்கும் மனம் குமைந்தாள்.

அன்று காலையில் கிளம்பும்போது, மதுரை செல்ல இருப்பதாகக் கூறியவன் திரும்பி வரும்போது, சில நகைகளுடன் திரும்பி வந்தான்.

ஓர் அழகிய முத்துமாலை. அதில் அங்கங்கே, தங்கப் பூக்கள், பூக்களின் நடுவே நவரத்தினங்கள் பளிச்சிட்டன. பொருத்தமான காதணிகள், அடுத்து பவளமும் கருமணியும் அடுத்தடுத்து தொடுக்கப்பட்டிருந்த புதுமாதிரியான, கழுத்தணி அதுவும் செட்தான்.

இரண்டுமே, பார்க்க மிக அழகாக இருந்தபோதும்; தாரிணிக்குக் கோபம்தான் வந்தது.

இந்தத் தாரிணியை இவன் என்னவென்று எண்ணினான்?

அவள் இரண்டு நாட்களாகச் சரியாகப் பேசவில்லை. அதற்காக இரண்டு நகையைக் கொண்டு வந்து கொடுத்தால் 'ஈ' யென்று இளித்து விடுவாளாமா?

ஆத்திரத்துடன், "என்னை விலைக்கு வாங்கப் பார்க்கிறீர்களா?" என்று கூறினாள்.

அவனுக்கு முகம் கடுத்து, "என்ன உளறுகிறாய்?" என்றான் பதிலுக்கு, "ஒரு நகையால் வாங்கிவிடக் கூடிய அளவு மோசமானவளாகவா, உன்னை மதிப்பிட்டிருக்கிறேன் என்கிறாய்? என்ன முட்டாள்தனம்?" என்று கோபமாகக் கேட்கவும் தாரிணிக்கு வாயடைத்துப் போயிற்று.

தொடர்ந்து, "அத்தோடு, எனக்கு நகை வாங்குவது என்று நினைத்தால், இப்படியா வாங்குவேன்? இந்த இரண்டும் சேர்த்தே மொத்தம் பத்தாயிரம் ஆகவில்லை தெரியுமா? அம்மா செய்யக் கொடுத்திருந்த நகையை வாங்கி வரப் போனேன். பணம் கொடுக்கப் போனபோது, இடையே 'ஷோ கேசி'ல் இவைகளைப் பார்த்தேன். பார்த்ததும், உனக்கு நன்றாயிருக்கும் என்று தோன்றியது. உடனே, சேர்த்து பில் போடச் சொல்லி வாங்கி

வந்துவிட்டேன். இதைப் போய்...ச்சு" என்றவன் நகைப் பெட்டிகளை அவள் அருகில் வைத்துவிட்டுச் சென்றுவிட்டான்.

தாரிணிக்கு ஒரு மாதிரியாகி விட்டது.

மஞ்சரியை நினைத்துக் கொண்டிருக்கிறானோ என்று, வருந்திக் கொண்டிருந்தால், மனுபரதன், அவளைப் பற்றிய ஞாபகமே இல்லாமல், மனைவிக்கு நகை வாங்கியிருக்கிறான்!

கழிவிரக்கம் மிஞ்சி விடக் கணவனைச் சமாதானப்படுத்தும் முயற்சியில், தாரிணி ஈடுபட்டாள்.

அன்றைய இரவு டின்னருக்கு, முத்துசெட்டை அணிந்து, "மதுரையிலிருந்து மனு, எனக்கு வாங்கி வந்தது. நன்றாயிருக்கிறதா, அத்தை?" என்று வினவி, மனுபரதனைக் கெஞ்சுதலாக அவள் ஒரு பார்வை பார்க்கவும், எல்லாமே சரியாகி விட்டது.

அப்புறம் கொஞ்ச நாள் பிரச்சினை எதுவுமின்றிப் போயிற்று.

கணவன் சொன்ன மாதிரிப் பொழுது போக்கிற்கான எதையும் கண்டுபிடிக்க முடியாமல், 'அலுவலகத்துக்கு வந்து வேலை செய்யட்டுமா' என்று தாரிணி கேட்டுப் பார்த்தாள்.

ஆனால், இந்தக் குடும்பங்களில் அது பழக்கமில்லை என்று, மனுபரதன் மறுத்துவிட்டான். 'சம்பளம் கொடுக்கப் பணம் இல்லாமல், மனைவியை வேலை வாங்குகிறாயா?' என்பார்களாம்.

மற்றவர்கள் என்ன சொன்னால்,நமக்கென்ன என்றால், அவர்கள் நடுவே வாழ்ந்து கொண்டு, அதையெல்லாம்

பாராமல் இருக்க முடியாது என்று முடித்துவிட்டான், மனுபரதன்.

என்ன செய்வது என்று யோசித்துவிட்டுத் தோட்ட வேலையில் ஈடுபட்டாள், அவள்.

கற்றாழையில் விதவிதமாகச் சேகரித்து, உரமிட்டு வளர்ப்பது, மாமியார் ரஞ்சிதத்தின் 'ஹாபி' யாக இருந்தது. தொட்டி, தொட்டியாக, அவற்றை வரிசையாக அடுக்கி வைத்திருப்பாள். எங்கேனும் புதுமாதிரியாக இன்னொன்று கிடைத்தால், அடுத்த வரிசை தொடங்கும்.

சற்று யோசித்துவிட்டு, ஒரு நாள் மாமியாரிடம் சென்று, 'கற்றாழைகளை வேறு விதமாக அடுக்கட்டுமா' என்று கேட்டாள்.

உட்கார்ந்து கலகலப்பாக பேசியது இல்லை என்றாலும், ரஞ்சிதம், மருமகளை அலட்சியப் படுத்தியதும் கிடையாது. அந்த தைரியத்தில் கேட்டுவிட்ட போதும், தாரிணிக்கு, உள்ளூர உதைப்புதான்.

கேலி மாதிரி ஏதாவது பேச வேண்டும் என்று நினைத்தால், தன்னை விடவே மனைவிக்குக் கற்றாழை தினுசுகள்தான் மேல் என்பார், மாமனார், 'என் கற்றாழைகளை நீ என்னடி தொடுவது' என்று சீறிவிட்டால்?

நல்ல வேளையாக, அந்த அம்மாள், அப்படி எதுவும் சொல்லவில்லை. "செய்யேன். நான்கூட, இதையெல்லாம், இன்னும் அழகாக வைக்கலாமோ, என்று யோசிப்பேன். நேரம் இல்லாததால் ஒன்றும் செய்ய முடியவில்லை, என்ன மாதிரி வைக்கலாம் என்கிறாய்?" என்று விசாரித்தாள்.

தாரிணி கூறிய அமைப்பு அவளுக்கு, மிகவும் பிடித்துப் போய்விட, "செய்" என்று, அனுமதியும் கொடுத்தாள்.

"செடி மட்டும் உடைந்து விடாமல் பார்த்துக் கொள்" என்று கவனப்படுத்தியதோடு சரி.

தாரிணி உற்சாகத்தோடு வேலை செய்தாள். வேலையாட்களும், புது எஜமானி சொன்னதைச் செய்ய .ஆவலாக முன் வந்தனர்.

பெரிய, உயரமான கற்றாழைகளை நடுவிலும், .அவற்றைச் சுற்றி, உயரவாரியாக, மற்றவற்றையும், வட்ட வட்டமாக, உள்ளே வரையிலும் சென்று பார்க்க ஒவ்வொரு வட்டத்திலும் அங்கங்கே வழி வைத்து அடுக்கி முடித்தபின் வந்து பார்த்த ரஞ்சிதம் மிகவும் மகிழ்ச்சியடைந்ததோடு, தோட்ட முழுமையையுமே, தாரிணியின் விருப்பம் போல, மாற்றி அமைத்துக் கொள்ளச் சொன்னாள்.

"மாமியார் மெச்சிய மருமகளா?" என்று, மனுபரதன் கேலி செய்தான்.

இதுபற்றி, சுமனாவிடம் தாரிணி கூறியபோது, "பரவாயில்லையே, தோட்டத்தில் ஒரு பூவைப் பறித்துத் தலையில் வைத்தால்கூட என் மாமியார் குதிப்பாள். மகன் முன்னிலையில் மட்டும், 'இந்தாம்மா' என்று, நீட்டும்" என்றார் வெறுப்புடன்.

"நீ வேண்டுமானால் பார், தாரிணி, ஒருநாள் தற்கொலை செய்து கொண்டு சாகப் போகிறேன். அன்றைக்கு, என் மாமியார், பாயசம் வைத்துச் சாப்பிடுவாள்" என்றாள் கசப்புடன்.

சொல்லும்போது, அவள் முகத்தைப் பார்த்த தாரிணிக்குக் கவலையாக இருந்தது.

தன் கவலையை, அவள் கணவனிடம் சொன்னபோது, அவன் அக்கறையற்றுத் தோளைக் குலுக்கினான்.

"அதெல்லாமில்லை சுமனாவுக்கு வேறு ஆசை. எப்படியாவது, சுரேனை இழுத்துக் கொண்டு நகர்புறம் சென்றுவிட வேண்டும்! வீடும் தொழிலும் இங்கே இருக்க. அவன் நகரத்தில் போய்ச் சாப்பாட்டுக்கு என்ன செய்வான்? அதை யோசிக்க வேண்டாம்? சும்மா 'கிளம்பு, கிளம்பு' என்று, அவன் உயிரை எடுத்துக் கொண்டிருக்-கிறாள்!" என்றான், எரிச்சலுடன்.

"அதில்லை, மனு, அவள் மாமியாருக்கு, முதலிலிருந்தே, சுமனாவைப் பிடிக்கவில்லையாம், உடுத்தத் துணியோடு வந்தாள் என்ற வெறுப்பாம்"

"இருக்கலாம். அந்த ஆன்ட்டி கொஞ்சம் ஒரு மாதிரிதான். ஆனால், அவளும் மனுஷி தானே?"

"அவளிடமும் ஏதாவது விளக்கம் இருக்கும்தானே? அதைக் கண்டுபிடித்து அதற்கு ஏற்ப நடந்து கொண்டால், தானாகப் பிரியம் காட்டி விட்டுப் போகிறாள். இப்போது, நீ செய்யவில்லையா, 'லேடிஸ் கிளப்' பில் கூட அம்மா உன் புகழ்தான் பாடுகிறார்களாம். கேள்விப்பட்டேன். அது போல முயற்சிப்பதை விட்டு. செத்து விடுவேன் அது இதென்று சுரேனைப் போய் வதைக்கிறாளே! உன்னால், முடிந்தால் அவளுக்குப் புத்தி சொல்" என்று முடித்து விட்டான் அவன்.

சுமனா விஷயம் கவலையைத்தந்த போதும், கணவனின் புகழ்ச்சி, தாரிணியை உச்சி குளிர வைத்தது உண்மை!

அவன் கூறியது போல, சுமனாவிடம், லேசாகச் சொல்லிப் பார்த்தாள். ஆனால், அவளோ, அதைக் காது கொடுத்துக் கேட்பதாகவே இல்லை.!

தோட்ட வேலையில் முதல் முயற்சி வெற்றி தரவே, மற்ற விதங்களிலும் கற்றாழை வட்டத்தைச் சுற்றிப் புல்தரை,

காரோடும் பாதை நெடுகிலும் லேடீஸ் லேஸ், அங்கங்கே, புதர்போலப் பூச்செடிகள் என்று வைக்கத் தொடங்கினாள், தாரிணி. தோட்டம், வீடு பற்றித்தான் இப்போது, ரஞ்சிதம் மருமகளுக்கு, முழு சுதந்திரம் கொடுத்துவிட்டாளே!

இந்த வேலைகளின் போது, தாரிணி, தானும் கூட இருந்து வேலை செய்வாள்.

ஒருநாள், அந்த மிதக் குளிரிலும் பொங்கிய வியர்வையைத் துடைத்தபடி, அவள் நின்றபோது "பாட்டி-யம்மா கூப்பிடுறாங்க" என்று ஒருத்தி வந்து அழைத்தாள்.

இந்த நேரடி அழைப்பை மறுக்க முடியாது. வீட்டுத் தலைவரான மகேந்திரனும், அவர் மனைவியும், தினமும், ஒரு வேளையாவது வந்து பார்த்துவிட்டுப் போகிறார்கள். மனுபரதனைப் பற்றிக் கேட்கவே தேவையில்லை. 'நீயும் வா,' என்று, அவ்வப்போது, தாரிணியையும் அழைத்துச் செல்வான், அவன் கூடவே சென்று, அவன் நிழலாய்த் திரும்பி விடுவாள், தாரிணி.

வீட்டாரே ஒத்துக் கொண்ட ஒரு சின்ன வீட்டுக்காரி-யிடம் அவள் முகம் திருப்பக் காரணம் இல்லை. ஆயினும், இந்த இரண்டாவது என்பதை அவளால் ஏற்க முடியவில்லை.

வேறு வழியின்றி, சின்னத்தாவின் தோட்ட வீட்டுக்கு தாரிணி சென்றாள்.

"வாம்மா, ரொம்பவும் வியர்த்துவிட்டதே, கொஞ்சம் பானகம் கொடுக்கலாம் என்று கூப்பிட்டேன் உட்கார்ந்து குடி" என்று உபசரித்தாள், சிங்காரி அம்மாள்.

கையில் பானத்தோடு அமர்ந்தவளுக்கு மனுபரத-னுடைய உண்மையான பாட்டியின் படம் நினைவு வந்தது, அமைதியான முகம்.

அப்படிப் பார்த்தால், இந்தச் சின்னாத்தாவுக்கும் அமைதியான முகம் தான்!

"என்னம்மா, ஒண்ட வந்தவளோட, என்ன பேச்சுன்னு நினைக்கறியா, தாயி?" என்று சின்னாத்தா கேட்கவும், தாரிணி திகைத்துப் போனாள்.

இதற்கு, என்ன பதில் சொல்வது?

"நான் அந்த வீட்டுக்கு அதிகம் வருவதில்லை. யாருன்னு கேட்டால் எல்லாம் விளக்கியாகணும். இவங்க குடும்பம் வேற. ரொம்பக் கவுரவம் பார்க்கிற குடும்பம். ஒரொருத்தர் ஒரொரு மாதிரி நினைக்கலாம்... நினைக்கிறதிலே, என்ன தப்பு என்று தோணுதா."

"தோன்றுவது தப்பா?" என்று கேட்டு விட்டு நாக்கைக் கடித்துக் கொண்டாள் தாரிணி.

ஒரு பெருமூச்சுடன், 'இல்லை' என்பது போலத் தலையசைத்தாள், பெரியவள்.

பிறகு, தாரிணியைப் பார்த்து முறுவலித்து, "ஏதோ, முனிவர் மகன் கதையெல்லாம், எனக்கு ஆதரவாகச் சொன்னியாமே, சின்னத்தம்பி சொன்னான்.!" என்றாள்.

"உயிருக்குத் துணிந்து உதவியவளை அலட்சியப்படுத்தியது பற்றிச் சொன்னேன். மனு பாட்டி முன், நீங்கள் உட்கார மாட்டீர்கள் என்றதும், எரிச்சல் வந்ததால்..."

முதியவளின் பார்வை எங்கோ சென்றது. "ஆமாம். உட்கார மாட்டேன்" என்றாள். தனக்குத் தானே பேசிக் கொள்வது போல, "எப்படி, உட்காருவது? ஒரு தப்பும் செய்யாதவர்களுக்கு அநியாயம் செய்து விட்டு, அவர்களுக்குச் சமம் என்று எப்படி நினைப்பது? தம்பியோட தாத்தா, என்கிட்ட வரும் போதெல்லாம், மனசு

இடிக்கும். இப்படிக் கூட இருக்க வேண்டியவங்க மனசு என்ன பாடு பட்டுக்கிட்டு இருக்கும் என்று தவிக்கும்.! அதனாலேயே அவங்க எவ்வளவோ பெருந்தன்மையா நடந்த போதும், நான் அதையெல்லாம் பயன்படுத்திக் கிட்டது இல்லை. 'அக்கா'ன்னு கூப்பிடச் சொன்னாங்க. 'அம்மா'ன்னுதான் சொல்லுவேன். உடம்பு சரியில்லாதவங்களுக்கு, என்னால் முடிந்த அளவு உழைத்து, வேலை பார்த்தேன். அவங்களே பிள்ளையைப் பிடித்து, என் கையிலே தந்து விட்டாங்க. மகியை... என் புருஷனோட அப்பாவை, அன்னைக்கு எனக்கு எப்படி இருந்தது தெரியுமா? அழுதிட்டேன். என் தப்பையெல்லாம் அவங்க மன்னித்துவிட்ட மாதிரி ஒரு நிம்மதி. அவனை என் பிள்ளையாகத்தான் வளர்த்தேன். பெத்திருந்தால் கூட இவ்வளவு அருமையா வளர்த்திருக்க மாட்டேன்.! சின்னத்தம்பியையும் நானேதான்.. என் பேரனாவேதான்..."

சின்னாத்தாவின் பேச்சு நின்றபோது, தாரிணி திகைத்துப் போயிருந்தாள்.!

## 19

சின்னவீடு என்று ஏளனமாக நினைத்தாளே.! வசதிக்காக ஒண்ட வந்தவள் என்று எண்ணியது எவ்வளவு பிசகு.! உள்ளூர எவ்வளவு துன்புற்றிருக்கிறாள்.! இந்த வயதிலும், மற்றவர் முன் குடும்பத்தினர் சங்கடப்பட்டு விடக்கூடாது என்று ஒதுங்கியிருக்க, எவ்வளவு நல்ல மனம் வேண்டும்?!

குடும்பத்தில், சின்னாத்தாவை மதித்ததன் காரணம் கூடப் பெரியவர் எழுதி வைத்துவிட்ட சொத்துக்காக இருக்கும் என்று, தப்பாக நினைத்தாளே.! கடைசியில் மனுபரதன் சொன்னதுதான் சரியாகிப் போயிற்று.!

அதன் பிறகு தாரிணி அவ்வப்போது, சின்னாத்தாவின்

தோட்ட வீட்டுக்குப் போய், அவளோடு பேசிக் கொண்டி-ருக்கலானாள்.

பிள்ளை, பேரன் என்று சிங்காரி அம்மாள் பேசும் போது, இந்தப் பெண்மணி ரத்த சம்பந்தம் இல்லாதவள் என்பதே, தாரிணிக்கு மறந்து போயிற்று...

இருவரும் நிறையக் கதை பேசினார்கள்.

தன் வாழ்வு திசை மாறிய விதம் பற்றிக் கூட மறைக்காமல், தாரிணியிடம் சொன்னாள் பெரியவள்.

"எங்கள் குடும்பம், கொஞ்சம் தாழ்ந்த இனம், வீட்டுக்குப் பணம் தேவைப்பட்டது. நான் வேலை பார்த்துக் கொண்டு வந்த பணம் பத்தவில்லை. இங்கே, அம்மா நோயாளியாகி, வீட்டய்யாவுக்கு ஒரு துணை தேவைப்பட்டது. எங்க அப்பாதான் எல்லா ஏற்பாடும் பண்ணினார். அந்தக் காலத்திலே, இதை ரொம்பப் பெரிய தப்பாக நினைக்கிறது இல்லை"

"அப்படிச் சொல்ல முடியுமா, சின்னாத்தா? ராமர்,ஒரே மனைவியுடன் வாழ்ந்து காட்டவில்லையா?" என்று வாதிட்டாள் தாரிணி.

"அதைத்தான், அடுத்த அவதாரத்திலேயே, கிருஷ்ணராக, நிறையப் பெண்களை மணப்பவராக மாற்றி விட்டார்களே," என்று உடனடியாக வந்த பதிலில் திகைத்தும் போனாள்.

"அப்படியானால், இரண்டையுமே நீங்கள் நம்பவில்லையா?" என்று, ஆச்சரியத்துடன் வினவினாள்.

"நம்பாமல் என்னம்மா? கடவுள் என்று, ஒருவர் இருக்கிறார். அவரவர் விருப்பப்பட்ட விதத்தில் அவரை வணங்கிக் கொள்ள வேண்டியதுதான்." என்று முடித்தாள் சிங்காரி அம்மாள்.

தாரிணியின் பழக்கம் ஒரு சத்துணவு மாதிரி. முதியவளும் தெம்புடன் நடமாடலானாள். ஊர்க்-கோயிலில் மனுபரதனுக்காக ஒரு நேர்த்திக் கடன் பாக்கி என்று, அதைச் செய்வதற்குக் கிளம்பத் தொடங்கினாள்.

தாரிணி கவலையுற்றுக் கேட்ட போது, "சின்னாத்தாவுக்கு, இது பழக்கம்தான்" என்றான், மனுபரதன்.

"எனக்கோ, அப்பாவுக்கோ கொஞ்சம் உடம்பு சரியில்லாமல் போனாலும், கடவுள் பாடு வேட்டைதான். சின்னாத்தா ஏதோ நேர்ந்து விடுவார்கள். அப்பாவுக்கு டைஃபாய்ட் வந்தபோது திருப்பதிக்குப் போய், மொட்டையடித்துக் கொண்டு வந்தார்கள்." என்று பெருமிதமாய்ச் சிரித்தான்.

"ஆனால், இந்த வயதில் எப்படி?"

"கவலைப்படாதே, டாக்டர் செக்கப் பண்ணி, ஒரு நர்சுடன் தான், அப்பா, சின்னாத்தாவை எங்கேயும் அனுப்புவார்" என்று அவன் கூறிய பிறகுதான் அவளுக்கு நிம்மதியாயிற்று.

இது பற்றி, சின்னாத்தாவிடம் சொன்னபோது, அவள் சிரித்தாள்.

"இது ஒரு கூத்து மகி எப்போதும் அடிப்பதுதான்" என்று சிரித்தபோதும், முகத்தில் பூரிப்பும் இருந்தது.

மனுபரதனின் பெருமிதமும், சின்னாத்தாவின் பூரிப்பும் எண்ணிப் பார்க்க, எல்லாமே புரிந்துவிட, தாரிணிக்கும் மகிழ்ச்சியாகவே இருந்தது, அவள் விஷயமும்தான்.

கணவன், அவனுடைய பெற்றோர், பாட்டி எல்லோருமே அவளிடம் பிரியமாக இருக்கும்போது அவளுக்கு வேறு என்ன வேண்டும்.

அண்ணன் திரும்பி வந்து, அவன் மகிழ்ச்சியோடு இருப்பதையும் பார்த்து விட்டால், அதன் பிறகு நிம்மதி முழுமையாகிவிடும்.

உள்ளே, ஒரு சிறு நெருடல் மட்டும்.

மனுபரதனின் மனதிலிருந்து, பழிவெறி அடியோடு மறைந்து விட்டதா இல்லையா? அண்ணனைப் பழி தீர்க்க வென்று மணந்தவளிடம், உண்மையான அன்பு உண்டாகி இருக்கக்கூடுமா?

அல்லது, மனைவியாகி விட்டவளுக்குக் கடமை மட்டும் செலுத்துக்கிறானா?

இது மட்டும் தெளிவாகி விடுமானால்... இந்த மண்ணுலகமே தாரிணிக்குச் சொர்க்கம் ஆகி விடும்!

திடுமென ஒரு நாள், சுமனா தூக்க மாத்திரை சாப்பிட்டுவிட்டதாக, மனுபரதனுக்குச் சுரேந்திரன் ஃபோன் செய்தான். சரியான நேரத்தில் கண்டுபிடித்து, மருத்துவமனையில் சேர்த்துச் சிகிச்சை செய்ததில் பிழைத்து விட்டாளாம்.

தொடர்ந்து, சற்று நேரம் நண்பனோடு பேசிவிட்டு, "நீயும் வா," என்று மனுபரதன், மனைவியையும் கூட அழைத்துச் சென்றான்.

செல்லும் வழியெல்லாம், சுமனாவுக்கு அர்ச்சனைதான்.

குடும்ப விஷயங்கள், வீட்டுக்குள் இருக்க வேண்டுமாம். இவள் தூக்க மாத்திரை தின்று மருத்துவமனைக்குச் செல்லும்படி நேர்ந்ததால், இப்போது ஊரெல்லாம் நாறப் போகிறதாம்!

குடும்ப கௌரவத்தைப் பற்றிய எண்ணமே இல்லாமல், பொறுப்பில்லாமல் நடந்து கொண்டாளாம்!

தாரிணிக்குக் கேட்கக் கஷ்டமாக இருந்தது.

தூக்கமாத்திரை என்ன சாக்கலேட்டா, விரும்பி உண்பதற்கு? ஓர் இருபத்தி நாலு வயதே ஆன இளம் பெண், எதிர்காலமே வேண்டாம் என்று சாக முயன்றாள் என்றால், அவள் எவ்வளவு வேதனைப்பட்டிருக்கவேண்டும்?

குடும்ப கௌரவம் குடும்ப கௌரவம் என்று குதிக்கிறவனிடம், இதைச் சொல்லிப் பயன் இராதென்று உணர்ந்து "இப்போது என்ன செய்வது?" என்று கேட்டாள்.

"என்ன செய்ய முடியும்? வேண்டுமானால், கொடைக்கானலில், தனியாகக் குடி வைக்கலாம். அதையும், உடனே வைத்தால், வீட்டுக்குள் சண்டை என்று பேச்சாகி விடும். அது வேறு அசிங்கம்.! கொஞ்ச நாள் பொறுத்துக் கொள்ள சொல், பிறகு பார்க்கலாம்" என்றான், அவன் எரிச்சல் மறையாத குரலில்.

சோர்ந்து கிடந்த சுமனாவிடம், இனி இது போன்ற முயற்சி ஏதும் செய்வதில்லை என்று வாக்கு வாங்கிக் கொண்டு வீடு திரும்பினாள் தாரிணி.

குடும்ப மானம், கௌரவத்தைக் கணவன் எவ்வளவு உயர்வாக மதிக்கிறான் என்பதைத் தாரிணி இந்தச் சம்பவத்தின் மூலம் அறிய நேர்ந்தது. முன்பின் அறியாத-வளான தன்னைக் கட்டாயப்படுத்தித் திருமணம் செய்ததையும் நன்றாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

நாலுபேர் கேவலமாகப் பேசக்கூடும் என்பதற்காகவே, இந்தத் திருமணத்தை அவன் உடைய விட மாட்டான் என்பது ஆறுதலையும், அதே சமயத்தில் வேதனையையும் தந்தது.

என்ன நடந்தாலும், வாழ்நாள் முழுவதும், மனுபரதனோடு இருப்போம் என்பதில் ஆறுதல்.!

ஆனால், அந்த இணைப்பு அவளிடம் உள்ள நேசத்துக்காக அல்ல என்பதில் வேதனை.!

அந்த அன்பை உண்டு பண்ணிவிட வேண்டும் என்கிற எண்ணம் தோன்றியது. பண்ண முடியும் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது.

மனம் என்பது கண்ணாடிதான்.! அன்பு, வெறுப்பு, கோபம் எதை, அதனிடம் காட்டினாலும், அதையே திருப்பி அளிக்கும்.

தாரிணியின் மனதிலிருப்பது நேசம், உயிர் நேசம்! அவள், அதை அவனுக்குக் கொடுக்கும்போது, அவனும் அதைத்தானே திருப்பிக் கொடுத்தாக வேண்டும்.

இந்த யோசனையில் ஈடுபட்டிருக்கும்போதுதான், தாரிணிக்கு, இன்னொன்றும் புரிந்தது.

கட்டாயக் கல்யாணம் செய்த தன் பொல்லாத கணவனை, அவள் நேசிக்கத் தொடங்கியிருந்தாள்.!

தனக்குள் செய்து கொண்ட உறுதியின்படி, கணவன் மனதில் காதலைத் தூண்டும் முயற்சியைத் தாரிணி தொடங்கும்போதே, அதற்கு ஒரு தடை நேர்ந்தது.

அன்று அலுவலில் இருந்து திரும்பி வந்த மனுபரதன், ஏற்றுமதிக்கான் அனுமதி விஷயமாக, மறுநாள் அவன் டெல்லிக்குப் போவதாகவும், ஒரு வாரம் வரை, அங்கே தங்க வேண்டியிருக்கும் என்றும் கூறவும் தாரிணியின் முகம் வாடிவிட்டது.

மனதைக் காட்டிக் கொள்ளாமல், பயணத்துக்குத் தேவையான பொருட்களை எடுத்து வைப்பதில் கணவனுக்கு உதவி செய்தாள்.

பெட்டியை அடுக்கி முடித்து விட்டு, கையோடு

கொண்டு வந்திருந்த ஃபைலில் அவன் மூழ்கி விட, அவள் பொம்மையெனப் பேசாமல் உட்கார்ந்திருந்தாள்.

ஒரு வாரம்.! ஏழு நாட்கள்!

இவனைப் பாராமல் எப்படி இருப்பது?

மனுபரதனைப் பற்றி அறியாமலே, எத்தனை ஆண்டுகள் இருந்தாள் என்பதை, அவளுக்கு நினைக்கத் தோன்றவில்லை! அவனை மணந்து, முழுதாக ஒரு மாதம் கூட ஆக வில்லை என்பதும் அவளது எண்ணத்தில் வரவில்லை.

நாளை சென்றால், அவன் திரும்பி வர, ஏழு நாட்கள் ஆகும். அத்தனை நாட்கள் அவனைப் பார்க்க முடியாது! அவள் மட்டும். இங்கே தனியாகக் கிடக்க வேண்டும்.!

வேலை நடுவே, மனைவியை ஒரு தரம் திரும்பிப் பார்த்த மனுபரதன். கையிலிருந்த ஃபைலை மூடி வைத்தான். டெலிஃபோனை எடுத்து ஏதோ பேசினான்.

பிறகு எழுந்து மனைவியிடம் சென்றான்.

அவளைக் கையைப் பிடித்து எழுப்பி, "நான் நாளைக்கு டெல்லிக்குப் போகவில்லை" என்றான்.

கண்கள் பளிச்சிட, அவள் விழி மலர்த்தி நோக்கிவிட்டு, உடனேயே "வேலை...?" என்று கவலையுடன் கேட்டாள்.

மனைவியை அணைத்தவாறு, "நாளை, நாம் இருவரும் சேர்ந்து அங்கே போகிறோம். ஆனால், இப்போதே எச்சரித்து விடுகிறேன். பகல் முழுவதும் எனக்கு வேலை இருக்கும். நீ தனியாகத்தான், அறையில் அடைந்து கிடக்க வேண்டும்.!" என்றுரைத்து, அவளை முத்தமிட்டான்.

எண்ணியதைவிட, இரண்டு நாட்கள் அதிகமாகவே, டெல்லியில் தங்க நேர்ந்தது.

“எல்லாம் நாமே பார்ப்பது என்பதால், இழுக்கிறது, அடிப்படை வேலைகளைக் கவனிப்பதற்கு, இங்கே யாரையாவது ஏற்பாடு பண்ண வேண்டும்.” என்று மனுபரதன் அலுப்புடன் கூறியதும், தாரிணிக்கு ஓர் ஐடியா தோன்றியது.

“இந்த ஏற்றுமதி பிசினஸ், நீங்கள், சின்னவர்கள் சேர்ந்து கூட்டாகச் செய்வதுதானே? சுமனா கணவரை இங்கே இருக்கச் சொல்லி, அவரிடம் இங்குள்ள பொறுப்பை ஒப்படைக்கலாமில்லையா?” என்று கணவனிடம் கேட்டாள்.

அவள் எதிர்பார்த்தது போல மனுபரதன், அவளது கருத்தை உடனே ஏற்றுக் கொள்ளவும் இல்லை. அது ஒரு நல்ல கருத்து என்பது போலக் காட்டிக் கொள்ளவுமில்லை.

மாறாக, அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு, “பக்கத்து இலைக்குப் பாயாசம் போடச் சொல்கிறாயா?” என்று ஒரு மாதிரிக் குரலில் கேட்டான்.

சற்று யோசித்துவிட்டு, “கேள்வி புரியவில்லை, நகர வாழ்க்கை ஆசை என்று, நான் ஒருநாளும் சொன்னதில்லையே.!” என்றாள் தாரிணி.

ஒரு சிறு மௌனத்தின் பின், “ஆசை வந்து, அதைக் குறிப்பாய்ச் சொல்கிறாயோ என்று ஒரு கணம் கலங்கி விட்டேன்.” என்று விளக்கிவிட்டு, “உன் ஐடியா நன்றாகத்தான் இருக்கிறது. சுரேன் பிரச்சினையும் தீரும், பார்ப்போம்” என்றான் அவன்.

நினைத்ததை உடனே செய்கிறவன் மனுபரதன். டெல்லியில் இருந்தவாறே, இது விஷயமாகப் பேச வேண்டியவர்களிடம் பேசி ஏற்பாடு செய்துவிட, இருவரும்

திரும்பிச் சென்ற போது, நெஞ்சு நிறைந்த நன்றியும் மகிழ்ச்சியுமாக, சுமனா காத்திருந்தாள்.

சுரேந்திரனும்தான்!

"சுரேனை நிம்மதியாக வேலை செய்ய விட்டீர்களானால், அதுதான், நீங்களும் எங்களுக்குக் காட்டுகிற நன்றி" என்றான், மனுபரதன் பேச்சில் ஒரு பொடி வைத்து.

தப்பாக எடுத்துக் கொள்ளாமல் "நிச்சயமாக!" என்று உறுதி கூறினாள் சுமனா.!

சுமனா பற்றிய கவலை நல்லபடியாகத் தீர்த்ததைச் சின்னாத்தாவிடம் சொல்லலாம் என்று, தோட்ட வீட்டுக்குப் போனால் "அம்மா நேத்தே ஊருக்குப் போய் விட்டாங்களே" என்றாள், வீட்டைச் சுத்தம் செய்து கொண்டிருந்தவள்.

கணவனிடம் வந்து கேட்டபோது, "நேர்த்திக் கடன் செய்தால்தான் ஆயிற்று என்றார்களாம், சரி என்று செக்கப் செய்து டாக்டர் அனுமதியுடன், நர்ஸ் துணையாளாய் தனுசு சகிதம் அனுப்பி வைத்தார்களாம்."

"அப்பா, இப்போதுதான் சொன்னார்கள்" என்றான் அவன்.

சமாதானம் அடையாமல் "இந்த முறை நானும் கூடப் போக வேண்டும் என்று நினைத்திருந்தேன்" என்றாள் தாரிணி.

"என்னை விட்டுவிட்டா"

சற்று திகைத்தாள், தாரிணி. டெல்லிப் பயணம் நினைவு வர, "நீங்களும் கூட வருவீர்கள் என்றல்லவா நினைத்தேன்.!" என்று தலை சரித்து ஓரக்கண்ணால் நோக்கிக் கேட்டாள்.

சட்டென அவளைப் பற்றியிழுத்து முத்தமிட்டான், அவள் கணவன்.

தாரிணியின் மனம் நிறைந்திருந்தது.

மனைவியைப் பிரிய மனமில்லாமல், உடன் அழைத்துப் போகிறான், அவள் கேட்டாள் என்று ஒன்று செய்கிறான்! அவளது அன்பை, மனுபரதனும் பிரதிபலிக்கத் தொடங்கி விட்டான் என்பதற்கு, வேறு என்ன சான்று வேண்டும்.

கட்டாயத் திருமணம் செய்ததால், தான் முதலில் சொல்லத் தயங்குகிறானோ, என்னவோ? அவள் முதலில் சொல்லட்டும் என்று கூடக் காத்திருக்கலாம்.!

சுமனா மூட்டை கட்டுவதில் தீவிரமாக முனைந்திருந்ததால், தனியாக 'வாக்கிங்' சென்று திரும்பிய தாரிணிக்கு வழியெல்லாம் இதே யோசனைதான்.

நல்ல விஷயத்தைத் தள்ளிப் போடக் கூடாது, இன்றே மனுவிடம் சொல்லிவிட வேண்டியதுதான் என்ற முடிவுடன் அவனை தாரிணி நாடிச் சென்ற போது, அவனது அலுவல் அறையிலிருந்து பேச்சுக் குரல் கேட்டது.

"உள்ள நிலைமையை அறிந்திருந்தும், கடைசி நேரத்தில், இப்படிச் செய்தீர்களே.!" என்று, மனுபரதன் குற்றம் சாட்டிக் கொண்டிருந்தான்.

"தப்புதான்" என்று, பிழையை ஒத்துக் கொண்டிருந்தவன், அவளுடைய அருமை அண்ணன், நந்தகுமாரன்.

## 20

நந்தனின் குரலைக் கேட்டதும், மற்றதெல்லாம் மறந்துவிட, "அண்ணா!" என்று ஓடிச் சென்று, அவன் தோளில் முகம் புதைத்து விசித்தாள், தாரிணி.

"கண்ணும்மா, தங்கம் செல்லம்.!" என்று, குரல் தழுதழுக்க, அண்ணனும் உருகினான்.

இருவரும், ஒருவரையொருவர் பார்த்து எத்தனைநாள் ஆயிற்று! ஏன்? மாதங்கள் ஆகிவிட்டனவே..! இரண்டு மாதங்களுக்கும் மேலாக.!

உணர்ச்சிவசப்பட்டிருந்த அண்ணனையும், தங்கை-யையும் பார்த்துக் கொண்டு நின்ற மனுபரதனின் முகத்தில் ஒரு இளக்கமற்ற தன்மை பரவியது.

"தாரிணி!" என்றான். சற்றுக் கடுமையான குரலில், "சின்னக் குழந்தை போல, என்ன இது? நந்தகுமாரன், உனக்கு அண்ணன் என்றாலும், இந்த வீட்டுக்கு, இப்போது விருந்தாளி, வீட்டுக்கு வந்தவர்களுக்கு, உண்ண, அருந்த என்று, ஏதாவது கொடுத்து உபசரிப்பது, இந்த வீட்டுப் பண்பாடு. இவ்வளவு நாள் இங்கிருந்தும் அண்ணனைக் கண்டதும், உனக்கு, அதெல்லாம்கூட மறந்துவிட்டதா?"

சட்டென்று நிமிர்ந்தாள், தாரிணி?

கணவன் சொல்வது போலச் சிறு பிள்ளைத் தனமாகத்தான், அவளும் நடந்து கொண்டிருக்கிறாள்.!

தங்கை இங்கிருக்கிறாள் என்று தெரிந்ததும், உண்ணாமல், உறங்காமல் அண்ணன் ஓடி வந்திருப்பான்.!

அவனுக்கு வயிற்றுக்கு ஏதாவது கொடுக்காமல், பச்சைப் பிள்ளை மாதிரி அழலாமா? அவன் சொன்னது சரிதான்.!

"இதோ கொண்டு வருகிறேன்" என்று, அவசரமாக உள்ளே ஓடிச் சென்றாள்.

"இல்லையம்மா எனக்கு ஒன்றும் வேண்டாம்" என்று

நந்தன் தடுத்ததை, அவள் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை.

"கொண்டு வரட்டும்" என்றான் மனுபரதனும். "உட்காருங்கள், நாம் பேச்சைத் தொடரலாம். நீங்கள், மஞ்சரி பற்றி, என்னிடம் சொல்லியிருக்கலாமே?" என்று கேட்டான்.

தங்கை சென்ற வழியைத் திரும்பிப் பார்த்துவிட்டு நந்தன் உட்கார்ந்தான். மற்றவனின் கேள்விக்குப் பதிலாக, "சொல்லலாமா என்ற யோசனைதான். ஆனால், மஞ்சு அவள் அம்மாவை நினைத்து அஞ்சினாள். உங்களுக்கும் அவர்களைப் பற்றி தெரியும். அவளது பயமும் நியாயம்தானே?" என்றான்.

"நான் என்னிடம் சொல்வது பற்றிச் சொன்னேன்" என்றான், மனுபரதன் அழுத்தமான குரலில்.

சற்றுத் தயங்கிவிட்டு, "துணிந்து எப்படிச் சொல்வது? நீங்களும், எதிலும் ஒரு பிடிவாதம் உள்ளவர்" என்று இழுத்தான் நந்தகுமாரன்.

மின்னல் வேகத்தில் இனிப்பும் காரமும் எடுத்து வைத்த தட்டோடு, வேகமாக வந்து கொண்டிருந்தாள் தாரிணி.

அவள் வருவதைக் கவனித்தபோதும், அதை லட்சியம் செய்யாமல், "அப்படிப்பட்டவன், உங்கள் செயலுக்குப் பதில் கொடுக்காமல், கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருப்பேன் என்று எப்படி எண்ணினீர்கள்?" என்று தொடர்ந்து கேட்டான் மனுபரதன்.

"தப்புதான் என் தப்புக்கு எனக்குத் தண்டனை கொடுங்கள், என் தங்கையை விட்டு விடுங்கள்" என்று

கெஞ்சும் குரலில் கேட்டுக் கொண்டான், நந்தகுமார்.

விட்டுவிடுவதா?

அடடா.! இந்த அண்ணன் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்? இங்கே தாரிணி கஷ்டப்படுவதாகவா?

அப்படியெல்லாம் இல்லை என்று சொல்ல, அவள் வாய் திறக்குமுன், "விட்டுவிடுகிறேன்" என்றான் மனுபரதன் கணீர்க் குரலில்.

தாரிணி திகைத்து நோக்கும் போதே, "நீங்கள் மஞ்சரியை என்னிடம் ஒப்படைக்கிறீர்களா? ஒப்படைத்து விட்டு உங்கள் தங்கையைக் கூட்டிப் போங்கள்" என்றான் தொடர்ந்து.

சற்று நேரம் அங்கே பேரமைதி நிலவியது!

கையிலிருந்த தட்டு தாங்க முடியாத பாரமாய்க் கனக்க, தாரிணி மெல்லக் குனிந்து தட்டை டீபாயில் வைத்தாள்.

அதற்கு மேல், தன்னையுமே தாங்கமாட்டாதவளாக அருகிலிருந்த சோஃபாவில் சரிந்து அமர்ந்தாள்.

சற்று நேரம் அசையாமல் சிலை போல நின்ற நந்தகுமாரன், மெல்ல வாய் திறந்தான். "ஒரு மனிதனின் முதல்கடமை, அவனுடைய மனைவிக்குத்தான், அதனால் மஞ்சரியை உங்களிடம் ஒப்படைக்க முடியாது, சாரி" என்றான் அவன்.

பிறகு, தங்கையிடம் திரும்பி, அவள் தலையில் கை வைத்து, "சாரிம்மா" என்றவன், சட்டெனத் திரும்பி மடமடவென்று நடந்து, வீட்டை விட்டு வெளியேறிச் சென்று விட்டான்.

தாரிணி, அசையவே இல்லை. அவள் முகம் கல்லாய் இறுகியிருந்தது.

அவளது குனிந்த தலையைப் பார்த்தவனின் முகமும் இறுகிப் போயிற்று. "யாருக்கு முதல் கடமை என்று, அண்ணனுக்குத் தெரிவது, தங்கைக்குத் தெரிந்த மாதிரி இல்லையே!" என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

தாரிணி அசையாமலே அமர்ந்திருக்கவும், தோளைக் குலுக்கிவிட்டு அலுவலகத்துக்குச் சென்று விட்டான்.

அப்புறமும் தாரிணி வெகு நேரம் அப்படியேதான் இருந்தாள்.

கடைசியில், மனுவின் காதல், மஞ்சரியிடம்தானா.!

தெள்ளத் தெளிவாகச் சொல்லி விட்டானே.!

அவளை, அவனிடம் ஒப்படைக்க வேண்டுமாம்.!

இன்னொருத்தன் மனைவி, இவனுக்கும் மனைவி இருக்கிறாள், அப்படியும் அவள்தான் வேண்டும் என்று விட்டானே.!

அதிலும், திருமணம் வாழ்க்கை முழுமைக்குமானது என்பவன், குடும்ப மானம் பற்றி, ஓயாது கூறுகிறவன், அவன் அப்படிச் சொல்ல வேண்டுமானால், அவன் காதல் எவ்வளவு ஆழமானதாக இருக்க வேண்டும்.

ஆசை கொண்ட மனதுக்கு மூளையே கிடையாதோ? என்னவோ, அவளை அவன் விரும்புகிற மாதிரியும், அவள் கேட்டாள் என்று அவன் மலையைப் புரட்டிவிட்ட மாதிரியும், என்னென்ன கற்பனைகள்.!

ஆனால், கற்பனை செய்தபோது, என்னமாய் இனித்தன.!

ஆனால், இப்போது இருமடங்காகத் துன்புறுத்து-கின்றனவே.!

இன்றுவரை, மனுபரதன் அவளை அணைத்ததும், உறவாடியதும், மஞ்சரி நினைவில்தானா! அல்லது தாலி கட்டிய கடனுக்காகவா?

இரண்டுமே, இப்போது, அவளைத் தீயாய் எரித்தன.! இரண்டுமே, அவளுக்குக் கேவலம் அல்லவா? கூடாது, இந்தக் கேவலம் இனி நடக்கக் கூடாது.!

அது நடக்கக்கூடாது என்றால் அவள் இந்த வீட்டில் இருக்கக் கூடாது.!

ஏனெனில், ஊர் உலகத்துக்காக, அவன் ஒழுங்கான குடும்ப வாழ்வை விரும்புவான், ஏனெனில், இவன் குடும்பத்தைப் பற்றி யாரும் குறைவாகப் பேச விட்டுவிடக்-கூடாதே.!

விளக்கை அணைத்துவிட்டால், யாரை வேண்டு-மானாலும்தான் மஞ்சரியாக எண்ணிக் கொள்ளலாமே.!

நொந்த மனம் ஏதேதோ எண்ணி, மேலும் தன்னைத் துன்புறுத்திக் கொண்டது.

இத்தனை தவிப்பிலும், ஒன்று மட்டும் உறுதியாகத் தெரிந்தது.

என்ன ஆனாலும், இனி இந்தப் பொய் வாழ்வு வாழக் கூடாது.! அது மட்டும் உறுதி.!

அண்ணனைப் பற்றி அவ்வளவாகக் கவலைப்படத் தோன்றவில்லை. நந்தன் சமாளித்துக் கொள்ளுவான் என்று தோன்றியது... முன்பே, அப்படித் தோன்றியிருக்க வேண்டும். இப்போது, அது காலம் கடந்த ஞானோதயம்.!

வெளியேறுவது என்று தீர்மானித்த பிறகு, அதற்கான வழிமுறைகளைப் பற்றி யோசனை சென்றது, நெஞ்சை அழுத்திய துக்கத்தை, முயன்று ஒதுக்கி, தீவிரமாக யோசித்துத் திட்டமிட்டாள்.

வீட்டைவிட்டு வெளியேறி, மதுரை வரை செல்வது பெரிய காரியமன்று.

ஏற்கனவே, மதுரையில் தைக்கக் கொடுத்திருந்த தன் ரவிக்கைகளை வாங்கிக் கொண்டு அப்படியே அவளுக்கும் நல்லதாக நாலைந்து சுரிதார் செட் வாங்கி வரச் சொல்லியிருந்தாள், மாமியார் ரஞ்சிதம்.

அதைச் சாக்கிட்டு மதுரை வரை சென்று விடலாம்.

ரவிக்கைகளை மட்டும் வாங்கிக் கொடுத்து, ஏதோ காரணமாய் மதுரையில் தங்க வேண்டியிருக்கிறது என்று சொல்லித் திரும்பிப் போகச் சொன்னால் டிரைவர் பேசாமல் போய்விடுவான். வீட்டினர் ஒன்று சொன்னால், கேள்வி கேட்கும் வழக்கம் அந்த வீட்டுப் பணியாட்களுக்குக் கிடையாது.

பணத்தைப் பொறுத்தவரை, அவளுக்குப் பிரச்சினை இல்லை. இங்கே வரும்போது அவள் கொண்டு வந்த பணம் அப்படியே இருந்தது. ஒரு வேலை தேடிக் கொள்ளும் வரை, காலம் தள்ள அதுபோதும் இங்கே, மனுபரதன் செலவுக்காகத் தந்த பணத்தைக் கூட ஒரு பாதுகாப்புக்காகக் கையில் வைத்துக் கொள்ளலாம்.

மதுரையிலிருந்து எங்கே செல்வது, என்பதுதான் அப்போது, அவளுக்குப் புரியாத குழப்பமாக இருந்தது.

தாரிணியின் பழைய வேலை, அப்படியேதான் இருக்கும்.

அவள் விடுப்பு எடுத்தது, ஒரு மாதத்திற்கு. நன்றாகப் பணி புரிகிறவள் என்பதால், இந்த அதிகப்படி ஒருவாரத்துக்காக, அவளை வேலையிலிருந்து தள்ளிவிட மாட்டார்கள்.

ஆனால், மனுபரதன் அவளைத் தேடக்கூடிய முக்கிய இடங்களில் அதுவும் தானே ஒன்றாக இருக்கும்?

"சாரிம்மா" என்று சொல்லிவிட்டுப் போன அண்ணன் வீடு முதல் இடம்.

என்ன ஆனாலும், கணவன் தன்னைக் கண்டுபிடிக்க விட்டுவிடக் கூடாது என்பதில், தாரிணிக்கு முழுத் தெளிவு இருந்தது. கண்டுகொண்டால், அப்புறம் எப்படியாவது திருப்பி அழைத்துப் போய் விடுவான்.

அண்ணன் கழுத்தில் கத்தி வைத்து மணந்தவனுக்கு வழியா கிடைக்காது.

சின்னாத்தாவுக்கு உடம்பு சரியில்லை. நீ வந்தால்தான் பிழைப்பார்கள் என்று கூடக் கூறலாம்.! அப்புறம் மறுக்க முடியுமா?

அந்தப் பெரியவளின் நினைவில், அவளைப் பாராமல் போவதா என்று தாரிணி கொஞ்சம் கலங்கினாள்.

ஒட்டிக் கொண்டவள்தான் பேரன்தானே பெரிதாகத் தோன்றும்? அவனைப் பார்த்தாலே, பூரித்துப் போகிறவள்.! எனவே, அவளுக்கும், தாரிணியின் இருப்பிடம் தெரியக்கூடாதுதான்.

ஆனால் அந்த இருப்பிடம் எது?

எங்கே போவது என்று குழம்பியவளுக்குச் சட்டென, அவளுடைய திருநெல்வேலித் தோழியின் நினைவு வந்தது. தாமிரப்பரணிக் கரை ஓரமாகச் சிந்து பூந்துறையில், அவள்

வீடு அவளுடைய தந்தை, அரசியல் செல்வாக்குள்ள மனிதர்.

'இங்கே வந்து விடு, சிமெண்ட் தொழிற்சாலை, பேப்பர்மில் என்று பெரிய பெரிய நிறுவனங்கள் இங்கே இருக்கின்றன. எதிலாவது நல்ல வேலை வாங்கித் தரச் சொல்லி, இருவரும் சேர்ந்து போய்வரலாம்' என்று கூப்பிட்டுக் கொண்டிருந்தவள், அஞ்சலி, சென்னையில் இருந்தவரை, அவளோட கடிதத்தொடர்பு உண்டு.

ஆயினும்... தனியாகத் திடுமென, அவள் வீட்டுக்குப் போய் நிற்க முடியாது... ஆனால், அது பெரும் பிரச்சினை அல்ல. திருநெல்வேலியில் நல்ல பெரிய ஹோட்டல்கள் உண்டு. அவற்றுள் ஒன்றில் ஒரிரு நாட்கள் தங்குவதால் தாரிணி போண்டியாகி விட மாட்டாள்.

எனவே, முதலில் ஹோட்டலில் இறங்கிக் கொண்டு, அஞ்சலியின் வசதி பார்த்து அவள் வீட்டுக்குப் போக வேண்டும்.

அப்புறம் அங்கேதான் இருப்பு, தனியாக.!

கண்ணீரை அடக்கிக் கொண்ட தாரிணி, மேற்கொண்டு, செய்ய வேண்டியதைப் பார்த்தாள்.

சந்தேகத்தைக் கிளப்பாத அளவில், ஒரு பெட்டி, பையில் தனக்கு வேண்டியவற்றை எடுத்து வைத்தாள்.

அவள் சென்னையிலிருந்து, எடுத்து வந்தவைதான்.

ரொம்பவும் கடினமான வேலை, மனுபரதனுக்கு இரண்டுவரி எழுதியதுதான்.

பலமுறை முயன்று விட்டுக் கடைசியாக, "நான் போகிறேன், மனதில் மஞ்சரியை வைத்துக் கொண்டு

என்னுடன் உறவாடும் துன்பம்,இனி உங்களுக்கு இராது. அண்ணனைப் பார்க்க சென்றபோது, பொல்லாதநோய் கண்டு, ஒரேயடியாய்ப் போய்விட்டாள் என்று சொல்லி-விட்டால், உங்கள் கௌரவத்துக்கும் குறைவு வராது" என்று எழுதிக் கையெழுத்திட்டு, அவளது அலமாரியில் திறந்ததும் தெரியுமாறு வைத்தாள்.

மாமியாரிடம் ரவிக்கைகளை வாங்கிவரப் போவதாகச் சொல்லிவிட்டுக் கிளம்பி விட்டாள்.

மதுரையிலிருந்து திருநெல்வேலி சென்றடையும் வரையும் தாரிணியின் திட்டம் சற்றும் பிசகாது, அப்படியே நிறைவேறியது.

தனியே சென்று, தங்குவதற்கு அறை கேட்டால், நல்ல ஹோட்டல்களில் இடம் கிடைப்பது கடினம் என்று மதுரையிலிருந்தே எஸ்டிடியில் பதிவு செய்து விட்டதால், அதுவும் பிரச்சினையற்றுப் போய்விட, பணத்தைக் கட்டி, அறைக்குள் சென்று பெல்பாயிடம் சில்லறை கொடுத்து அனுப்பிவிட்டு, அறைக் கதவை உட்புறம் தாளிடும் வரை அடுத்து என்ன, அடுத்து என்ன என்று இயந்திர கதியில் எல்லாமே நடந்தது.

அதன் பின் சூழ இருந்தோருக்காக அடக்கி வைக்கப்-பட்டிருந்த கண்ணீர் காட்டாற்று வெள்ளமாகப் பெருகலாயிற்று.

கரை கடந்த வெள்ளமாகப் பொங்கிப் பெருகிய கண்ணீரை அடக்கத் தாரிணியும் முயலவில்லை. இமயமாய் இதயத்தை அழுத்திக் கொண்டிருக்கும் பாரம், இந்த அழுகையில் கரையலாமில்லையா?

ஆனால் நாள் முழுவதும் கண்ணீர் வடித்த பிறகும், ஒரு தலையணை முழுக்க நனைந்த பின்னும் அவள் நெஞ்சை அரித்த வேதனை கொஞ்சமும் குறைவதாக இல்லை.!

மாறாகப் பெருகியது எனலாம்.!

திரும்பத் திரும்ப, மனுபரதனின் நினைவே வந்து வந்து அவளை வருத்தியது.

அவனது கேலி, கொஞ்சல்கள், அணைப்புகள்... எல்லாம் பொய்யாக இருக்க முடியுமா?

பொய்தான் என்றுதான் நிரூபணம் ஆகிவிட்டதே.!

அந்தப் பொய்மைக்காக ஓர் அழுகை, பொய்யே ஆயினும் அதெல்லாம் இனிக் கிடைக்காதே என்ற ஏக்கத்தில் அதற்கோர் அழுகை, பொய்யென்று தெரிந்த பின்னும் அந்த சுகத்துக்காக ஏங்கும் தன்னை எண்ணி இன்னோர் அழுகை.!

எல்லாவற்றையும் விட, கணவனை இனிப் பார்க்க முடியாது என்பதே அவளது மிகப்பெரிய தவிப்பாக இருந்தது. அவன் மனதில் யார் வேண்டுமானாலும் இருக்கட்டும் என்று, பேசாமல் புறப்பட்டு அவனிடமே போய்விட்டால் என்ன என்று கூட, அவளுக்குத் தோன்றியது.

பிறகு, அந்த எண்ணத்துக்காகவும் அழுதாள்.

இப்படிப் புதிது புதிதாகத் தோன்றி அழுகை அதிகரித்ததே அன்றிக் குறைவதாகவே தோன்றவில்லை.!

தனியாக வந்த பெண் ஒரு முழு நாளுக்குப் பிறகும் வெளியே வரவில்லை என்ற விஷயம் நிர்வாகிக்குப் போக

அவர் கவலையுடன் தாரிணியின் அறைக்கு ஃபோன் செய்தார்.

தனியாக வந்தவள், ஒன்றுகிடக்க ஒன்று செய்து வைத்தால், ஹோட்டல் பெயரல்லவா, நாறிவிடும்!

குரல் கரகரத்திருந்த போதும், பதில் வந்ததில், அவருக்குத் திருப்தி.

தான் அழைத்ததன் காரணமாக, "ஒன்றும் இல்லையம்மா, சாப்பாடு ஆர்டர் பண்ணவில்லை என்று பையன்கள் சொன்னார்கள். அதுதான்." என்று சமாளித்தார்.

அவரது கவலையைப் புரிந்து கொண்டு "வீட்டில் சாதம் கட்டித் தந்திருந்தார்கள்" என்று தாரிணியும் சமாளித்தாள். "நாளையிலிருந்து" என்று தொடங்கியவளுக்குப் பசித்த வயிற்றின் தன்மைகள் நினைவு வர, "இப்பவே, லைட்டாக இரண்டு இட்டிலி அனுப்புங்கள்" என்று முடித்தாள்.

முயன்று, ஓர் இட்லியை உள்ளே தள்ளியவள், மேற்கொண்டு உண்ணப் பிடிக்காமல், மீதியைக் குப்பைத் தொட்டியில் போட்டாள்.

மறுநாள் காலையும் கூட அதுவே நடந்தது.

ஆனால் கொஞ்சமேனும் உள்ளே சென்ற உணவு, சற்றுத் தெம்பூட்ட, இப்படி அடைந்து கிடப்பதைவிட, வெளியே போய் வந்தால், நன்றாக இருக்கக்கூடும் என்று எண்ணி, குளித்து உடை மாற்றிக் கொண்டு கிளம்பினாள்.

சிவந்து வீங்கியிருந்த கண்களை மறைக்கக் கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்த போதும் ஓரிருவர் தன்னை உற்றுப் பார்ப்பதைத் தாரிணி உணர்ந்தாள்.

அழுததை மறைக்கச் செய்த முயற்சி வெற்றி பெறவில்லை போலும் என்ற எண்ணியபடி நடையைத் தொடர்ந்தாள்.

பெருஞ்சாலையை விட்டுச் சற்று விலகியிருந்தது, அந்த ஹோட்டல்.

மனதின் சோர்வு நீங்கப் பெருஞ்சாலை வரை நடந்து விட்டு அங்கே ஓர் ஆட்டோ பிடித்துக் கொண்டு நெல்லையப்பர் கோயிலுக்குச் செல்லத்தான் தாரிணி எண்ணியிருந்தாள்.

ஆனால் அவளை உற்றுப் பார்த்த நால்வரும், சற்று ஆள் நடமாட்டமில்லாத இடத்தில் அவளைச் சூழ்ந்து கொண்டு, "இது அவளேதான், அண்ணாச்சி பிடியுங்க வண்டியிலே போட்டுக் கொண்டு போயிரலாம்" என்று அவளைப் பிடிக்க முன் வரவும். ஒரு கணம் அவள் மிரண்டு போனாள்.!

## 21

தாரிணி மிரண்டு நின்றது ஒரு சில கணங்களே.

தான் கராத்தே பயின்றது, அதற்குள் நினைவு வந்துவிடவும், போராடத் தயாரானாள்.

எல்லாருமா, மனுபரதனைப் போலக் கராத்தேயில் முழுப் பயிற்சி பெற்றிருப்பார்கள்?

அவள் நினைத்தது போலவே, அவளைப் பிடிக்க வந்தவர்களில் யாரும் அந்தக் கலையைக் கற்றிராததால் தாரிணி எளிதாகவே அவர்களை வீழ்த்தி விட்டாள்.

நாலுபேரை வென்ற எக்களிப்பு வரவில்லை.

அதைவிடவும் அன்று மனுவிடம் தோற்றது நினைவு வந்து, முகத்தில் ஏக்கத்தைத் தோற்றுவித்தது.

அன்றைய நினைவை அசை போட்டபடி நடந்த போது, அருகில் ஒரு கார் வந்து நின்று, கார்க்கதவு திறக்கவும் திடுக்கிட்டுப் போனாள்.

என்ன இந்த ஊரில்.. என்று எண்ணமிடும் போதே, காரின் அடையாளம் புரிந்து விடக் காரினுள் பார்த்தாள்.

"ஏறிக் கொள்" என்றாள், சின்னாத்தா.!

மறுக்கத் தோன்றாமல், காரில் ஏறி, கார் ஓடத் தொடங்கியதும், சின்னாத்தாவின் மடியில் சரிந்து, விசித்தாள் தாரிணி.

சற்று நேரம், சின்னவளின் முதுகைத் தடவிக் கொடுத்து-விட்டு, "போதும், எழுந்து முகத்தைத் துடைத்துக் கொள்" என்றாள், பெரியவள்.

பணிந்து எழுந்தவளிடம் ஒரு பத்திரிகையை நீட்டி, "இது என்ன?" என்று கேட்டாள்.

பத்திரிக்கையில், அவள் காட்டிய இடத்தில் தாரிணியின் பெரிய படம் இருந்தது.

அவசரமாகப் பத்திரிகையை வாங்கிப் பார்த்தாள் தாரிணி.

படத்தின் அடியில்பிழை பொறுத்து, தன் உயிராய் இருக்க வருமாறு, தாரிணியை மனுபரதன் அழைத்-திருந்தான்.

கீழ்க் குறிப்பாக, படத்தில் இருக்கும் பெண்ணைப் பற்றித் தகவல் கொடுத்தால் ஒரு லட்சம் ரூபாய் பரிசு கொடுப்ப-தாகவும் அறிவித்திருந்தான்.!

ஒரு லட்சம்!

எதற்காக?

அவளை எப்படியாவது கொண்டு வந்து, மற்றவர் மதிக்கக் குடும்பம் நடத்தவோ என்றால், அவன் பெரிதாகக் கருதும், அந்த மதிப்பை, விளம்பரத்தின் முதல் வாசகமே தகர்த்து விடுகிறதே!

உயிராய் இருக்க வருவாயா கண்மணி?! அதுவும் அவன் செய்த பிழை பொறுத்து!

திகைப்புடன், அருகில் இருந்தவளைப் பார்த்தாள், தாரிணி.

லேசாக முறுவலித்து, "ஆக இந்த ஒரு லட்சமும் எனக்குத்தானா? நான்தானே, உன்னைக் கண்டு பிடித்திருக்கிறேன்?" என்றாள் சின்னாத்தா.

சட்டென நினைவு வர, "அப்படியானால், இந்தப் பணத்துக்காகத்தான், அந்த நாலு பேரும் என்னைப் பிடிக்க முயன்றார்களா? நான் இந்த ஊரே மோசம் என்று நினைத்தேனே!" என்றாள், தாரிணி.

"ஊர் என்ன செய்யும்?" என்றாள், சின்னாத்தா, "தாமிரபரணி ஆறும் அதன் கரையும் வாய்க்காலும் கோயிலும் பார்க்கக் கோடிக் கண் வேண்டுமே! ஒரு நாலு பேரும் உங்களைப் போல அசடுகளும் செய்கிற வேலைக்கு, ஊரைப் பழி சொல்வதாக்கும்?" என்றாள் கிண்டலாக.

பதில் சொல்ல மாட்டாமல் திணறிவிட்டு, "நீங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்?" என்று வினவினாள் சிறியவள்.

"இங்கே, பக்கத்தில் தச்சநல்லூர் சமீபம்தானம்மா,

பெரியம்மா ஊர், அம்மன் கோயிலிலே பொங்கல் வைத்துவிட்டுத் திரும்பிக் கொண்டு இருந்தோம்" என்றார், சிங்காரி அம்மாளுக்குத் துணையாகக் கூட வந்தவர்.

"ஒவ்வொருதரம் பொங்கல் வைத்துத் திரும்பும் போதும், ஏதாவது நல்லது நடக்கும். இப்போது நீ கிடைத்திருக்கிறாய். உன் சாமான்கள் எல்லாம் எங்கே இருக்கின்றன?" என்று சின்னாத்தா விசாரித்தாள்.

பேரன் மனைவியை விட்டுவிட்டு, இனி அந்தப் பெரியவள் போகப் போவதில்லை. அத்தோடு அந்த விளம்பரமும் தாரிணியின் மனதை என்னவோ பண்ணிற்று,. எனவேதான் தங்கியிருந்த ஹோட்டல் பெயரை அவள் சொல்ல அங்கே சென்று அறையைக் காலி பண்ணிக் கொண்டு வந்தார்கள்.

சிங்காரி அம்மாள் தங்கியிருந்த வீட்டுக்கு வந்து, அவளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்துவிட்டு, "அய்யாவுக்கு ஃபோன் போடுறம்மா, வேற என்னவாச்சும் சொல்ல வேணுமா?" என்று கேட்டார் துணை.

"உன் விசயம் சொல்லலாமா, அப்படின்னு தனுசு கேட்கிறான். ம்ம்ம். சொல்லு என்ன செய்யலாம்?" என்று பேரன் மனைவியைப் பார்த்தாள் பெரியம்மாள்.

அவள் கண்களில் நீர் நிறைவதைக் காணவும், "சொல்லிடுப்பா, சின்னம்மா என் கூடத்தான் இருக்கிறாள் என்று சொல்லு. நான் கூட்டி வருகிறதாச் சொன்னேன் என்று சொல்லு" என்று கூறி அனுப்பினாள்.

நர்ஸையும் வேலைக்காரியையும் தூர அனுப்பிவிட்டுத் தாரிணியிடம் திரும்பினாள்.

"இப்போது சொல்லு என்ன நடந்தது?"

நடந்ததை விவரிக்கும் போது தாரிணியின் கண்கள் மீண்டும் கலங்கின.

"பைத்தியக்காரி!" என்றாள் பெரியவள். "உன்மேல் ஆசை இல்லாமல் இந்த விளம்பரம் வருமா? பார் என் பேரன், உன் காலடியில் கிடப்பது தெரியவில்லை?" என்று கூறியதைத் தாரிணியால் முழுமையாக ஒத்துக் கொள்ள முடியவில்லை.

மஞ்சரியைக் கொண்டு வந்து, விட்டுவிட்டுத் தாரிணியைக் கூட்டிப் போகும்படி என் காது கேட்க, என் முன்னாலேயே, மனு சொன்னாரே சின்னாத்தா" என்றாள் குரல் கம்மிக் கரக்கரக்க

"ஏன் அப்படிச் சொன்னாய் என்று அவனிடம் கேள். அதை விட்டு, வீட்டை விட்டுப் போவதா? அந்த வீடு, உன் இடமும்தானே?" என்றாள் சின்னாத்தா.

தனுசு திரும்பி வரும்போது அவர் முகத்தில் சிரிப்பு இருந்தது.

"சின்னம்மாவை நாம கூட்டிப் போக வேண்டாமாம். பின் சீட்டிலே அவங்களை வைத்துக்கிட்டு, நீங்க படுக்க முடியாதாம், அதனால் அவர்களைக் கூட்டிப் போகச் சின்னவரே வராராம். அவர் வரவரைக்கும் உங்களை ஓய்வெடுக்கச் சொன்னார்" என்றார் அவர்.

முகத்தில் பூஞ்சிரிப்புடன், "வரவரைக்கும் ஓய்வெடுக்க வேணுமா? புரிகிறதா உனக்கு? அவன் வருகிற வரைக்கும் உனக்கு நான் காவல் இருக்க வேணுமாம்.!" என்று கேலியாகச் சிங்காரி அம்மாள் கூற, தனுசு வாயைக் கையால் மறைத்துக் கொண்டு சிரித்தார்.

சின்னஞ்சிறுசுகளின் ஊடல் என்பது போல, மற்ற இருவரும் இலகுவாக எடுத்துக் கொண்ட போதும் தாரிணியால் அப்படி எண்ண முடியவில்லை.

மஞ்சரி பற்றி அவள் முன்னிலையில் அல்லவா கூறினான்!

அதைப் பற்றி வேறு எந்த விதமாக விளக்க முடியும்?

அதற்கு விளக்கம் கிடைக்காமல் அவனோடு எப்படிச் சேர்ந்து வாழ முடியும்?

மனதை, மனுபரதனிடமிருந்து அகற்றும் முயற்சியாக அங்கிருந்த பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதையை எடுத்துப் படிக்கத் தொடங்கினாள்.

அந்தக் கால அலங்காரங்கள், வசனங்கள், கதைப்போக்கு எல்லாமாகச் சேர்ந்து, சில மணி நேரத்தைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளின.

உணவை முடித்துக் கொண்டு தூங்கி எழுந்த சிங்காரி அம்மாள், தாரிணி படித்துக் கொண்டிருந்த புத்தகத்தைப் பார்த்ததும், "விக்கிரமாதித்தன் கதையா? தொடர்ந்து படி. ஆண் குழந்தை பிறக்கும். ஆனால் உன் மாமியார் மாதிரி அத்தோடு நிறுத்திவிடாமல் அடுத்து ஒரு பெண்ணையும் பெற்று விடு" என்று ஆலோசனை சொன்னாள்.

ஒழுங்கான குடும்ப வாழ்க்கையே அந்தரத்தில் தொங்குகிறது. இதில், குழந்தை பற்றி என்ன பேச்சு என்று மனம் அலுத்துக் கொண்டதைக் காட்டிக் கொள்ளாமல், விக்கிரமாதித்தன் கதைக்கும், ஆண்குழந்தைக்கும் என்ன சம்பந்தம், சின்னாத்தா?" என்று பொதுவாக விசாரித்தாள்.

"அதுவா? கருவுற்ற பெண்கள் விக்கிரமாதித்தன் கதை

படித்தால், ஆண் குழந்தை பிறக்கும் என்று ஓர் ஐதிகம்" என்று சின்னாத்தா கூறியது, தாரிணிக்கு வேடிக்கையாக இருந்தது.

"இப்படி ஒரு சுலப வழி இருப்பது தெரியாமல் சைனீஸ் காலண்டர், அது இது என்று போட்டு அலட்டிக் கொள்கிறார்களே! இப்படிக் கஷ்டப்பட்டு வேலை செய்வதை விட்டுவிட்டு, விக்கிரமாதித்நன் கதையை அச்சிட்டு விற்றால், கோடிக்கணக்கில் சம்பாதிக்கலாம் என்று உங்கள் பேரனுக்கும், ஓர் ஐடியா கொடுங்கள் சின்னாத்தா" என்று சிரித்தாள் அவள்.

அதாவது சிரிக்க முயன்றாள்.

அதைக் கவனியாதது போல, "மேலே கதையைச் சற்று உரக்கப்படி நாங்களும் கேட்கிறோம்." என்று தாரிணியின் மனதையும் சின்னாத்தா, கதையில் திருப்பினாள்.

மனுபரதன் வந்து சேர, மாலை ஆறுமணிக்கு மேல் ஆகிவிட்டது. அவனை இன்னமும் காணோமே., வரும் வழியில் அவனுக்கு ஆபத்து ஏதும் ஏற்பட்டிருக்குமோ என்று, அதற்குள் தாரிணி உள்ளூர அஞ்சிக் கலங்கிப் போயிருந்தாள்.

ஆனால், தாரிணி கிடைத்துவிட்டாள் என்று அடுத்த விளம்பரம் மறுநாள் வருவதற்கு ஏற்பாடு செய்துவிட்டு வந்ததால் தாமதம் ஆயிற்று என்றான் அவன்.

பேரனின் பார்வையையும், தாரிணி இறுகிப் போய் நிற்பதையும் கவனித்துவிட்டு, "காரை ஓட்டி வந்த அலுப்புத் தீர, நீ மாடிக்குப் போய் முகம் கைகால் கழுவி விட்டு உட்கார், உனக்குச் சாப்பிட ஏதாவது அனுப்புகிறேன்."

என்று மனுபரதனை மாடிக்கு அனுப்பினாள், அவன் பாட்டி.

அவன் செல்லவும், "தம்பி இப்போதே பலகாரம் சாப்பிடுகிறானா, காப்பி மட்டும் போதுமா, என்று கேட்டுவா" என்று தாரிணியையும் பின்னோடு அனுப்பி வைத்தாள்.

தாரிணி படியேறிச் செல்வதைப் பார்த்துவிட்டு, "நல்லம்மா, உனக்குத்தான் கல்யாணம் ஆகிவிட்டதே இந்தக் கதையைக் கொஞ்சம் படியேன்" என்று விக்கிரமாதித்தன் கதையை அவளிடம் கொடுத்தாள்.

தாரிணியின் வரவு மனுபரதன் எதிர்பார்த்ததுதான்.

ஓரிரு கணங்கள் அவளை வெறித்து நோக்கியவன், இரு கை விரித்து "இங்கே வா" என்றான்.

அவள் மெல்ல இரண்டெட்டு எடுத்து வைக்கவும், சட்டென அவளை நெருங்கி இறுக அணைத்தான். "எப்படி முடிந்தது? என்னை விட்டுப் போக உன்னால் எப்படி முடிந்தது?"

கணவன் அணைப்பில், நெகிழ்ந்து கொண்டிருந்தவள், இந்தக் கேள்வி காதில் விழவும், ஏன் கிளம்பினாள் என்பது நினைவுவர, உடல் விறைத்தாள்.

கூடவே, 'அவனிடம் கேள்' என்று சின்னாத்தா சொன்னதும் ஞாபகம் வந்துவிட "நீங்கள்தான், மஞ்சரியை உங்களிடம் விட்டுவிட்டு, என்னை அழைத்துப் போகச் சொன்னீர்களே" என்றாள். "இன்னமும் அவளை நினைத்துக் கொண்டிருப்பவருக்கு நான் எதற்கு?"

"ஓ.! இதுதான் காரணமா? உன் கடிதத்தைப் படித்ததிலிருந்து மஞ்சரி பெயர் எப்படி வந்தது என்று மண்டையை உடைத்துக் கொண்டிருக்கிறேன்.! என் மகா புத்திசாலி மனைவியே, நான் சொல்வதைக் கொஞ்சம் நன்றாகக்கேட்டுக் கொள். நான் நந்தகுமாரிடம் அப்படிச் சொன்னபோது, அவர் ஒருநாளும் மஞ்சரியை என்னிடம் ஒப்படைக்க மாட்டார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். தெரிந்தும், நான் கேட்டதின் காரணம், உன்னை உன் அண்ணன் மாயையிலிருந்து விடுவிப்பதற்காக."

"அண்ணன் மாயையா? புரியவில்லையே.!" என்றாள் தாரிணி.

"என்ன புரியவில்லை?" என்று அவள் தோளைப் பற்றி ஒரு தரம் உலுக்கினான், மனுபரதன். "சொல்லு, நீ உன் அண்ணனைக் காப்பதற்காகவே, என்னை மணக்கவில்லை? அப்புறம் நான் எவ்வளவு அன்பு காட்டி என்ன? நந்தகுமாரின் கடிதம் பார்த்ததுமே கோபப்படவில்லை? அவரைப் பார்த்தும், தோளில் சாய்ந்து அழவில்லை? நீ அழுததைப் பார்த்ததும் எனக்கு எப்படி இருந்தது தெரியுமா? இந்த அண்ணன் மாயை இருக்கும் வரை, நீ என்னிடம் மனம் ஒன்றமாட்டாய். அதை நீக்கியே ஆக வேண்டும் என்றுதான்." என்று சொல்லிக் கொண்டே போனவன், அவளது அதிசயித்த தோற்றத்தைக் காணவும் பேச்சை நிறுத்திக் காரணம் கேட்டான்.

"நீங்கள் கூடத் தப்பாக ஊகித்திருக்கிறீர்களே என்று நினைத்தேன்.!"

அவள் முகத்தை நிமிர்த்தி, "என்ன தப்பாக ஊகித்தேனாம்" என்று கேட்டான் அவன்.

"முதலாவதாக, என் கடிதத்தை, என்னிடம் கேளாமல் படித்தீர்கள் என்பதுதான் என் கோபமே தவிர, அண்ணனுக்கும், அதற்கும் சம்பந்தம் இல்லை. அடுத்து அழுதது அண்ணனும் நானும் மட்டும்தான் உறவு என்று பல ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறோம், வெகுநாள் கழித்துப் பார்த்தால், கண்ணீர் வராதா?"

"அது மட்டும்தான் காரணம் என்றால் மனைவிதான் முக்கியம் என்று நந்தகுமார் சென்றதும், நீ அப்படி இடிந்து போய் உட்கார்ந்திருப்பானேன்?" என்றான் அவன் நம்பாமல்.

ஒரு கணம் தயங்கினாள் தாரிணி. இதற்கு மேல் ஒளிவு மறைவு வேண்டாம் என்று தீர்மானித்தவளாக "நான் இடிந்து போனது, அன்றைய நிலையிலும் நீங்கள் மஞ்சரியை விரும்புவதாக எண்ணியதால்தான். அதுதான் என் மனதில் இடியாக விழுந்து விட்டது. ஏனென்றால்... ஏனென்றால் அன்று, நான் உங்களிடம், என் காதலை தெரிவிக்க எண்ணியிருந்தேன்" என்று கூறி முடித்தாள்.

"மைகாட்!" என்றான், மனுபரதன். "இது புரியாமல்..." என்று தொடங்கியவன். மேலே பேச மாட்டாமல், அவள் முகத்தை ஏந்தி, முத்தமழை பொழிந்தான்.

பின்னர் அவளை ஏந்திச் சென்று அமர்ந்து, "நீ இவ்வளவு சொன்ன பிறகு நானும் எல்லாவற்றையும் விலாவாரியாக விளக்கி விட வேண்டும்தான்." என்றவன். தன் பர்சிலிருந்து, ஒரு படத்தை எடுத்துக் காட்டினான். "இது அடையாளம் தெரிகிறதா? உன்படம் நான் திருடியது.! அறிக்கை விஷயமாக முதல் தடவை உன் அண்ணனைப் பார்க்க வீட்டுக்கு வந்த சமயம், மேஜை மேல்

கிடந்த ஆல்பத்தைச் சும்மா புரட்டியபோது பார்த்தேன். என்னவோ, இந்தப் படம் திரும்பப் பார்க்க வேண்டும் போல இருந்தது. உன் அண்ணனிடம் சொன்னால் அடிக்க வர மாட்டாரா? சொல்லாமலே, எடுத்து வைத்துக் கொண்டேன். ஆனால் மஞ்சரியுடைய அப்பாவின் வேண்டுகோளுக்காகச் சிறு வயதிலேயே எங்கள் இருவருக்கும் திருமணம் நிச்சயமாகி, திருமணத் தேதியும் குறித்து விட்டிருந்தார்கள். இந்தச் சமூகத்தில், நிச்சயித்த திருமணத்தை ஆண்கள் நிறுத்துவது இல்லை. எனவே, உன்னை வந்து பார்க்கும் ஆவலை அடக்கிக் கொண்டேன். ஆனால், நந்தகுமார் அடிக்கடி உன்னைப் பற்றி பேசுமாறு செய்தேன். உன் அண்ணனுக்குத்தான் உன்னைப் பற்றிப் பேசத் தூண்டுகோலே தேவையில்லையே? திருமண சேலை கட்ட, அந்த மாதிரி பேச்சுக்களின் விளைவாக உன் ஆசையை அறிந்து வாங்கியதுதான். மஞ்சரியும் நந்தகுமாரும் சென்றது கோபம் என்றாலும், உன்னை அடைய ஒரு வழி கிடைத்தது என்று, அதைப் பயன்-படுத்திக் கொண்டேன்... என்ன, சாசர் மாதிரி கண்கள் விரிந்து கொண்டே போகிறது? கண்களாலேயே, என்னைக் கபளீகரம் செய்து விடும் எண்ணமா?" என்றான், அவன் கேலியாக.

எவ்வளவு நடந்திருக்கிறது?! சான்றாக, அவள் படம் வேறு! அத்தோடு, திருமண சேலையும்.! அது அம்மா சேலை மாதிரி எப்படி அமைந்தது என்பது, இப்போது தெளிவாகப் புலனாயிற்று!

அதிசயித்த விழிகளை, அவன் முகத்தில் பதித்து, "இதை நீங்கள் அப்போதே சொல்லியிருக்கக் கூடாதா?" என்றாள், அவள்.

“தேவுடா.!” என்று தோளைக் குலுக்கினான், அவன். “என்னத்தைச் சொல்லுவது தரு? நீதான், தேளாய்க் கொட்டினாயே.! அதற்கு மேல் அடிதடி வேறு.! ஆனால் அடிதடி பற்றி சந்தோஷம்தான். அன்றைக்கே, அணைப்பதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது” என்று, அவன் கண்சிமிட்ட, தாரிணி முகம் சிவந்தாள்.

“அப்பாடி.! பெண்டாட்டியை வெட்கப்பட வைத்தாயிற்று.!” என்று மனுபரதன், நகைக்கவும் கூடச் சேர்ந்து சிரித்தவளின் முகம் உடனே வாடியது.

“என்னடா?” என்று, கவலையுடன் கேட்டான், அவன்.

“இவ்வளவு காலம் நீங்கள் கட்டிக் காத்த கௌரவம், மனு.! சற்று நிதானியாமல், கெடுத்துவிட்டேனே. இனி, அங்கே உங்கள் தலைமை என்ன ஆகும்?” என்று வருந்தினாள், மனைவி.

ஒரு விசித்திரமான பாவனை, மனுபரதனின் முகத்தில் பரவியது.

தாரிணியின் கையைப் பற்றி, உதட்டில் அழுத்தி விட்டு, அவன் சொன்னான். “ஒன்று தெரியுமா, தரு? அந்த முதல் விளம்பரத்தைக் கொடுக்க, நான் முடிவு செய்தபோது, கௌரவம் பற்றிய எண்ணமே, எனக்கு வரவில்லை. ‘என் தரு என்னை விட்டு விலகி எங்கோ போய்க் கொண்டிருக்கிறாள். அவளை, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம், எந்த வழியிலேனும் திரும்பி வரச் செய்ய வேண்டும் என்பது மட்டும்தான். மனதில் இருந்தது, இப்போதும், இந்த வினாடி வரையும் கூட, அந்த விளம்பரம் பற்றி எனக்கு, எந்த வருத்தமும் தோன்றவும்

இல்லை. விளம்பரத்தின் பலனாக நீ வந்து விட்டா-யில்லையா எனக்கு அது போதும்.!"

நெஞ்சு நெகிழ்ந்து போயிற்று, அவளுக்கு. "இந்த அன்பு புரியாமல் உங்களுக்குத் தலையிறக்கத்தை உண்டு பண்ணி-விட்.டேனே.!" என்று வருந்தினாள்.

"அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை" என்று மறுத்தான், மனுபரதன். "நீ கிடைத்துவிட்ட விளம்பரத்தை அலுவலகம் மூலமாகத்தான் அனுப்ப நேர்ந்தது. நினைத்ததை நடத்துவதில், அதுவும் விரைந்து நடத்துவதில் நான் கில்லாடியாம். ஒரு தடாலடி விளம்பரத்தைப் போட்டு, ஒரே நாளில் காரியத்தைச் சாதித்து விட்டேனாம். ஆளாளுக்குக் கைகுலுக்கினார்கள். ம்ம்ம். அவர்கள் பாராட்டை, அப்படித் தெரிவித்தார்கள்.. நீ?"

கண்ணில் குறும்புடன், கணவன் கேட்க, அவன் கேள்விக்குப் பதிலாகப் புன்னகையோடு அவன் கன்னத்தில், தன் பட்டிதழ்களைப் பதித்தாள், தாரிணி.

*


உயிராய்
இருக்க
வருவாயா ?
ரமணிசந்திரன்